## பதிப்பாசிரியர்கள்



முதுமுனைவர். **மா. மணிகண்டன்** M.A., (M.A)., M.Phil., NET., NTS-DF., Ph.D., UGC-PDF., அவர்கள் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை அறிவியல் தொழில்நுட்ப நிறுவன (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) மொழிகள் துறையில் தமிழ் உதவிப்பேராசிரியராகப் (தேர்வுநிலை) பணிபுரிந்து வருகிறார். 14 ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவமும், ஒன்பது ஆண்டுகள் பயிற்றுவிப்பு அனுபவமும் கொண்டவர். 14 ஆய்வுக் கட்டுரைகளைத் தலைசிறந்த ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளார். 30 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைக் கருத்தரங்குகளில் பங்கேற்று வெளியிட்டுள்ளார். ஒன்பது கல்விசார் நிறுவனங்களில் உறுப்பினராக உள்ளார். பன்னாட்டு ஆய்விதழ்களில் இணை ஆசிரியராகவும், ஆசிரியர் குழு உறுப்பினராகவும், மதிப்பாய்வாளராகவும் இருந்து வருகிறார். இயற்கை பன்னாட்டு ஆய்விதழின் முதன்மை ஆசிரியராக உள்ளார். 2015 இல் மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார்.



முனைவர் **தி. பாலசுப்பிரமணியன்** M.A., M.A., M.A., BLI.Sc., DIAE., M.Phil., Ph.D., அவர்கள் வரலாறு, தொல்லியல் அறிஞர் ஆவார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்புக் குறித்த ஆவணக்குழுவில் உறுப்பினராகவும், தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அருங்காட்சியகச் சிறப்பு நிபுணர் குழு உறுப்பினராகவும் உள்ளார் பன்னிரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவமும், ஐந்து ஆண்டுகள் பயிற்றுவிப்பு அனுபவமும் கொண்டவர். 38 ஆய்வுக் கட்டுரைகளைத் தலைசிறந்த ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளார். 32 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைக்களைக் கருத்தரங்குகளில் பங்கேற்று வெளியிட்டுள்ளார். இயற்கை பன்னாட்டு ஆய்விதழின் இணையாசிரியராக உள்ளார். 60 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை தினமலர், தமிழ் இந்து, தினத்தந்தி, தினகரன், தினமணி போன்ற நாளிதழ்களில் வெளியிட்டுள்ளார்.

– பதிப்பகத்தார்


மகிழ் பதிப்பகம்

9 789334 130874

POOCHARAM PRINTS


சங்க கால தமிழ்ப் பண்பாட்டு வரலாறு [ நூல் பகுதிகள் ]



# சங்க கால தமிழ்ப் பண்பாட்டு வரலாறு

## (நூல் பகுதிகள்)


பதிப்பாசிரியர்கள்

முதுமுனைவர் மா.மணிகண்டன்

முனைவர் தி.பாலசுப்பிரமணியன்

# சங்க கால தமிழ்ப் பண்பாட்டு வரலாறு

(நூல் பகுதிகள்)

# HISTORY OF SANGAM PERIOD TAMIL CULTURE

(Book Chapters)

பதிப்பாசிரியர்கள்

**முதுமுனைவர் மா. மணிகண்டன்**

**முனைவர் தி. பாலசுப்பிரமணியன்**

வெளியீடு

**மகிழ் பதிப்பகம்**

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | அக்டோபர் 2024 |
| நூற்பெயர் | : | சங்க கால தமிழ்ப் பண்பாட்டு வரலாறு |
| பதிப்பாசிரியர்கள் | : | முதுமுனைவர் மா. மணிகண்டன்<br>முனைவர் தி. பாலசுப்பிரமணியன் |
| ISBN | : | 978-93-341-3087-4 |
| பக்கம் | : | 362 |
| விலை | : | INR 300/- |
| பதிப்புரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| வெளியீடு | : | மகிழ் பதிப்பகம்<br>86, தென்னங்குடி (வடக்கு)<br>பேராவூரணி-614 804.<br>தஞ்சாவூர் (மாவட்டம்) |
| மின்னஞ்சல் | : | editor@mahizh.in |
| இணையம் | : | www.mahizh.in |
| அச்சாக்கம் | : | பூச்சரம் பிரிண்டர்ஸ்<br>கல்லூரிச் சாலை,<br>காரைக்குடி-630 003. |

# முகவுரை

உலகில் தோன்றிய மொழிகளில் முதல் மொழியாம் தமிழ்மொழி, கால ஓட்டதில், பல்வேறு தடைகளைத் தாண்டி, இன்றளவும் சீரிளமை கொண்டு திகழ்ந்து வருவது தமிழினத்திற்கும், இந்தியத் துணைக் கண்டத்திற்கும் பெருமை.

உலக மொழிகளில் செம்மொழி என்ற சிறப்புக்கு உரிய மொழிகள் பல இருப்பினும், அவற்றுள் தனித்த புகழுக் குரியதும், சீரிளமை கொண்டு திகழ்வதும் தமிழ் மொழி எனபதில் ஐயம் இல்லை.

சங்க இலக்கியங்கள் தொடங்கி, நிகழ்கால இலக்கியங்கள் வரை, புதுமை படைத்து வரும் தமிழினத்தின் தாய் மொழியை, நடைமுறை நாகரிக வளர்ச்சி, அறிவியல் தொழில் நுட்பம் போன்றவற்றின் ஊடாக வெளிக்கொணர்வது காலத்தின் தேவையாகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் உயர்கல்வி அமைப்புகளை நிர்வகிக்கும் தலைமை அங்கமான புதுதில்லி பல்கலைக்கழக நல்கை ஆணையம் வெளியிட்டுள்ள உயர்கல்வித்துறை ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சி வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பதினேழு கட்டுரைகளுடன் நூல் பகுதிகளாக, குறியீட்டு எண்ணுடன் “சங்க கால தமிழ்ப் பண்பாட்டு வரலாறு” என்ற பெயருடன் நூலாக்கம் செய்யப்பெற்றுள்ளது. இந்நூலில் பங்களிப்புச் செய்த அறிஞர்களுக்கு மனமார்ந்த நன்றி.

**முதுமுனைவர்.மா.மணிகண்டன்**
**முனைவர் தி. பாலசுப்பிரமணியன்**
**பதிப்பாசிரியர்கள்**

**Contents**

புறநானூறு கூறும் சங்கப் புலவர் பண்பாடு
THE CULTURE OF THE SANGAM POETS AS
DESCRIBED IN THE PURANANURU 7
முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட்

சங்ககால வாழ்வியல்
LIFE IN THE SANGAM PERIOD 28
முனைவர் பா. அனுராதா

சங்ககாலத் தமிழ்ப் பண்பாட்டு வரலாறு
HISTORY OF SANGAM PERIOD TAMIL CULTURE 43
பேரா.அ. இராஜன் ஜான்

தமிழர் பண்பாட்டினை வெளிப்படுத்தும்
அகத்திணைக் கூறுகள்
ELEMENTS OF INNER EXPRESSION
REFLECTING TAMIL CULTURE 63
முனைவர் மூ.சிந்து

சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலறம்
LIVING PHILOSOPHY OF TAMILS
IN SANGAM LITERATURE 82
முனைவர் இரா. சுகுமார்

தமிழர் பண்பாட்டு அடையாளங்களில் விருந்தோம்பல்
HOSPITALITY IN TAMIL CULTURAL IDENTITY 102
முனைவர் க. செந்தில்குமார்

சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு
TAMILAR CULTURE IN SANGAM LITERATURE 121
து.செல்வராணி

தொல்லியல் நோக்கில் சங்க இலக்கியம்
(கீழடி அகழாய்வுச் சான்றுகள்)
ARCHAEOLOGICAL PERSPECTIVES ON SANGAM LITERATURE
(Kizhadi Excavation Evidence) 142

முனைவர்.தி.பாலசுப்பிரமணியன்
பேராசிரியர். வே.வெங்கட்ராமன்

தமிழ்நாட்டில் சமணத்தின் எழுச்சியும் வீழச்சியும்
(சங்க காலம் முதல் இடைக்காலம் வரை)
THE RISE AND FALL OF JAINISM IN TAMIL NADU
(From the Sangam period to the medieval period) 171
முனைவர் ஜோ. மார்ட்டின் ஜெயபிரகாஷ்

சங்க கால மக்களின் சமூக பண்பாட்டு
அமைப்பும் நாகரிகமும்
SOCIAL AND CULTURAL STRUCTURE OF
THE PEOPLES OF THE SANGAM PERIOD 199
முனைவர்.ச.மீனாட்சி

செப்பேடுகள் மூலம் அறியலாகும் பாண்டிய
மன்னர்களின் வரலாறு
HISTORY OF THE PANDYAN KINGS AS
KNOWN THROUGH THE SEPPADS 225
த. முத்துகிருஷ்ணன்
முனைவர்.க.குமரன்

சங்க காலம் முதல் தற்காலம் வரை பெண்களின் நிலை
STATUS OF WOMEN FROM
SANGAM PERIOD TO PRESENT 238
முனைவர் மு. முத்துலெட்சுமி

தமிழரின் வாழ்வியல் அறங்கள் (நான்மணிக்கடிகை)
THE LIVES OF THE TAMILS (NENMANIKKADIKAI) 262
முனைவர் அ. ரஞ்சனி

திருவெறும்பூர் எறும்பீசர் கோயில் வழி
அறியலாகும் சங்கத் தமிழ்ப் பண்பாடு
THIRUVERUMBUR ERUMBEESWARAR TEMPLE IS
RENOWNED FOR ITS UNIQUE BLEND OF
SANKATA TAMIL CULTURE 278
முனைவர் சோ.வனிதா

சங்க இலக்கியத்தில் இருபாலர் விளையாட்டுகள்
IN SANGAM LITERATURE, THERE ARE GAMES
PLAYED BY BOTH MEN AND WOMEN 299
முனைவர் செ.த.ஜாக்குலின்

சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்
HOSPITALITY IN SANGAM LITERATURE 318
பா.விக்னேஷ் குமார்

பண்டைத் தமிழர்கள் கோவில்க்ளுக்கு
வழங்கிய கால்நடை நிவந்தங்கள்
ANIMAL SACRIFICES GIVEN TO TEMPLES
BY ANCIENT TAMILS 335
முனைவர். மு. கலா
முனைவர்.ரா. தாமரைக்கண்ணன்

சங்க இலக்கியங்களில் புழங்குபொருட்களும்
அவற்றின் பயன்பாடும்
MATERIALS AND THEIR USE IN SANGAM LITERATURE 345
முனைவர் ச. லெனின்குமார்
முனைவர் செ.அனுசுயா (எ) பிரியா

# புறநானூறு கூறும் சங்கப் புலவர் பண்பாடு
# THE CULTURE OF THE SANGAM POETS AS DESCRIBED IN THE PURANANURU

**முனைவர் ச.அனிதா சோபியா மார்கிரேட்**
உதவிப்பேராசிரியர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்-641029
மின்னஞ்சல்: asophiamargaret@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்கப்புலவர் பெருமக்கள் உயரிய மக்கட் பண்புகள் நிறைந்த ஒழுக்க வாழ்வினராவர்; பரந்த மனப்பான்மையர்; தன்மானத்தை உயிரென மதித்தவர்; தொண்டுள்ளம் சான்ற தூயர் ; செய்ந்நன்றி போற்றிய செம்மையாளர்; பொறாமையற்ற புனிதப் பண்பினர்; நட்பின் பெருமையை நிலைநாட்டிய நல்லோர்; வறுமையிற் செம்மையைப் போற்றியோர்; அஞ்சாமை நிறைந்த அறிஞர்; ஆளுவோர்க்கு அறமுரைத்த அமைச்சர். புறநானூற்றின் துணை கொண்டு அவர்களின் சிறப்புக்களை நன்கறியலாம்.*

**திறவுச் சொற்கள்**

*தமிழ், இலக்கியம், சங்க இலக்கியம், புலவர், புலவர் பண்பாடு*

## Abstract

*The Sangam poets are individuals who embody noble qualities; they possess a broad-mindedness; they regard dignity as essential; they are pure-hearted souls with a spirit of service; they are respectful and well-spoken; they are without envy and uphold sacred virtues; they are virtuous peo-*

*ple who recognize the greatness of friendship; they value honesty in poverty; they are knowledgeable individuals filled with fearlessness; they are ministers who advise the ruling king on righteousness. One can understand their greatness through the Purananuru.*

**Keywords**

*Tamil, Literature, Sangha Literature, Poets, Poet Culture*

**பரந்த மனப்பான்மை**

தமிழ்நாடு அன்று அரசியலால் மூன்று பெருநாடுகளாகவும் பல சிறு குறுநிலங்களாகவும் பிளவுண்டு கிடந்தது. ஆனால் மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றுபட்டிருந்தது. புலவர்கள் குறுகிய மனமின்றிப் பரந்த உள்ளத்தோடு மூன்று நாடுகட்கும் சென்றனர். சேர நாட்டுப் புலவர் பாண்டியனையும் சோழனையும் வாழ்த்தத் தவறவில்லை. ஏனையோரும் அப்படியே, பண்பு யாரிடமிருப்பினும் பாராட்டினர். கபிலர் பாரியின் நண்பர். அவர் சேரமான் செல்வக்கடுங்கோவைப் பாராட்டினார். பாண்டிய நாட்டுப் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடம் கொண்டிருந்த உயர் நட்பு உலகறிந்ததன்றோ? அரசியற் பூசல்களில் பெரும்பாலும் தலையிடவில்லை. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போரிட்டு இருவரும் மாண்டனர். அப்போது கழாத்தலையாரும் பரணரும் இருவருக்கும் வருந்திப் பாடியுள்ளமையைக் காணலாம் (புறம். 62,63)

**ஒற்றுமைப்பண்பு**

புலமைக் காய்ச்சலின்றி ஒருவர் மற்றவரை மதித்து வாழ்ந்த புலவர்கள் அன்று இருந்தனர். பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் முதிரமலைத் தலைவன் குமணனிடம் சென்று, கடையெழு வள்ளல்கள் அனைவரும் மாய்ந்தபின்

அவ்வெழுவரும் தாங்கிய ஈகைச் செந்நுகத்தினை அவன் ஒருவனே தாங்கியதைக் கூறினார். அப்பொழுது

**"திருந்து மொழி மோசி பாடிய ஆயும்"** (புறம். 158)

என்கிறார். மோசிகீரனாரை அவர் திருந்திய மொழியாளரென மனமாரப் பாராட்டுவதைக் காணலாம். எருமை நாட்டை யாண்ட இருங்கோவேளிடம் பாரி மகளிரை அழைத்துச் சென்று அவர்களை மணந்து கொள்ளுமாறு கபிலர் வேண்டிய போது அவன் இகழ்ந்தான். அப்போது கபிலர், இருங்கோ வேளின் முன்னோருள் ஒருவன் கழாத்தலையாரை இகழ்ந்த தைக் கூறி, அதன் விளைவாகச் சிற்றரையம் பேரரையம் என்னும் வளஞ்சான்ற பகுதிகள் பயனற்றுப் போனதற்கு அவ்விகழ்ச்சியே காரணம் என்று எடுத்துக் கூறுகிறார்.

**"புகழ்ந்த செய்யுள் கழாத்தலை"** (புறம் 202)

என்றுகூறுகிறார். இக்கபிலரை அக்காலப் புலவருலகம் பாராட்டியதுபோல் யாரையும் பாராட்டவில்லை. நக்கீரர் அவரை,

**"உலகுடன் திரிதரும் பலர்புகழ்**
**நல்லிசை வாய்மொழிக் கபிலன்"** (அகம்.78)

என்று பாராட்டுவார். இங்ஙனமே பெருங்குன்றூர் கிழாரும்.

"வயங்குசெந் நாவின் உவலைக்கூராக் கவலையி னெஞ்சின் நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்" என்றார்.(பதிற்.85) பொருந்தில் இளங்கீரனார் என்பவர்

**"செறுத்த செய்யுள் செய்செந் நாவின்**
**வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"** (புறம்.58)

என்றார். மாறோகத்து நப்பசலையாரும்

**"பொய்யா நாவிற் கபிலன்**
**பாடியமையணி நெடுவரை"** (புறம்.174)

எனக் காரியின் மலையைப் புகழ்வார். மேலும் அவரே,

"நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனிஇடனின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்" (புறம்126:10-13)

என்றார். அதியமான் கோவலூரை வென்றபோது அவனைப் பாராட்டும் போது,

"அன்றும் பாடுநர்க்கு அரியை; இன்றும்
பரணன் பாடினன் மற்கொல், மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்அடுதிகிரி ஏந்திய தோளே" (புறம்409:11-14)

என்று பாராட்டியுள்ளார்.

**தன்மானவுணர்வு**

புலவர்களில் சிலரே பரிசில் வாழ்க்கையை மேற்கொண் டிருந்தனர். பெரும்பாலோர் தத்தமக்கு விருப்பமான தொழில்களைச் செய்து வாழ்வு நடாத்தினர். மருத்துவன் தாமோதரனார். பண்டவாணிகள் இளந்தத்தனார், ஓலைக்கடையத்தனார், வடமவண்ணக்கனார், கூலவாணிகன் சாத்தனார், பெருத்தச்சனார், என்னும் புலவர்கள் பெயர்கள் இதற்குஅரண்செய்யும். பரிசில்வாழ்க்கைமேற்கொண்டோரும், தகுதிக்குக் குறைவாக நல்கிய போதும், முகம்மாறி அளித்தபோதும் அப்பொருளைத் துச்சமென மதித்து மறுத்ததோடு அத்தகையோர்க்குப் பாடம் கற்பித்து மீண்டனர். இத்தகு தன்மானவுணர்வு மிக்க புலவர் களில் பெருஞ்சித்திரனாரும் ஔவையாரும் குறிப்பிடத்தக்கோராவர். வெளிமானென்னும் வள்ளலை நாடிப் பரிசில் பெறச் சென்றார் பெருஞ்சித்திரனார். ஆனால் அட்ட குழிசி அழற் பயந்தாங்கு அவர்க்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அவன் துஞ்சினான். விரிந்த உளமில்லா இளவெளிமான் தகுதியறியாது சிறிது பொருள் கொடுத்தபோது புலவர்க்குத் தன்மானவுணர்வு கிளர்ந்தெழுந்தது. அப்போது அவர் பாடியது வருமாறு,

**"எழுவினி நெஞ்சம் செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கை யில்வழி அருகிற்
கண்டும் அறியார் போல அகனக வாரா
முகனழி பரிசில் தாளிலாளர் வேளாரல்லர்
வருகெனல் வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம் பேணுநர் பலரே மீளி
முன்பின் ஆளி போல உள்ளம் உள்ளவிந்
தடங்காது வெள்ளென நோவா தோன்வயின்
திரங்கி வாயா வன்கனிக்கு உலமரு வோரே!" (புறம்-207)**

*இங்ஙனம் மீண்ட வருந்தி புலவர் குமண வள்ளலைப்பாடி யானையைப் பரிசிலாகப் பெற்றார். தம் வரவை எதிர்பார்த்துக் கிடக்கும் மனையாட்டியையும் குழந்தைகளையும் கூடக் கருதாது இளவெளிமான் ஊர்க்குச் சென்று, அவன் காவல் மரத்தில் அதனைப் பிணித்தார். இளவெளிமானின் சிறுமையை யும் தம் பெருமையையும் எடுத்த்துக்காட்டி பின் வரும் செய்யுளைப் பாடியுள்ளமை சிறப்புபாக உள்ளது.*

**"இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையு மல்லர்
இரவலர் உண்மையும் காணினி இரவலர்க்கு
ஈவோ ருண்மையும் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில் கடுமான்
தோன்றல்செல்வல் யானே" (புறம்.162)**

*அதியமான் நெடுமானஞ்சி பெரு வள்ளலாயினும் பெருஞ் சித்திரனார் அவனைக் காணச்சென்ற ஞான்று யாது காரணத் தாலோ தன் பணியாளர் வாயிலாகப் பொருள் கொடுத் தனுப்பினான். புலவர்க்கு அது சிறுமைச் செயலாகத் தோன்றிற்று. காணாது ஈத்த அப்பொருளை ஏலாது அவர் பாடியதாவது:-*

**"குன்றும் மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென**

நின்ற என்னயந் தருளி யீதுகொண்டு ஈங்ஙனம்
செல்க தானென வென்னை யாங்கறிந்தனனோ
தாங்கரும் காவலன் காணாது ஈத்தவிப்
பொருட்கு யானோர் வாணிகப் பரிசிலன்
அல்லேன் பேணித் தினையனைத் தாயினும்
இனிதவர்துணையளவறிந்து நல்கினர் விடினே" (புறம்.208)

*இதே அதியமான் தான் ஔவை மூதாட்டிக்கு அமிழ் தினிய நெல்லிக்கனியீந்தவன். ஆனால் அவ்விருவர்க்கும் இடையே நட்பு முதலில் முரண்பாட்டில் உருவானதே. அவன் பரிசில் நீட்டித்திருந்தான். தாம் சோறொன்றே கருதி யிருப்பதாக மன்னன் மதித்தான் போலும் என்று எண்ணிய புலவர் அவனைப்பார்த்துப் பாடியது வருமாறு:*

"கடுமான் தோன்றல் நெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்
அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனால்
காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்
தற்றே எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறம்:206)

*பெருமிதவுணர்வு வெளிப்படுதல் வல்வில் ஓரியை வன்பரணர் பாடிய பாடலொன்றில் அவருடைய பெருமித வுணர்வு பீறிட்டெழுதலைக் காணலாம். ஈயென இரத்தல் இழிந்தது தானெனினும் வைத்துக்கொண்டு மறுத்தல் அதனினும் இழிவென அறிவுறுத்தியுள்ளார்.*

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட் டோரே
ஆவும் மாவும் சென்றுனக் கலங்கிச்

சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்” (புறம்:204)

*கடியநெடுவேட்டுவனைப் பாடும் பெருந்தலைச் சாத்தனார்,*

“முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின்நீதல்யாம்வேண்டலமே” (புறம்:205)

*என்றார். தகுதியில்லாதவரைப் பாடுவதும் அவர் தரும் பரிசிலை ஏற்பதும் அன்னோர்க்கு இயல்பன்றாம். கண்டீரக் கோப்பெரு நள்ளியைப் பாடும் வன்பரணர், பீடில்லாத மன்ன ருடைய பாராட்டினை விரும்பி அவர் செய்யாதனவற்றைக் கூறிப் பாரட்டுதல் தம் சிறு செந்நாவிற்கு இயல்பன்று என்றார்.*

“பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச் செய்யா
கூறிக் கிளத்தல் எய்யா
தாகின்றெம்சிறுசெந்நாவே” (புறம்.148)

*அவ்வாறே மோசிகீரனார் என்னும் புலவர் பெருமான்*

“பெரிய வோதினும் சிறிய வுணராப்
பீடின்று பெருகியதிருவிற் பாடின்
மன்னரைப்பாடன்மார்எமரே” (புறம்.375)

*என்றார். இங்ஙனமே பெண் கொலை புரிந்த நன்னனின் மரபில் வந்தவரைப் பாடமறுத்தது புலவருலகம் இளங்கண்டீரக் கோவிடம் தாமப்பல்கண்ணனார் அவனைத் தான் தழுவாமைக்குக் காரணம் கூறுகையில்,*

“நன்னன் மருக னன்றியும் நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவின் ஆடுமழை
அணங்குசால் அடுக்கம் மொழியும்நும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனர்எமரே” (புறம்:151)

*என்று மொழிதல் கண்டு விளங்கத்தக்கது.*

**தொண்டும் கடமையுணர்வும்**

*எங்கெல்லாம் துன்பமுள்ளதோ அங்கெல்லாம் சான்றோர் தம் கடமையாற்றத் தயங்கார். புலவர்கட்கு மன்னர்கள் பரிசிலளித்தனர் என்பதற்காக அவர்கள் தவறு செய்தபோது பார்த்துக் கொண்டு இருந்தனரல்லர். அருகிற் சென்று இடித்துரைத்துத் திருத்தினர் . சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வள்ளல் காரியின் குழந்தைகளைப் பகைக் காரணமாக யானைக் காலிலிட்டுக் கொல்லச் சூழ்ந்தபோது கோவூர்கிழார் ஓடோடிச் சென்று அவன் முன்னோர் இயல்பை எடுத்துக்கூறி அத்தீச் செயலைத் தடுத்தார்.*

**"நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை,
இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி,
தமது பகுத்து உண்ணும் தண் நிழல் வாழ்நர்;
களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன் தலைச் சிறாஅர்; மன்று மருண்டு நோக்கி,
விருந்தின் புன்கண் நோவுடையர்;
கேட்டனைஆயின், நீ வேட்டது செய்ம்மே!" (புறம்:46)**

*என்று கூறி அவன் உள்ளத்தில் அருளுணர்வினைத் தோற்று வித்து உய்யக்கொண்டார். இங்ஙனமே இளந்தத்தன் என்னும் புலவனை ஒற்றன் என்று ஐயுற்றுக் கொல்லத் துணிந்தான் நெடுங்கிள்ளி. அப்போது இதே புலவர் உண்மையை எடுத்துச் சொல்லி அவனையும் காப்பாற்றினார்.*

**"வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி,
'நெடிய' என்னாது சுரம் பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடி,
பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே; திறப்பட
நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,**

**ஆங்கு இனிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்**
**மண் ஆள் செல்வம் எய்திய**
**நும் ஓரன்ன செம்மலும் உடைத்தே.” (புறம்:47)**

*எனப் புலவர் இயல்பை எடுத்துக் கூறுதல் நோக்குக. மன்னர்கள் தவறாக நடந்த போதும், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிய போதும், அறநெறிகளை எடுத்துக்கூறி அரசியலில் சிறந்து விளங்க உதவிய அறிஞர்கள் சங்கப் புலவர்கள் என்பதற்கு எத்துணையோ சான்றுகள் உண்டு. அவற்றுட் சில மட்டும் ஈண்டு எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.*

*பாண்டியன் அறிவுடை நம்பி என்பவன் அதிகாரிகளின் சொல்லைக் கேட்டுக் குடிமக்களை வருத்தி வரி பெற்றான். அது கண்ட புலவர் வருந்தினார். அவனுக்கு அவர் கூறும் அறிவுரை எக்காலத்து அரசுக்கும் ஏற்ற பாடமாக அமையும்.*

**“காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,**
**மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்;**
**நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,**
**வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்;**
**அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,**
**கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்;**
**மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,**
**பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,**
**யானை புக்க புலம் போல,**
**தானும் உண்ணான், உலகமும் கெடுமே.” (புறம்:184)**

*மக்களுடைய நிலையறிந்து அன்பு கெடாதவாறு வரி வாங்க வேண்டுமென்பதை நயம்படவுரைத்த புலவர் பாராட்டுக்குரியவர்.*

*சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னிக்கு ஊன்பொதி பசுங்குடையார், பிறர் பழியையே எப்போதும் கூறும் சிறுமதியாளரிடம் எச்சரிக்கையாக இருக்கக் கூறியதோடு*

*தவறு கண்டபோது கண்ணோட்டமின்றித் தண்டனை கொடுக்க வேண்டும் என்பதனை வற்புறுத்தியுள்ளார்.*

**"வழிபடுவோரை வல் அறிதீயே;**
**பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே;**
**நீ மெய் கண்ட தீமை காணின்;**
**ஒப்ப நாடி, அத் தக ஒறுத்தி"** (புறம்:10)

*கருவூரை வென்று மேம்பட்டவன் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை. நரிவெரூஉத்தலையார் சேரமான் ஒள்வாள் என்னும் சான்றோர் அவனுக்கு நாட்டைக் காக்க வேண்டிய நெறியை எடுத்துக் கூறுகிறார். அருளும் அன்பும் கொண்டு குடிமக்களைக் காக்கத் தூண்டுகிறார். நாட்டைக் குழவி கொள்பவர்போல எச்சரிக்கையோடு காக்கவேண்டுமென்கிறார்.*

**"அருளும் அன்பும் நீக்கி நீங்கா**
**நிரயங் கொள்பவரொடு ஒன்றாது, காவல்,**
**குழவி கொள் பவரின், ஓம்புமதி!**
**அளிதோ தானே; அது பெறல்அருங் குரைத்தே".** (புறம்–5)

*குடபுலவியனாரும், வெள்ளைக்குடி நாகனாரும் மன்னர்க்கு அறிவுரை கூறிக் கடமையை நினைவூட்டிய பெருமைக் குரியவராவர். பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவி யனார், உணவின் இன்றியமையாமையையும் அதனை விளைவிக்க நீர்நிலைகளைப் பெருக்கவேண்டிய கடமையை யும் பின்வருமாறு வற்புறுத்தினார்.*

**"செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,**
**ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,**
**ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த**
**நல்இசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்**
**தகுதி கேள், இனி, மிகுதியாள!**
**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்;**
**உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;**

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்புற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்குஉத வாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண்தட் டோரே;
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே" (புறம்:18)

*வெள்ளைக்குடி நாகனார் குளமுற்றத்துத் துஞ்சிய என்னும் கிள்ளிவளவனுக்கு புலவர் அரசியல் அறத்தினை எடுத்துக்கூறிப் பழஞ் செய்க்கடன் வீடு கொண்டார். அப்போது அவர் கூறிய செய்திகள் என்றும் நிலைபெறும் நீர்மையனவாகும்.*

"ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்டுமூ
மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்,
கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ? அன்றே; வருந்திய
குடிமறைப் பதுவே; கூர்வேல் வளவ" (புறம்: 35)

*என அறிவுறுத்திய புலவர், மன்னன் பகைவர்பால் பெறும் வெற்றிக்கு உழவர்களின் ஏர்முனை வெற்றியே அடிப்படை என்று கூறுகிறார்.*

"பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே;
மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும்,
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்,
காவலர்ப் பழிக்கும், இக் கண்ணகன் ஞாலம்;
அதுநற்கு அறிந்தனை யாயின், நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது,
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்,
குடிபுறம் தருகுவை யாயின், நின்
அடிபுறம் தருகுவர், அடங்கா தேரே" (புறம்:35)

*உழவர்களைப் போற்ற வேண்டிய கடமையினை எவ்வளவு அழகாக எடுத்துக் கூறியுள்ளார் பார்மின்! சோழன் நலங் கிள்ளிக்கு முதுகண்ணன் சாத்தனார் பல செய்திகளைக் கூறிவிட்டு,*

**“அதனால்,அறனும் பொருளும் இன்பமும்**
**மூன்றும் ஆற்றும் பெருமநின் செல்வம்”** (புறம்:416)

*என உறுதிப்பொருள்களை வற்புறுத்துகிறார். மேலும்*

**“கொடியோர்த் தெறுதலும் செவ்வியோர்க் களித்தலும்**
**ஒடியா மரபின் மடிவிலை யாகி**
**நல்லதன் நலனும் தீயதன் தீமையும்**
**இல்லையென் பார்க்கு இனனா கிலியர்”** (புறம்:29)

*என நீதியை எடுத்துக் கூறிச் சிறியோர் கூட்டுறவை நீக்கக் கூறுகிறார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாற னுக்கு மருதன் இளநாகனார் அறநெறியே அரசின் வெற்றிக்கு அடிப்படையென்பதனை அழகுற எடுத்துக் கூறினார். நால்வகைப்படையும் உடையார் எனினும் அறமே இறுதியில் வெற்றிக்கு அடிப்படையாகும் என்பதனை,*

**“கடுஞ்சினத்த கொல்களிறும்**
**கதழ்பரிய கலிமாவும் நெடுங்கொடிய நிமிர்தேரும்**
**நெஞ்சுடைய புகல்மற என**
**நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட**
**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்”** (புறம்:55)

*‘அரசின் கொற்றம் அறநெறி முதற்று. அதனாற் கோல் கோடாது, குணங் கொல்லாது, ஆண்மையும் சாயலும் வண்மையும் உடையையாகி, இல்லோர் கையற, நீ எக்கர் மணலினும் பல காலம் வாழ்க’ என, அறநெறி அறிவுறுத்தி வாழ்த்தலின், செவியறிவுறுஉ ஆயிற்று என எடுத்துக் கூறுதல் காண்க.*

*இங்ஙனம் ஆளுவோர் ஆட்சி செம்மையுற நிகழ அறிவுரை புகன்ற சான்றோர் பெருமக்கள் போரில் வென்றவர்களைப்*

*பாராட்டினர் எனினும் முறையற்ற போரை விலக்குவதற்குப் பெரிதும் விழைந்தனர். கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் மேல் படைகொண்டு சென்றபோது புல்லாற்றூர் எயிற்றியனார் என்பார் தடுத்து நிறுத்திஅவனை வடக்கிருக்கத் தூண்டினார் .*

“மண்டு அமர் அட்ட மதனுடை நோன் தாள்,
வெண்குடை விளக்கும், விறல் கெழு வேந்தே!
பொங்கு நீர் உடுத்த இம் மலர் தலை உலகத்து,
நின்தலை வந்த இருவரை நினைப்பின்,
தொன்று உறை துப்பின் நின் பகைஞரும் அல்லர்,
…………………………………………………………….
அதனால், ஒழிகதில் அத்தை, நின் மறனே! வல் விரைந்து
எழுமதி; வாழ்க, நின் உள்ளம்! அழிந்தோர்க்கு
ஏமம் ஆகும் நின் தாள் நிழல் மயங்காது
செய்தல் வேண்டுமால், நன்றே வானோர்
அரும் பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்து எதிர் கொளற்க” (புறம். 213)

*கோவூர்கிழார் நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் பகைத்த பொழுது இடை நின்று விலக்கினார். இருவரும் சோழரே என்றும், அவர்கள் முரண்கொண்டதுஏனைய வேந்தர்க்கு மகிழ்ச்சியூட்டுமென்றும் கூறிப் போரை விலக்க முயன்றார்,*

“இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்!
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே;
ஒருவீர் தோற்பினும், தோற்ப நும் குடியே;
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்,
குடிப்பொருள் அன்று, நும் செய்தி; கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும், இவ் இகலே” (புறம்:45)

*கிள்ளி வளவன் கருவூரை முற்றுகையிட்ட ஞான்று அவன் கோட்டைக்குள்ளே ஒளிந்திருந்தான். சோழனின் படையினர் அவன் காவல் மரத்தை வெட்டி வீழ்த்தும் ஓசையைக்*

கேட்டும் வாளாவிருந்தான். அஞ்சியொளித்த மன்னனைப் பகைத்தல் வீரமாகாது என்று சோழனுக்கு அறிவுரை வழங்கினார்.

“அடுநை ஆயினும், விடுநை ஆயினும்,
நீ அளந்து அறிதி, நின் புரைமை வார் கோல்,
செறி அரிச் சிலம்பின், குறுந் தொடி மகளிர்
பொலம் செய் கழங்கின் தெற்றி ஆடும்
தண் ஆன்பொருநை வெண் மணல் சிதைய,
கருங் கைக் கொல்லன் அரம் செய் அவ் வாய்
நெடுங் கை நவியம் பாய்தலின், நிலை அழிந்து,
வீ கமழ் நெடுஞ் சினை புலம்ப, காவுதொறும்
கடி மரம் தடியும் ஓசை தன் ஊர்
நெடு மதில் வரைப்பின் கடி மனை இயம்ப,
ஆங்கு இனிது இருந்த வேந்தனொடு, ஈங்கு, நின்
சிலைத் தார் முரசம் கறங்க,
மலைத்தனை என்பது நாணுத் தகவு உடைத்தே” (புறம்.36).

இங்ஙனமே நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டான். ஆவூர் வேந்தனும் கோட்டைக்குள் ஒளிந்திருந்தான். நெடுநாள் வரையில் முற்றுகை நீடிக்கவும் குழந்தைகள் பாலின்றி அழுதன; மகளிர் வறுந்தலை முடித்தனர்; யானைகள் உண வின்றி மெலிந்தன. இந்நிலைகண்ட புலவர் அம்மன்னனைக் கண்டு,

“அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரோடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லையாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை யொடுங்குதல்
நாணுத் தகவுடைத்திது காணுங் காலே” (புறம்:44)

என்று அறிவுறுத்தியுள்ளார். இதுமட்டுமின்றி ஒருவரோடு ஒருவர் முரண்பாடு கொண்ட மூவேந்தர்களும் ஒன்றுபட்டிருப்ப தைப் புலவர் உலகம் பெரிதும் அவாவி நின்றது. என்றோ

*ஒருநாள் அங்ஙனம் அவர்கள் கூடியிருந்த காட்சியைக் காணும்போது இறும்பூது கொண்டு ஏத்தினர். குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமா வளவனும், பாண்டியன் வெள்ளி யம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருப்பக் கண்ட காரிக்கண்ணனார்,*

"ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவீரும்
உடன் நிலை திரியீர்ஆயின், இமிழ்திரைப்
பௌவம் உடுத்த இப் பயம் கெழு மா நிலம்
கையகப்படுவது பொய் ஆகாதே;
அதனால், நல்ல போலவும், நயவ போலவும்,
தொல்லோர் சென்ற நெறிய போலவும்,
காதல் நெஞ்சின் நும் இடை புகற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது,
இன்றே போல்க, நும் புணர்ச்சி; வென்று வென்று
அடு களத்து உயர்க, நும் வேலே" (புறம்: 58)

*என்று வாழ்த்தினார்.*

"நாகத்து அன்ன பாகு ஆர் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்லா;
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்;
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங் கை நிறையப்
பூவும் பொன்னும் புனல் படச் சொரிந்து,
பாசிழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய
நார் அரி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
இரவலர்க்கு அருங் கலம் அருகாது வீசி,
வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்;
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலைப் புணை பிறிது இல்லை;
ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண் குடைக் கொடித் தேர் வேந்திர்!
யான் அறி அளவையோ இதுவே: வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும், இம்மெனப்

பரந்து இயங்கு மா மழை உறையினும்,
உயர்ந்து மேந் தோன்றிப் பொலிக, நும் நாளே!" (புறம்:367)

*இங்ஙனமே மூவேந்தரும் ஒருங்கிருந்த போது ஔவைப் பிராட்டியார் மகிழ்ந்து பாராட்டினார். இங்ஙனம் ஆளுவோர்க்கு அறிவுரை கூறிய செந்நெறிச் செம்மல்கள் பொதுவாக உலக மக்கள் பின்பற்ற வேண்டிய எண்ணற்ற அறிவுரைகளை வாரி வழங்கியுள்ளனர். ஈகையையும் மக்கட்பண்புகளையும் மாட்சியை எடுத்துக் கூறினர். வற்புறுத்தினர் .அறத்தின்*

"தெண்கடல் வளாகம் பொதுமையின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" (புறம்:189)

*என நக்கீரர் அறிவுறுத்தியுள்ளார். கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி என்னும் அரசக் கவிஞன் இவ்வுலகம் அழியாது நிலைபெற்றிருப்பதற்குத் தமக்கென வாழாராய்ப் பிறர்க்கென வாழுவோர் தாம் காரணம் என்று கூறுவானாய்ச், சிறந்த மக்கட் பண்புகளை எடுத்துக் கூறுகிறான்.*

"உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" ( புறம்.182)

*ஔவையார் நிலம் பெருமை பெறுவதற்கு அதன்கண் வாழும் மாந்தரேபொறுப்பாவர்என்பதனை,*

**“நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவ ராடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே”** (புறம்:187)

*என்ற பாட்டால் வற்புறுத்துகின்றார். சோழன் நல்லுருத்திரன் என்னும் அரசப் புலவன் மக்கள் உயர்ந்த நோக்கமுடையவராய் வாழவேண்டும் என்பதனைப் பின்வரும் பாட்டில் வற்புறுத்தி யுள்ளான்.*

**“விளை பதச் சீறிடம் நோக்கி, வளை கதிர்**
**வல்சி கொண்டு, அளை மல்க வைக்கும்**
**எலி முயன்றனையர் ஆகி, உள்ள தம்**
**வளன் வலியுறுக்கும் உளம் இலாளரொடு**
**இயைந்த கேண்மை இல்லாகியரோ!**
**கடுங் கண் கேழல் இடம் பட வீழ்ந்தென,**
**அன்று அவண் உண்ணாதாகி, வழி நாள்,**
**பெரு மலை விடரகம் புலம்ப, வேட்டு எழுந்து,**
**இருங் களிற்று ஒருத்தல் நல் வலம் படுக்கும்**
**புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து**
**உரனுடையாளர் கேண்மையொடு**
**இயைந்த வைகல் உள ஆகியரோ!”** (புறம்:190).

*பிசிராந்தையார் என்னும் சான்றோர் யாண்டுகள் பல வாகியும் நரை தோன்றாமைக்குத் தன் மனையும்,பிள்ளைகளும் அறிவுடையவராய் இருந்ததும், இளையர் குறிப் பறிந்து ஏவல் செய்ததும், மன்னன் அறம் காக்கும் இயல்பினனானதும். எல்லாவற்றுக்கும் மேலாகத் தம்மூரில் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் வாழ்ந்ததும் காரணம் என்று கூறிச் சமுதாய நல்வாழ்வுக்குரிய பண்பாட்டை வற்புறுத்தியுள்ளார், (புறம்:191). கணியன் பூங்குன்றனார் பாடிய பாடல் உலகம் வியக்கும் உயர்வுடைய தன்றோ! உலகம் முழுவதையும் ஒரு*

*குடும்ப மாகக் காண்கிறார் புலவர். தீமையும் நன்மையும் பிறரால் அன்றித் தம்மால் வருவனவென்றும், துன்புறுதலும் அது தீர்தலும் அத்தகையதே என்றும், வாழ்தல் இனிதென்று மகிழ்தலும், முனிந்தபோது இன்னாதெனக் கலங்குதலும் அறிவுடையார் இயல்பன்று என்றும் நீர் வழிச் செல்லும் புணை போல் உயிர்கள் ஊழ் வழிச் செல்லும் இயல்பின என்றும், பெரியோரை உயர்த்திப் பேசுதலும், சிறியோரை இகழ்தலும் அறியாமை என்றும் (புறம்:192). வற்புறுத்தினார்.*

*நரிவெரூஉத் தலையார் என்னும் அறிஞர் உலகுக்கு யாதொரு பயனுமின்றி மூத்தவர்களை விளித்து, "நீங்கள் இது வரையில் பயனின்றி வாழ்ந்தது போதும். இனியேனும் விழித்துக் கொள்ளுங்கள். நல்லது செய்ய இயலவில்லை யெனினும் தீயவையாவது செய்யாது ஒழிமின். அதுவே எல்லார்க்கும் உவகையாகும் ; நல்லாற்றுப் படூஉம் நெறியும் அதுவே. இல்லையேல் கூற்றுவன் உம்மை நெருங்கும்போது கழிவிரக்கம் கொள்வீர்" (புறம் .195) என்று எச்சரிக்கின்றார். இன்னும் அகப்பாடல்கள் வழியே இல்லற வாழ்க்கை மேம்படுதற்குரிய இனிய பண்புகளை எடுத்துக் கூறித் தமிழரும் உலகமும் உறுதி பெற உழைத்தனர்.*

*பல்துறையறிவும், பழுத்த அனுபவமும் கொண்ட இச்சான்றோர்களிடமிருந்த இன்னொரு சீரிய பண்பு அவர்களின் நட்புணர்ச்சியும் நன்றியுணர்ச்சியுமாகும். அதியமானும் ஔவையாரும், பாரியும் கபிலரும், கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும், அங்ஙனமே அச்சோழனும் பொத்தியாரும் கொண்டிருந்த நட்புரிமை உலகம் வியக்கும் பான்மைத்தாகும்.*

*பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும் கொண்ட நட்பு,*

**"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்" (குறள்:784).**

என்ற நாயனரர் வாக்குக்குப் பொருந்துவதாகும். கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கச் செல்கையில் அவர் வருவார் எனக் கூறியதை யாரும் நம்பவில்லை. எனவே அவர் வந்த போது பொத்தியாருக்கு வியப்பு மேலிட்டது.

"வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்.
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனால்,
தன்கோ லியங்காத தேயத் துறையும்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொ லளியது தானே" (புறம்:217)

என்று பாடினார்

"கேட்டினு முண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்" (குறள்:796)

என்ற குறட்கு ஏற்ப அவர் வருவார் என்ற நம்பிக்கை கொண்ட சோழன்,

"தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே;
செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லலன் மன்னே" (புறம்:215)

என்றான். அவன் பிசிராந்தையாரின் நட்பைப் பற்றிப் புகழ்ந்த இன்னொரு செய்யுளும் (புறம். 216) படித்தின்புறத்தக்கதாகும். பொத்தியார் என்னும் புலவரும் சோழனிடம் நட்பு கொண்டொழுகியவர். அவரும் சோழனோடு வடக்கிருக்க முன் வந்தபோது சோழன் "புதல்வன் பிறந்த பின் வா" என்றான். சோழன் இல்லாத உறையூர் மன்றத்தினைக் கண்டு நெஞ்சம் குமுறிய புலவர்,

"பெருஞ் சோறு பயந்து, பல் யாண்டு புரந்த
பெருங் களிறு இழந்த பைதல் பாகன்

**அது சேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலை,**
**வெளில் பாழாகக் கண்டு கலுழ்ந்தாங்கு,**
**கலங்கினென் அல்லனோ, யானே பொலந் தார்த்**
**தேர் வண் கிள்ளி போகிய**
**பேரிசை மூதூர் மன்றம் கண்டே" (புறம்:220)**

*என்று பாடினார். அவனுடைய நடுகல்லை நண்ணி நின்று.*

**"புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென**
**என்னிவ ணொழித்த அன்பி லாளா!**
**எண்ணா திருக்குவை யல்லை;**
**என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே" (புறம்:222)**

*என்றார். வளமதுவுண்டு வளனில் காலை நறும்பூத் துறக்கும் வண்டு போன்றோர் பலருளர். பாவலர் வேந்தர் கபிலரோ தன் நண்பனிடம் மாறாப் பேரன்பு பூண்டவர். பாரி மாய்ந்த பின்னர் அவன் பெண்களை இருங்கோவேள், இருவிச்சிக் கோன் என்னும் இருவரிடமும் அழைத்துச் சென்று மணக்குமாறு வேண்டி அவர்கள் மறுக்கவே அவர்களைப் பார்ப்பார்ப் படுத்துத் தீப்பாய்ந்து உயிர்விட்ட வரலாறு உலகறிந்ததாகும் (புறம்:200, 201, 239).*

**முடிவுரை**

*பண்டைத் தமிழ்ச் சான்றோர் பண்பாட்டுக் காவலராயும், அரசியலறிஞராயும், நட்பும் நன்றியும் உடையராயும், உலகுக்கு உயரிய குறிக்கோள்களைச் சுட்டிக்காட்டும் அறவோராகவும், வறுமையிற்பெருமித வாழ்வுடையோராகவும் இருந்துள்ளனர்.*

**துணைநூற் பட்டியல்:**


1. *தமிழர் சால்பு, வித்தியானந்தன்.சு, பாரி புத்தக நிலையம்.1971.*
2. *தமிழர் வாழ்வும் பண்பாடும், தமிழறிஞர் சாமி. சிதம்பரனார், சாரதா பதிப்பகம்.2001*

3. சங்க இலக்கியத்தில் கற்பனை, டாக்டர்.இரா.மாயண்டி, பாரி நிலையம், சென்னை.

4. இலக்கியச்சோலையிலே, டாக்டர். சோ.ந.கந்தசாமி,வீரசோழன் பதிப்பகம், தஞ்சாவூர்.

5. டாக்டர்.சு.பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

# சங்ககால வாழ்வியல்
# LIFE IN THE SANGAM PERIOD

**முனைவர் பா. அனுராதா**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்,
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்).
வல்லம், தஞ்சாவூர்-613403.
மின்னஞ்சல்:anurathasiva80@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*மனித வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டும் உன்னதப் பணியை இலக்கியங்கள் மேற்கொண்டு வருகின்றன. இலக்கியத்தைக் காலத்தின் கண்ணாடி என்று அழைக்கலாம். இவ்வகையில் சங்க இலக்கியங்கள் முழுமையும் தமிழர்களின் ஒப்பற்ற வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளன. கடைச் சங்க காலத்தில் உருவான தொகை நூல்களில் குறுந்தொகை அகவற்பாவால் அமைந்த ஓர் அகப்பொருள் பனுவலாகும். நல்ல குறுந்தொகை எனப் பாராட்டப்படும் இந்நூலில் அன்பின் ஐந்திணை, முப்பொருள், இயற்கை, தமிழர் வாழ்வு போன்ற அனைத்து நிலைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் பண்டையக் காலத் தமிழர்களின் அக ஒழுகலாறுகளையும், புற ஒழுகலாறுகளையும், பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் திறம்பட எடுத்தியம்பி உள்ளது. முற்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் வாழ்வியலை செம்மையாக இயக்கி வந்தனர். அவ்வகையில் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை குறுந்தொகை எந்நிலையில் எடுத்து இயம்பி வந்துள்ளது என்பதை இனம்காணும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச் சொற்கள்**

*இயற்கை, வாழ்க்கை, தமிழ், சங்க காலம், வாழ்க்கை முறை*

**Abstract**

*The noble art of capturing human life is pursued by literature. Literature can be referred to as the mirror of time. In this regard, Sangam literature beautifully reflects the unparalleled lifestyle of Tamils. Among the anthology works created during the late Sangam period, the Kurunthogai is a significant internal piece shaped by Agaval. This esteemed collection, known as the Good Kurunthogai, records all aspects such as the five qualities of love, the three subjects, nature, and the lifestyle of Tamils. Furthermore, it incisively illustrates the inner and outer lifestyles of ancient Tamils, as well as their customs and traditions. Tamils who lived in ancient times managed their lifestyles gracefully. In this way, this article is crafted to observe how the Kurunthogai expressed the elements of Tamil life.*

*Keywords: Nature, Life, Tamil, sangam period, Life style*

**தமிழர் வாழ்வியல் அமைப்பு**

சமுதாயத்தின் ஓர் அங்கமாய், அதனோடு இணைந்து முரண்பட்டும் மோதியும் இசைந்தும், ஒரு குறிப்பிட்ட வாழ்வியல் சூழலில் வாழ்கின்றவன் மனிதன். வாழ்க்கை நடைமுறைகளின் காரணமாக அமையும் உணர்வு நிலையின் ஒரு வெளிப்பாடாக இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான். அவ்விலக்கியமானது அதன் தோற்றம் அதன் பொருள் அதன் பண்பாடு அதன் பயன்பாடு ஆகிய மூன்று நிலைகளிலும் மனித குல வாழ்வியல் செய்திகள் தொடர்புடையதாக விளங்குகின்றது. அந்நிலையில் ஓர் இலக்கியமானது

*வாழ்வியற் செய்திகளான குறிப்பிட்ட சமுதாயத்தில் உணவு, தொழில் நம்பிக்கைகள், வீட்டின் அமைப்புமுறை முதலியவற்றைக் கூறுவது மாந்தவியல் போக்கு (தா.வே. வீராச்சாமி, தமிழ் நாவல் முன்னோட்டம், ப.50) என்பதால் அறியலாம். குறுந்தொகையில் வாழ்வியல் செய்திகளை பற்றி ஆராயலாம்.*

**சங்கக்கால தலைவனின் களவு வாழ்க்கை**

*தலைவனின் வேறுபாடு கண்டு வினவிய பாங்கனுக்கு தலைவன் உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. உயரமான மலைகளிலிருந்து விழும் அழகிய வெள்ளை நீரின் ஆரவாரம் குகைகளுக்குள் எதிரொலிக்கும் சாய்வில் பல மலர்கள் உள்ளன. அவளுடைய அப்பா அந்தச் சரிவுகளி;ல் உள்ள ஒரு குக்கிராத்தின் தலைவர். கருணைப் போன்ற அவரது பரந்த தோள்பட்டை இளம் மகளின் நீர் என் நெருப்பை அணைத்துவிட்டது.*

**மால்வரை இழிதரும் தூவெள் ளருவி**
**கன்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரற்**
**சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்**
**நீரோ ரன்ன சாயல்**
**தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே (குறு 95)**

*பாங்கனிடம் மலைச் சரிவில் பல வண்ண மலர்கள் உள்ளன. அந்த மலைகளில் இருந்து விழும் அழகிய வெள்ளை நீர் குகைகளுக்குள் சத்தமாக ஒலிக்கிறது. அந்த மலைச் சரிவைச் சேர்ந்த ஒரு மலையகத் தலைவரின் மகளைக் காதலிக்கிறேன். அவளுடைய மலைகளில் ஓடும் தண்ணீரைப் போல அவள் அழகாகவும் மென்மையாகவும் இருக்கிறாள். நான் அவளைச் சந்திப்பதற்கு முன்பு நான் முழு வீரியத்துடன் இருந்தேன். அவளது மென்மை என் வீரியத்தைக் குறைத்தது. நான் இப்பொழுது அவளுடன் அன்பாக இருக்கிறேன் சோம்பலாக உணர்கிறேன் என பாங்கனிடம் கூறுகிறார். இப்பாடலில் கபிலர் தலைவன் பாங்குடன் கூறும் விதத்தினை*

எடுத்துரைத்துள்ளார். இக்கருத்தையே வள்ளுவ பெருந்தகை கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்

**ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரு முட்குமென் பீடு (குறள் 1088)**

என்ற குறட்பாவில் போர்க்களத்தில் என்னுடன் போரிட பகைவரும் அஞ்சும் அளவிற்கு வலிமை உடையவன். ஆனால் இவளுடைய ஒளி பொருந்திய நெற்றிக்கு தோற்று விட்டதே என்று வலிமை உடையவன் எடுத்துரைப்பதாக குறட்பா வழி அறிய முடிகிறது.

### மகளிர் அழகு

நீர் போன்ற சாயலும் (நீரோ ரன்ன சாயல்) மயில் போன்ற இயலும்(மயிலியற் சாயல்) நறுமை தன்மை மென்னையாகிய இயல்பு வாய்ந்த மேனியும் இயற்கை மணமும் மாமைக் கவினும் உடையவர்களாக மகளிர் விளங்கினர்.

பூப்போன்ற கண்களும் மூங்கில் போன்ற திரண்ட தோள்களும், பிறைபோன்ற மதியை மயக்கும் நெற்றியும் உடையவராய் மகளிர் திகழ்கின்றனர். “மூங்கில் போலத் திரண்ட தோள்கள் ஐந்து வகையாகப் பிரித்துப் பின்னிய நறுமணங் கமழும் கூந்தல் மானையும் வெல்லும் மருட்சி நிறைந்த பார்வை மயிலின் சாயல் எல்லாம் உடையவளே! சிலம்பின் உள்ளிடு பரல்கள் ஒலி முழங்க அணிந்துள்ள அணிகள் ஒளிவிட கொடியென மின்னலென அணிங்கென நீ தளர்ந்தசைந்து வருவாய்! தெரிந்து கொள்ளவே முடியாத நுண்மையான நின் இடையினிடத்தே என் கண்கள் களவாகப் பார்த்தன. செல்வம் நிறைந்த உயர்ந்தோங்கு சிறப்புடைய நின் தந்தையின் பழைய பெருநகரிலே இளமை வேகத்தால் வெளியே பந்தை எறிந்துவிட்டுப் பந்தின் பின்னால் ஓடி வந்தவளே! என்று தலைமகன் ஒருவன் தலைமகளைக் கண்டு பேசுவதாக அமைந்துள்ள கலித்தொனைப் பாறைபகுதி மகளிர் உடல் வனப்பினைத் தெள;ளிதின் புலப்படுத்தும்.

**திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கை**

*ஒவ்வொரு ஆணிற்கும் திருமணத்திற்கு முன் வீரமே சிறந்த பண்பாக இருந்தமையை சங்கப்பாடல்கள் பலவற்றால் அறியமுடிகிறது.*

**ஒளிறுவாள அருஞ்சமம் முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம்314)**

*என்ற பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர் பாட்டு போர்க்களத்தில் வீரத்தை விளங்கக் காட்டி களிறு எறிந்துவெற்றியுடன் திரும்புதல் ஆண்மகனின் சிறந்த பண்பாகும் என்பதனைத் தெரிவிக்கின்றது.*

*சங்ககாலத்தில் மட்டுமல்லாமல் காப்பிய காலங்களிலும் வீரம் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது. காப்பியத்தில் கோவலன் திருமணத்திற்கு முன்பு பல்வேறு நற்பண்புகளை செய்துள்ளார். மதம்பிடித்த யானையை அடக்குதல்,வயதானப் பாட்டியை காப்பாற்றுதல் என பல்வேறு செயல்களை வீரத்துடன் செய்தவர் என்பது மிகையாகாது.*

**சங்ககால பெண்களின் விளையாட்டுகள்**

*சங்ககால மகளிர் தங்களின் உடல் அமைப்பிற்கு ஏற்ப விளையாட்களைச் சங்ககால மகளிர் தேர்ந்தெடுத்து விளை யாடினர். பூக்கொய்தல் புனல் விளையாடல் ஊசல் ஆடுதல் பந்தாடுதல் மணலில் வீடுகட்டி விளையாடுதல் முதலியவற்றை மகளிர் தம் இளம் பருவ விளையாட்டாக விளையாடி மகிழ்வர்.*

*மலைவாழ்ப் பகுதியில் உள்ள பெண்கள் தினைப்புனங்களில் தினைக்கதிர்களை தின்ண வரும் கிளி குருவி போன்றவற்றை விரட்டுதல் நீராடல் போன்ற விளையாட்டினை மேற் கொண்டனர். மேலும் மாலைகட்டி விளையாடுதல் போன்ற செயல்களை செய்தனர் என்பதனை கபிலர் குறுந்தொகையில் எடுத்துரைத்துள்ளார்.*

**சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்**
**புனக்கிளி படியும் பூங்கட் பேதை**
**தானறிந் கனளோ இலளோ பானாட்**
**பள்ளி யானையி னுயிர்த்தென்**
**உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே (குறுந்.142)**

*என்ற பாடலில் கபிலர் கவலையில் தேங்காமல் மகிழ்ச்சியுடன் துள்ளலும் எழுச்சியும் நிரம்பய வாழ்வினராய் சிறுசிறு விளையாடல்களில் ஈடுபட்டனர் என்பது சங்க இலக்கியங்களின் பல பாடல்களால் நன்கு புலனாகின்றது. இவ்வாறு விளை யாட்டில் ஈடுபடும் மகளிர் தன்னை மகிழ்யுடன் வைத்துக் கொள்கின்றனர்.*

*மகாகவி பாரதியார் ஓடி விளையாடு பாப்பா என்ற பாடலில் பெண்கள் சோர்வின்றி செயல்பாட வேண்டும் என்பதனை வலியுறுத்தியுள்ளார். இச்செய்தியினை சங்க இலக்கியத்தில் நற்றிணையில் தலைவியின் நிலை பின்வருமாறு*

**விளையா டாயமொடு ஓரை யாடாது**
**இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்**
**அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்**
**குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்**
**பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம் (நற்றிணை 68)**

*எனவே வீட்டில் தங்கி அறத்தினைத் தேய்க்காமல் வீட்டின் புறத்தே போந்து நுங்கும் நுரையுமாகப் பால்போல் கொப்புளித்து வரும் புதுப்புனலில் நெஞ்சு மகிழ நீந்தித் திளைத்து மகிழ்ந்தாடுவோம் என்று தோழி தலைவியை அழைப்பதனைக் காணலாம்.*

### பெண் கல்வி

*சங்ககால மகளிர் இயல், இசை, கூத்து என்னும் தமிழின் முத்துறையிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினர். ஆடவர்க் குரிய கல்வி வேறு மகளிர்க்கு வேண்டிய கல்வி வேறு.*

போர், தூது, காவல், பொருளீட்டல் முதலிய துறைகளில் ஈடுபட்டதனால் அதற்குரிய துறைக்கல்வியினை ஆண்மக்கள் கற்றனர். மகளிர் தம் குடும்பப் பாங்கிற்குத் துணை செய்யும் கல்வியினைப் பயின்றனர். கல்வியில் வல்ல மகனையே தாயும் விரும்பினாள். மகளிர் கற்ற கல்வி அவர்தம் உடலுறுப்புக்களுக்குப் பயிற்சி தருவதாகவும் திருமணத்திற்குப் பிறகு இல்லற வாழ்வில் ஈடுபடுவதற்குத் துணை செய்யும் கருவியாகவும் அமைந்தது. குடும்பக் கல்வியினைத் தாயிடமும், செவிலித் தாயிடமும், தோழியிடமும் கற்றாள். பெண்களின் திறனை சிறைக்குடி ஆந்தையார்பின்வரும் பாடல் வழி கூறுகிறார்.

**தலைப்புணைக் கொளினே தலைப்புணக் கொள்ளும்**
**கடைப்புணைக் கொளினே கடைப்புணக் கொள்ளும்**
**புணைகை விட்டுப் புனலோ டொழுகின்**
**ஆண்டும் வருபுவள் போலும் (குறுந்.222)**

இப்பாடலில் தலைவன் ஒரு பெண்ணைப் பார்த்தான். அவளோடு பழக வேண்டும் என்று விரும்புகிறான். அவளை எப்படி அணுகுவது? யாரைத் தூதாக அனுப்புவது? என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறான். அப்போது தலைவி அவளுடைய தோழி ஒருத்தியுடன் நீராடிக் கொண்டிருப்பதைத் தலைவன் பார்க்கிறான். தோழி எதைச் செய்தாலும் தலைவியும் அதையே செய்கிறாள். அதைப் பார்த்த தலைவன் தலைவியும் அந்தத் தோழியும் மிகவும் நெருங்கிய நட்புடையவர்களாக இருப்பதை உணர்கிறான். இந்தத் தோழிதான் தலைவியிடம் தூதாக அனுப்புவதற்குத் தகுந்தவள். அவள் சொன்னால் நம் வேண்டுகோளுக்குத் தலைவி இணங்குவாள் என்று தலைவன் எண்ணுகிறான். இப்பாடலின் மூலமாக பெண்கள் தூதில் சிறந்த சிலையில் இருந்தனர் என்பதனை அறியும் வகையில் எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாறு நட்பும், அறிவுரையும் அவ்வப்போது தோழி யிடமும், செவிலித்தாயிடமும் பெற்ற தலைமகள் இளம்

*வயதிலேயே இயல், இசை, கூத்து என்னும் தமிழின் மூன்று துறைகளிலும் திறம்பெற்று விளங்கினாள். இளமையிலேயே நிறைகல்வியுற்ற மகளிரை "முதுக் குறைவி" என அழைத்தனர். இதனை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சிலப்பதி காரத்தில் கண்ணகி சிறுமுதுக் குறைவி என அழைக்கப்படு கின்றாள்.*

**நல்ல குடிப்பிற்பொழுக்கம்**

*ஒரு சமயம் பரத்தையின் பிரிந்துவந்த தலைமகனுக்குத் தூதாகப் பாணன் ஒருவன் தலைவியை வாயில் வேண்டி நின்றபோது தலைவி அவரிடத்து நமக்குச் சினம் இல்லை அவர் நம்மால் உபசரித்து வழிபடுவதற்கு உரியவரே அல்லாமல் பேசி மகிழ்வதற்குரியவர் அல்லர் என்று தன் குடிபிறந்த ஒழுக்க நலந்தோன்ற உரைத்தாள்.*

**நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்**
**இன்னுயிர் கழியினு முரையல் அவா. நமக்கு**
**அன்னையும் அத்தனும் அல்லரோ**
**புலவியஃ தெவனோ அன்பிலங் கடையே (குறுந்.79)**

*பிறிதொரு தலைவி, பரத்தையர்பாற் சென்ற விட்ட தூதுவர், தலைவன் வீடு திரும்புவதற்கு அவளுடைய உடன் பாட்டை வேண்டியபொழுது, அதனை மாறாது வழங்கினாள். தலைவி தலைவனுக்கு வாயில் நேர்ந்தாள் என்பதனைக் கேள்வியுற்ற தோழி, தலைவன் கொடுமை தன்னைத் துன்புறுத்தவும் அதனைப் பாராட்டாமல் உடம்படுதற்குரிய இக்குடியிற் பிறத்தல் கொடிது என்று கூறித் தலைவியின் உயர்ந்த குடிப்பிறப்பொழுக்கத்தினைப் பாராட்டினாள். இதனை போன்றே ஐங்குநூற்றில்புலவர் தலைவி ஒருத்தி தன் தலைவனின் இல்லம் மிகவும் வறுமைச் சூமலில் இருந்தாலும் தாய் வீட்டில் உயர்ந்த பண்போடு எடுத்துரைக்கும் விதம் அருமையாக படைத்துள்ளார்.*

**அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய அவாநாட்டு**
**உவலைக் கூவற் கீழ**
**மானுண் டெஞ்சிய கலுழி நீரே (ஐங்குறு.203)**

*ஐங்குநுறூற்றில் தலைவி தன் தாய் வீட்டுத் தோட்டத்திலுள்ள தேன் கலந்த பாலைக் காட்டிலும் தலைவன் நாட்டிலுள்ள தழையுடைய கிணற்றின் அடியிலுள்ள மான் முதலிய விலங்குகள் உண்டு எஞ்சி மிகுந்த கலங்கல் நீரே இனிமை யுடையது என்று துணிகின்றாள்.*

**பெண் மடலேறாமை:**

*எத்துணைத் துன்பம் வந்த போதிலும் பெண் மடலேறுவது என்னும் வழக்கம் கிடையாது என்று தெளிவுறுத்தியுள்ளார் தொல்காப்பியனார். இந்நிலை பெண்ணின் மனவடக்கத்தினை விளக்குவதாகும்.*

*ஆண்கள் மடலேறுவேன் என்று கூறும் பாடல்கள் சில, சங்க இலக்கியத்தில் உண்டு. ஆனால் மகளிர் மடலேறுவேன் என்று சொன்னதாகவோ, அன்றி மடலேறி இறந்து பட்ட தாகவோ ஒரு பாடல்தானும் இடம் பெறாமை கருதற்பாலது.*

**முந்நீர் வழக்கம்**

*தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு, கடலிற் கலமேறிப் பொருளீட்டச் செல்லுகின்ற வழக்கம் கிடையாது என்கிறார் தொல்காப்பியர். இவ்வழக்கமும் தலைவி அயல் நாட்டில் துன்பப்படக் கூடாது என்று தலைவன் நினைத்த அருள் நெஞ்சத்தினைப் பிரதிபலிப்பதாகும்.*

**மகளிர் கூத்தும் விளையாட்டும்**

*மகளிர் துணங்கை நாளும் வந்தன என்று கூறி மகளிர் தம்முன் தழுவி ஆடுகின்ற துணங்கைக் கூத்தை நிகழ்த்துவது பண்டைய வழக்கமாகும். அது பொழுது அவர்கள் விரும்பும் ஆடவர் அவர்க்கு முதற் கை கொடுத்தல் மரபு. திருமணத்திற்கு*

முன் தோழியரோடும், திருமணத்திற்குப்பின் தம் தலைவியரோடும் புனலாடச் செல்வது என்பது வழக்கமாகும். சுதந்திரமாக மகளிர் இளம் வயதில் நீராடச் சென்ற நிகழ்ச்சி அவாதம் சுதந்திர நிலையினை விளக்கும் என்பர். நல்ல கணவனைப் பெற வேண்டித் தைத் திங்களில் காலையெழுந்து நீராடி நோன்பு நோற்பது மகளிர் வழக்கமாகும்.

மகளிர் தம் கணவரோடும் குழந்தையோடும் கைகோத்துக் கொண்டு திருப்பரங்குன்றம் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வந்தார்கள் என்பது மதுரைக்காஞ்சியில் நாம் காணும் குறிப்பு. சங்ககால மகளிர் பொது இடங்களில் தாராளமாகப் பழகிய நிலையினை உணர்த்தும். இதுபோன்றே திருமாலிருஞ்சோலை மலைக்குக் கணவனும் மனைவியும், பெற்றோரும் குழந்தைகளும் உறவினரும் ஒன்றுகூடித் திருமாலை வழிபடச் செல்லும் செயலும் பரிபாடலில் கூறப்படுகின்றன.

**உடை குறித்த ஒழுங்கு**

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவுக்கு அடுத்தாற்போல் இடம் பெறுவது உடையாகும். உடை மனிதனுக்கு மானத்தைக் காக்கும் கவசம் போன்றது. குறுந்தொகையில் தழையினால் ஆன உடையை உடுத்தினர் என்பதனை,

**கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி (குறுந் 80)**

கூந்தலைப் போன்ற நெறிப்பினையுடைய ஆம்பலி;ன் முழுமையான செறிந்த இலைகளைத் தழையாடையாக உடுத்தியதனை அறிய முடிகிறது.

**அயவெள் ளாம்பல் அம்பகை நெறித்தழை**
**தித்திக் குறங்கின் ஊழ்மாறு அலைப்ப (குறுந் 293)**

என்ற பாடலின் மூலம் பரத்தை ஆம்பலினால் ஆன ஆடையை அணிந்தமையை அறிய முடிகிறது. தொழில் சார்ந்த வாழ்வு ஆண்களுக்கு இன்றிமையதாகும்.

**வினையே ஆடவர்க்கு உயிரே (குறுந். 195)**

என்பதை அறிய முடிகிறது. உழவுத் தொழிலை

**அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி**
**பரு இலைக் குளவியொடு பசுமரல் கட்கும்**
**காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி (குறுந் 100)**

என்ற பாடலில் மலைவாழ் மக்கள் அருவிசார்ந்த அவற்றி;ல் களை நீக்குவதையும் அறிய முடிகிறது

**பண்ட மாற்றும் பண்பாடு**

சங்க காலத்தில் ஒரு பொருளுக்கு நிகராக மற்றொரு பொருள் பண்ட மாற்றம் செய்யப்படும் என்பது திணை அடிப்படையில் அமையும. ஒரு திணையில் சென்று பண்ட மாற்றம் செய்யும் வழக்கம் இருந்தது. அதன் அடிப்படையில் குறுந்தொகையிலும்,

**உப்பை மாறி வெண்ணெல் தரீஇய**
**உப்புவிளை கழனிச் சென்றனள் (குறுந் 269)**

உப்பை விற்று வெண்ணெல்லை வாங்கி வரும் பொருட்டு உப்பு விளையும் களத்திற்குச் சென்றாள், என்ற கூற்றிலிருந்து உப்பிற்கு நிகராக வெண்ணெல் பண்டமாற்றம் செய்யப்படு வதை அறிய முடிகிறது.

**பரத்தமை ஒழுக்கம**

சங்க காலத்தில் பரத்தமை ஒழுகுதல் சமுதாயத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பரத்தமை ஒழுகுதல் இழிவு எனச் சமுதாயம் கருதவில்லை தலைவி மட்டுமே பரத்தமை ஒழுகுதல் இழிவு எனக் கருதினாள். இருப்பினும் பரத்தமை யிடம் சென்று வந்த தலைவனை ஏற்றுக் கொண்டு இல்லறம் நடத் தினாள். தலைவன் தன் தேரினை அலங்கரித்துச் சென்று

*இரவு முழுவதும் பரத்தையரை ஒழுகினான். விடிந்தபின் பரத்தமை ஒழுகிய அடையாளங்களுடன் தன் இல்லத்திற்கு பிரிந்து வரும் பொழுது தலைவி தலைவரின் செயல் மறந்து ஏற்றுக் கொள்ளுதல் உலகியல்பாகும்.*

**காலை எழுந்து கடுந்தேர் பண்ணி**
**வால்இழை மகளிர்த் தழீஇய சென்ற**
**மல்லல்ஊரன் எல்லினன் பெரிது என**
**மறுவரும் சிறுவன் தாயே**
**தெறுவது அம்ப இத்திணைப் பிறத்தல்லே (குறுந் 45)**

*என்ற பாடலில் பரத்தமையும் ஒழுக்கமாக மேற்கொள்ளப் பட்டது அறிய முடிகின்றது.*

**இல்லறச் சிறப்பும் இனிமையும்:**

*இல்லறம் என்றது சமூக கட்டமைப்பாகும். காதலர்கள் இருவரும் கணவன் மனைவி ஆகும்பொழுது குடும்பம் எனும் கட்டமைப்பிற்குள் வருகின்றனர். இல்லறவாழ்வு சிறக்க இனிமை பெற கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்தல் புரிந்துணர்தல போன்ற உன்னத பண்பினை மேற் கொள்பவராக இருத்தல் வேண்டும். கற்பொழுக்கத்தில் தள்ளப்பட்ட கணவன் மனைவியின் மாண்பினை பின்வரும் பாடல் நன்கு புலப்படுத்துகின்றது.*

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறுகலிங்கம் கழாஅது உடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத;**
**தான்னுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிது தெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே (குறுந் 167)**

*மேற்காணும் பாடலில் மனைவி சமைத்த உணவு சுவையாக இருப்பதாக கணவன் பாராட்டி மகிழ்கின்றான். இல்லறம் சிறக்க வாழ்வியல் ஒழுங்கமைவோடு பயணிக்க கணவன்*

*மனைவி ஒரு கோட்டில் பயணித்தால் நலம் விளையும் என்பதை இப்பாடல் புலப்படுத்துகின்றது.*

**விருந்தோம்புதல் நட்புறவுக்கு வழி**

*தமிழர்களின் தலைச் சிறந்த பண்பாக விருந்தோம்பலைக் கொள்ளலாம். தம்மைநாடி வரும் விருந்தினரின் மனம் மகிழும்படி உணவளித்து மகிழ்வது தமிழர்களின் உயர்ந்த குணமாகும். விருந்Nதாம்பல் வாழ்வியல் அறங்களில் ஒன்றாகப் பணிக்கப்பட்டுள்ளது. குறுந்தொகைப் பாடலில் புதிய விருந்தினர் வருகையை காக்கை உணர்த்துவதாகவும் அவ்விருந்தினரை எதிர்பார்த்து வரவேற்கும் குணம் கொண்டவர்களாக தமிழர்கள் விளங்கியதைக் காண முடிகிறது.*

**திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி**
**முழுவதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
**எழுகாலத்து ஏந்தினும் சிறிது என் தோழி**
**பெருந்தோள் நெகிழ்த்த செல்வற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறுந் 210)**

*என்ற பாடல் வழியே அறிய முடிகிறது. விருந்தோம்பல் தமிழர்கள் விரும்பி ஏற்றதை காண முடிகின்றது. இவ்வாறாக குறுந்தொகையில் மனித வாழ்வியல் அறங்கள் தொகுத் துரைக்கப்பட்டுள்ளது தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு என அனைத்துக்கூறுகளையும் எடுத்தியம்பி யுள்ளது. தமிழர்களின் வாழ்வு சிறக்கவும் செழிக்கவும் நல்லதொரு வாழ்வியல் அறங் களை குறுந்தொகை எடுத்தியம்பியுள்ளதை மறுக்க இயலாது.*

**பெண் நிலை தாழ்ச்சியுறல்**

*சங்ககால இறுதியில் கடமையையே உயிராக எண்ணிய கணவனும், கணவனையே உயிராக எண்ணிய மனைவியும் ஒரு சிறிது அந்நிலையினின்று நெகிழ்ந்திருக்க வேண்டும்.*

ஏனெனில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணப்பெறும் சில குறிப்புகள் இவ்வாறு நம்மை நினைக்கத் தூண்டுகின்றன.

இன்னா நாற்பதில் பெரிய மென்மை வாய்ந்த மூங்கிலை ஒத்த தோள்களையும் தளிரை ஒத்த மென்மையினையுமுடைய மகளிரை நஞ்சென்று நினைத்தல் இனிது என்ற கருத்து இடம் பெற்றுள்ளது.

கற்புடைய மனைவியைக் கோலாற் புடைத்தலைப் பற்றிய செய்தி கூறப்படுகின்றது.இக்காலத்தே மகளிற் பண்பும் சரிவு கண்டுவிட்டது என ஓரளவு அறிய முடிகின்றது. காரணம் கணவனை எதிர்த்து நிற்கும் மனைவி பிறரொடு வழக்குத் தொடுத்து மன்றம் ஏறும் பெண் திரிகடுகப் பாடல்களில் இடம் பெறுவதோடு மனைவிக்குப் பயந்து வாழும் எருது போன்ற ஆணும் இடம் பெறக் காணலாம்.

**வாழ்வியல் நெறிகள்**

“அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்பார் அறிவில் சிறந்த ஔவைப் பிராட்டியார். பெறுதற்கற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வ தற்குச் சில நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். எப்படியாவது வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என்று மனத்தில் உறுதி மேற்கொண்டு செயலில் அதனை நடத்திக் காட்டுதல் வேண்டும். “குறிக்கோள் இல்லாது கெட்டேன்” என்பார் திருநாவுக்கரசர். எண்பத்தோராண்டுகள் உயரிய குறிக்கோளுடன் தொண்டு வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்த அப்பர் பெருமானே தம் வாழ்க்கை குறித்து இவ்வாறு சொல்லிக்கொள்வாரேயானால் நாமெல்லாம் எவ்வாறு வாழ்க்கையை வகுத்தமைத்துக் கொள்ள வேண்டும் என்பதனை அறிந்து கொள்ளவேண்டும்.

வாழ்வியல் நெறி எதுவெனச் சிந்திக்கும் பொழுது ஈட்டும் செல்வத்தைப் பிறர்க்குப் பகிர்ந்து வாழும் பெற்றியினை மேற்கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது

பழந்தமிழர்களுள் ஆண்கள் கடமையே – கொண்ட தொழிலே உயிராகக் கொண்டிருந்தனர். ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்கள் தத்தம் கணவரையே உயிராகக் கொண்டிருந்தனர்.

**முடிவுரை**

வாழ்வியல் நெறிகள் சில நம் முன்னோர் கண்ட வாழ்க்கைத் தெளிவனை உணர்த்தி நிற்க முடிகிறது.குறுந் சங்ககால மக்கள் அகத்திலும் புறத்த்திலும் தன்னிகரில்லாத வகையில் வாழ்ந்துள்ளனர். குறிப்பாக காதல் வாழ்வில் புரிதலுடனும் விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பக்குவத்துடனும் இருந்த தனை உணர முடிகிறது. மேலும் விருந்தோம்பல் போன்ற வாழ்வியல் நெறிகளை வாழ்வியலோடு வகுத்து வாழ்ந்தனர் என்பதையும் அறிய முடிகிறது. வாழ்வியல் நெறிகள் என்ற நூலில் பாலசுப்ரமணியன் அவர்கள் வாழ்வியல் நெறிகள் சார்ந்த பல்வேறு கருத்துகளை அறிய முடிகிறது.

**துணைநின்ற நூல்**

1. குறுந்தொகை - உ.வே.சாமிநாதையர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம ஐந்தாம் பதிப்பு -2000 சென்னை.

2. திருக்குறள்-பரிமேலழகர் உரை சாரதா பதிப்பகம் சென்னை- 2002

3. புறநானூறு - உ.வே.சாமிநாதையர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம சென்னை-2014

4. நற்றிணை - இராமசுப்பிரமணியம், வ.த(உ.ஆ) திருமகள் நிலையம் சென்னை-2009

5. ஐங்குநுறூறு - சோமசுந்தரனார்,பொ.வே கழக வெளியீடு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை- 2009.

# சங்ககாலத் தமிழ்ப் பண்பாட்டு வரலாறு
# HISTORY OF SANGAM PERIOD TAMIL CULTURE

**பேரா.அ. இராஜன் ஜான்**
தமிழ்த்துறைத் தலைவர்
ஜெ.பீ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தென்காசி-627852
மின்னஞ்சல்: rajanjohn315@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ்மக்கள் நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்டவர்கள். பண்பாடு, இசை, கல்வி, கலைகள் என அனைத்திலும் சிறந்து விளங்கியவர்கள். தன்னைப் பிறரோடு ஒப்புமைப் படுத்தி வாழாமல் இருந்தவர்கள்.தன்னுடைய வாழவைத் தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர்கள்.பெண்களை மதித்து வாழ்ந்தவர்கள். நம்மிடமிருந்தே பிறநாட்டவர்கள் அனைவருக்கும் பண்பாடு,கலாச்சாரம் போன்றவை கடத்தப்பட்டன என்று கூறினால் அது மிகையாகாது. வெற்றியைப் பெற்றுக் கொண்டு தோல்வியில் இருந்து கற்றுக் கொண்டு வாழ்ந்த தன்மை கொண்டவர்கள்.அனைவரையும் பாதுகாத்து வாழ்ந்த வீர மரபு கொண்டவர்கள். பண்பட்டால் மட்டுமே பண்பாடு அடையமுடியும் என்ற கருத்தை உருவாக்கும் அளவிற்கு உயர்ந்து சிறந்தவர்கள். இப்படிப்பட்ட தமிழர்களின் வரலாறு போர் அறம் தொடங்கி காதல் அறம் வரை மிகவும் நேர்த்தியான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு விளங்குகின்றது. இந்தப் பண்பாட்டுக் கூறுகளின் சிறப்பை எடுத்துக் கூறுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச் சொற்கள்**

*வரலாறு, சங்க கால வரலாறு, பண்பாடு, வரலாற்றுப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு,*

**Abstract**

*The Tamil people have a long historical background. They have excelled in culture, music, education, and the arts. They lived without comparing themselves to others. They lived not just for themselves, but for others. They respected and honored women. It would not be an exaggeration to say that culture and traditions from our land have been carried to all other countries. They are individuals who have learned from failure while achieving success. They possess a warrior tradition that emphasizes protection for all. They have risen to such heights that they have created the idea that one can only attain culture through refinement. The history of such Tamils is marked by very refined cultural aspects, ranging from the virtue of courage in war to the virtue of love. Highlighting the uniqueness of these cultural aspects is the purpose of this article.*

*Keywords: History, Sangam History, Culture, Historical Culture, Tamil Culture,*

**முன்னுரை**

எப்படியோ வாழ்வது வாழ்க்கை அல்ல. இப்படித்தான் வாழவேண்டும் என்பதே வாழ்க்கை.இந்த வாழ்க்கை நம்முடைய நடவடிக்கையிலிருந்து தோன்றுகின்றது. முகம் தெரிந்தவர்களை உணவிட்டு வரவேற்பதில் இல்லை அறம். முன்பின் தெரியாதவர்களை அழைத்து அவர்களுக்கு அன்னமிட்டு ஆசிபெறுவதே தமிழரின் அறப்பண்பாடு. வாழ்வியலைத் தமிழர்கள் பண்பாடு கொண்டு கட்டமைத்தனர்.

இந்தப் பண்பாடு தமிழனின் சின்னமாக இன்றுவரை இருந்து வருகின்றது. திருத்தப்பட்ட நிலத்தில் இருந்து உணவுக்கானவை விளைவது போலவே திருத்தப்பட்ட வாழ்க்கையிலிருந்து நல்ல பண்பாட்டுக் கூறுகள் பிறக்கின்றன.

**சங்கம்**

தமிழருக்கு இருந்த அனைத்துப் பண்பாடுகளும் சங்கம் வைத்து அவர்கள் வளர்த்த மொழியில் இருந்து உருவானது. தமிழ் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாகி வளர்ந்துவந்த மொழியாகும். பல்வேறு புலவர்கள் தமிழை வளர்த்து எடுத்தனர்.கடவுள்கள் கூட தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவர்களாக இருந்தனர். முதல்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் இருந்துள்ளன.

"முதல் சங்கம் 89 மன்னர்களால் 4440 ஆண்டுகள் நடை பெற்றன. இந்தச் சங்கத்தில் 549 புலவர்கள் இருந்தனர். இரண்டாம் சங்கம் 59 பாண்டியர்கள் ஆட்சியில் 3700 ஆண்டுகள் நடைபெற்றன.இந்தச் சங்கம் கபாடபுரத்தில் இருந்ததாக அறியப்படுகின்றது. மூன்றாம் சங்கம் 49 பாண்டியர் ஆட்சிக் காலத்தில் 1850 ஆண்டுகள் நடைபெற்றது. தற்பொழுது உள்ள மதுரையில் இது இருந்தது."[1]

**சங்க காலம்**

சங்க காலம் என்பதில் ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன ஒவ்வொருவரும் தங்களுடைய ஆராய்ச்சியின் அடிப்படையில் சங்க காலத்தை வரையறுத்துள்ளனர்.

"சங்க நூல்கள் தோன்றி வளர்ந்த காலமே சங்ககாலம் என்று தீட்சிதர் ஒருவர் கூறுகிறார். கிமு ஆறாம் நூற்றாண்டில் தொடங்கி கிபி ஐந்தாம் நூற்றாண்டு வரை ஆயிரம் ஆண்டுகள் சங்க காலம் என்று சீனிவாசா ஐயங்கார் கூறுகின்றார் இவருடைய கருத்துக்களை பெரும்பாலான ஆய்வாளர்கள்

ஏற்றுக் கொள்கின்றனர். அத்திகும்பா கல்வெட்டுகள் அசோகர் கல்வெட்டுகள் வேள்விக்குடி மற்றும் திருக்கோவிலூர் கல்வெட்டுகள் நாணயங்கள் தொல்பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த பொருட்கள் போன்றவை சங்கம் இருந்த காலத்தை நாம் அறிந்து கொள்ள தோராயமாக உதவுகின்றன."[2]

**பண்பாடு**

பண்பாடு என்பது தமிழர்களின் மானம் வீரம் காதல் போன்ற இவற்றோடு இணைந்து ஒன்றாகும் மானத்தையும் வீரத்தையும் காதலையும் போற்றிய தமிழர்கள் பண்பாட்டையும் போற்றி வாழ்ந்தனர் மானம் இழந்த பின் வாழ்வதில் பயனில்லை என்ற பண்பாட்டு கோட்பாட்டை வைத்தவர்கள் தமிழர்கள் அக இலக்கியமான காதலிலும் கூட நல்ல ஒரு பண்பாட்டு சிந்தனைகளை கொண்டதாக தமிழ் இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன போர் அறம் என்று புற இலக்கியங்கள் மனிதனுடைய பண்பாட்டுக் கூறுகளை அதிகமாக வெளிப்படுத்துவதைக் காணலாம்.

"மனிதன் சமுதாயத்தின் ஒரு அங்கம் எனவே மனிதன் பேசும் மொழி அவருடைய ஆடை உணவு வாழும் முறை செய்யும் பணி ஆகியவை பண்பாட்டின் வாயில்களாக பழங்காலத்தில் இருந்துள்ளன உணவு என்பது மனிதனின் அடிப்படை தேவைகளில் முக்கியமானதாகும் ஆனால் எதை உண்பது எந்த நேரத்தில் உண்பது என்பவற்றைப் பண்பாடே கற்றுக் கொடுக்கிறது பிற நாட்டவர்கள் உயர்ந்த நாற்காலியில் அமர்ந்து மேஜை மீது உணவை வைத்து உண்பர் ஆனால் தமிழர்கள் தரையில் காலை மடக்கி அமர்ந்து இலை போட்டு உண்ணும் பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தனர்."[3] மேலும், புகழ், வீரம், மானம், விருந்தோம்பல், கொடை, ஆடை பழக்கவழக்கங்கள்,நம்பிக்கைகள், நன்றியுணர்வு பாகுபாடு பார்க்காமை, வாணிகம் பொதுநலம் பேணுதல்,கற்பு, களவு, அலர்தூற்றுதல், அறத்தொடு நிற்றல் உடன்போக்கு திருமண

வாழ்க்கை, மனிதநேயம், உயிரிரக்கம், நல்லிணக்கம் இவ்வாறு பண்பாடு தமிழரின் பரந்துபட்ட வாழ்வியலை ஒட்டுமொத்தமாக விளக்குவதாக அமைந்துள்ளது.

**புகழ்**

புகழுக்குத் தமிழர்கள் அதிகமான முக்கியத்துவம் தந்தனர். புகழைப் பெறுவதை மிகவும் விரும்பினர்.ஆனால் அதனைப் பெறுவதில் நேர்மையும் ஒழுக்கமும் கொண்டு வாழ்ந்தனர். புகழ் பெற வேண்டுமெனில் அதற்காக உயிரையும் கொடுக்கும் தன்மை கொண்டவர்களாகத் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர்.

**"புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்"[4]**

என்ற இந்தவரிகளின் வாயிலாகத் தமிழர்களின் பண்பாட்டை அறியமுடிகின்றது. மானத்தை இழந்து புகழைச் சம்பாதிக்க அவர்கள் நினைக்கவில்லை. சிறந்த ஒழுக்கம் கொண்டவர் களாகத் தமிழர்கள் வாழ்ந்த காரணத்தால் தான் அவர்களின் புகழ் எங்கும் பரவியது.

மன்னர்களின் செயலுக்காகவே அவர்கள் மக்களால் புகழப்பட்டார்கள். வெறும் போர்,ராணுவம் போன்றவற்றுக்கு அஞ்சி மன்னர்கள் மக்களால் புகழப்படவில்லை." முது குடுமிப் பெருவழுதி பாண்டியநாட்டு அரசுரிமையை ஏற்றுக் கொண்டு ஐந்து ஆண்டுகள் ஆகின பாண்டியநாடு முழுவதும் அவன் சுற்றிப் பாராத சிறிய ஊர்களும் இல்லை பெரிய ஊர்ககளும் இல்லை நகரங்கள் அவனது தர்மதனத்தாலும் அரசாங்க ஆதரவாலும் அறநிலை, கலா நிலையம், நூல் நிலையம் முதலியவற்றைப் பெற்றன. கிராமங்களிலும் அறிவுடையார் அனேகர் வாழ்ந்தனர். அவர்களுடைய பேச்சு எழுத்து என இரண்டு வழிகளால் அங்குள்ளோர் அனைவரும் தெய்வ நம்பிக்கை, ராஜ பக்தி, தேச பக்தி, எதிர்கால வாழ்வியல் நாட்டம், முதலிய சிறந்த குணங்கள் உடையவராய் விளங்கினர். வாயில்லா பிராணிகள் தெய்வங்களைப் போல

வாழ்ந்து வந்தன. அவற்றிற்கு ஏற்படும் சிறிய பிணிகளை நீக்க அரசாங்கம் உதவி செய்தது. மிருக வைத்தியர்கள் நாடெங்கும் வாழ்ந்து வந்தார்கள். நீர் நிலைகளுக்கு எங்கிருந்து நீர் சேர்த்துப் பயிர்களுக்கு உதவ செய்யலாமோ அதற்கு ஏற்ற முயற்சிகள் எல்லாம் அரசன் அனுமதி பெற்ற அரசு அதிகாரிகள் செய்யலானார்கள்"[5] இப்படிப்பட்ட சிறந்த பண்பாடுகளைத் தன்னுடைய அரசாட்சியில் கொண்டிருந்ததால் மக்களால் நேசிக்கப்பட்டார்கள். பாண்டியர்கள் மட்டுமல்ல, மூவேந்தர்களும் மக்களால் புகழப்பட்டார்கள்.

**விருந்தோம்பல்.**

தமிழர்கள் விருந்தோம்பல் என்ற ஒரு சிறந்த வாழ்வியல் முறை இருந்தனர் முன்பின் தெரியாத முகம் அறியாத மனிதர்கள் வரும் பட்சத்தில் அவர்களுக்கு உணவிட்டு அவர்களுடைய உடல் களைப்பையும் மனதின் களைப்பையும் மாற்றி அனுப்பி வைத்தனர்.

"விருந்தோம்பல் அன்புடைமையின் விளைவு; பயனும் அஃதே. சுற்றம் அறிந்தவர், நண்பர் இவர்களுக்கு மட்டும் விருந்து வைத்தல் விருந்தோம்பல் ஆகுமோ? ஆகாது. ஆகாது! ஏதோ ஒரு பலனைக் கருதி பெரிய அளவில் ஆடம்பரமான விருந்தளித்தல், விருந்தோம்பலின் ஒரு கூறு தானே? இல்லை, இல்லை!விருந்து என்றால் புதுமை என்று பொருள். விருந்தினர் என்பவர் நாம் முன்பின் அறியாத புதியவர். இப்புதியவரை பேனல் அல்லது சோறிடுவது விருந்தோம்பல் என்று பொது வாக வழங்கப்படுகிறது. இதன் உட்பொருள் என்ன? அன்பால் தியாகஞ் செய்தல் என்பது. விருந்தோம்பல்-பரந்த அன்பின் விளைவு"[6]

இவ்வாறு தமிழர்கள் காதல் வீரம் இவற்றிற்கு அடுத்த படியாக விருந்தோம்பல் என்ற உயர்ந்த குணத்தையும் பின்பற்றி வாழ்ந்தனர்.

**"கேளிர்போல கேள் கொளல் வேண்டி**
**வேளாண் வாயில் வேட்பக் கூறி**
**கண்ணில் காண நண்ணுவழி இரீஇ**
**பருகு அன்ன அருகா நோக்கமொடு"[7]**

*பல வகையில் சிறப்பாகச் செய்யப்பட்ட உணவைத் தட்டுகளில் வைத்து விருந்தினர் உண்ண கொடுக்க வேண்டும்.*

**கொடை**

*கொடை என்பது தமிழர்களின் பண்பாட்டு வரிசையில் முக்கிய இடம் பிடிக்கக்கூடிய ஒன்றாகும் தன்னை நம்பி வரும் அவர்களுக்கு அவர்களுடைய தேவையை அறிந் து அந்தத் தேவைக்கு உரியவற்றை அவர்களிடம் ஒப்படைத்து மகிழ்ச்சியான மனநிலையில் அவர்களை அனுப்பி வைத்த மாண்பு கொடை என்ற பண்பாட்டால் உருவானதாகும்.*

*"கொடை என்பது ஒருவர் பெற்றுக்கொள்ள மற்றொருவர் கொடுப்பதாகும். அதிகமான செல்வம் வைத்திருப்பவர்கள் செல்வத்துப் பயனே ஈதல் என்பதை அறிந்து அனைவருக்கும் கொடுத்து வாழ்ந்தனர். அவ்வாறு குடை கொடுப்பதில் அரசர்கள் முதலிடம் வகித்தனர். கொடை கொடுப்பதில் பல்வேறு நிலைகள் பழங்காலத்தில் இருந்துள்ளன அரசன் தன்னுடைய பொருள், போரில் கிடைத்த பொருள் திறையாகக் கிடைத்த பொருள் போன்றவற்றைப் பிறருக்குக் கொடையாகக் கொடுத்துள்ளார். கொடைகள் ஒன்பது வகைகளில் நடைபெற்றன என்பது ஆய்வு குறிப்புகளில் இருந்து நமக்குக் கிடைக்கும் கருத்துக்கள் ஆகும். உண்டிக்கொடை, பொற்கொடை ஊர்திக்கொடை, விலங்குக் கொடை சின்ன கொடை, பெயர்க் கொடை, மகற்கொடை, ஆட்சிக் கொடை என்று இவ்வாறு பல்வேறு வகையிலான கொடைகள் பழந்தமிழகத்தில் பழக்கத்தில் இருந்துள்ளன"[8].*

## வீரம்

தமிழர்கள் மானத்தையும் வீரத்தையும் காதலையும் போற்றி வந்தனர் இவர்கள் வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொழுது அதிலும் ஒரு அறப்பண்பாடு கொண்டு வாழ்ந்தனர். போர்க்களத்தில் போர் செய்யும் பொழுது முறை தவறி போர் நெறிக்கு மாறாக அவர்கள் நடந்து கொண்டதில்லை பசு கூட்டங்கள் பெண்கள் குழந்தைகள் வயது முதிர்ந்தவர்கள் போன்றோருக்குப் போரின்போது எந்த விதமான பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தனர் தன்னுடைய தகுதியை அறியாமல் தாமதம் செய்து தனக்குக் கிடைக்கும் அங்கீகாரத்தை ஏற்காமல் மானமே பெரிது என்று அதற்காகத் தன்னுடைய உயிரையும் இழக்கும் அளவு வடக்கு இருந்து உயிர் துறந்து வாழும் தன்மை உடையவர்களாக இருந்தனர்.

## காதல்

காதல் என்பது ஆண்கள் பெண்கள் இருவருக்கும் பால் உணர்வு முதிர்வின் காரணமாக ஏற்படக்கூடிய உளவியல் அடிப்படையிலான ஒரு மாற்றமாகும். இந்த மாற்றம் அவர்களுடைய வாழ்வியலுக்கு அடிப்படையாகவும் உந்து சக்தியாகவும் இருக்கிறது. நம்முடைய காலத்தில் இது தற்பொழுது தவறான சிந்தனையாக மாறி வருகிறது ஆனால் சங்க காலத்தில் காதல் என்ற உணர்வுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது அந்த உணர்வு மதிக்கப்பட்டது காதலர்கள் தங்களுடைய வாழ்க்கையை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர் அதே நேரத்தில் பண்பாடு கலாச்சாரத்தை மீறிய செயல்களில் அவர்கள் ஈடுபட்டதாக வரலாற்றுப் பதிவுகள் எதுவும் இல்லை.உள்ளார்ந்த அன்பு கொண்டு இருவரும் வாழ்ந்த

வாழ்க்கை இலக்கியங்களில் மிகவும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

**"இம்மை மாறி மறுமை ஆயினும் நீயாகியர் என் கணவனே"[9]**

என்று காதலின் உள்ளார்ந்த உளவியல் பண்பாட்டை இந்தப் பாடல் விளக்குவதாக அமைந்துள்ளது.பிறவிகள் எத்தனை எடுத்தாலும் நேசித்த நபரை மட்டுமே கடைசிவரை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற பண்பாட்டை இந்தக் காதல் நமக்கு விளக்குகிறது.

காதல் பண்பாட்டில் மிகவும் முக்கியமானது பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஆகும். பெண்ணின் மனதைப் புரிந்து கொண்டு அவளுக்குரிய உணர்வுகளை மதித்து வாழும் காதல் வாழ்வு தமிழர்களிடம் இருந்தது. தமிழர்களிடம் மட்டுமல்லாமல் அவர்களோடு இணைந்து வாழ்ந்த மிருகங்களுக்கும் இந்தப் பண்பு இருந்தது என்பதை இலக்கியங்கள் வாயிலாக நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**"துடியடி கயந்தலை கலக்கிய சிறுநீரை பிடியூட்டி பின்
உண்ணும் களிறு"[10]**

என்ற இந்தப் பாடல் கொஞ்சமாக இருக்கக்கூடிய தண்ணீரை முதலில் ஆண் யானை பெண் யானைக்குக் குடிக்க கொடுத்து விட்டு அதன் பின் தான் உண்டது என்ற இந்தப் பாடலின் பொருளிலிருந்து மிருகங்கள் கூட தான் நேசிக்கும் பெண்ணிற்கு உணவிட்டு அதன்பின் தான் உண்ண வேண்டும் என்ற சிறந்த பண்பாட்டைக் கொண்டதாக விளங்கியதை அறியலாம்.

**உடன்போக்கு**

உடன்போக்கு என்பது தலைவி தலைவன் காதலை அவர்களுடைய பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளாத பொழுது அவர்கள் இருவரும் வேறிடம் சென்று திருமணம் செய்து கொண்டு வாழமுடிவு செய்யும் ஒரு செயலாகும். ஆனால்,

இதில் தலைவனின் தனிமனித ஒழுக்கப்பண்பாடு வெளிப்படுவதை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

“உடன்போக்கில் தலைவன் தயக்கம் கொள்பவனாகவே அறியப்படுகின்றான். உடன்போக்கைத் தவிர்த்தல், தள்ளிப் போடல், வழியில் தலைவிக்கு வர இருக்கும் துன்பத்தை எடுத்துக் கூறுதல், வழியில் வரும் தொல்லைகள் பற்றி எடுத்துக் கூறுதல்.போன்ற கருத்துக்கள் கொண்ட பாடல்களில் இருந்து தலைவனின் ஒழுக்கப்பண்பாட்டை அறிந்துகொள்ள முடியும்.உடன்போக்குச் செல்லும் தலைவனின் உயர் பண்பாட்டைக் காட்டும் பாடலடிகளாகப் பின்வரும் பாடலடி களைக் கூறலாம். அமர் வரின் அஞ்சேன் பெயர்க்குவேன் நுமர் வரின் மறைகுவேன் “[11]

இவற்றைக் கொண்டு பார்க்கும் பொழுது தலைவன் உடன்போக்கு செல்வதில் விருப்பம் இல்லாத பண்பாடு கொண்டவனாக விளங்குகின்றான்.தலைவியும் உடன்போக்கில் சிறந்த பண்பாட்டு ஒழுக்கத்தைக் கொண்டு விளங்குகின்றாள். தலைவி தலைவனோடு சேர்ந்து வாழ விருப்பம் கொள்கிறாள். தன்னுடைய குடும்பத்தில் உள்ள தாய் தந்தை எதிர்ப்பு என்ற காரணத்தால் தன்னுடைய மனதை மாற்றிக் கொள்ள அவள் விரும்பவில்லை.மாறாக தன்னுடைய முடிவில் தெளிவாக இருக்கின்றாள்.யார் தடுத்தாலும் தான் நேசித்தவரைக் கைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டுமே வாழ்கின்றாள்.தலைவன் கூறும் ஆறுதல் மொழிகள்,வழியில் ஏற்படும் சோதனைகள் பற்றி அவள் கவலைப்படவில்லை. தெளிவான மனநிலையில் தெளிந்த நீரோடை போலவே மனதை வைத்துக் கொள்கின்றாள்.

“களவு வாழ்க்கையில் மிகுந்த நெருக்கடிகளுக்கு உள்ளாகும் விதமாகத் தலைவி காட்டப்படுகின்றாள்.தலைவியின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்,அலரால் ஊரில் கூறப்படும் தூற்றல்கள், தாயின் கடிசொல், தந்தை இற்செறிப்பு, என மாறுபட்ட

பலநிலைகளில் தலைவி பாத்திரத்தின் எண்ண ஓட்டத்தையும் ஒழுக்கத்தையும் அறியமுடிகின்றது.தனிமனித ஒழுக்கம் சமூகத்தோடு பொருத்திப் பார்க்கப்பட்டது. தனிமனித வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் அறத்திற்கு எதிரான செயல் சமுதாயத்திற்கு ஊறு விளைவிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. தான் உயிராக நினைக்கும் தலைவனை விட்டு விட்டு வேறொருவரை மணம் செய்வது என்பது அறத்திற்கு மாறிய செயல் என்று தலைவி எண்ணுகின்றாள்."[12] இவ்வாறு தலைவி மற்றும் தலைவனின் தனிமனித பண்பாடு என்பது மிகவும் சிறந்த நிலையில் அக வாழ்வில் விளங்கி யுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**ஆடை**

ஆடை என்பதற்குப் பலபொருள்கள் இருக்கின்றன. "பாலேடு, சீலை, தயிர், சித்திரை நட்சத்திரம்,"[13] என்று தமிழகராதி ஆடை என்ற சொல்லுக்கான பொருள்களை வரையறுக்கின்றது. ஆடைக்குச் சீலை என்ற உடை மட்டுமே பொருளாக இருந்திருக்கிறது. அடை என்ற சொல் ஆடை என்று மாறியிருக்கலாம்.காரணம் என்ன என்றால் அடைத்தல் என்பது மூடுதல், மறைத்தல் என்ற பொருளில் வரும். நம்முடைய உடலை மறைக்கப்பயன்படுவதால் இது ஆடை எனப்பட்டது. ஆடைகள் தமிழ்ப்பண்பாட்டில் மிகவும் முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது. மன்னர்கள் மிகவும் செழிப்பான பகட்டான ஆடை அணிந்தனர். தன்னை நம்பி வரும் வறியவர்களுக்கு உணவு மட்டுமில்லாமல் ஆடைகளும் கொடுத்து அனுப்பினர்.

"ஆடை நெய்யும் தொழிலையும் உடை செய்யும் தொழிலை யும் மக்கள் மேற்கொண்டு இருந்தனர். பருத்தியிலிருந்து நுண்ணிய நூல் நூற்கும் தொழிலையும் மகளிர் செய்தனர். அன்னாரைப் பருத்திப் பெண்டிர் என அழைத்தனர். பண்டைத் தமிழர் பலவகையான ஆடைகளை அணிந்தனர்.

பொன்னாடை, பட்டாடை, பூ வாடை, மேலாடை, படம், மேய்ப்பை, வட்டுடை, தாளிதம், ஈரம், கட்சி என பல வகையான ஆடைகளை அவர்கள் அணிந்தனர். சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய பெருங்கதையில் பெண்கள் சேலை அணிந்த முறையைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. பெண்கள் தங்கள் இடுப்பில் கட்டிய சேலையின் எஞ்சிய பகுதியை மேலே கழுத்தைச் சுற்றி அணிந்து கொண்டனர். இதனை உத்தரியம் என்று அழைத்தனர் என்று கூறுகிறது பெருங்கதை. புதிய ஆடைகளுக்கு உவர் மண் இட்டு அகில் புகையூட்டி மணம் ஏற்றியதாக இலக்கியங்கள் கூறுகின்றன. ஆடை வகைகளுக்கு நறுமணமூட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டது என்ற செய்தியைச் சிலப்பதிகாரம் அறிவிக்கிறது. ஆடைகளைச் சுத்தம் செய்ய உவர் மண் பயன்படுத்தப்பட்டது. இத்தொழிலை மேற்கொண்டவர் புலையர், புலத்தியர் என்று அழைக்கப்பட்டனர். சலவை செய்யப்பட்ட சுத்தமான ஆடைகள் கழுவுறு கலிங்கம் என அழைக்கப்பட்டன. ஆடைகளைப் பாதுகாப்பாகச் சங்ககாலத் தமிழர்கள் வைத்திருந்தனர்.அவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்குப் பெட்டிகளும் பயன்படுத்தப்பட்டன. அவை, கலிங்க கடகம் எனவும் கலிங்க வட்டி எனவும் கூறப்பட்டன.”[14] இவ்வாறு ஆடைகள் தமிழர் சமூகத்தில் மிகவும் முக்கியமான பண்பாட்டுக் கூறாக இருந்ததை நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது.

**பழக்க வழக்கங்கள்**

பழக்கவழக்கம் என்பது நாம் அன்றாடம் நம்முடைய வாழ்வில் செய்து கொண்டிருக்கும் தொடர்ச்சியான செயல்பாடு களாகும். பிறருக்கு உணவு கொடுத்துவிட்டு நாம் உண்ணுவது, வாசலில் அரிசி மாவுகொண்டு கோலம் போடுவது என்று தமிழர்களின் பண்பாடு அன்றாடப் பழக்கவழக்கத்திலும் இருந்தது எனலாம். சங்ககாலத்துத் தமிழர்கள் நிமித்தம்

*பார்த்தல்,தொழில்,உணவு போன்றவற்றில் குறிப்பிட்ட சில பழக்கவழக்கங்களைக் கொண்டு வாழ்ந்தனர்.*

*“பனிக்காலத்தில் நீரைச் செமச்செப்பில் வைத்துப் பயன் படுத்திய பழக்கம் இருந்துள்ளது.அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர் என்று குறுந்தொகை கூறுகின்றது. வாயிற்கதவை அடைக்கும்முன் விருந்தினர்கள் யாரேனும் இருக்கின்றார்களா என்று பார்த்து அதன் பின் கதவை அடைக்கும் பழக்கம் இருந்துள்ளது.இதனை பலர்புகு வாயில் அடைப்ப என்று தொடங்கும் பாடலின் வழியாக அறியலாம்.பிறரை உபசரிக்கும் பழக்கம் நம்முடைய தமிழர்களிடம் இருந்துள்ளது. வீட்டில் உபசரிக்க எதுவும் இல்லாத சூழலில் வீரன் ஒருவன் தன்னுடைய வாளைப் பணையம் வைத்து உபசரித்தான் என்று புறநானூறு கூறுகின்றது. ஆய்மகள் பறவைகள் துயில் எழுகின்ற வைகறையில் துயில் எழும் பழக்கம் கொண்டவள். வழிபாட்டில் சந்திரன் இடம்பெற்றிருந்தது.திருமணம் ஆகாத பெண்கள் நிலவை வணங்குவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர்.கருவுற்ற மகளிர் மண் உண்ணும் பழக்கம் கொண்டிருந்தனர்.திருமணமாகாத பெண்கள் காலில் சிலம்பு அணிவதும் திருமணம் நடைபெறும் நாளில் சிலம்பு கழி நோன்பு என்ற ஒரு வழக்கம் இருந்ததையும் இலக்கியங்கள் விளக்குகின்றன.காக்கைகளுக்கு உணவு கொடுக்கும் பழக்கம் இருந்தது.காக்கைகள் முன்னோர்களாகக் கருதப்பட்டன. இதனை விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே என்று குறுந்தொகை கூறுகின்றது. புறமுதுகு காட்டிப் போரில் இறக்கவில்லை என்பதைக் காட்ட வீரர்கள் வடக்கிருந்து உயிர்துறத்தலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இறந்தவர் களைத் தாழியில் வைத்து அடக்கம் செய்யும் பழக்கம் இருந்துள்ளது.வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் பழக்கமும் தமிழர்களிடையே இருந்தது”[15]*

**நம்பிக்கைகள்**

*மனிதர்களின் வாழ்வு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.நம்பிக்கையால் மட்டுமே நம்முடைய வாழ்க்கை அடுத்த கட்டம் நோக்கிப் பயணம் செய்கின்றது.” எல்லோருக் குள்ளும் இருக்கிறது நம்பிக்கை.சிலர் அதைக் கண்டுகொள்வது இல்லை. சிலர் அதை வளர்க்கத் தவறி விடுகின்றார்கள்.”[16] என்ற இந்தவரிகளின் வாயிலாக மனிதனுக்கும் நம்பிக்கைக்கு மான பிணையத்தை அறிந்து கொள்ளலாம்.நம்பிக்கை என்பது சங்க காலத்தில் திருமணம் பிறப்பு இறப்பு வருகையை எதிர்பார்த்தல் போர் தொடங்குவது என அனைத்து நிலை களிலும் இருந்த ஒன்றாகும் இது தமிழர்களின் பண்பாட்டை நிலைப்படுத்துவதாக அமைந்துள்ளது நல்ல நேரம் பார்த்து எந்த ஒரு காரியத்தையும் தொடங்க வேண்டும் என்பது பழங்கால மக்களின் நம்பிக்கைகளில் குறிப்பிடத் தகுந்ததாக இருந்தது.*

**“குடையும் வாளும் நாள் கோள் அன்றி”[17]**

*என்ற வரிகள் வாயிலாகத் தொல்காப்பிய புறத்திணை இயல் கோள்களைப் பார்த்தும் நாள்களைப் பார்த்தும் போருக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்ட பழங்கால நம்பிக்கை முறையை எடுத்துக் கூறுகிறது.*

**“உறுமெனக் கொள்குனர் அல்லர்**
**நறுநுதலரிவை பாசிழை விலையே”[18]**

*பெண்களுக்குத் திருமணத்தின் பொழுது பரிசமளித்தல் என்ற ஒரு நிகழ்வு நடைபெற நடைபெறுவது வழக்கமாகும். அப்படிப்பட்ட அந்த நிகழ்வு சங்ககாலத் தமிழர்களிடையே இருந்து வந்துள்ளது. நல்ல நாள் பார்த்து பரிசம் போட்டு மணப்பெண்ணைத் திருமணம் செய்யும் முறை தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. என்பதை இந்தப் பாடல் வரிகள் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. எந்த ஒரு இடத்திற்குச் செல்லும்போது அல்லது நல்ல நிகழ்வுகள்*

தொடங்கும் முன்னும் நல்ல சொற்களைக் கேட்டு அதன் பின் அந்த நிகழ்வைத் தொடங்க வேண்டும் என்பது முன்னோரின் நம்பிக்கையில் ஒன்றாக இருந்து வந்துள்ளது.

**"முனைகவர்ந்து கொண்ட திறையர்**
**வினை முடித்து வருதல் தலைவர்."[19]**

என்ற இந்தப் பாடல் வரிகள் வாயிலாக நிறைய கவர்வதற்காகக் காத்திருந்த வெட்சி வீரர்கள் யாரோ ஒரு ஆயர் குலப் பெண் யாரோ ஒரு பெண்ணிடம் பசுக் கூட்டங்களை இங்கே கூட்டி வாருங்கள் என்று கூறுகிறாள் இதனையே தனக்கு கிடைக்கும் நற் சொல்லாக எண்ணி அந்த வீரர்கள் மகிழ்கின்றனர்.

**நன்றி உணர்வு**

நாம் வாழும் வாழ்விற்கு உதவி செய்பவர்கள் அநேகர் உள்ளனர் ஒரு மனிதன் தனியாக எந்தவித வெற்றியும் சாதனையையும் பெற்று விட முடியாது அந்த வெற்றிக்கும் சாதனைக்கும் தொடர்பானவர்கள் அவனுக்கு நிச்சயம் ஏதேனும் ஒரு உதவியை செய்திருப்பார்கள் எனவே நாம் நம்மோடு வாழும் அனைவருக்கும் நன்றி கூறி வாழ வேண்டும். வள்ளுவர் செய்நன்றி அறிதல் என்று தனியாக ஒரு அதிகாரமே படைத்து பத்து குரல்களில் நன்றிக்கு உரிய முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்.

**"தினைத் துணை நன்றி செய்யினும் பனைத் துணையாகக்**
**கொள்வர் பயன் தெரிவார்"[20]**

உரிய நேரத்தில் செய்த உதவியை எண்ணி அதனை மதித்து அந்த உதவி செய்தவருக்கு நன்றி கூறி வாழும் வாழ்வு மிகவும் சிறந்தது. தமிழர்கள் நன்றி உணர்வு கொண்டவர்களாக இருந்துள்ளனர். இதனைப் பின்வரும் கருத்து நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

"வடக்கே இருந்த வடுகர் எனும் சாதியார் வேட்டையாடும் தொழிலை பிரதானமாகக் கொண்டுள்ளனர். அதன் பொருட்டு

*நாய் களையும் உடன் கொண்டு வருவர். சங்க இலக்கியமானது இவர்களை வம்பவடுகர் என்று குறுந்தொகை (குல்லைக் கண்ணி வடுகர் முனையது) பாடலில் உரைக்கிறது. இதே போல் பிரிதொரு சங்க இலக்கியத்தில் கதநாய் வடுகர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.வேட்டையின் போது குறிப்பாக பன்றி, முயல் போன்ற சிறிய விலங்குகளை பிடிக்க நாய்களை பயன்படுத்தி உள்ளதாக நற்றிணை நூல் குறிப்பிடுகிறது. கி.பி.624-ம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம், எடுத்தனூர் எனும் ஊரில் ஆனிரை மீட்கும் போதோ, கவரும் போதோ நடந்த சண்டையில் இறந்த வீரனுக்கும், அவனுடன் காவலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாய்க்கும் நடுகல் எடுக்கப்பட்டுள்ளது''[21] என்ற இந்தக் கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது தமிழர்களின் நன்றி உணர்வு என்ற பண்பாட்டுச் சிறப்பை அறிய முடிகிறது.*

## உயிர்கள் மீதான அன்பு

*தமிழர்கள் அனைத்து உயிரினங்களையும் அன்பு செய்து வாழ்ந்தனர். உயிர்களின் மீதான அன்பே அவர்களின் பண்பாட்டில் மிகவும் முக்கியயமான அங்கங்களுள் ஒன்றாக இருந்தது எனலாம்.காட்டில் வாழ்ந்த விலங்குகளைப் பழக்கி அதனைத் தன்னுடைய வீட்டிற்கு உதவியாக வைத்துக் கொண்டனர். உயிர்களைத் தம்முடைய குடும்பத்தில் ஒருவராகவே நினைத்து வாழ்ந்தனர். "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்று பாரதி பாடக் காரணம் தமிழர்கள் உயிர்களை அன்பு செய்து வாழ்ந்ததே ஆகும். உயிர்களுக்கு மரியாதை செய்ய தனியாக ஒரு பண்டிகையை உருவாக்கினர் தமிழர். அந்தப் பண்டிகை பொங்கல் பண்டிகை ஆகும். தன்னுடைய பெரும்பான்மையான உணவு கொடுக்கும் தொழிலான விவசாயம் செய்ய உதவியாக இருக்கும் அனைத்து உயிர்களையும் பாராட்டவும் அவற்றிற்கு நன்றி சொல்லவும் பொங்கல் உருவானது.*

"உணவின் உற்பத்திக்கு உறுதுணை செய்த சூரியனுக்கு நன்றி சொல்ல விரும்பினான். அதைப் போல உழவுக்கு உதவி செய்த மாடுகளுக்குத் தன் நன்றியைப் படையிலிட்டான். இந்த நன்றியுணர்ச்சி என்று தோன்றியதோ அன்றிலிருந்து பொங்கல் கொண்டாட்டம் தொடங்கிவிட்டது. பொங்கலின் இன்னொரு பரிணாம வளர்ச்சியாக இருப்பது 'ஏறு தழுவுதல்' என்று இலக்கியங்கள் பேசும் 'ஜல்லிக்கட்டு'. இது காளைகளைப் பற்றியதல்ல, நம் கலாச்சாரத்தைப் பற்றியது. மஞ்சுவிரட்டு, வெளி விரட்டு என்றெல்லாம் அழைக்கப்படும் இப்போட்டியில் பங்கேற்கும் மாடுகள் பிரத்யேகப் பயிற்சி பெற்றவை. அவற்றை வண்டி இழுக்கவோ, வேறு வேலைகளுக்கோ ஏன் விவசாயத்திற்கோகூட பயன்படுத்த மாட்டார்கள். கட்டபொம்மன்காலத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் ஜெக்கம்மா கோயிலில் யாராலும் அடக்க முடியாத பொம்மி யம்மாளின் 'மருது' என்ற காளையை அடக்கியது கட்ட பொம்மனின் தம்பி ஊமைத்துரை என்பதை வரலாற்றில் நாம் படித்து இருக்கிறோம். இத்தனை ஆண்டுகளாக வீரர்களுக்கு அடிபட்டது என்று நாம் கேள்விபட்டிருப்போம். ஆனால் மாட்டிற்கு அடிபட்டதாக வரலாறு இல்லை. மாட்டிற்கு அடிபட்டால் அன்றைய போட்டியையே நிறுத்திவிடுவர்.ஏறு தழுவுதல் என்ற நிகழ்வு ஒரு வீர விளையாட்டு மட்டுமல்ல; நம் கால்நடைகளின் ஆரோக்கியமும் சிறந்த முறையில் இருக்க நம் பண்டைத் தமிழர்களின் இயற்கையோடு இணைந்த ஒரு நிகழ்வு."[22] என்று முனைவர்.மஞ்சுளா அவர்கள் கூறுவதிலிருந்து தமிழர்களுடைய உயிர்களின் மீதான அன்பையும் நன்றியுணர்வையும் நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது.

**முடிவுரை**

ஒரு குறிப்பிட்ட ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்குள் வாழ்வியலை அமைத்து, அதில் பண்பாடு என்ற தூண்களின் துணையால் தமிழர்கள் வலுவான வாழ்வியல் கட்டடம் கட்டியுள்ளனர்.

*வாழ்வியல் என்பது தனக்குமட்டுமானதாக இல்லாமல் அனைவருக்குமானதாக இருக்கவேண்டும் என்பதைத் தமிழர்கள் நன்கு தெரிந்து கொண்டுள்ளனர்.இன்று கலாச்சார சீர்கேடுகள் அதிகம் உள்ளன.தமிழர்களின் வாழ்வியலை விளக்கும் நூல்களின் வாயிலாக நாம் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அறிந்து நம்மை நாமே சரிசெய்து கொள்ளலாம். நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்ள சங்ககால மக்களின் பண்பாட்டு நெறிமுறைகள் உதவுகின்றன.*

**சான்றாதாரங்கள்**

1. *முச்சங்கம்.,கந்தையா பிள்ளை.,முத்தமிழ் நிலையம் முத்தப்பன் தெரு சென்னை.,முதல்பதிப்பு 1000.,ப 5*
2. *History of tamil nadu.,அழகப்பா பல்கலைக்கழக வெளியீடு., பக் 4*
3. *பண்பாட்டு வரலாறு., முனைவர் கு. வே. சுப்பிரமணியன்., ப 4*
4. *புறநானூறு செய்யுளும் செய்திகளும்.,ரா.சீனிவாசன்., அணியகம் பதிப்பகம் சென்னை.,முதல் பதிப்பு நவம்பர் 2000.,ப 206*
5. *பாண்டிய மன்னர்.,நா.கனகராஜ்.,முதல் பதிப்பு 1930.,ப 12*
6. *புறநானூறு செய்யுளும் செய்திகளும்.,ரா.சீனிவாசன்., அணியகம் பதிப்பகம் சென்னை.,முதல் பதிப்பு நவம்பர் 2000.,ப 206*
7. *பாண்டிய மன்னர்.,நா.கனகராஜ்.,முதல் பதிப்பு 1930.,ப 12*
8. *கொடையும் ஈகையும் பரிசிலும்., மு.சசி ரேகா. க ஆ. கௌரவ விரிவுரையாளர் அரசு மகளிர் கல்லூரி*

9. குறுந்தொகைக் கோவை.,புலவர்.கோவிந்தன்.,நாதன் பதிப்பகம் சென்னை 05.,முதல் பதிப்பு செப் 1959.,ப 198

10. கலித்தொகை., புலியூர்க் கேசிகன் (உ.ஆ).,சாரதா பதிப்பகம் சென்னை., முதல் பதிப்பு 1989.,ப 1-36.,

11. உடன்போக்கு.,கட்டுரை.,அமுத.இளவழகன் (க.ஆ)., தமிழ் இணையக் கல்விக் கழகம்.,ப 01

12. 12.அறத்தொடு நிற்றல்.,கட்டுரை.,கணபதி கண்ணன் (க.ஆ).,ப 4

13. 13.தமிழ் இலக்கிய அகராதி.,வித்துவான் பாலுகண்ணப்ப முயதளியார் (தொ.ஆ).,சென்ட்ரல் புக் டிப்போ சென்னை 5.,முதல் பதிப்பு 1957.,ப 30

14. 14.பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள்., முனைவர். அ. கந்தசாமி., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி சென்னை.,முதல் பதிப்பு 2013.,பக் 20 - 27

15. 15.பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள்., முனைவர். அ. கந்தசாமி., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி சென்னை.,முதல் பதிப்பு 2013.,பக் 20 – 27

16. 16.நம்பிக்கை தொடும் சிகரங்கள்., தேவநாதன்., தனலட்சுமி பதிப்பகம் மாசிலாமணி தெரு சென்னை.,ப 18

17. 17.தமிழ் அங்காடி.,சுந்தர சண்முகனார்.,முதல்பதிப்பு ஜூன் 2022.,புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்., புதுச்சேரி.,ப 66

18. 18.அகநானூறு.,புலியூர்க்கேசிகன்(உ.ஆ).,முதல்பதிப்பு 2015.,சாரதா பதிப்பகம் சென்னை 7.,ப 174

19. 19.பண்டைத் தமிழர் போர் நெறி., புலவர் கோவிந்தன்., தமிழ் தாய் பதிப்பகம் ராமானுஜர் தெரு சென்னை.,முதல் பதிப்பு 2003., ப 57

20. 20.திருக்குறள் புதிய உரை.,நவ்ராஜ் செல்லையா.,முதல் பதிப்பு 2015.,ப 148

21. 21.இந்துத் தமிழ்த் திசை.,நன்றி மறவாத ஜீவனுக்கு நடுகல் வைத்த தமிழர்கள்., 6.8.23.,

22. 2 2 . ப ண் பா ட் டு வே ர் . , மு னை வ ர் . ம ஞ் சு ளா . , (க.ஆ).,நக்கீரன் இணைய இதழ்., பதிப்பித்த ஆண்டு 13.1.22

# தமிழர் பண்பாட்டினை வெளிப்படுத்தும் அகத்திணைக் கூறுகள்
# ELEMENTS OF INNER EXPRESSION REFLECTING TAMIL CULTURE

**முனைவர் மூ.சிந்து**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
கோயம்புத்தூர்- 641048.
மின்னஞ்சல்: sindujasms@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்பாடு என்பது ஒழுக்கமாகும். நாகரிகம் என்பது வாழ்க்கை முறையாகும். பண்பாடு அகக்கூறுகளையும் நாகரீகம் புறக்கூறுகளையும் எடுத்துரைப்பதாகும். இவ் விரண்டும் ஒன்றிணைந்து தமிழர் பண்பாட்டில் காணப்படுவது போற்றுதற்குரியதாகும். தமிழர்களின் பண்பாட்டு கூறுகள் காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, கற்பு, உலக ஒருமைப்பாடு ஆகியவை இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்வதைப் பாவாணர் எடுத்துரைக்கிறார். தமிழர் வாழ்வை அகம், புறம் என இலக்கணம் வகுத்து வாழ்ந்த நிலைப்பாட்டினையும், மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சுர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை எடுத்தியம்புகிறது. அவற்றில் அகம் தமிழரின் பண்பாட்டின் வெளிப்பாடாக அமைந்தமையை எடுத்தியம்புகிறது.*

**சிறப்புச் சொற்கள்**

*தமிழ், தமிழர், பண்பாடு, தமிழர் பண்பாடு, அகத்திணை கூறுகள்*

**Abstarct**

*Culture is discipline. Civilization is a way of life. Culture describes the inner elements, while civilization describes the outer elements. The merging of both is commendable in Tamil culture. The cultural aspects of Tamils, such as love, bravery, friendship, hospitality, generosity, teaching, and global unity, are highlighted by the poet as reflections of time. The way Tamils live is categorized into inner and outer, emphasizing the civilization, culture, customs, way of life, governance, administration, political system, war, bravery, and love. Among these, the inner is presented as an expression of Tamil culture.*

*Keywords: Tamil, Tamil culture, Tamil culture, Internal elements*

**பண்பாடு**

மனித இனம் வாழ வாழ்வியல் நெறிகளைக் கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாட்டு சுவடுகள் உயர்ந்த சிந்தனைகளையும், உயர்வான எண்ணங்களையும் சமூகத்தில் விதைத்துச் சென்றிருக்கிறது. பண்பாட்டையும் நாகரிகத்தையும் வெவ்வேறாக பகுத்தாலும் புறம் அனைத்தும் அகத்தின் வெளிப்பாடாகி நிற்கின்ற நிலையினை. “முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்”[1] என்ற வரிகள் அகப்பண்பாட்டையும் புறப்பண்பாட்டையும் ஒன்றாகக் கருதியமை அறியலாகிறது.

நாட்டின் மன்னனும் மக்களும் தன் குலத்தைக் காக்கும் பண்பாட்டை கட்டிக் காத்து பார் போற்ற வாழ்ந்த இனம் தமிழினம் என்ப வரலாற்றுப் பதிவுகளின் வாயிலாக

அறியலாகிறது. இலக்கியங்கள் தொடங்கி இன்றைய காலகட்டம் வரைக்கும் தமிழரின் பண்பாட்டுப் பதிவுகள் தன்னைக் காட்சிப்படுத்தி நிலைநிற்கிறது. நாகரீகம் என்ற பெயரில் தலை முறை கடந்து விட்டாலும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு நிலையிலும் இன்றும் பின் தொடர்ந்து வருவது பெருமைக்குரியதாக அமைகின்றது.

**அகத்திணை**

அக ஒழுக்கத்தைப் பற்றி விவரிக்கக்கூடியது அகத்திணை தமிழ் இலக்கியங்களில் உயரிய இடத்தைக் கொணடு விளங்குகிறது. அகம் என்பதற்கு உள்ளம், உறவு, மறைவு என்ற பொருள்படும் தமிழிலக்கியங்களில் காணப்படும் காதல் வாழ்வு, உலக மக்கட்கெல்லாம் உரிய காதல் நெறியாகும்.

தலைவனும் தலைவியும் ஒத்த அன்பினால் மலரும் காதல் வாழ்க்கையே அகவாழ்க்கை ஆகும். இந்த அகவாழ்க்கை யினையே அகத்திணை என்கிறோம். அகம் - தலைவனும் தலைவியும் ஒருமித்த மன உணர்வால் காதல் கொள்ளுதல், திணை – ஒழுக்கம் என்று பொருள்படும்.

**அகத்திணை பாகுப்பாடு**

மனிதரின் அகவாழ்வை ஏழாக வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

> **‘கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாய்**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப’[2]**

என்னும் நூற்பாவில் கைக்கிளை, பெருந்திணை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஏழும் அகத்திணையின் பாகுபாடுகள் ஆகும்.

**அன்பின் ஐந்திணை**

*சங்க இலக்கியத்தில் காதலை அன்பின் ஐந்திணை என்றனர். தலைவனும் தலைவியும் உள்ளம் ஒன்றிய அன்பு வாழ்க்கை யாகும். இது களவு, கற்பு என இரண்டாக அமைகின்றது. பழந்தமிழரின் வாழ்வில் திருமணத்திற்கு முந்தைய 'காதல் வாழ்வை', களவொழுக்கம் என்றும், திருமணத்திற்கு பிறகு 'அவர்களின் இல்லற வாழ்வு', கற்பொழுக்கமாகவும் போற்றப்பட்டதை அகப்பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றது.*

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு"[3]**

*என்ற குறட்பா வாயிலாக காதல் வழிவந்த மனை மாட்சியின் சிறப்பை எடுத்துரைக்கிறார் வள்ளுவர்.*

*அகத்திணையானது கைக்கிளை, பெருந்திணை உட்பட ஏழு வகைகளைக் கொண்டிருந்தாலும் ஒழுக்க நிலைகளில் ஐந்து திணைகள் மட்டுமே.*

**'அவற்றுள்**
**நடுவண் ஐந்திணை, நடுவணது ஒழிய**
**படுதிரை வையம் பாத்தியபண்பே'[4]**

*என்னும் நூற்பாவை ஆராய்கையில் கைக்கிளை, பெருந்திணை ஒழிய ஐந்தும் அன்பின் ஐந்திணை என்ற சிறப்பினை பெற்றுள்ளதை அறியலாம். காரணம் கைக்கிளை என்பது ஒருதலைக் காதலையும் பெருந்திணை என்பது பொருந்தாக் காதலையும் குறிக்கும். கைக்கிளை, பெருந்திணை இவை தவிர்த்த மற்ற ஐந்தையும் ஒழுக்கத்தின் நிலகளனாக ஏற்றமை யைக் காணமுடிகிறது.*

*தலைவனும் தலைவியும் மேற்கொள்ளும் காதலே அகத் திணையாகும். அவர்களின் வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஒவ்வொரு திணையோடு தொடர்புடையதாக அமையும். தலைவனும் தலைவியும் குறிஞ்சியில் காதல்*

கொண்டு புணர்வதையும், மருதத்தில் ஊடல் கொண்டிருப்ப தையும், பொருளீட்டவோ அல்லது வினைமேற் சென்ற தலைவனின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் தலைவி இரங்கல் கொள்வதை நெய்தலிலும் காணமுடிகிறது. இது அந்தந்த திணையின் ஒழுக்கமாக கருதப்படுகிறது.

**"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"[5]**

அகத்திணைப் பாடல்கள் காமம் - காதல், ஆண் – பெண், அஃறிணை - உயர்திணை என்ற பிரிவினனயின்றி அனைத்து உயிர்க்கெல்லாம் பொதுவாக அமைந்தமை என்பதைத் தொல்காப்பியர் வழி அறிய முடிகிறது.

**இயற்பெயர் சுட்டாமை**

அகத்திணையில் வரும் தலைமகனாகக் குறிக்கப்படுவனை அவர்களின் பெயர்கள் சுட்டுவதில்லை. உதாரணம், நாடன், ஊரன், சேர்ப்பன் என்றப் பொதுப்பெயரால் சுட்டுவதே வழக்காகும். தனி நபரின் இயற்பெயரைச் சுட்டுவது அகத் திணையின் மரபல்ல. அவ்வாறாகச் சுட்டப்பட்டால் அது புறமாக மாறிவிடும். அதுமட்டுமின்றி அந்நிகழ்வில் பெயரைக் குறிப்பிட்டால் சமுதாயத்தில் சிக்கல்கள் தோன்றக்கூடும். அகப்பொருள் இலக்கியம் குடும்ப இலக்கியமாகக் கருதியதால் அவை பிறர் அறியாவண்ணம் அமைந்தமையை காண முடிகிறது.

**வெளிப்பாட்டு உத்திகள்**

கவிஞன் தன் கருத்தினைப் புலப்படுத்த கையாளும் உத்திகள் "இலக்கிய உத்திகள்" எனப்படும். தொல்காப்பியர் அகப் பொருளுக்குரிய உத்திகளாகக் குறிப்பு பொருண்மையில் அமைந்த உள்ளுறை, இறைச்சி என இரண்டினைச் சுட்டுகின்றார்.

**திணை அமைப்பு முறை**

தொல்காப்பியம், கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை,பெருந்திணை என ஏழு திணைகளைக் குறிக்கப்படுகிறன. அகப்பாடல்கள் முதல், கரு, உரி என்னும் மூன்று பொருண்மைகளை உடையன. முதற்பொருள் நிலம், பொழுது என்ற இரு பிரிவுகளை உடையது. கருப்பொருளில் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின் பகுதி போன்றவை அடங்கும். உரிப்பொருள் ஒழுக்கம் பற்றியதாகும்.

தொல்காப்பியம் அகத்திணை ஏழு, புறத்திணை ஏழு என்ற கோட்பாட்டினைக் கொண்டுள்ளன. எனவே அகத்தோடு புறத்தை இணைத்துக் காட்டுகின்றது.

**"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்**
**வெட்சி தானே குறிஞ்சியது புறனே**
**உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே"[6]**

என அகத்திணையோடு பொருந்தி வருவதாகப் புறத்திணைக்கு இலக்கணம் கூறுகின்றது.

**திணை அறி நிலை**

முதல், கரு, உரி ஆகிய மூன்றும் இணைந்ததை திணை என்போம். ஆனாலும் எல்லாப் பாடல்களிலும் முப்பொருளும் இணைந்து வராது. சில பாடல்களில் முதல், கரு, உரி ஆகிய மூன்றும், சில பாடல்களில் முதலும் உரியும், சில பாடல்களில் கருவும் உரியும், சில பாடல்களில் உரிப்பொருள் மட்டும் அமைந்து வரும். உரிப் பொருளின்றிப் பாடல் அமைவதே அகப்பொருள் என்கிறார் தொல்காப்பியர்.

**கைக்கிளை**

கைக்கொள்ளக்கூடிய ஒழுக்கம் கைகொள் ஆகும். அதாவது கடைப்பிடிக்கக்கூடிய வரைமுறையாகும். அளவில்லாத

*இன்பத்தை உடைய அன்பின் ஐந்திணைகள் பின்பற்றக்கூடிய ஒழுக்கமாகும். ஐந்திணை ஒழுக்கத்தைத் தொல்காப்பியர் "அன்பொடு புணர்ந்த ஐந்திணை" என்று குறிப்பிடுகிறார்.*[7] *எனவே கைக்கிளையும், பெருந்திணையும் அன்பொடு புணராதவை எனத் தெளிவாகிறது. தொல்காப்பியர் தம்முடைய நூற்பாவின் வழி,*

**"காமம் சாலா இளமை யோள்வயின்**
**ஏமம் சாலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்று இரு திறத்தான்**
**தன்னொடும் அவெளாடும் தருக்கிய புணர்த்து**
**சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"**[8]

**களவு**

*களவொழுக்கமானது ஒத்த அன்புடைய தலைவி தலைவனிடையே நிகழும் காட்சி, ஐயம், தெளிவு முதலிய ஒழுக்கங்களை அறவழியில் நின்று விளக்குகிறது. "களவாவது பிறர்க்குரிய பொருள் மறையிற் கோடல், இன்னதின்றி, ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர், தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலைவழாமல் நிற்றலால் இஃது அறமெனப்படும்" என்பதால் களவொழுக்கமானது அறத்தின்கண்படும் ஒழுக்கமே என்று இளம்பூரணர் எடுத்துரைக்கிறார்.*

*களவிற்குரிய கைகோள்களாக,*

**"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்..."**

*என்னும் நால்வகையினையும், களவிற்குரியோராக தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பன், பாங்கன் ஆகியோரைத் தொல்காப்பியம் சுட்டுகிறது.*

**கற்பு**

கற்பென்பது மண நிகழ்வாகும். மண நிகழ்விற்குப் பிறகு தலைவன், தலைவி இடையே நிகழும் ஒழுக்கங்களை எடுத்துரைப்பதாகும். "கற்பு என்பது கற்றலையும் கற்பித்தலையும் குறிக்கும். எனவே கற்பு என்பது கிழவனும் கிழத்தியும் தாம் கற்றவாறும் பிறர் தமக்குக் கற்பித்தவாறும் ஒழுகும் ஒழுக்கம் ஆகும். தாம் கற்றவாறு ஒழுகலாவது நூலைக் கற்றவாறும் பிறர் வாழ்க்கை கண்டு கற்றவாறும் ஒழுகல். பிறர் கற்பித்தவாறு ஒழுகலாவது கிழவன் கற்பித்தவாறு கிழத்தி ஒழுகலும் இருவரும் தந்தையர் தன்னையர் சான்றோர் முதலியோர் கற்பித்தவாறு ஒழுகலும்'' என்று கற்பு குறித்து ஆ.சிவலிங்கனார் எடுத்துரைக்கிறார்.

**"கற்பிற்குரிய கைகோள்களாக,**
**மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்..."**

என்பனவற்றை எடுத்துரைக்கிறது. தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பன், பாங்கன், பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்னும் பன்னிருவரும் கற்பில் கூற்றிற்குரியோர் எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

**இயற்கைப்புணர்ச்சி**

எதிர்பாராத சூழ்நிலையில் தலைவனும் தலைவியும் சந்திக்கும் நிகழ்வு இயற்கைப்புணர்ச்சி தெய்வப்புணர்ச்சி என்று கூறப்படுகிறது. இவர்களது சந்திப்பு என்பது நல்ஊழிலன் ஏவலால் நடைபெறும் நிகழ்வாகும்.

**இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி**
**முயற்சி யின்றி முடிவ தாகும்.**[9]

இந்நிகழ்வு குறுந்தொகைப் பாடல்களில் அதிகமாக இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

**கற்பெனப் படுவது கரணமொடு புணர**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே[10]**

*களவு என்பது கற்பாக முடிய வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.*

**இடந்தலைப்பாடு**

*தலைவன் தலைவி இருவரும் சந்தித்த இடத்திலே மீண்டும் சந்திப்பது இடந்தலைப்பாடு என்று பொருள். இருவரும் முதல் முறை சந்தித்த அதே இடத்தில் மீண்டும் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் இரண்டாம் நாளும் காணப் போவதை குறிப்பிடுவதாக அமையும்.*

**தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்**
**றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே[11]**

*தெய்வந்தெளிதலும் கூடலும், விடுத்தலும் என மூன்று வகையினை உடையது இடந்தலைப்பாடாகும்.*

**இரவுக்குறி**

*இரவுக்குறி என்பது இரவில் தலைவனும் தலைவியும் களவில் சந்தித்து கூடி மகிழும் இடமே இரவுக்குறி எனப்படும். அதாவது களவு நீடிக்க வேண்டும் என்பதற்காக இந்த இரவுக்குறியானது நிகழும்.*

**வேண்டல் மறுத்தல் உடன்படல் கூட்டல்**
**கூடல்பா ராட்டல் பாங்கிற் கூட்டல்**
**உயங்கல் நீங்கலென் றொன்பது வகைத்தே**
**இயம்பிப் போந்த இரவுக் குறியே[12]**

*இரவுக் குறியானது ஒன்பது வகைமைகளைக் கொண்ட தாகும்.*

**அறந்தொடு நிற்றல்**

*களவு ஒழுக்கத்தைக் கற்பு அறமாக ஆக்கும் அருஞ்செயல் 'அறத்தொடு நிற்றல் வழி நிகழும் அக ஒழுக்கத்தின் இன்றியமையாததாகும். அதற்குத் தோழி முதலான மாந்தர்கள் துணை நிற்பர். தலைவன் தலைவி திருமணத்தை நோக்கமாகக் கொண்டு அவர்களின் களவுக் காதலைப் பெற்றோர்க்கு வெளிப்படுத்துவது 'அறத்தொடு நிற்றல்' ஆகும்.*

*தலைவி-தோழிக்கும், தோழி-செவிலிக்கும், செவிலி-நற்றாய்க்கும், நற்றாய்-தந்தைக்கும் தமையன்மாரிடமும் உண்மை உணர்த்தி அறத்தொடு நிற்பர். இந்நிலையில் அறத்தொடு நிற்றல் அமையும்.*

**அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே –அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே[13]**

*என்ற குறுந்தொகைப் பாடல் தோழி அறத்தொடு நின்றமையை எடுத்துரைக்கிறது.*

**மனம் ஒருமித்தல்**

*தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் யார் என்று அறியாத நிலையில் தம் மனம் ஒருமித்து காதலால் ஒன்றிணைந்தமையை*

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே[14]**

என்ற குறிந்தொகைப் பாடல் எடுத்துரைக்கின்றன.

**உடன்போக்கு**

சங்க இலக்கியங்களில் பெண்கள் சுதந்திரமாகவும், தன் தலைவனைத் தானே தெரிவு செய்யும் மனப்பான்மையும் பெற்றிருந்தனர். தன் தலைவனோடு திணைப்புனம், காடு, வயல், கடற்கரை மணல், சுனை போன்ற இடங்களில் காதலை வளர்த்துக்கொண்டார்கள்.

**"நிலத்தினும் பெரியதே, வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின்றே"[15]**

என்ற குறுந்தொகைப் பாடல் தலைவனோடு தலைவி கொண்ட காதலானது நட்பு, மொழி, மனம், மெய் என்பதைக் கடந்து நிற்பது ஆகும். நிலம், வான், நீர் என மூன்றினையும் விட உயர்ந்தது என்றும் கூறுகிறார்.

ஊரில் ஏற்பட்ட அலரால் தலைவியுடைய காதல் பெற்றோர்க்கு தெரிய வருகிறது. பெற்றோரும் எதிர்ப்பு தெரிவிக்கும் நேரத்தில், தலைவி தன் தலைவனோடு உடன்போக்கு செல்வதற்கும் தலைவி மனம் ஒத்திருந்தமையை சங்க இலக்கிப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**திருமணம் தோன்றுதல்**

களவிலிருந்து இல்லறம் மேற்கொள்ள விழையும் தலைவனும் தலைவியும் ஊரார் பழி சொல்லவண்ணமும் தன் வாழ்வினை பலரின் முன்னிலையில் இருவரும் இணையும் நிகழ்வாக நடைபெற்ற நிகழ்வாகும்.

**'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப'[16]**

என்னும் நூற்பாவில் திருமணம் குறித்து தொல்காப்பியர் கூறியதை காணலாம். இதிலிருந்து மனிதர்கள் மேற்கொள்ளும் களவு வாழ்க்கையானது அதன் ஒழுக்கநெறி தவறாமல் கற்பு நிலையை அடையும் என்பதை அறியமுடிகிறது. இதனையே

*நம் சங்க இலக்கியங்களும் அகப்பொருள் நூல்களும் கூறுகின்றன.*

**நல்லறமே இல்லறம்**

*தன்னை திருமணப் பந்தத்திலே ஈடுபடுத்தி வாழ்க்கையை முழுமையாக்க ஒவ்வொரு பெண்ணும் தனக்கு கணவன் எவ்வாறு அமைய வேண்டும் என கனவு காண்பாள். அக்கால மகளிரும் தனக்கு வாய்க்கும் கணவன் வீரம் உடையவனாகவும், அஞ்சா நெஞ்சம் உடையவனாகவும் இருக்க வேண்டுமென விரும்பினர். காளையை அடக்கும் வீரர்கள், வட்டக்கல் தூக்கும் வீரர்களுக்கே தங்கள் மனதினைப் பறிக்கொடுத்தனர். வீரம் இல்லாத ஆண்களைப் பெண்கள் மணம் கொள்ள விரும்பவில்லை.*

**"கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
புலலாளே, ஆயமகள்"[17]**

*என்ற கலித்தொகைப் பாடல் தலைவி மறுபிறப்பில் கூட அந்த வீரமற்றவனை திருமணம் செய்யமாட்டேன் என்ற கூற்றின் வழி வீரமிக்க ஆடவரை மணக்க விரும்பியதை அறியமுடிகிறது.*

**திருமணம் முறை**

*தலைவியின் திருமணத்தின் போது, பந்தலிட்டு, புதுமணல் பரப்பி, மனை விளக்கு ஏற்றி மாலைகளை தொங்க விட்டனர் என்றும், புதல்வனைப் பெற்றெடுத்த மகளிர்கள் நெல்லும் மலரும் கலந்ததை அம் மணமக்கள் மேல் தூவி வாழ்த்துவதை*

**உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப, நிரை கால்
தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி
மனை விளக்குறுத்து, மாலை தொடரி,
கனை இருள் அகன்ற கவின்பெறுகாலை
..................................................[18]**

*எனும் அகநானூற்றுப் பாடல்வரிகள் எடுத்துரைக்கிறது.*

**மைப்பு அறப் புழுக்கின் நெய்க் கனி வெண் சோறு**
**வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி,**
**புள்ளுப் புணர்ந்து இனிய ஆக, தெள ஒளி**
**அம் கண் இரு விசும்பு விளங்க, திங்கட்**
**சகடம் மண்டிய துகள் தீர் கூட்டத்து,**
…………………………………………….[19]

*என்ற அகப்பாடல் நல்லநேரம் பார்த்தல், சகுனம் பார்த்தல், திருமணத்தின் போது உணவு பரிமாறுதல், முரசு கொட்டுதல் போன்ற நிகழ்வுகள் சங்க காலத்தில் இருந்ததாக எடுத்துரைக் கின்றது. ஆனால் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததாக எடுத்துரைக்கவில்லை.*

**இல்லறமாண்பு**

*ஒரு தலைவி திருமணமாகித் தலைவனுடன் தன் புகுந்த வீட்டிற்குச் செல்கிறாள். புகுந்த வீட்டிற்குச் சென்ற ஓரிரு மாதம் கழித்து முதன் முதலில் தன் பிறந்த வீட்டிற்கு வரும் தலைவியிடம் நலம் விசாரிக்கிறார்கள் உறவினர்கள் என்பதனை,*

**"மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே"[20]**

*என்னும் பாடல் வரியில், குளத்திலே கலங்கிய தண்ணீரை வெப்பம் மிகுதியால் அந்த பக்கம் சென்ற மானானது உண்டது. அந்த எச்சில் தண்ணீர் கூட எனக்கு இனிய தேனோடு கலந்த பசுவின் பாலை விட இனிமையானது என்கிறாள் தலைவி. தன் புகுந்த வீடும், நாடும், ஏழ்மை வறட்சி உடையது என்பதை அறிந்திருந்தும், உறவினர்களிடம் தன் கணவனின் நலன் கெடாதவாறு தலைவி கூறுகிறாள். அதன் வாயிலாக தலைவியின் இல்லற மாண்பு புலப்படுகிறது.*

**பிரிவு**

*தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதலே பிரிவாகும். பிரிவு களவு கற்பு இருவகை வாழ்க்கையிலும் நிகழ்க்கூடிய தாகும். அவ்வகையில் அகப்பொருளில் தனி இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளன.*

**ஓதல் பகையே தூதிவை பிரிவே**[21]

**களவில் நிகழும் பிரிவுகள்**

*மிகுந்த அன்பு கொண்டு பழகி வாழும் களவு வாழ்வின் போது நிகழும் பிரிவுகள் இருவகைப்படும்.*

1. *ஒருவழித் தணத்தல்*
2. *வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்*

**ஒருவழித் தணத்தல்**

*களவு வாழ்வில் இருந்து திருமணம் புரிந்து கொள்ளுமாறு தோழி தலைவனிடம் அறிவுறுத்த அதற்கு உடன்பட்ட தலைவன் தன் ஊருக்கு ஒருவழி (முறை) போய் வருகிறேன்; பிறகு மணமுடிப்பேன் என்று கூறிச் செல்வது ஒருவழித் தணத்தல் எனப்படும்.*

*இது, ஓர் ஊரின்கண்ணும் ஒரு நாட்டிற்குள்ளும் நிகழும் பிரிவாகும். ஆகவே, இதற்குக் கால வரையறை இல்லை.*

**வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்**

*(வரைவு = திருமணம்) திருமணம் புரிந்து கொள்ள முடிவு செய்த தலைவன் அதற்கு வேண்டும் பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரிதல் ஆகும். இது காடு இடையிட்டும், நாடு இடையிட்டும் செல்வதாக அமையும். இப்பிரிவுக்குரிய காலம் இரண்டு மாதமாகும்.*

*தலைவன் பல காரணங்களுக்காக தலைவியை விட்டு பிரிதல் நடைபெறுகின்றன. அத்தகைய பிரிவினை வகைகள்:-*

**பரத்தையிற் பிரிவு**

தலைவியை மணந்து இல்லறம் மேற்கொள்ளும் கற்பியல் வாழ்க்கையின் போது தலைவன் பிற மகளிரைப் உறவுக் கொள்வதற்கு பிரிதல் உண்டு. பரத்தை காரணமாகப் பிரியும் பிரிவு அருகில் இருக்கும் மனையிடத்துப் பிரிதலாகும். தலைவன் அருகில் இருக்கும் குடியிருப்பிற்குச் செல்லுதல், நகருக்கு வெளியே இருக்கும் புறநகருக்குப் பிரிதலும் வளம்மிக்க தலைவனுக்குரிய பிரிவுகளாகும்.

**ஓதற்பிரிவு**

கல்வி கற்கும் பொருட்டு அந்தணரோ, அரசரரோ, வணிகரோ மூன்றாண்டு காலம் பிரிவர். கல்வி அல்லாத வில்,வாள், வேல் ஆகிய பயிற்சியும் யானை,குதிரை, தேர் செலுத்தும் பயிற்சியும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வர்க்கும் உரியது. இதுவும் மூன்றாண்டு காலம் நிகழும். ஓதற்பிரிவின் போது இடையில் திரும்பி வருவ தில்லை. அங்கு தலைவியை நினைத்து மனவருந்தி புலம்பு வதும் இல்லை.

**காவற்பிரிவு**

காவல் புரிவதற்காக மேற்கொள்ளும் பிரிவாகும். இது இருவகைப்படும்

**அறப்புறம் காவல்**

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வருக்கும் காலவரையின்றி பொருந்தும். கோயில் முதலான அறநிலையங் களைப் பாதுகாக்கப் பொருட்டு தலைவன் எதிர்கொள்ளும் பிரிவாகும்.

**நாடு காவல்**

ஒரு நாட்டைக் காக்கும் பொருட்டுப் பிரிதலே காவற்பிரி வாகும். நாடுகாவல் பிரிவானது அரசனுக்கும் அரசனால்

சிறப்புப் பட்டம் பெற்ற வணிகரும், வேளாளர் ஆகியோருக்கும் உரியதாகும்.

### தூதிற் பிரிவு

தூதிற் பிரிவு அந்தனர் அரசர் ஆகிய இருவருக்கும் உரியதாகும். பகைகொண்ட பிறநாட்டு அரசனனிடம் சென்று பேசி அவனது பகையை மாற்றும் பணியை ஆற்றும் செயலே தூதுப் பிரிவாகும். மேலும் அரசனால் சிறப்புப் பட்டம் பெற்ற வணிகர், வேளாளருக்கு உரியதாகும். இதன் காலவரையறை ஓராண்டாகும்.

### துணைவயிற் பிரிவு

அந்தணரல்லாத அரசர், வணிகர், வேளாளர் ஆகிய மூவருக்கும் உரியது. அரசனுக்கு உதவும் பொருட்டுப் பிரியும் துணைவயிற் பிரிவு ஓராண்டு காலமாகும்.

### பொருள்வயிற் பிரிவு

தலைவன் பொருளீட்டுவதற்காக ஓராண்டு காலம் தலைவியை விட்டு பிரிவர். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வருக்கும் பொருந்தும்.

கற்பில் தலைவன் பரத்தை, கல்வி, தூது, காவல் எனும் நான்கு நிலைகளில் பிரிவான். இவ்வகை பிரிவுகளில் தலைவன் தலைவியிடம் சொல்லிப் பிரிதலும் சொல்லாமல் பிரிதலும் உண்டு. இருப்பினும் குறிப்பால் உணர்த்தியாவது பிரிய வேண்டும்.

### முடிவுரை

தமிழர் பண்பாட்டில் அகம் புறம் இரண்டும் முக்கிய பங்காற்றியமையை அறியமுடிகிறது.

பண்பாடு தமிழரின் அடையாளமாகத் திகழ்ந்தமையை அறியலாகிறது.

புறம் அனைத்தும் அகத்தின் வெளிப்பாடாக அமைந்ததன் வாயிலாக அகம் முக்கிய இடம் பெற்றமையைக் காணமுடிகிறது.

தலைவன் தலைவயின் ஒருமித்த அன்பு வாழ்க்கை பண்பாட்டின் நிலைக்களனாக இருந்துள்ளது.

தலைவியின் காதல் வாழ்வு களவு, கற்பு என்ற நிலைப்பாட்டில் அமையப்பெற்றுள்ளது.

களவு காலத்தில் தலைவி களவிற்குரிய நெறிகளைப் பின்பற்றியமையைக் காணமுடிகிறது.

கற்பு காலத்தில் தலைவி இல்லறத்தின் சிறப்பினைக் காக்கும் நோக்கில் வாழ்வியலை எதிர்கொண்ட நிலைகளை சங்கப் பாடல்கள் வழி உணரமுடிகிறது.

தமிழரின் பண்பாட்டினைப் போற்றும் நிலையில் அகமானது அடித்தளமாக அமைந்தமையை உணரமுடிகிறது.

அகத்திணையில் தலைவன் தலைவியின் பெயர் சுட்டவில்லை

உள்ளுறை, இறைச்சி அகத்திணை உத்திகளாகும்.

கைக்கிளை பெருந்திணை இரண்டும் அன்பொடு புணரா அமைப்பாகும்.

அறத்தில் நிகழும் ஒழுக்கநிலைப்பாடு களவாகும்.

களவில் இருந்த தலைவன் தலைவியின் அடுத்தநிலை கற்பாகும். கற்பு இல்லறவாழ்வின் சிறப்பினை எடுத்துரைப்ப தாகும்.

அகத்திணையில் அறத்தொடு நிற்றல் நிலை என்பது சிறப்பாகப் போற்றப்பட்டது.

கற்பில் தலைவியின் இல்லற மாண்பின் வாயிலாக தலைவி தலைவனோடு வாழும் இல்லறச் சிறப்பு புலப்படுகிறது.

*பிரிவு என்பது பல்வேறு நிலைப்பாட்டில் நிகழ்தமையையும், பிரிவின் போது தலைவி தலைவனோடு செல்லும் வழக்கம் இல்லை.*

*அகம் மனித வாழ்வில் பிரிக்க முடியாத கூறாக இருந்தமையும் ஒவ்வொரு நிலத்திலும் அகம் இன்றியமையாத ஒன்றாக விளங்கியமையும் அகத்தின் வாயிலாக வாழ்வியல் நிலைப்பாட்டினை அறியவும் முடிகிறது.*

*தமிழர் பண்பாட்டில் அகம் புறம் இரண்டும் இருந்தமை யையும் புறத்தைக் காட்டிலும் அகம் அதிகமாக இருப்பதையும் அறியமுடிகிறது.*

*காலங்கள் கடந்தும் தமிழர்கள் வாழ்வில் பண்பாட்டை அடையாளப்படுத்தும் கருவியாக அகம் விளங்கிறது என்பது பெருமைக்குரியதாகும்.*

*அகத்திணையின் ஒவ்வொரு கூறுகளும் தமிழரின் பண்பாட்டினை வெளிப்படுத்தும் நிலைகளனாக விளங்குவது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.*

**சான்றாதாரங்கள்**

*1. நற்றிணை 335 பாடல்*

*2. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா -1*

*3. திருக்குறள் 60 குறள்*

*4. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா -2.*

*5. தொல்காப்பியம் நூற்பா - 1168*

*6. தொல்காப்பியம்நூற்பா - 1002*

*7. தொல்காப்பியம் களவியல் நூற்பா - 1*

*8. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா -53*

*9. நம்பி அகப்பொருள் விளக்கம் நூற்பா – 33*

*10. தொல்காப்பியம் 142 நூற்பா*

*11. நம்பி அகப்பொருள் விளக்கம் 134 நூற்பா*

*12. நம்பி அகப்பொருள் விளக்கம் 157 நூற்பா*

*13. குறுந்தொகை பாடல் எண் - 23*

*14. குறுந்தொகை பாடல் எண் – 5*

*15. குறுந்தொகை பாடல் எண் – 3*

*16. தொல். கற்பியல் நூ4.*

*17. கலித்தொகை பாடல் எண் - 103*

*18. அகநானூறு 86 பாடல்*

*19. அகநானூறு 136 பாடல்*

*20. ஐங்குறுநூறு 203 பாடல்*

*21. தொல் அகத்திணையியல் நூ27*

# சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலறம்
# LIVING PHILOSOPHY OF TAMILS IN SANGAM LITERATURE

**முனைவர் இரா. சுகுமார்,**
உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை,
பெரியார் மணியம்மை அறிவியல்
மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்
(நிகர் நிலைப் பல்கலைக் கழகம்),
வல்லம், தஞ்சாவூர் - 613 403.
மின்ன்ஞ்சல்: sukumaranitha76@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*பழமையும் பெருமையும் வாய்ந்த இலக்கியங்களுள் மிகவும் தொன்மைச் சிறப்பு வாய்ந்தவை சங்க இலக்கியம். சங்க காலத் தமிழரின் வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைந்தது குறிப்பித்தக்கது. ஆகவே தான் சங்க இலக்கிய மானது தமிழரின் வாழ்வியலறங்களை உலகிற்கு பறைசாற்றி நிற்கும் பெட்டமாக விளங்குகிறது. எனவே சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலறம் குறித்து ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச் சொற்கள்**

*தமிழ், சங்க இலக்கியம், வாழ்வியல், அறம், வாழ்வியல் அறம்*

## Abstract

*Among the literary works rich in antiquity and greatness, Sangam literature holds a significant place. It is noteworthy that the lifestyle of the Tamils during the Sangam era was based on ethics. Therefore, Sangam literature stands as a*

*testament to the way of life of the Tamils, showcasing it to the world. Thus, the objective of this essay is to explore the way of life depicted in Sangam literature.*

*Keywords: Tamil, Sangha Literature, Life, Virtue, Life Virtue*

**அறப்பண்பு**

சங்க இலக்கியத்தில் பாடல்களுக்கு இடையே புலவர்கள் அறத்தை உணர்த்தியப் போக்கு காணப்படுகிறது.

**"யாம் அம் இரப்பவை**
**பொருளும் பொன்னும் போகமும் அல்ல: நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருளினர்க் கடம்பின் ஒலி தாராயோ"[1]**

என்ற பாடல் வரிகளில் கடுவன் இளவெயின்னார் செவ்வேளிடம் வேண்டுவதால் அக்கால தமிழ் மக்கள் அறப்பண்பு கொண்டு விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.

**காதற் பண்பு**

விளையாட்டுப் பருவத்தில் ஆயமகளிரொடு சென்று நெய்தலங்கானலின் வெண்மணிலில் புன்னைக் காய்களை அழுத்தியபழயாக விளையாடியபோது மறந்து விட்டுச்சென்ற புன்னை விதையொன்று முளைவிட்டு நிற்க, அதைத் தன் குழந்தை போல் கருதி, அன்றாடம் பாலையும் நெய்யையும் வார்த்து இனிமையோடு வளர்த்து வருகின்றாள் ஒரு பெண். செடியும் மரமாகின்றது. அப்பெண்ணிற்குத் திருமணமும் நடந்து பெண்ணொன்றும் பிறக்கிறது. அப்பெண்ணும் வளர்ந்து திருமணப்பருவத்தை அடைந்துஒரு காதலனையும் தனக்குரியவளாகப் பெறுகின்றாள்.

ஒருநாள் அக்காதலன் புன்னை மரத்தடியில் காதற் குறிப்புத் தோன்ற வந்து நிற்கின்றான். அப்புன்னை மரத்தின் எதிரே காதலனோடு நகைத்து விளையாடி மகிழ்ந்திருப்பதற்குப்

*பெரிதும் நாணி; தூர செல்கின்றாள். ஏனென்றால் அப்பெண்ணின் தாய் அவளிடம் இப்புன்னை உன்னைவிடச் சிறந்தது. அது உன் தமக்கை என்று அடிக்கடிச் சொல்லியிருக்கின்றாள். ஆகவே தமக்கை என்ற நினைவு வந்தவுடன் நாணுகிறாள். புன்னை மரத்தையும் தன் உடன்பிறப்பாகக் கருதியதால் அதன் எதிரி;ல் நின்று காதலனோடு பேசுவதற்கு நாணிய அப்பெண்ணின் காதற்பண்பு மிகவும் வியந்து போற்றுதலுக்குரியதாகும். இதனை,*

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தன்று நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே"[2]**

*என்ற பாடல் வரிகளால் உணரலாம்.*

**இல்லறப் பண்பு**

*கடிமணம் புரிந்து கொண்டு தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்துகின்றனர். தன் மகள் (தலைவி) இல்லறம் எவ்வாறு நடத்துகின்றாள் என்பதை அறிந்து கொள்வதற்காக செவிலியானவள் நேரில் வந்து பார்க்கின்றாள். அப்போது தலைவியோ தலைவனுக்காக சமையல் செய்து கொண்டிருந்தாள். கட்டித்தயிரைத் தன் காந்தள் விரல்களால் பிசைந்து, நெகிழ்ந்த சேலையினை அக்கையாலேயே பற்றிச் சரி செய்து கொண்டாள். கண்களில் குய்ப்புகைக் கொள்ளவும் தன் துன்பம் பாராமல் புளிக்குழம்பு வைத்தாள். தலைவி தன் கையால் சமைத்த உணவைத் தலைவன் சாப்பிடும் பொழுது இனிது எனப் பாராட்டிக் கூறி மகிழ்ந்து உண்டான். இதனைக் கண்ட தலைவியின் முகத்திலோ மகிழ்ச்சி பொங்கியது. இதனைக்,*

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழா அது உடீ இ**
**தான் துழந்தட்ட தீம்புளிப்பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"[3]**

*என்ற பாடல் வரிகள் மூலம் தலைவியின் இல்லறப் பண்பினை உணரமுடிகின்றது. மேலும், ஓர் ஆடையைப் பகுத்து உடுத்தும் வறுமை நிலையிலும்; மனம் ஒன்றி வாழும் வாழ்க்கைச் சிறப்பினை*

**"ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒற்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"[4]**

*என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றது. மனம் ஒத்த அன்பே இல்லற வாழ்க்கையின் அடிப்படைப் பண்பாக விளங்குகிறது.*

**மனையறம்**

*அறிவாலும் ஆற்றலாலும் ஒழுக்கத்தாலும் நிரம்பிய ஆடவன் ஒருவன் தகுதி நிரம்பிய பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வதைப் பேறமாக கருதினர்.*

**"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன்"[5]**

*எனத் திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலப்படும்.*

*மனையறம் புரிதலை மகளிரும் வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விளங்கியது. இதனை*

**"மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு**
**மருவின் இனியளவு முளவோ"[6]**

*என்ற பாடல் வரிகளும்*

**"மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்**
**முனைக்கு வரம் பாகிய வெண்வே னெடுந்தகை"[7]**

*என்ற பாடல்களும் சிறப்பிக்கின்றது.*

**குடும்பப் பண்பு**

*பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் தலைவி. அச்சமயம் தான் வளர்க்கும் பசுங்கிளியைத் தன் முன் கையில் அமரச் செய்து, வீட்டிலுள்ளவர்கள் அறியாத தனியிடத்தில் இருந்து பிரிந்து சென்ற தலைவர் இன்று வருவார் என்று கூறுமாறு அதற்குச் சொல் பயிற்றுகின்றாள். அதனைப் பயின்று அப்பசுங்கிளி 'அவர் இன்று வருவார்' என்று சொல்லும் போது தலைவி நாணுகின்றாள்.*

*குடும்பத்தினர் யாரும் தன் கவலையினை அறிந்து துன்புறுதல் வேண்டாம் என நினைத்துக் குடும்பப் பண்பினைக் காக்கக் கருதும் தலைவியின் மனநிலை இக்காட்சியின் வாயிலாக வெளிப்படுகின்றது. இதனை,*

**"செந்தாரப்ப பைங்கிளி முன்கை ஏந்தி**
**இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென**
**இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென**
**மழலை இன்சொல் பயிற்றும்**
**நாணுடை அரிவை"[8]**

*என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.*

**விருந்தோம்பல் பண்பு**

*இல்லற வாழ்வின் சிறப்புக்கும் உயர்வுக்கும் காரணமாய் அமைவது விருந்தோம்பற் பண்பாகும். அக்காலத்தில் மக்கள் மாலைப்பொழுதில் தங்கள் வீட்டுக் கதவை அடைக்கும் பொழுது விருந்து உண்போர் உள்ளனரோ என்று கூவியழைத்த பிறகே கதவை அடைக்கும் பண்பாடு காணப்பட்டது. இதனை,*

**“நள்ளென் வந்த நார் இல் மாலைப்**
**பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ?”[9]**

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

இல்லறத்தில் கணவன் மனைவி இருவரும் இணைந்து ஆற்ற வேண்டிய அறமாகக் கருதப்பட்டது விருந்தோம்பல். தம் உற்றார் உறவினர் மட்டுமல்லாமல் தம் இல்லம் நாடிவரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரித்தல் அவர்களுடைய கடமையாக இருந்தது. விருந்தினர் உண்டு எஞ்சிய உணவைத் தலைவி இட தான் உண்ணுதலே தக்கது என்பதை தலைவன் கூற்று புலப்படுத்துகிறது. இதனை,

**“சாறு அயர்ந்தன்ன மிடா அச்சொன்றி**
**வரையா வளநகர் பொற்ப**
**மலரத் திறந்த வாயில் பலர் உணப்**
**பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்**
**வசையில் வான் திணைப் புரையோர் கடும்பொடு**
**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னொடு உண்டலும் புரைவது”[10]**

என்ற தலைவன் கூற்று வாயிலாக அறியமுடிகிறது.

கணவன் மனைவியரிடையே எழும் ஊடலைத் தீர்க்க வாயில்களாக விருந்தினர் அமைவர். விருந்தினர் வரின் இருவரும் ஊடலை மறந்து விருந்தினரைப் பேணும்; கடமையில் ஈடுபடுவர். தன் மனைவியின் ஊடலைத் தீர்;க்க யாரேனும் விருந்தினர் வரமாட்டார்களா என ஏங்கும் தலைவனின் நிலையை,

**“எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பாள் அன்று**
**சிறு முள் எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகம் காண் கம்மே”[11]**

என்று கூறுவதாக மொழிகின்றது.

**ஈகைப் பண்பு**

*ஒருவரது துன்பத்திற்கு அவர் N;வண்டும் பொருளை எவ்விதப் பயனும் கருதாது. கொடுத்தலே ஈகை எனப்படும். இதனை*

**"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்"[12]**

*என்ற பாடல் வரியால் தெளியலாம்.*

**"செல்வத்துப் பயனே யீதல்**
**துய்ப்பே மெனினே தப்புந பலவே"[13]**

*என்ற வரிகள் ஈதலின் சிறப்பை உணர்த்துகின்றது.*

**"ஈயென இரத்தல் இழிந்தென்று அதனெதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று**
**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்**
**கொளளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"[14]**

*என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் கொடுத்தலின் இயல்பையும் உயர்வையும் வலியுறுத்துகிறது. இல்லற இன்பத்தைவிட ஈதல் அறமே சிறந்ததாகக் கருதிய சங்கத் தமிழர் பொருளுக்;காக பிரிவதை நெறியாகவும் கடமையாகவும் கொண்டிருந்தனர். இதனை,*

**"வண்டு படுபு இருளிய தாழ் இருங் கூந்தல்**
**சுரும்பு உணவிரிந்த பெருந்தண் கோதை**
**இவளினும் சிறந்தன்று, ஈதல் நமக்கு என"[15]**

*என்ற பாடல் வரிகளால் உணரலாம்.*

*சங்க தமிழர் மறுமை பயன் நோக்காது பிறர் வறுமையைப் போக்குதலைக் கடமையாகக் கொண்டு ஈகையைச் செய்து வாழ்ந்தனர். பொருள் உடையவரின் கடமை பொருளிலார்க்குக் கொடுத்து உதவுதல் என்பது சான்றோரின் நெறியாகக் கருதப்பட்டது. அவ்வாறு வாழ்ந்த ஆய் அண்டிரனை புறநானூறு சிறப்பிக்கின்றது. இதனை*

**"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**வணிகன் ஆ அய் அலெ;லன்**
**பிறரும் சான்றோர் சென்ற நெறியென,**
**ஆங்குப் பட்டன்று அவன் கை வண்மையே"[16]**

*என்ற பாடல் வரிகளால் உணர முடிகின்றது.*

*மேலும், பெயரும் புகழும் சேர்ப்பதற்காக ஈகையைச் செய்யாது ஈகையை ஈகையின் பொருட்டே செய்தனர். இதனை,*

**"பெறுதற்கரிய வீறுசால் நன்கலம்**
**பிறிதொன்று இல்லை: காட்டு நாட்டோம் என,**
**மார்பிற் பூண்ட வயங்கு காழ் ஆரம்**
**மடைசெறி முன்கை கடகமொடு ஈர்த்தனன்: எந்நாடோ? என,**
**நாடும் சொல்லான்! யாரீரோ! எனப் பேரும் சொல்லான்**
**பிறர்பிறர் கூற வழிக் கேட்டிசினே:"[17]**

*என்ற பாடல் வரிகள் நள்ளியின் ஈகைப் பண்பை போற்றுகின்றது.*

### பகுத்துண்ணும் பண்பு

*அறங்களில் தலையாய அறம் பகுத்துண்டு வாழும் பண்பே ஆகும். இத்தகையப் பண்பை மேற்கொண்டு வாழ்ந்தவர்கள் சங்கத் தமிழர். தமக்கு கிடைத்த பொருள் அரிதாயினும் அவற்றை பிறருக்குக் கொடுத்து வாழ்வதையே சிறந்த வாழ்வாகக் கருதினர். இதனை,*

**நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து வறைநர்க்கு**
**பன் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீர யாழநின்**
**நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்**
**இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே"[18]**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.வறுமையில் வாடிய புலவர்கள் வள்ளல்களிடம் பெற்ற பரிசிற் பொருளை,

**"பெற்றது மகிழ்ந்து கற்ற மருத்தி**
**ஓம்பாது உண்டு கூம்பாது வீசி"[19]**

என வாழும் இயல்புடையவர்கள் என்று அறிவிக்கின்றது. மேலும், பிறரோடு பகிர்ந்து உணடுட வாழ்வதற்கென்றே பலவற்றையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடுதலே ஆண்மை எனக் கருதிச் சங்கத் தமிழர் வாழ்ந்தனர். இதனை,

**"பகுத்தூண் டொடுத்த வாண்மை"[20]**

என்று பதிற்றுப் பத்து மொழிகின்றது.

**மனித நேயப் பண்பு**

மனிதநேயம் என்பது பிற மனிதரிடத்து காட்டும் அன்புணர்வைக் குறிப்பாகும். சாதி, மதம், நாடு, மொழி பேதமின்றி ஒருவரின் மனம் நெகிழும்படி மற்றொருவர் மேல் வெளிப்படுத்தும் நட்பும் நேசமும் கலந்த உணர்வு மட்டுமல்லாமல் இரக்கத்தை; வெளிப்படுத்தும் செயல்பாடும் மனித நேயமாகக் கருதலாம்.

மன்னன் கிள்ளிவளவன் தனது பகைவனான மலையமானின் குழந்தைகளை யானைக் காலால் மிதித்துக் கொல்ல ஆணையிடுகிறான். ஆணையை நிறைவேற்றப் போகும் தருணத்தில் கோவூர் கிழார் என்னும் புலவர் இடையிட்டு, புறாவிற்காக உயிரைத் துறந்த மன்னது சிறப்பைக் கூறி, கொலையைத் தடுத்து நிறுத்துகின்றார். சாவை சந்திக்க வந்த குழந்தைகளை தம்முடைய சாதுரியத்தால் காத்து நின்ற புலவரின் அ:ருள் உள்ளமும் அதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும், அந்த முயற்சியால் கிடைத்த வெற்றி இவையனைத்தும் மனித நேயத்தின் பண்பாகும். இதனை

**"நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்**
**இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை:**

**இவரே, புலனுழுது உண்மார் புண்கள் அஞ்சித்**
**தமது பகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்!**
**களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த**
**புன்றலைச் சிஅர் மன்று மருண்டு நோக்கி**
**விதுந்திற் புன்கண் நோவுடையர்**
**கெட்டனை யாயின், நீ வேட்டது செய்ம்யே”[21]**

*என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.*

*பிசிராந்தையார் என்னும் புலவர் தனது வயது அதிகமாயினும் நரை தோன்றாமைக்குக் காரணம் என் மனைவி மாண்புமிக்கவள் மக்களும் அந்தன்மையரே, ஏவல் செய்யும் இளையோரும் நல்லவரே என் நட்டு வேந்தனும் அல்லவை செய்யாது அறம் காக்கும் செங்கோலன். என் நாட்டு சான்றோர்களும் நன்மை நிரம்பித் தீமை ஒழிந்து ஒழுக்கத்தில் நின்ற அடக்க மிக்க கொள்கையினர் எனப் போற்றுவதில் புலவர் எல்லோர் மாட்டும் கொண்ட மனித நேயம் புலப்படுகின்றது. இதனை,*

**“யாண்டு பல ஆக நரைஇல ஆகுதல்**
**யாங்காகியர் என வினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,**
**யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கும்: அதன் தலை**
**ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர் யான் வாழும் ஊரே”[22]**

*என்ற பாடல் வரிகளால் அறியலாம்.*

**நன்றியறிதல் பண்பு**

*ஒருவருக்கொருவர் உதவி செய்தலும் நன்றி மறவாதலும் அறப்பண்பாகும். பயன் கருதாமல் பிறருக்கு உதவுதல் சிறப்பு என்றும் தமக்கு உதவிய ஒருவருக்குக் கைம்மாறு செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பெருமையாகக் கருதியவர்கள் நம் தமிழர்கள். இதனை,*

**“முன்னொன்று தமக்காற்ற முயன்றவர் இறுதிக்கண்**
**பின்னொன்று பெயர்தாற்றும் பீடுடையாளர்”[23]**

*என்ற வரிகள் எடுத்துரைக்கின்றது.*

**அடைக்கலம் தரும் பண்பு**

*தன்னை அடைந்தாரைக் காத்தல் சிறந்த அறமாகப்; போற்றப்படுகிறது. தலைவனைக் காப்பாக அடைந்த தலைவியைப் பிரியாது வாழ்தல் வேண்டும் என்பதை*

**“போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை”[24]**

*என்ற பாடல் வரி குறிப்பிடுகின்றது. பொருளீட்டி வாழ விரும்புவோர் தம்மை அடைக்கலம் புகுந்தாரைக் காக்க வேண்டும் என்பது அறநெறிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இத்தகு நெறியைத் தலைவர் மறந்தாரோ என்று தலைவியிடம் தோழி அறம் உரைக்கிறாள். இதனை*

**“இன்னா செய்து மினிது தலை யளிப்பினும்**
**நின்வரைப் பினளென் தோழி”[25]**

*என்ற பாடல் வரிகளால் அறியமுடிகிறது.*

**இரக்கப் பண்பு**

*சங்க காலத் தமிழர்கள் இரக்கப் பண்பு கொண்டவர்களாக வாழ்ந்தனர். வள்ளல் பாரி இறந்தபோது அவனது மக்களைக் கபிலர் ஆதரித்ததை,*

**“……………………………..தேருடன்**
**முல்லைக்கு ஈத்த செல்ல நல்லிசை**
**படுமணி யானைப் பறம்பின் கோமான்**
**நெடுமாப் பாரி மகளிர்: யானே**
**தந்தை தோழன்: இவர் என் மகளிர்**
**அந்தணன், புலவன் கொண்டு வந்தனனே”[26]**

*என்ற பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.*

*மன்னர்கள் பகை நாட்டைமுற்றுகையிடும் போது, அந்நாட்டிலுள்ள ஆனினம், பார்ப்பன மக்கள், பெண்டிர், பிணி உடையவர், புதல்வரைப் பெறாதோர் முதலியோரைப் பாதுகாவலான இடத்திற்குச் செல்லுமாறு எச்சரிக்கை செய்யும் இரக்கவுணர்வு மிக்கவர்களாக விளங்கியதை,*

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணி"[27]

*என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது.*

**பசிபோக்கும் பண்பு**

*மனித வாழ்வின் இயக்கமே உணவு தேடுதல் நோக்கத்திலேயே அமைகின்றது. பசியினால் உணவு தேடி அலைபவரின் பசியினைப் போக்கும் அதியமானின் பண்பினை புறநானூற்றுப் பாடலொன்று எடுத்தியம்புகின்றது. இதனை,*

"சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே!
பெரியகட் பெறினே,
யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே!
சிறுசோற்றானும் நுனிபல கலத்தன் மன்னே!
பெருஞ்சோற்றாலும் நனிபல கலத்தனன்; மன்னே!
என்பொடி தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே!"[28]

*என்ற பாடல் வரிகளால் உணரலாம்.*

**பிறருக்காக வாழும் பண்பு**

*சங்கத் தமிழர் பிறருக்காக வாழும் பண்பினை உடையராக இருந்துள்ளனர். இந்திரர்க்குரிய அமுதம் கிடைப்பதாயினும் தமக்கு இனியது எனக்கருதி உண்ணமாட்டார்கள். தனக்கென வாழாமல் பிறருக்காக வாழுகின்றவர்களே உலகத்தில் பொருத்தமான தகுதியுடையவர்களே ஆவார். புகழ் என்றால் உயிரையும் பெறுவதாயினும் மேற்கொள்ளார். இவ்வாறு*

*பிறருக்காக வாழும் உண்மையான இயல்புடையவர்களால் தான் உலகம் சிறப்புற்று வாழ்கிறது. இதனை,*

**“உண்டால் அம்ம, இவ்வுலகம்: இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும், இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்**
**துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ் எனின், உயிருங்கொள்ளலர்; அயர்விலர்;**
**அன்னமாட்சி அனையராகித்**
**தனக்கென முயலா நோன் தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மையனே”[29]**

*என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.*

### பிறர் நலம் பேணும் பண்பு

*சங்க இலக்கியத் தோழி தலைவியைக் காணவரும் தலைவனிடத்தில் விரைவில் தலைவியைத் திருமணம் செய்து கொள் என்று கூறுவதுடன் தனக்கும் தலைவிக்கும் உள்ள உயரிய நட்பை*

**“யாமே பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்**
**இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே”[30]**

*என்ற கூறுவதன் வாயிலாகப் பிறர் வாழ்வு வீணாகக் கூடாது எனக் கருதும் தோழியின் உயரிய நட்பு மனிதப் பண்பின் வெளிப்பாடாக அமைகின்றது.*

### பிறர் துயர் போக்கும் பண்பு

*சங்க காலத் தமிழர் இல்லறத்திலும் காதல் இன்பத்திலும்; பிறர் துயர் துடைத்தலையே மேன்மையாகக் கருதி வாழ்ந்தனர். இவ்விதமான மனிதப் பண்பு அக்காலத் தமிழரிடையே மிகுந்து காணப்பட்டன. இவற்றை,*

**“அறம் தலைப்பிரியாது ஒழுகலும், சிறந்த**
**கேளிர் கேடுபல உளன்றலும், நாளும்**
**வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்”[31]**

**"செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்கு**
**உறுமிடத்து உவக்கும் உதவி ஆண்மையும்**
**இல்லிருந்து அமைவோர்க்கு இல்"[32]**

*என்ற பாடல் வரிகளால் அறியலாம்.*

**நல்லதையே செய்யும் பண்பு**

*சங்ககால மக்களிடத்து நல்லது செய்தல் வேண்டும் எனும் கருத்து வலியுறுத்தப்பட்டது. ஏனெனில் நன்மை, தீமை, நோய்தல், தனிதல் இவை பிறரால் வருவதில்லை. அவை நம்முடைய நல்வினை, தீவினைக்கு ஏற்ப அமைகிறது. எனவே, நல்லவையே செய்யவேண்டுமென வலியுறுத்தப்பட்டதை*

**"தீதும் நன்றும் பிறர்தர வாரர்**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே"[33]**

*என்ற பாடலால் தெளியலாம்.*

**நல்லுரை பகரும் பண்பு**

*மக்களுக்கு மட்டுமின்றி ஆட்சி நடத்துகின்ற ஆட்சியாளர் களுக்கும் புலவர் ஒருவர் நல்லுரை பகர்வதைப் புறநானூற்றுப் பாடலொன்று குறிப்பிடுகின்றது. உலக உயிர்களைக் காப்பது சுரக்கின்ற நீரும், விளைகின்ற நெல்லும் மட்டும் அல்ல. பரந்த இவ்வுலகம் வேந்தனின் முறையான காவற்சிறப்பாலும் நிலை பெறுகின்றது. ஆகவே, ஆட்சி நடத்துகின்றவனே உண்மையான, உலக உயிர்களைக் காப்பன் ஆவான். அதற்கேற்ப உலக மக்களைப் பேணிகாப்பதையே கடமையாக மேற்கொண்டான்.*

**"நெல்லும் உயிர் அன்றே: நீரும்; உயிர் அன்றே**
**மன்னர் உயிர்த்த மலர் தலை உலகம்"[34]**

என்ற மோசிகீரனாரின் பாடல் மூலம் நல்லுரை பகர்வது அக்காலத்தில் மனிதப் பண்பாகக் கருத்தப்பட்டது.

**நல்லோரின் நற்பண்பு**

மனிதனின் பசிப்பிணியைப் போக்கி உணவு அருளும் நற்பண்பினை புறநானூறு

**"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே"[35]**

என்ற புறநானூற்று பாடல் வரிகள் புலப்படுகின்றது.

**"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லோரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியும் ஆர் அதுவே"[36]**

என்ற வரிகள் நல்லாற்றுப் படுத்தும் நற்பண்பினையும் வெளிக்காட்டுகிறது.

**மக்கட்பேறு**

இல்லறம் என்பது அன்பும் அறனும் பூண்டு வாழ்வதாகும். அத்தகைய வாழ்வில் பெறும் பேறுகளுள் தலையாயது மக்கட் பேறு. ஏனெனில் இல்லறம் மாட்சிமையடைய மக்கட் சிறப்பு அவசியமாகும். பரத்தையிற் பிரிந்து வந்த காலத்தில் தலைவன் புதல்வனைத் தழுவ, தலைவியும் ஊடல் தணிந்து தலைவனது புறத்தைத் தழுவினாள். இக்காட்சி இனிமைப் பண்புடையதாய்ப பார்போருக்குத் தோன்றுகிறது. இதனை,

**"கண்டிசின்; பான! பண்பு உடைத்து, அம்ம**
**மாலை விரிந்த பசு வெண் நிலவின்;**
**குறுங் காற் கட்டில் நறு பூஞ் சேக்கை**
**பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇ**

**புதல்வன் தழீ இயினன் விறலவன்**
**புதல்வன் தாய் அவன் புறம் கவை இயினளே”[37]**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**அரசியற் பண்பு**

*சங்க காலத் தமிழகத்தில் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசர்களிடம் இருந்தது. ஏனெனில் சங்க கால மக்கள் நாட்டைப் பாதுகாக்கவும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒரு வலிமை மிக்க தலைவன் அவர்களுக்கு வேண்டியதாயிற்று. ஆகவேதான் அவர்கள் அரசியல் என்ற ஓர்; அமைப்பை உருவாக்கி அதன் தலைவனாக அரசனை அமர்த்தினர். இவ்வாறு ஆட்சியில் அமர்த்திய அரசனின் கடமையினைமோசிகீரனார்பாடல்ஒன்றுபுலப்படுத்துகின்றது. இதனை,*

**“நெல்லும் உயிர்அன்றே: நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே”[38]**

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

*மேலும், அரசின் கொற்றம் அறநெறி முதற்றே. அதனால் கோல் கோடாது, குணங்கொல்லாது, ஆண்மையும் சாயலும், வண்மையும் உடையையாகி, இல்லோர் கையற வேண்டும் என்பதே அரசியல் பண்பாடு ஆகுமென மருதன் இளநாகனார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகின்றார். இதனை,*

**“அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்**
**அதனால், நமரெனக் கோல் கோடாது**
**பிறர் எனக் குணங்கொல்லாது**
**ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மையும்**
**திங்கள் அன்ன தண்பெருஞ்சாயலும்**

**வானத்து அன்ன வண்மையும் மூன்றும்**
**உடையை ஆகி இல்லோர் கையற"[39]**

*என்ற பாடல் வரிகள் உறுதி செய்கின்றது.*

**போர்ப் பண்பு**

*சங்க இலக்கியங்களில் போர்கள் எல்லாம் அறத்தை வலியுறுத்துவன. மேலும் சங்கத் தமிழரிடையே போர் தவிர்க்க இயலாததாகவும், காலத்தின் கட்டாயத் தேவையான தாகவும் கருதப்பட்டது. போரானது என்றும் மாறாத உலகத்து இயற்கை. இதனை,*

**"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**
**புதுவது அன்று: இவ்வுலகத்து இயற்கை"[40]**

*என்னும் புறநானூற்று வரிகள் எடுத்துரைக்கின்றதன.*

*பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, அறத்தாறு நுவலும் பூட்கையும், யானை மேற் செல்லும் பெருமிதம் உடையவன் என்பதற்குப் போர்களின் உயர்ந்த பண்பை*

**"ஆவு மானியற பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்மம்பு கடிவிடுதும்"[41]**

*என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது.*

*சங்க காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்டியர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அப்போது அவர்களுக்குள் போர்கள் நிகழ்ந்ததை அறிய முடிகின்றது. அவ்வாறு போர் நிகழும்போது ஒத்த வலிமையுடையாரோடு போர் புரிதல், புறமுதுகிடுவாருடன் போர் செய்யாமை, பருவங்குறித்துப் போர் புரிதல், இரவில்*

*போரிடாமை போன்ற போர் நெறிகள் தவறாது பின்பற்றப் பட்டன.*

*சான்றாக வெண்ணிப் போரில் மார்பிலே தைத்தவேல் புறத்தை ஊடுருவிச் சென்றது. அப்புண்ணை புறப்புண்ணாக கருதி நாணி உயிர் விட்டான் பெருஞ்சேரலாதன். இதனை,*

**“கலிகொள் யாணர் வெண்பப் பறந்தலை**
**மிகப் புகழ் உலகம் எய்திப்**
**புறப்புண் நாணி, வடக்கிருந்தோனே”[42]**

*என்ற பாடல் வரிகளால் அறியலாம்.*

**முடிவுரை**

*சங்க காலத் தமிழர் அறப்பண்பு கொண்டு வாழ்ந்தனர் என்பதையும் காதற்பண்பு, இல்லறப் பண்பு முதலானவற்றில் சிறந்து விளங்கியதையும் வாழ்வியலறமாக காணமுடிகிறது. மனையறமே பேரறமாகக் கருதப்பட்டதையும் மனையறத்தால் இல்லறம் சிறந்ததையும் அறியமுடிகிறது.*

*சங்க காலத் தமிழரிடையே காணப்படட குடும்பப் பண்பு, விருந்தோம்பல், ஈகை, பகுத்துண்ணும் பண்பு, நல்லதையே செய்யும் பண்பு, நல்லுரை பகருதல், நல்லோருக்கான நற்பண்பு,நன்றியறிதல் ஆகியவற்றைச் சங்க இலக்கியத்தின் வாழ்வியலறமாக அறியமுடிகிறது. மேலும் பசித்துயர் போக்கல், இரக்கவுணர்வு, பிறருக்காக வாழுதல், பிறர்துயர் போக்குதல், மக்கட்பேறு, அரசியற் பண்பு, போர்ப் பண்பு முதலானவற்றையும் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைந்திடக் கூடாது என்னும் நோக்கிலும் மனித நேயம் அமைந்து கிடப்பதையும் வாழ்வியலறமாக உணரமுடிகிறது. இங்ஙன மாக சங்க இலக்கியத்தில் தமிழரிடையே நிலவிய வாழ்வியலறங்கள் பெரிதும் போற்றப்பட்டிருக்கின்றன.*

**அடிக்குறிப்புகள்**

*1. பரிபாடல், பா..5;78-81*

2. நற்றிணை, பா.172
3. குறுந்தொகை, பா.167
4. கலித்தொகை, பா.18;10-11
5. திருக்குறள்,46
6. குறுந்தொகை பா.322; 5-6
7. புறநானூறு,பா.314;1-2
8. அகநானூறு, பா.34:14-18
9. குறுந்தொகை, பா.118;2-4
10. குறிஞ்சிப்பாட்டு, பா.வரிகள்.201-207
11. நற்றிணை,பா.120;10-12
12. கலித்தொகை, பா.133:6
13. புறநானூறு, பா.189;7-8
14. மேலது,பா.204;1-4
15. அகநானூறு,பா.131;3-5
16. பா.134;1-4
17. மேலது,பா.150:18-24
18. புறநானூறு,பா.163:1-7
19. மேலது,பா.47:4-6
20. பதிற்றுப்பத்து, பா.38:15
21. புறநானூறு,பா.46
22. புறநானூறு. பா. 191
23. பா.34:4-5;
24. மேலது,பா.133;7;

25. குறுந்தொகை,பா.397:6-7;

26. புறநானூறு,பா. 201;2-7

27. புறநானூறு பா.9;1-2

28. மேலது,பா.235;1-6

29. மேலது,பா.182

30. அகநானூறு,பா.12;4-5;

31. மேலது,பா.173;1-3-

32. மேலது,பா.231;1-3

33. புறநானூறு, பா.192;2-5

34. மேலது,பா.192;2-5

35. மேலது,பா.18;18-21

36. மேலது,பா.196;6-9

37. குறுந்தொகை,பா.359

38. புறநானூறு,பா.186

39. மேலது,பா. 55;12-18

40. மேலது,பா. 76:1-2

41. மேலது,பா. -9-

42. மேலது,பா. 66;6-8

# தமிழர் பண்பாட்டு அடையாளங்களில் விருந்தோம்பல்
# HOSPITALITY IN TAMIL CULTURAL IDENTITY

**முனைவர் க. செந்தில்குமார்,**
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை (முதுகலை)
விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார் நாடார் கல்லூரி,
விருதுநகர் -626001.
மின்னஞ்சல்: senfolkphd@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*"மருந்தே ஆயினும் விருந்தோடுண்" என்கிறார் ஔவையார் அதாவது நாம் உண்கின்ற உணவை புதிதாய் வருகின்றவர் களுக்கும் கொடுத்து உபசரிக்கும் பண்பு தமிழர்களுக்குரிய தாகும்." இட்டு கெட்டவர் யாரும் இல்லை" என்று கூறுவார்கள். அந்தளவிற்கு தானமும் தர்மமும் தலைகாக்கும் என்பது மரபு அதன் வாயிலாகவே ஈகை பண்பு, அடுத்தவர்க்கு உணவளிக்கும் உயரிய மாண்பு தமிழர்களிடம் காணப்படுகிறது. சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், திருமந்திரம், அகத்தியம், திருக்குறள் என பல நூல்கள் விருந்தோம்பலை பற்றி அழகாக கூறுகின்றன. இக்கட்டுரையில் பண்டைத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு அவற்றின் பெருமைகள் இன்றைய நிலை போன்றவற்றை காணலாம்.*

**சிறப்புச் சொற்கள்**

*தமிழ், தமிழர், தமிழர் பண்பாடு, பண்பாட்டு அடையாளம், விருந்தோம்பல்.*

**Abstract**

*"Even if it is medicine, it is said to be hospitality," says Olavayiar, meaning that the quality of serving food to new-*

*comers is inherent to Tamils. They say, "No one is despicable." This reflects that both generosity and righteousness are protected by tradition, and through this, the virtue of giving to others is prominently seen among Tamils. Classical literature, Tholkappiyam, Tirumandiram, Agathiyam, Tirukkural, and many other texts beautifully articulate the concept of hospitality. In this article, one can observe the characteristics of the ancient Tamils' hospitality, its greatness, and its current state.*

*Keywords: Tamil, Tamils, Tamil Culture, Cultural Identity, Hospitality.*

**பண்பாடு விளக்கம்**

'ஆங்கிலத்தில் வழங்கும் culture என்ற சொல்லுக்கு இணையாக தமிழில் பண்பாடு என்ற சொல் ஆளப்படுகிறது. இச்சொல்லை இப் பொருளில் முதலில் பயன்படுத்தியவர் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் ஆவார். 'பண்படு' என்ற சொல்லிலிருந்து இச்சொல் தோற்றம் பெற்றது என்பர். பயிர் செய்வதற்கு ஏற்றவாறு நிலத்தை பக்குவப்படுத்துதல் பண்படுத்துதல் எனப்படும். அது போல் உள்ளத்தை பக்குவப்படுத்துவதற்கு பண்பாடு என்று பெயர் என நூல்கள் விளக்கம் தருகிறது.

'பண்பாடு குறித்து தமிழறிஞர் தெ.பொ மீனாட்சி சுந்தரனார் கூறும் விளக்கம் ஈண்டு சிந்திக்க தக்கது பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ள பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுடையவனாகவும் நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடு இல்லாதவனை காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பல பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்த பண்பாடு என்பது குறிக்கும்.[1]

### தமிழர்களின் பண்பாடு

தமிழர்களின் பண்பாட்டு கூறுகள், (காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, கற்புடமை, உலக ஒருமைப்பாடு) இலக்கியங்கள் போன்றவை காலத்தின் கண்ணாடி என கூறப்படுகிறது. பாவாணர் கூறுவது போல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. முன்னது 'அகக்கூறு' பின்னது 'புறக்கூறு'. நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடு முண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது. தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது.

தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, அரசு, அமைச்சர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை நமக்குக் காட்டி நிற்கின்றன. விளைகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவதுபோல மக்கள் தம் வாழ்க்கையினை நெறிப் படுத்துவதே பண்பாடாகும். தமிழர் பண்பாடும் அத்தகையதே. அதாவது "அறம், பொருள், இன்பம், வீடு" என்பவற்றை பின்பற்றி வாழ்வதே வாழ்க்கை பண்பாடாகும். "அழுக்காறு அவா வெகுழி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என தமிழ்ப் பண்பாடு இதனை அறம் சார்ந்தது என்ற செய்தியை வள்ளுவர் இந்த உலகுக்கே எடுத்து காட்டுகிறார்

### பண்டைத் தமிழர்களும் விருந்தோம்பலும்

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"[2]**

அதாவது நம் வீடு தேடி வருகின்ற விருந்தாளிகளை நண்பர்களை உறவினர்களை மகிழ்வோடு இருகரம் கூப்பி வரவேற்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். விருந்தினர்களை உபசரிப்பது பெரும்பாக்கியம் என்கிறார். விருந்தோம்பல்

இல்லாதோரை மடைமையுடையோர் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இதனை

**"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கள் உண்டு"[3]**

என்கிறார். அந்தளவிற்கு விருந்தோம்பலை தமது பாக்கியமாக கருதியவர்கள் தமிழர்கள். மேலும் சங்க இலக்கியங்களிலும் எட்டுத்தொகை நூல்களான அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் விருந்தோம்பலின் சிறப்பு தொடர்பாக அதிகம் பேசப்படுகிறது.

தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உண்டி முதலியவைகளை அளித்து மிக்க அன்போடும், ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது இல்வாழ்வார்க்குரிய தலைசிறந்த பண்பாடாகப் பழந்தமிழகம் போற்றுகிறது. இதனைத்தான் தொல்காப்பியம் 'விருந்து புறந்தருதல்' என மனைவிக்குரிய மாண்புகளில் ஒன்றாக கூறுகிறது. இவ்விருந்தோம்பலை புறநானூறு பல இடங்களில் சிறப்பித்து பாடுகிறது.

உறவினரும் நண்பருமின்றி புதிதாய் வருபவரையே 'விருந்தினர்' என்று தமிழ் மக்கள் கருதினர். புறநானூற்றிலும் 'வருநர்க்கு வரையா' 'வருவிருந்தயறும்' முதலிய சொற்றொடர்கள் விருந்தினர் என்பவர் புதியவர் என்பதை உணர்த்துகின்றன. இல்வாழ்க்கையுடைய மகளிர்க்கு விருந்தோம்பி வாழ்வதே சிறப்புடையதாகக் கருதப்பட்டது. 'விரும்பினள்' 'மனயோள்' 'விரும்பி' போன்ற சொற்றொடர்கள் இல்வாழ்க்கையை மேற்கொண்ட மகளிர் முகமலர்ச்சியுடன் விருப்பத்தோடு விருந்தினரை வரவேற்று உபசரித்தனர் என்பதைச் சுட்டுவதாக அமைந்துள்ளன.

இல்லறத்தார் விருந்தோம்பலிருத்தல் மண வாழ்க்கைக்குக் குற்றமாகக் கருதப்பட்டது. வரும் விருந்தினருக்கு சுவையான உணவளித்து விருந்தோம்புவது பழியற்ற வாழ்க்கை என்பதை,

**'வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை'[4]**

என்ற அடியால் 'ஊன் பொதி பசுங்குடையார்' என்ற புலவர் அறிவுறுத்துகிறார்.

போரில் இறந்துபட்ட வீரனுக்கு அவன் பெயர் பொறித்த நடுகல் நடுவது பழங்காலத் தமிழ் மரபு. அவ்வீரனைத் தெய்வமாகக் கருதி அந்நடுகல்லை வழிபடுவதும் அக்கால மரபு வேந்தனுடன் வீரன் ஒருவன் போருக்குச் சென்றிருந்தான். அவன் மனைவி விருந்தினர்கள் வீட்டிற்கு வர வேண்டும் அவர்களை உபசரிக்க வேண்டும் என்று நடுகல்லைத் தொழுது வழிபட்டாள் விருந்தோம்பலாகிய அறத்தைச் செய்தால் தன் கணவன் வெற்றியுடன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை யோடு அவள் நடுகல்லை வழிபட்டாள் என்பது இதனின்றும் அறியலாம். விருந்தோம்பலாகிய அறம் எத்துணைச் சிறப்புடையதாகப் போற்றப்பட்டது என்பதை இது உணர்த்துகிறது.

போருக்குச் சென்றிருந்த வீரன் ஒருவனின் மனைவி தனக்குரிய அறத்தை வீட்டின் கண்ணிருந்து செய்து வந்தால் அப்பொழுது அவள் தன் வீட்டிற்கு விருந்தினராக வந்த பாணனிடம் பொழுதும் மறைந்தது என்னிடம் இருப்பது பழைய முயல் கறியாக இருந்தாலும் தருகிறேன் அதனை உண்டு இங்கே இருந்து செல்க என்று உபசரிக்கிறாள்.

**முயல்சுட்ட வாயினுந் தருகுவேம் புகுதந்**
**தீங்கிருந் தீமோ முதுவாய்ப் பாண[5]**

அது போல் மற்றொரு பாடலில் ஒரு வீரனுடைய மனைவி விருந்தினராக வந்த பாணருக்கும் அப்பாணர்களுடன் வந்த மற்றவர்களுக்கும் விருந்தளிக்கச் சிறந்த உணவுப் பொருட்கள் இல்லை இருப்பினும் மடுக்கரையில் சிறுவர்கள் பிடித்துக் கொண்டு வந்த உடும்பினது தசையைப் பெய்து சமைக்கப்பட்ட தயிரோடு கூடிய கூழைக் கொடுத்து உன்பிக்கின்றாள்.

**வேட்டச் சிறாஅர் சேண் புலம் படராது,**
**படப்பைக் கொண்ட குறுந் தாள் உடும்பின்**
**விழுக்கு நிணம் பெய்த தயிர்க் கண் விதவை,**
**யாணர் நல்லவை பாணரொடு, ஒராங்கு**
**வரு விருந்து அயரும் விருப்பினள்[6]**

*விருந்தாற்றுவற்கு ஒரு பொருளும் இல்லை என்றாலும் தினைக்கதிரில் விதைக்காக விடப்பட்டவற்றைக் கொண்டு வந்து குற்றி உணவாக்கித் தந்தனர். அச்செயலில் அவர்கள் சிறிதும் தவறவில்லை*

**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்**
**குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ விலள்; தன்னூர்**
**வேட்டக் குடிதொறுங் கூட்டு[7]**

*வருபவர்களின் மனவிருப்பத்தை இல்லறத்துப் பெண்கள் தம்மால் இயன்றளவு அவர்களுக்கு உணவளித்துத் தன் வீட்டில் தங்கிச் செல்லுமாறு கூறும் பண்புள்ளங் கொண்டவர்களாக இருந்தனர்.*

*இராமனும் சீதையும் நாட்டை விட்டனர், காட்டையடைந் தனர். அங்கே சீதை இராவணனால் சிறையெடுக்கப்பட்டாள். இலங்கையை அடைந்தாள். இராமன் காட்டில் தனித்து வருந்தினான். இலங்கையில் இருக்கும் சீதையின் கவலைக்கோ ஓர் எல்லையில்லை. அவள் கவலை சென்றது எவ்விதத்தில்? “காட்டில் நாம் இருந்த குடிசைக்குப் பல துறவிகள் விருந்தாக வருவார்களே, அவர்களின் நிலை என்ன? அவர்கட்குச் சமைத்துப் பரிமாறுபவர் யாவர்? அங்கிருந்து அவர்க்குத் தொண்டு செய்வதற்கும் முடியாமற் போனதே. அவ்விருந் தினரைக் கண்டதும் உணவு முதலியவற்றால் மகிழ்வித்தற்கின்றி நம் கணவர் மனம் என்ன பாடுபடுகின்றதோ அங்கு” என்றெல்லாம் பல எண்ணிக் கவலை அடைந்தாள். இதனை,*

**"அருந்து மெல்லடகு யாரிடம் அருந்துமோ என்றழுங்கும்**
**விருந்து கண்டபோது என்னுறு மோஎன விம்மும்**
**உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென மயங்கும்**
**இருந்த மாநிலம் செல்லரித்[8]**

என்னும் கம்பரின் உருக்கமான பாடலால் அறியலாம். தமிழ்ப் பண்பாட்டில் ஊறி வளர்ந்து வாழ்ந்த கம்பர், சீதையின் வாயிலாக விருந்தோம்பியதை வற்புறுத்தியதில் வியப் பொன்றும் இல்லையன்றோ? என்பதை அறியலாம்.

**விருந்தினர்களுக்கு பரிசு பொருள் அளித்தல்**

இல்வாழ்க்கையே மேற்கொண்டோர் வரும் விருந்தினர் களுக்கு சுவை மிகுந்த உணவளித்து விருந்தோம்பியதோடு அவர்களுக்குப் பரிசு பொருளும் தந்து உதவும் பண்பாடு பெற்றிருந்தனர் என்பதைப் புறநானூறு உணர்த்துகிறது. இல்லறத்தை மேற்கொண்டோர் தம் இல்லங்களில் வந்து அறுசுவை உணவு உண்ணப் பலரையும் அழைப்பர் சங்கை நுண்ணிதாக அறுத்தாற் போன்று தூய வெண்ணிறமான அரிசியால் ஆக்கிய சோற்றையும், நெய்யால் சமைத்த கறியையும் முதிர்ந்த தயிரால் அமைத்த துவையலையும் உண்ண விரைந்து வாருங்கள் வந்து உண்பவர்களுக்கு அணிகலன்களும் தருவோம் என்று இராசமாபுரத்து ஒரு பக்கத்தே கேட்கும் என சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் பாடுகிறார்.

இல்லறத்திற்கு உயிர் ஆகிய விருந்தோம்பலின் அந்நகர மக்கள் கொண்டிருந்த ஆர்வம் இதிலிருந்து புலன் ஆகிறது. விருந்தினர்களுக்கு தாங்கள் அளிக்க விரும்பும் சுவையான உணவு வகைகளை கூறியது மட்டுமின்றி தங்கள் இல்லத்தில் வந்து விருந்து உண்டால் விலை உயர்ந்த அணிகலன்களை பரிசாக தருவதாக அவர்கள் கூறுவதை புறநானூற்றில் காணும் இப்பண்பாடு தமிழகத்தில் இடைக்காலம் வரை நிலவியது என்பது உணர்த்துகிறது. குதிரை மலைக்கு

தலைவனாகிய 'பிட்டங் கொன்றான்' புதிதாக விளைந்த திணை அரிசி, மரையாவின் பாலை கொண்டு உலையிட்டு சுவைபட சமைத்து அகன்ற வாழை இலையில் உணவிட்டு பல விருந்தினர்களோடும் பகுத்துண்ணுவான் என்று கருவூர் கந்தப்பிள்ளை சாத்தனார் பாடுகிறார். இதனால் பழந்தமிழர் வாழை இலையில் விருந்தினர்களுக்கு உணவு படைத்தனர் என்பது தெரிகிறது.

**ஐவகை நில மக்களின் உணவு உபசரிப்பு முறை**

'விருந்தோம்பலில் பழந்தமிழரின் ஒருமித்த பண்பு விளங்க நாம் சங்க இலக்கியத்தில் பல பாடல்களைக் காணலாம். நன்னனிடம் பரிசு பெற கருதி தம் சுற்றத்துடன் சென்ற பாணன், நெடுந்தூரம் பயணம் செய்கிறான். பசி மிகுதியால் மிகவும் களைத்துப் போய் வரும் அக்கூட்டத்தினர் கானவர் வாழும் ஊரை அடைகின்றனர். இதை காணும் கானவன் ஒருவன் அவர்களை அன்புடன் வரவேற்கிறான்.

அவர்களின் களைப்பு நீங்கும் படியாக இனிமையான மொழிகளைக் கூறி நெய்யில் வெந்த ஊண் பொறியலுடன் தினைச்சொற்றை உண்ணும் படி செய்தான். தம் சொந்த வீட்டில் அவர்கள் இருப்பதைப் போல கானவனும் அவனது குடும்பமும் அவர்களுடன் இயல்பாகப் பேசி உறவாடினர். இரவு அங்கேயே தங்கி செல்லும்படியும் கூறினர்.

மறுநாள் காலையில் பல பொருள்களுடன் மூங்கில் குழாயில் தேன் கலந்து செய்யப்பட்ட தெளிவான கள்ளை அவர்களுக்கு வழங்கிப் பின், முதல் நாள் வேட்டையில் கிடைத்த கடமான், பன்றி, உடும்பு ஆகியவற்றின் ஊனை, மூங்கில் அரிசியும் சேர்த்துக் காடெல்லாம் மனம் பரவும் படி ஆக்கிய சூட்டினை குறுமகளானவள் அவர்களுக்கு படைத்து மகிழ்ந்தால் பாடணும் அவள் சுற்றமும் மனம் நெகிழ்ந்து நன்றி கூறி அக்கானாவரிடம் விடை பெற்றுத் தம் பயணத்தை மேற்கொண்டனர்.

*விருந்தோம்பும் பண்பில் சிறந்த கானவர் வாழும் பல குன்றுகளைக்கடந்து, வளம் சிறந்த முல்லை நிலத்தையும், மருத நிலத்தையும் அப்பாணர் கூட்டம் அடைகிறது.*

*முல்லை நில மக்களிடம் நன்னனைக் காணச் செல்கிறோம் என்று சொன்ன அளவிலேயே அவர்களை அன்புடன் வரவேற்றுத் தம் இல்லத்திற்கு அழைத்துச் செல்கின்றாள், ஆயற்குலப் பெண்ணொருத்தி. இரவு பொழுது ஆனதால், மூங்கில் அரிசியால் ஆக்கப்பட்ட சோற்றில் மேட்டு நிலத்தில் விளைந்த அரிசியைத் தூவி அவரை விதை கொண்டு சமைக்கப்பட்ட புளியங்கூழினை அவர்களுக்கு உண்ணக் கொடுத்தாள்.*

*ஆநிரை மேய்த்து வந்த வீட்டுத் தலைவனும் அவர்கள் வருகைக்கு தன் மகிழ்ச்சியை தெரிவித்தார். பொழுது விடிந்த பின் வெள்ளாட்டுக்கறியுடன் சமைத்த ஊன் அரிசிச் சோற்றின் நடுவில் நெய் ஊற்றி அவர்களை உண்ணச் செய்து அவர்களை அனுப்பி வைத்தனர் அந்த ஆயர் குல மக்கள்.*

*அடுத்து, அவர்கள் மருதநில மக்களாலும் அன்போடு வரவேற்பைப் பெற்றனர். அங்கு வயல்களில் எருதுகளை விரட்டும் உழவர்கள் பாடும் மங்கலப் பாட்டிற்கு ஏற்பத் தன் யாழில் மருதப்பண்ணைப் பாடி மகிழ்வித்தனர். அங்கும் அரிசியுடன் கலந்து சமைக்கப்பட்ட ஊண்சோற்றை அளித்து மகிழ்ந்தனர். மருத நிலத்து உழவர் மக்கள் இவ்வாறு வேறுபாடு இன்றித் தமிழகமெங்கும் விருந்தோம்பும் சிறந்த பண்பாடு நிலவியதை மலைபடுகடாம் என்ற பத்துப்பாட்டின் பாடல் ஒன்று விரிவாக எடுத்துரைக்கிறது'.*[9]

**இல்லறம்**

*ஆணும், பெண்ணும் இணைந்து திருமணம் செய்து வாழ்வது எதற்காக? பிள்ளைபேற்றிற்காகவா? இல்லை! தன்னிடத்து வரும் விருந்தினர்களை உபசரிக்கவே என்பதை உணர வேண்டும்.*

**"இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"[10]**

*எனும் குறள் வழி, இல்லற வாழ்க்கையின் உயிர் துடிப்பாக விளங்குவது விருந்தோம்பலே என வள்ளுவர் கூறுகிறார். கோவலன், கண்ணகியைப் பிரிந்து பல ஆண்டுகள் மாதவியுடன் சேர்ந்து இருந்தான். மாதவியிடம் இருந்து பிரிந்து மீண்டும் கோவலன் கண்ணகியிடம் வந்த போது, கண்ணகி அழுகிறாள். எதற்காக? பொன் போய் விட்டதே, பொருள் போய் விட்டதே, இளமை போய் விட்டதே என்று அழவில்லை. இத்தனை நாள் கோவலன் இல்லாமல் விருந்தோம்பல் போய்விட்டதே! என்று அழுகிறாள்.*

**"அறவோர்க்களித்தலும் அந்தணர்ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[11]**

*என்னும் பாடலடிகளின் வழி கண்ணகியின் அழுகைக்கான காரணத்தை அறியலாம். ஒரு ஆண் தனித்து இருந்தாலும், பெண் தனித்து இருந்தாலும் விருந்தினர் வரமாட்டார். ஆணும், பெண்ணும் சேர்ந்த இல்லறத்தாராக இருக்கும் போது மட்டுமே விருந்தினர் வருவர். இத்தகைய விருந்தினரைப் போற்றி வரவேற்று உபசரிப்பதே இல்லறத்தில் உள்ளவர்களின் தலையாய கடமை என்பதை தொல்காப்பியர்,*

**"கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்னகிழவோர் மாண்புகள்"[12]**

*எனும் நூற்பா வழி விளக்குகிறார். தம் இல்லத்திற்கு விருந்தினர் வரவேண்டும் என்ற எண்ணத்தையும் அவ்விருந் தினருக்கு இனிய உணவு அளிக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் கொண்டிருப்பர். அதனால் மீன் வேட்டைக்குச் சென்ற கணவர் விரைவில் திரும்பி வரவேண்டும் என்று*

*எதிர்நோக்கிக் காத்திருக்கும் செய்தியும் இரவில் விருந்தினர் வந்தாலும் மனைவியும் கணவனும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் வரவேற்று விருந்து படைக்கும் செய்தியும் நற்றிணையில் இடம் பெற்றுள்ளன.*

**"........................... மனையிலிருந்து**
**இருங்கழி துழவும் பனித்தலைப்பரதவர்**
**திண்திமில் விளக்கம் எண்ணும்"[13]**

**"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"[14]**

*சிறுபாணாற்றுப்படை அரசர்களின் கொடைச் சிறப்பைக் கூறுவதுடன் விருந்தோம்பல் பற்றிய செய்திகளையும் கூறுகின்றது. எயில்பட்டின பரதவப் பெண்கள் சூடான குழல் மீன் கறியையும், வேலூரில் இருக்கும் எயினர் குலப்பெண்கள் இனிய புளிக்கறி சேர்த்து சமைத்த சோற்றுடன் காட்டுப்பசு இறைச்சியையும், ஆமூரைச் சார்ந்த உழவர்களின் தங்கைகள், குற்றிச் சமைத்த சோற்றுக் கட்டியுடன் பிளந்த காலுடைய நண்டுக்கறியையும் விருந்தோம்பலுக்குப் பயன்படுத்துவர் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது.*

**'எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**
**ஆமான் நாட்டின் அமைவரப் பெறுகுவீர்'[15]**

**சுவைப்பு மான் அரிசி அமலை வெண்சோறு**
**சுவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்[16]**

*விருந்தோம்பலின் முக்கியத்துவத்தைக் கூறுவதுடன் ஒவ்வொரு ஊரிலும் என்ன வகையான உணவுகள் விருந்துக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதையும் சிறுபாணாற்றுப்படை சுட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு சங்க இலக்கிய காலம் முதல் இல்லறத்தில் உள்ள மகளிர்கள் விருந்து உபசரிப்பில் ஈடுபட்டனர் என்பதை அறிய முடிகிறது.*

**விருந்தோம்பல் பண்பு**

*தமிழர்களின் வாழ்வில் மிக உயரிய பண்பாடுகளில் விருந்தோம்பல் என்பதே இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய பண்பாட்டினைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நம் விருந்தோம்பல் பண்பாட்டினை அறியமுடிகிறது. விருந்தோம்பலில் தமிழர்கள் தலை சிறந்தவர்கள் தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் தமிழர்களின் இச்சிறந்த பண்பைக் காணலாம். இல்லறத்திலே வாழ்வோர்க்குரிய கடமைகளில் "விருந்துபுரத்தல்" என்பதைச் சிறந்த கடமையாக அறநூல்கள் குறிக்கின்றன. இந்த அறநூல்களின் முறையையே பண்டைத்தமிழர்கள் பின்பற்றி வந்தனர். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் நினைக்கின்றனர். ஆனால் உறவினர் வேறு விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களையே விருந்தினர் என்று குறிப்பிடுவர். உதவி தேடி வந்தவர்களையே விருந்தினராக ஏற்றுக் கொண்டு உபசரித்து வந்தனர். ஒரு இனத்தவரின் சிறந்த பண்பாட்டை விளக்குவது அவர்களுடைய விருந்தோம்பும் குணமேயாகும். இவற்றை நற்றிணையில்,*

**"வரையாத்தாரம் வருவிருந்து அயரும்**
**தன்குடி வாழ்நர் அம்குடிச்சீறூர்"[17]**

*என்ற நற்றிணைப் பாடலில் உணவுப் பண்டங்களை வரும் விருந்தினர்களுக்குக் கொடுத்து பின்பு தாங்களும் உண்டு வந்துள்ளனர். புறநானூற்றில் புறம் சார்ந்த இலக்கியங்களில் வீரம் ஆட்சித்திறன் இவற்றை மட்டும் நம் தமிழ்ப்புலவர்கள் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல் பண்பாடு, விருந்து போன்ற செய்திகளையும் குறிப்பிட்டுள்ளனர்.*

**"…………………………..யாணாத்தாகியரிநர்**
**கீழ்படைக்கொண்டவாளையுமுழவர்**
**படைமிளிர்ற்திட்டயாமையுமறைநர்**
**கருபிற்கொண்டதேனும்பெருந்துறை**

**நீர்த்தருமகளிர்குற்றகுவளையுமும்**
**வன்புலக்கேளிர்க்குவருவிருந்தயரும்**
**பென்புலவைப்பினன்னாட்டுப்பொருந"[18]**

*நாள்தோறும் குறையாத உழைப்பையும் வருவாயையும் உடைய உழவர்கள் கொண்டு வந்த ஆமை, கரும்பிலிருந்து எடுத்த தேனையும் பெண்டிர் எடுத்து வந்து குவளை போன்ற வற்றை வன்புலத்திலிருந்து வந்த விருந்தினர்க்கு விரும்பிக் கொடுத்துள்ளனர் என்ற செய்தி விருந்தின் உபசரிப்பை தெளிவாக உணரமுடிகின்றது.*

**விருந்தினரைப் போற்றும் முறை**

*நம்மை நாடி வரும் விருந்தினரை மென்மையான சொல்லைக் கூறியும், உள்ளம் கலந்து உறவாடியும், தங்குவதற்கு வசதியான இடமளித்தும், ஆடை அணிகலன்கள் முதலியவற்றையும் அளிக்க வேண்டும். இவ்வாறு விருந்தினரை உபசரிப்பவர்களைத் தேவர்கள் தம்விருந்தினராக ஏற்றுக் கொள்வார்கள் என, ஏலாதி பண்டையத் தமிழரின் விருந்தோம்பல் முறையைத் தெரிவிக்கிறது*

**"இன்சொல், அளாவல், இடம், இனிது ஊண்யாவர்க்கும்**
**வன்சொல்களைந்து வகுப்பானேல் – மென்சொல்**
**முருந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினாய்! நாளும்**
**விருந்து ஏற்போர்விண்ணோர் விரைந்து"[19]**

*மேலும், இவையே அன்றி விருந்தினரை வரவேற்கும் முறையினை, விவேகசிந்தாமணி என்னும் நூல்,*

**"விருந்தினனாக ஒருவன் வந்துஎதிரின்**
**வியத்தல் நல்மொழி இனிதுஉரைத்தல்**
**திருந்துற நோக்கல் வருகென உரைத்தல்**
**எழுதல் முன் மகிழ்வன செப்பல்**
**பொருந்து மற்றவன் தன் அருகுற இருத்தல்**
**போம் எனின் பின் செல்வதாதல்**
**பரிந்து நல்முகமன் வழங்கல் இவ்வொன்பான்**
**ஒழுக்கமும் வழிபடும் பண்பே"[20]**

என்னும் பாடலின் வழி, தன் இல்லறத்திற்கு வரும் விருந்தினரை மெச்சுதலும், அவனிடத்து இனிமையான மொழி பேசுதலும், முகமலர்ச்சி கொண்டு நோக்குதலும், வருக என வரவேற்றலும், மரியாதை நிமித்தம் எழுந்து நிற்பதும், அவன் மகிழும்படியான செய்திகளைக் கூறுதலும் வந்து சேர்ந்த அவனது அருகிலேயே அமர்வதும், விடை பெற்றுச் செல்லும் போது நேசமுற்று பின் சென்று, மகிழ்வான முகத்துடன் அவனை வழியனுப்புதல் என ஒன்பது வித முறைகளில் ஒருவன் விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்று கூறுகிறது.

விருந்தினர்கள் விடைப்பெற்றுச் செல்லும் போது, அவர்கள் பின்னே, ஏழடி நடந்து சென்று அவர்களை வழியனுப்பும் முறை தமிழரிடையே நிலவிய பண்டை மரபு ஆகும். இம்மரபை, கரிகாலன், தன்னை நாடி வந்த பொருநர்களை வரவேற்று உபசரித்து, அவர்கள் விடைபெறும் போது ஏழடிதூரம் நடந்து சென்று வழியனுப்பினான் என்பதை,

**"காவின்ஏழுஅடிப் பின் சென்று"**[21]

மேற்கண்ட பாடலடி விளக்குகிறது.

### விருந்து இடும் முறை

விருந்தோம்பலில் உபசரிக்கும் பாங்கே முதன்மையானது. முகம் மலர்ந்து உபசரிக்கும் போது, விருந்துப்பொருள் உப்பில்லாதக் கூழாக இருந்தாலும் சிறப்பாக இருக்கும் என்பதை விவேகசிந்தாமணி வெளிபடுத்துகிறது ஒருவனது உடல், பசியை அதிகரிக்குமே தவிர, பசியைத் தீர்க்காது. இதனை,

**ஒப்புடன் முகம் வரந்தே**
**உபசரித்துண்மைப் பேசி**
**உப்பில்லாக் கூழ் திட்டாலும்**
**உண்பதே அமிர்தமாகும்**
**முப்பழமொடு பாலன்னம்**

**முகங்கடுத் திடுவாராயின்**
**கப்பிய பசியினோடு**
**கடும்பசி ஆகுத்தானே”[22]**

*என்னும் பாடலடி உணர்த்துகிறது.மேலும், ஒருவன் பரிமாறு கின்ற உணவானது புளித்துப் போன குழம்பு, தவிடு, கூழ், புழுக்கள் பற்றிய மாவு, அரைக்கீரையின் வேர், கெட்டியாய் இல்லாத தயிர், பக்குவம் தவறிய சருக்கரைப்பாகு, கிளறிய களி, நன்றாகத் தீட்டப்படாத அரிசியில் பொங்கி இடப்பட்ட சோறு உப்பு போடப்படாத நீராகரம் ஆகிய இவையே ஆயினும், இவ்வுணவானது அன்புடன் பரிமாறப்பட்டதாக இருக்க, அப்படிப்பட்ட உணவைச் சாப்பிட்டால் எவ்விடத் திலும் அது அருஞ்சுவை உடையதாய் இருக்கும் என்கிறது.*

*இதற்கு மாறாக பக்குவப்பட்ட தேன்பாகு, பசுநெய், பருப்புவகைகள், முப்பழவர்க்கங்கள், பால்சாத வகைகள், தாளிக்கப்பட்ட கறி வகைகள், பலகாரவிதங்கள் போன்ற வற்றுடன் சுண்டக்காய்ச்சப்பட்ட திரட்டுப் பால், சருக்கரைப் பொங்கல் முதலியவற்றுடன் உணவு படைத்தாலும், அன்போடு இடப்படாத அந்த உணவால் திருப்தி உண்டாவ தில்லை என்பதையும் விவேகசிந்தாமணி விளக்குகிறது.*

**“கெட்டசாறு தவிடு கஞ்சி**
**கிருமி உண்ட மாஅரைக்**
**கீரைவேர் தெளித்த மோர்மு**
**றிந்த பாகுகிண்டுமா**
**இட்டசோறு கொழியல் உப்பி**
**டாதபுற்கை ஆயினும்**
**எங்கும் அன்பதாகநுங்க**
**இன்பமாயி ருக்குமே**
**பட்டபாத பசுவின் நெய்ப**
**ருப்பு முக்கனிக்குழாம்**
**பானிதங்கள் தாளிதங்கள்**
**பண்ணிகார வகையுடன்**
**அட்ட பால கு ழம்புகன்னல்**

**அமுத மோடும்உதவினும்**
**அன்பனோடளித்தி டாத**
**அசனம் என்ன அசனமே”[23]**

*என்னும் பாடலடி உணர்த்துகிறது. எனவே எத்தகைய உணவனை இட்டாலும் அதனை அன்பினோடு இடுதல் வேண்டும் என்பதே பழந்தமிழரின் விருந்தோம்பல் கொள்கை யாகும்.*

*வீட்டில் ஒன்றும் இல்லை. உணவு தண்ணீரே! அதுவும் ஒரு நாளைக்கு ஒரு குடத்திற்கு மேல் மறு குடத்திற்கு வழியில்லை; இந்நெருக்கடியான நேரத்தில் சுற்றத்தினர் வந்து சூழ்ந்துவிட்டனர். சுற்றத்தார் என்றால் ஒருவரல்லார்; இருவ ரல்லார்; கடல் நீரும் போதா அளவில் பலர் கூடிவிட்டனர். அஞ்ஞான்று, பெண் தன் முழுத் திறமையையும் பயன்படுத்த வேண்டும். இது பற்றியன்றோ,*

**“குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்**
**கடல்நீர் அறஉண்ணும் கேளிர் வரினும்**
**கடனீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி**
**மாதர் மனைமாட்சி யாள்”[24]**

*என நாலடியாரும் முழங்குகின்றது. இக்காலத்தில் மகளிர் விருந்தினரை வரவேற்று ஓம்புதலைப் பாவேந்தர் பாரதிதாசனும் இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் உள்ள குடும்பங்கள் பல்கலைக்கழகங்களாக திகழ வேண்டும் என்னும் உயர்நோக்குடன் திருக்குறளின் விளக்கமாக குடும்ப விளக்கு என்னும் காப்பியத்தை இயற்றினார். தமிழ் மொழி இன ஆர்வம் கொண்ட கவிஞர் தமிழர்கள் தங்கள் தனிப்பெரும் பண்பாடாக போற்றிய விருந்தோம்பலை இரண்டாம் பகுதியில் அமைந்துள்ளார்.*

**பொன்துலங்குமேனி**
**புதுமெருகுகொள்ளமேனி**
**அன்றலர்ந்தசெந்தா**

**மரையாக-நன்றே**
**வரவேற்பாள்'**[25]

என விருந்தின் பெருமையை வெளிப்படுத்துகிறார்.

**முடிவுரை**

சங்கத்தமிழர் விருந்தோம்பலை அறமாகப் போற்றியுள்ளனர். தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தான் மட்டும் இல்லறம் நடத்தாமல், அவ்இல்லறம் நடத்த தவறியவர்களுக்கு ஈதல் எனும் கோட்பாட்டைக் கொண்டு தன்னால் இயன்ற மட்டும் முறையாக விருந்தோம்பல் செய்து சங்க மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தியுள்ளனர்.

மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட எப்படி வாழக் கூடாது என்று வாழ்வியலை கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும், உயர்வான எண்ணங்களையும் சமூகம் எனும் மணற்பரப்பில் விதைத்துச் சென்றிருக்கிறது என்று தானே அர்த்தம். பண்பட்ட மண்ணில்தான் செடிகளும் கொடிகளும் துளிர்விடும். அதுபோல இந்தச் சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல பண்பாடு இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் இத்தரணிக்குக் கற்று கொடுத்து இருக்கிறது. நாடாண்ட மன்னன் முதல் குடிசை வாழும் சாதாரண குடிமகன் வரை குலம் காக்கும் பண்பாட்டை கட்டிக் காத்து பார் போற்ற வாழ்ந்த இனம் தமிழினம் இது வரலாற்றுப் பதிவு. இலக்கியங்கள் தொடங்கி இன்றைய இணையம் வரைக்கும் தமிழரின் பண்பாடும் பதிவுகள் தன்னைக் காட்சிப்படுத்தி நிற்கிறது. நாகரீகம் என்ற பெயரில் தலைமுறை கடந்து விட்டாலும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு தளத்திலும் பின் தொடர்ந்து வருகிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடியும்.

**துணைநூற்பட்டியல்**


1. தமிழர் பண்பாடும் கலையும்', அழகப்பா பல்கலைக்கழகம் தொலைநிலைக் கல்வி இயக்ககம்
2. ச. கிருஷ்ணமுர்த்தி, 'திருக்குறள் பழைய உரை', தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை முதற் பதிப்பு – 1993
3. மேலது
4. ந.மு.வேங்கடசாமி நாட்டார், 'புறநானுறு' , சாரதா பதிப்பகம், சென்னை – 14
5. மேலது
6. மேலது
7. மேலது
8. சுந்தர காண்டம்', காட்சிப் படலம், திருமகள் நிலையம், சென்னை – 17
9. சு. தண்டபாணி, சங்க கால மக்கள் வாழ்க்கை, ஜெயலக்ஷ்மி பப்ளிகேஷன்மதுரை -03
10. ச. கிருஷ்ணமுர்த்தி, 'திருக்குறள் பழைய உரை', தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை முதற் பதிப்பு – 1993
11. வேங்கடசாமி நாட்டார்ந.மு.(உ.ஆ), 'சிலப்பதிகாரம் கௌராபதிப்பகம், சென்னை. பதி.2017.
12. இளம்பூரணர்(உ.ஆ),'தொல்காப்பியம்பொருளதிகாரம்', கௌராபதிப்பகம், சென்னை-14. பதி.2017.
13. குருநாதன் (ப.ஆ),'புறநானூறுமூலமும்உரையும்', வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்-4. பதி. 2003.
14. மேலது
15. முத்து.இராமமூர்த்தி, 'பத்துப்பாட்டு சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும்', சாரதா பதிப்பகம், சென்னை – 14

16. மேலது
17. கதிர்மகாதேவன் (உ.ஆ), 'நற்றிணை', முல்லை பதிப்பகம், சென்னை, பதி.2012.
18. குருநாதன் (ப.ஆ),'புறநானூறுமூலமும்உரையும்', வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர்-4. பதி. 2003.
19. ஆசிரியர்குழு(உரை), 'ஏலாதி', சாரதாபதிப்பகம், சென்னை,பதி.2018.
20. பத்மநாயன்(உரை), 'விவேகசிந்தாமணி', கற்பகம் புத்தகாலயம், சென்னை, பதி.2008.
21. கமலாமுருகன்(உரை), பொருநராற்றுப்படை சாரதாபதிப்பகம், சென்னை, பதி.2008.
22. பத்மநாயன்(உரை), விவேகசிந்தாமணி கற்பகம் புத்தகாலயம், சென்னை, பதி.2008.
23. மேலது
24. நாலடியார்' , புலியூர்க் கேசிகன், கௌராபதிப்பகம், சென்னை-14
25. பாரதிதாசன், 'குடும்ப விளக்கு', நர்மதா பதிப்பகம், பதி. 2006.

# சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு
# TAMILAR CULTURE IN SANGAM LITERATURE

**து.செல்வராணி,**
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,
ரோஸ்மேரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருநெல்வேலி – 7 தமிழ்நாடு, இந்தியா
மின்ன்ஞ்சல்: selvajohn1980@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் என்பது வாழ்விலிருந்து எழுவதும் வாழ்க்கைக்கானதும் ஆகும். எனவே இலக்கியங்களின் வழியாகத்தான் தமிழ்ச் சமூகத்தினுடைய வாழ்வியல் பண்பாட்டு வரபுகளையும், இன்ன பிற வரலாற்றையும் சமூகக் கட்டமைப்பையும் கூடச் செய்ய முடியும் . இதனால்தான் இலக்கியம் என்பது சமுதாய உருவாக்கத்தின் ஓர் அங்கமாகக் கருதப்படுகிறது. இலக்கிய உருவாக்கம் இல்லாத சமுதாய உருவாக்கம் முழுமையானதாகக் கருதப் படுவதில்லை. இத்தகைய இலக்கியங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் எல்லாக் காலக் கட்டங்களிலும் தொடர்ந்து தனக்கான பங்களிப்பைச் செய்து கொண்டே இருக்கின்றன. இதனால்தான் தமிழ்ச் சமூகத்தினுடைய இலக்கிய வரலாற்றையும் ஓரளவாவது மீட்டெடுக்க முடிந்துள்ளது. சங்க இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தினுடைய எல்லாக் கூறுகளையும் முழுமையாகப் பதிவு செய்திருக்கின்றது என்று அறுதியிட முடியாவிட்டாலும் கூட இவற்றில் சமூகம் சார்ந்த அத்துணை விசயங்களும் பிரதிபலிக்கவே செய்கின்றன. பழந்தமிழர் வாழ்வு நிலம் சார்ந்து அமைந்தது. ஐந்நில வாழ்வே ஐந்திணைகளாக மலர்ந்து மணம் பரப்பியது. இத்தகைய திணை சார்ந்த வாழ்வியலைத்தான். சங்க இலக்கியம்

*கட்டமைத்துள்ளது. வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் முடிவாகும். மக்கள் வாழ்வியலின் இன்றியமையா கூறுகளான உறைவிடம் உணவு, உடை, தொழில், விழாக்கள், தெய்வம், மொழி, அரசியலமைப்பு, விருந்தோம்பல், ஒற்றுமை உணர்வு போன்ற பண்பாட்டுக் கூறுகள் அமைகின்றன. சங்கத்தமிழரின் பண்பாட்டுக் கூறுகளுள் சிலவற்றை மையப்படுத்தியதாக இவ்வாய்வுரை அமைகின்றது.*

**திறவுச் சொற்கள்**

*இலக்கியம், தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு*

## Abstract

*Literature arises from life and is essential for life itself. Thus, it is through literature that we can intertwine the cultural values and historical narratives of the Tamil community and its social structures. For this reason, literature is considered a component of societal formation. A society without literary creation is not regarded as complete. Such literatures continuously contribute to all phases of Tamil society. This has allowed for a partial rescue of the literary history of the Tamil community. Although one cannot definitively state that classical literature has recorded all aspects of Tamil society, it indeed reflects significant societal elements. The ancient Tamils' way of life was deeply connected to the land. The way of life across the five regions flourished, spreading fragrance. It is this region-based way of life that classical literature has shaped. Historians conclude that the lifestyle and culture of the people are shaped by the nature of the land they inhabit. Essential cultural*

*aspects of people's livelihoods include shelter, food, clothing, employment, festivals, deities, language, political systems, hospitality, and a sense of unity. This discourse centers around some of the cultural elements of classical Tamils.*

*Keywords: Literature, Tamil Literature, Sangham Literature, Tamil Culture, Tamil History*

**சங்ககாலம்**

*சங்கம் என்பது அறிஞர்கள் பலர் கூடி உண்டாக்கும் அமைப்பு. தமிழ்ச் சான்றோர்கள் பழந்தமிழ் நாட்டில் சங்கம் அமைத்துத் தமிழ் மொழியை வளர்த்தனர் என்று களவியல் உரையே நமக்கு முதன்முதலில் முச்சங்கங்கள் பற்றிய தெளிவினைத் தருகின்றது.*

**சங்க இலக்கியப் பனுவல்கள்**

*சங்க காலத்தியப் பனுவல்களில் ஒன்றாகிய எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் நம் தமிழ்ச் சமூக மக்களுடைய வாழ்வியல் பண்பாட்டு மரபுசார் செயற்பாடுகளையும், அவர்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் சார்ந்த உள்ளத்து உணர்வுகளையும் அறிந்து கொள்ள உதவுகின்ற விதத்தில் சங்கப் பனுவல்கள் அனைத்தும் முன்வந்து நிற்கின்றன.*

**பண்பாடு விளக்கம்**

*"பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது... மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தைமுறைகளும், உருவாக்கிய வழக்கங்களும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்"[1].*

**உணவு**

*நிலம் சார்ந்து தம் வாழ்வை அமைத்துக் கொண்ட பழந்தமிழர் அந்நிலம் சார்ந்த உணவுப் பொருட்களையே வாழ்வியல் ஆதாரமாகக் கொண்டிருந்ததை சங்க இலக்கியம் காட்டுகின்றது.*

**"தேனினர் கிழங்கினர் ஊன் ஆர்வட்டியர்**
**சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கி!! (மலை 153-154)**

*எனவரும் மலைபடுகடாம் பாடலடிகள் குறிஞ்சி நிலத்தவரின் உணவு வகைகளான தேன், கிழங்கு, மாமிசம் போன்ற வற்றையும் சுட்டுவதாக அமைந்துள்ளது.*

*நம் படைப்பைத் தேன்மயங்கு பாலினம்" (ஐங் 203) எனவரும் பாடலடி தேன் முக்கிய உணவுப் பொருளாக இருந்ததைக் காட்டுகின்றது. தேன் சிறந்த மருந்துப் பொருளா கவும் விளங்கியது. உடும்பு, முயல் இவற்றோடு ஈயலும் உணவுப் பொருளாக சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட் டிருந்ததை நற்றினை முல்லைத் தினைப் பாடல் பின்வருமாறு பதிவு செய்கின்றது.*

**"உடும்பு கொலீஇ வரிநுணல் அகழ்ந்து**
**நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி**
**எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல**
**பல்வேறு பண்டத் தொடை மறந்து இல்லத்து**
**இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்**
**வன்புலக் காடு நாட்டதுவே" (நற்:59)**

*என்று உணவின் வகைகளையும் சிறப்புகளையும் இலக்கி யங்கள் வெளிப்படுத்துகின்றன.*

**ஆடை**

*சங்ககாலத்தில் ஆடையில் தூய்மையையும் மென்மையையும் விரும்பினர். குறிப்பாக பட்டாடைகள் சிறப்புடையதாகக் கருதப்பட்டன. நல்லியக்கோடனின் வள்ளல் தன்மையைச்*

*சுட்டவரும் கவிஞர் அவன் பரிசிலர்க்குக் கொடுக்கும் ஆடையானது மூங்கிலின் உட்பட்டையை உரித்தாலென்ன தன்மையது என்பதை,*

**"---------------------------- மாசு இல்**
**காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ"**

*என்று விளக்குகிறார். மேலும் (சிறுபாண் 235-236) பாம்புத்தோல் போன்ற மெலிதான ஆடைகள் வழக்கத்தில் இருந்தமையும் அவற்றில் பூத்தொழில் செய்யப்பட்டிருந்ததை யும்*

**"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து**
**அரவுரியன்ன அறுவை நல்கி – (பொருநர் 82-83)**

*எனவரும் பாடலடிகள் பதிவு செய்கின்றன.*

*புரவலர்களுக்கு இரவலர்களுக்கும் படடாடை அளித்து சிறப்பித்தமைக்குச் சங்க இலக்கியம் சான்றாக விளங்குகின்றது. இதனை,*

**"கொட்டை கரைய பட்டுடை நல்கி" (பொருநர் 155)**

**"ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்" (பெரும்பாணா 469)**

*ஆடைகள் மிக நுண்ணிய நூலினால் நெய்யப்பட்டிருந் தமையை மலைபடுகடாம் பின்வருமாறு சுட்டுகின்றது.*

**விருந்தோம்பல்**

*தமிழர்களுக்கே உரித்தான தலைசிறந்த பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். தமிழர்கள் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியுடன் அகமகிழ்ந்து வரவேற்று வயிறார உணவு படை மகிழும் உயர் பண்புடையவர்களாவர்.*

*பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தம்பாற் பரிசில் பெறுதற் பொருட்டு வருபர்வகளுக்கு வரையறையில்லாமல் தாம் வேண்டுமளவு உணவு விரும்பிக் கொடுத்ததைப் பாலைக் கௌதமனார் தம் பாடல் வழி விளக்குகிறார்.*

**“வருநர் வரையர் வார வேண்டி**
**விருந்துகண் மாறா துணீஇய பாசவர்**
**ஊனைத் தழித்த வானிணக்கொழுங்குறை**
**குய்யிடு தோறு மானா தார்ப்பக்**
**கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்**
**அடுமை யெழுந்த வடுநெய் யாவுதி**
**--------------------------------**
**நிலைபெறு கடவுளும் விழைதகப் பேணி” (பதிற்று., பா.எ.28-35)**

*என்றும் போற்றப்படுவது பண்டைத்தமிழரின் விருந்தோம்பல் பண்பு.*

*மலைகளில் வாழும் குறவர்கள் வரும் விருந்தினர்களை மகிழ்வுடன் வரவேற்று தாம் சமைத்த மாமிசத்தையும் தினை யரிசிச் சோற்றையும்; வழங்குவர். பலநாள் உறவுடையவர் போன்று புதியவர்களையும் ஏற்றுக்கொள்வர் என்பதையும் பின்வரும்,*

**“நும்இல் போல கேளாது கெழீஇ**
**சேட் புலம்புஅகல இனிய கூறி**
**பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு**
**குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்”**

*என்ற பாடலடிகளால் உணரலாம்.*

*மகளிர்தம் இல்லத்திற்கு வரும் விருந்தினரைத் தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லி அழைக்கச் சொல்லி, அவர்களுக்கு வேண்டுவன நல்கி உபசரித்து அனுப்பினர். இதனை மலைபடுகடாம் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.*

**“அகம்பலி உவகை ஆர்வமொடு அளைக,**
**மகமுறை தடுப்ப, மனைதொறும் பெறுகுவீர்” (மலை 184-185)**

*மேலும் விருந்தினரை வழியனுப்பும்போது அவர்கள் பின்னால் 7 அடி பின்சென்று வழியனுப்பும்முறை குறித்து (பொரு.166) பொருநாற்றுப்படை குறிப்பிடுகிறது. நன்னன்*

விருந்தோம்பலில் சிறந்தவன். தன்னை நாடி வந்தோரை முதல்நாள் உபசரித்தது போல எத்தனை நாள் தங்கியிருப்பினும் உபசரிக்கும் தன்மையாளன். கூத்தர் போன்றோருக்கு வெண்ணெல் அரிசியோடு கலந்த மாமிச உணவைக் கொடுத்து உண்ணச் செய்கிறான் என்பதை மலைபடுகடாம்,

**"தலைநாள் அண்ணபுகலொடு வழிசிறந்து**
**பலநாள் நிற்பினும் பெறுகுகிவிர் நில்லாது" (மலை 563-566)**

எடுத்துரைக்கின்றது. இவ்வாறு தமிழர்களின் உணவு முறையில் பண்பாட்டுக் கூறுகள் வாழ்வோடு இயைந்த நிலையிலே காட்சித்தருகின்றன.

**பிறர் நலம் பேணல்**

சங்க காலத்தில் மன்னர்கள் போரில் பெற்ற செல்வங்கள் வீரர்களுக்கும் புலவர்களுக்கும் வாரி வழங்கியதோடு பெருஞ்சோறு படைத்தும் மகிழ்ந்தனர்.

**"சிறியகட் பெறினே எமக்கீயம் மன்னே**
**பெரியகட் பெறினே**
**யாம் பாடத்தான் மகிழ்ந்து உண்ணும்**
**மன்னே" (புறம் 235:1-6)**

என்று தம்மை ஊட்டி மகிழும் அதியமானின் அன்புத் திறத்தைப் பாடுகிறார் ஔவையார். கானவன் அம்பெய்திக் கொணர்ந்த முள்ளம் பன்றியின் மாமிசத்தைக் கொடிச்சி, கிழங்கோடு சிறுகுடியினர் பலருக்கும் பகிர்ந்து அளித்தலை,

**கானவன் எய்த முளவு மான்கொழுங்குறை**
**தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு**
**காந்தன் அம் சிறுகுடிப் பகுக்கும் (நற்:8-10)**

என்று நற்றிணைப் பாடல் பதிவு செய்கின்றது. இத்தன்மையில் மதுவாயினும் மாமிசமாயினும் அனைவரும் ஒன்று கூடிப் பங்கிட்டு அகமகிழும் இயல்பினைப் பதிவு செய்கின்றது சங்க இலக்கியம்.

**கள்ளுண்ணுதல்**

*கள்ளுண்ணுதல் தீதென கருதப்பட்ட இடைக்கால கருத்து புறக்கணிக்கப்பட்டு இன்று நாகரீகத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படும் இப்பண்பு பண்டைத் தமிழரால் போற்றப்பட்டது என்பதை,*

**“உண்டோன தான் நறுங்கள்”** (புறம்:34)

*என்று இனிய கள்ளை அருந்தும் தலைவன் சுட்டப்படுகிறன்றான்.*

*மேலும் பெண்களும் மது அருந்தி மகிழ்ச்தமையை,*

**“சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே”** (புறம் 335)

*என்று ஔவையாரும் பாடுகின்றார்.*

**“துடியின் அடி பெயர்த்து தோள் அசைத்துத் தூக்கி”**
**அடு நறா மகிழ் தட்ப ஆடுவாள் தகைமையின்”** (பரி 21:19-20)

*என்று நடனமாடும் பெண்கள் மது அருந்தியமை/யைப் பரிபாடல் பாடல் வரிகள் காட்டுகின்றன. மது சங்க காலத்தில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் உணவாகவே கொள்ளப்பட்டது என்பதை,*

**“குறி இறைக் குரம்பைக் குரவர் மாக்கள்**
**வாங்கு அமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து**
**வேங்கை முன்றில் குரவை அயரும்”** (புறம் 129:1-3)

*எனவரும் முடமோசியார் பாடலும் விளக்குகின்றது. சங்க உணவுப் பொருட்களில் மகிழ்வினை கொடுப்பதற்காக உண்ணப்பட்ட கள்ளினை நாள்தோறும் அருந்தும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தமையையும் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன.*

**விழாக்கள்**

*‘‘விழாக்கள் என்பன மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டுச்சடங்குகளிலிருந்து தோன்றியனவாகவே உள்ளன. ஒரு*

*சமுதாயத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி, மறுமலர்ச்சி ஆகியவற்றை அச்சமுதாயம் காலங்காலமாகப் போற்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கும் விழாக்களின் வழி அறிய இயலும்''3.*

*சடங்குகளைப்போலவே விழாக்களும் மக்களின் வாழ்வில் மிகுந்த செல்வாக்கு உடையதாக இருக்கின்றன. மக்கள் தங்கள் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். மனித உறவுகளை வளர்க்க விழாக்கள் தேவைப்படுகின்றன. தமிழகத்தில் சங்ககால மக்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றி இப்பகுதி எடுத்துரைக்கவுள்ளது.*

**கார்த்திகை திருவிழா**

*தமிழர்கள் கொண்டாடிய விழாக்களில் முக்கிய இடத்தைப் பெறுகின்ற இவ்விழாவானது,அடிப்படையில் சமய விழாவாகப் பார்க்கப்படுகிறது. இவ்விழாவினை இன்றும் நாம் கடைபிடித்தும் வருகிறோம். இவ்விழாவானது கார்த்திகை மாதத்தில் நடைபெற்ற விழாவாகும். வீடுகளும் தெருக்களும் ஒளிவிளக்குகளால் அழகுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அதற்கு ஆதாரமாக அகநானூற்றுப் பாடல் ஒன்றும் நமக்கு சான்று பகர்கிறது.*

**"மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர, மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகுவிளக்குறுத்து, மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழாவுடன் அயர"** **(அகம் 141)**

**தை நீராட்டுவிழா**

*இத்தகைய நீராட்டு விழாவானது இளம்பெண்கள் தங்களுக்கு கணவனாக வரவேண்டிய ஆண்மகன் நற்பண்புடையவனாக இருக்க வேண்டும் என நோன்பிருப்பதாகும். இளம்பெண்கள் தங்களது தோழியர்களுடன் ஊரிலுள்ள*

குளத்தில் தைத் திங்களில நீராடி இவ்விழாவினைக் கொண் டாடினர் என்பதை சங்ககால நூலான ஐங்குறுநூறு எடுத்துக் காட்டுகிறது.

**“நறுவீ யைம்பான மகளி ராடும்**
**தைஇத் தண்கயம் போலப்**
**பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பே”** (ஐங்குறு :84)

மேலும் நற்றிணை, கலித்தொகை பாடல்களிலும் இச்சான்றுகள் கிடைப்பதன் மூலம் அக்காலத்தில் இவ்விழா வானது சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

**திருவோணம் விழா**

திருவோணம் விழா சங்ககாலத்தில் கொண்டாடப்பட்டுள்ள தாக பத்துப்பாடகு நூலான மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்விழாவானது தற்போது கேரளத்திலும், தமிழகத்திலும், மற்ற தென் மாநிலங்களிலும் ஆங்காங்கே கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவானது திருமாலுக்கு உரியதாகக் கருதப்படுகிறது.

**“கணங்கொள் அவுணர்க் கடந்தபொலந்தார்**
**மாயோன் மேய ஓண நன்னாள்”** (மதுரைகாஞ்சி – 591)

என்ற வரிகளானது கருமை நிறமுடைய திருமாலை குறிப்பிடு வதிலிருந்து ஓணம் விழா திருமாலுக்கு எடுக்கப்பட்டது தெளிவு.

**இளவேனில் விழா**

இளவேனில் காலமானது காமவேளுக்குரியதாகக் கருதப் படுகிறது. இவ்விழா பற்றி பரிபாடலில் காமன் கடவுளாகப் போற்றப்பட்டுள்ளது. மேலும் இவ்விழாவானது தொடர்ந்து நடைபெற்றும் வந்ததெனவும் தெரிகிறது. இதற்கு சான்றாக

**“காமவேள் அம்பின் தொழில் வீற்றிருந்த நகர்”**
(பரிபாடல் 18:26-27)

### இந்திர விழா

*இந்திரனைப் பற்றிய குறிப்புகளானது சங்க நூல்களில் சொற்ப அளவிலேயே நமக்கு கிடைக்கின்றன. இதற்கு சான்று தரும் விதமாக ஐங்குநுறூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வரியானது*

"இந்திர விழாவிற் பூவின் அன்ன" (ஐங்குறு 62)

*ஆகும். இவ்விழாவை பற்றிய செய்திகளை சங்ககாலத்திற் பின் எழுந்த நூலான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகியவற்றில் அரசு விழாவாக கொண்டாடப்பட்டிருப்பதால் இவ்விழா தொடர்ந்து நடைபெற்றிருத்தல் வேண்டும்.*

### பங்குனி விழா

*பங்குனி விழா சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூரில் கொண்டாடப்பட்டுள்ளது.*

"வென்று எறி முரசின் விறற் போர்ச் சோழர்
இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்
வருபுனல் நெரிதரும் இகுகரைப் பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்" (அகம் 137)

*இன்றும் பங்குனி விழா தமிழகத்தில் கொண்டாடப்படுகிறது.*

### நடுகல் வழிபாடு

*இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் முறையினைத் தொல்காப்பியர்,*

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்" (புறம்:5)

*என்று விளக்குவார்.*

*தொல்குடி மக்களின் வழிபாடு நடுகல் வழிபாடாகவும், வீரநிலை வழிபாடாகவும் விளங்குகிறது. போரில் இறந்த வீரரைத் தம் மரபைக் காக்கும், தெய்வமாகக் கருதி வழிபாடு*

*நடத்தினர். அதற்கு இறந்தவரின் பெயரைப் பொறித்து, வரலாற்றைப் பதிவு செய்தல், மயிற்பீலியை அணிவித்தல் போன்ற சடங்கு முறைகளைச் செய்துள்ளதாக அகநானூறு சான்று பகர்கின்றது.*

"பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகம்., 67:8-10)

*என்று தொல்குடி மக்களின் வழிபாடு, போரில் இறந்த மறவர்களின் நினைவாகக் கொண்டு நடுகல் வழிபாடு நிகழ்த்தியுள்ளனர்.*

**தமிழரின் நம்பிக்கைகள்**

*மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நம்பிக்கைகள் மிகப்பல. இந்த நம்பிக்கைகளே தனிமனித வாழ்வையும் ஒரு சமுதாய வாழ்வையும் நடத்திச் செல்வனவாக விளங்குகின்றன.*

*மனிதன் இயற்கையின்தாக்கத்திற்கு மிகுதியாக ஆட்பட்டிருந்த அறிவு வளர்ச்சியின் தொடக்க நிலையிலே, நம்பிக்கைகள் தோன்றின எனலாம்.*

*சனி கோள்களுள் ஒன்று. அதன் பார்வைக்கு ஆளாவோர் இன்னல்களுக்கு ஆளாவர். எனினும் சனியின் ஊர்தியான காக்கை கரைதலால் விருந்தினர் வருவர் என்ற நற்செய்தியை அறிவிப்பதாக நம்புகின்றனர்.*

*விருந்தினர் வருவர் என்று காக்கை கரைந்ததாகக் கூறும் குறுந்தொகைப் பாடலொன்றுள்ளது.*

"பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந்:210:5,6)

*தலைனுடன் தலைவி உடன் போக்காய்ச் சென்றுவிட்டாள் என்பதை அறிந்து வருந்தும் நற்றாய் தலைவனும் தலைவியும் திரும்பி வந்ததும் மணம் முடித்துப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறாள் காக்கை அதற்கு நல்நிமித்தமாக கரையும்படி*

வேண்டுகிறாள் அவ்வாறு கரைந்தால் பலிக்கடன் தந்து மகிழ்வுறுத்துவதாகவும் கூறுகிறாள்.

**“மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!**
**யன்புடை மரபினின் நின்கிளையொட ஆரப்**
**பச்சூன் பெய்த பைந்நிணைவல்சி**
**.........................................................**
**அஞ்சி லோதியை வரக்கரைந் தீமே” (ஐங்குறு., 391)**

காக்கை கரைவதை எள்ளக்கூடாது என நம்பினர். கூகை குழறுதல் நாட்டிற்கு வரும் அழிவை உணர்த்தும் தீய நிமித்தமாக நம்பியதாக இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

பல்லி ஒலித்தலை நிமித்தமாகக் கருதுதல் சங்ககாலம் தொட்டு இன்றுவரை தமிழ் மக்களிடம் இருக்கும் ஒரு வழக்கமாகும். சங்க இலக்கியத்தில் பல்லியின் ஒலி நன்னிமித்தமாகக் கூறப்படுகின்றது.

கண்கள் துடிப்பதை வைத்து நன்மை தீமை நிகழப்போவதை உணர்ந்தனர். பெண்களின் இடக்கண் துடிப்பின்

**“நுண் ஏர் புருவத்த கண்ணும் ஆடும்” (ஐங்குறு 218)**

அது நல்ல நிகழ்வின் அறிகுறியாகக் கருதப்பட்டது. பிறர் தற்செயலாகப் பேசிக்கொள்ளும் பேச்சினை வைத்துக் கணிப்பது ‘விரிச்சி’ எனப்பட்டது. பயணத்தின்போது இடையில் தற்செயலாக நிகழும் காட்சிகளைக் காண நேரும்போது, அந்நிகழ்வுகளைக் கொண்டு கணிப்பது நிமித்தங்கள் எனச் சுட்டப்படுகிறது. இதில் நல்நிமித்தமும் தீ நிமித்தமும் உண்டு.

### தமிழர் பண்பாடு

பழந்தமிழர் பண்பாடு மிக உயர்ந்தது. உலகமெல்லாம் பாராட்டிப் பின்பற்றக் கூடியது. தமிழ் மக்கள் உலகத்தை ஒன்றென்று கருதினர். உலகமக்களை ஒரே குலத்தவராக எண்ணினர். இத்தகைய உயர்ந்த பரந்த நோக்கம் தமிழர்களின்

ஒப்பற்ற பண்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனை,

**“யாதும் ஊரே, யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா;**
**நோதலும் தணிதலும் அவற்றோகரன்ன,**
**சாதலும் புதுவ கன்றே! வாழ்தல்**
**இனிதென என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்**
**இன்னாது என்றலும் இலமே;”** **(புறம் பா.எ.192)**

என்றவாறு அறியலாம். எல்லா ஊர்களும் எம்முடைய சொந்த ஊர்கள் எல்லா மக்களும் எம்முடைய உறவினர்கள். எம்முடைய நன்மையும் தீமையும் பிறரால் வருவன அல்ல. யாம் இன்புறுவதும் துன்புறுவதும் கூட அவைபோலத்தான். சாவு ஒரு அதிசயமன்று. ஆகையால் இவ்வுலக வாழ்வு இனிமையானது என்று மகிழ்வுறமாட்டோம். வெஞ்சினத்தால் இவ்வாழ்வு துன்பமுடையது என்று வெறுக்கவுமாட்டோம். இதுவே தமிழர்களின் தனித்த பண்பாட்டை விளக்கப் போதுமானதாகும்.

“தமிழ்ப் பண்பாடு முதன்மையானது. ஆரியர் வருமுன் எல்லாத் துறையிலும் தலைசிறந்த நாகரிகமும் பண்பாடும் உடையவராய் இருந்தனர் என்பது பாவணர் கூற்றாகும்” 4

**தமிழரின் வீரம்**

தமிழர்களின் ஒப்பற்ற வீரத்தைப் பற்றி உரைக்கும் பாடல்கள் பலவுண்டு. வீரம் என்றால் இளைத்தவர்களை இன்னலுக்கு ஆளாக்கித் தான்மட்டும் இன்புற்று வாழ்வதன்று. மற்றவர்களைக் காட்டிலும் தான் ஆற்றலுடையவன் என்பதை அறிவித்துக் கொள்ளுவதன்று. தான் கொண்ட கொள்கையிலே உறுதியுடன் நிற்றல் தான் செய்யத் தொடங்கிய செயல்களை அஞ்சாமல் முயற்சியுடன் செய்து முடித்தல். தன்மானத்திற்கு இழுக்கு வராமல் தன் செயலிலே வெற்றியடைதல், தன்னைக் கராணமின்றித் தாழ்த்திப் பேசுவோர் நாணும்படி அவர்

செருக்கைச் சிதைத்தல் இவை வீரத்தின் இயல்பு. இத்தகைய சிறந்த வீரம் உடையவர்களே இந்நாட்டுத் தமிழ்மன்னர்கள்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு ஒன்றே இவ்வுண்மையை விளக்கப் போதுமானதாகும். இவன் வீரத்திலே மிகுந்த வேந்தன் மட்டும் அன்று; செந்தமிழ்ப் புலவனாகவம் சிறந்திருந்தான் எடுத்துக்காட்டாக,

**"உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்**

**-----------------------------------------**

**-----------------------------------------**

**இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே"** **(புறம் ப.எண.72)**

என்ற பாடல் அமைகிறது. படைபலத்தால் இகழ்துரைத்த வேந்தர்களுடன் வீரப்போர் புரிவேன் அவர்கள் சேனைகள் சிதையத் தாக்குவேன். அவர்களுடைய முரசுகளுடன் அவர்களையும் சிறைபிடிப்பேன். இப்படிச் செய்யேனாயின் என் குடை நிழலிலே இருப்பவர்கள் கிராமங்கள் போய்த் தங்குவதற்கு வேறு இடங்காணாமல் எமது அரசன் கொடுங்கோலன் என்று என்னைத் தூற்றிடும் கொடியவனாவேன் என்று என்னைத் தூற்றிடும் கொடியவனாவேன். உலகம் உள்ளவரையிலும் மாறாத புகழுடைய மாங்குடி மருதனைத் தலைமையாகக் கொண்ட புலவர்கள் என்னுடைய நாடடைப் புகழ்ந்து பாடாமல் புறக்கணிப்பார்களாக. இருக்கின்றவர்களுக்கு எதையும் கொடுக்க முடியாத வறுமையையும் யான் எய்துவேனாக" என்ற பாடலால் நெடுஞ்செழியனின் வீரமும், நேர்மையும் புலவர்களுடைய பெருமையும் காணப்படுகின்றன.

**அறப்போர்**

தகுந்த காரணமின்றிப் பண்டைத்தமிழ் மன்னர்கள் போரிலே தலையிடமாட்டார்கள். தங்கள் குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் வேந்தர்களின் மேல் போர்

தொடுப்பார்கள் சேனைகளின் பெருக்கால் செருக்கடைந்து தங்களைப் பழிக்கும் மன்னர்கள் மேல் படையெடுப்பார்கள்.

அக்காலத்திலே போரால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தேற்படுவதில்லை. படைகளும் பண்டங்களும் தான் போர்க்களத்திலே பாழாகும். பொதுமக்களுக்கு அறிவித்த பின்னரே போர் செய்வதிலும் அவர்கள் அறநெறியைப் போற்றி வந்தனர் என்பதை,

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்,**
**எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என**
**அறத்தாறு நுவலும் பூட்கை, மறத்தின**
**கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்**
**எங்கோ, வாழிய குடுமி"** **(புறம்.,9)**

'பசுக்களே, பசுவின் தன்மையையுடைய பார்ப்பனர்களே, பெண்களே, மரபு நோய் உள்ளவர், இறந்த முன்னோருக்குக் கடன் செலுத்தும் குழந்தைப்பேறு இல்லாதவர், எமது அம்பை விரைவிலே விடப் போகிறோம். ஆகையால் உங்கள் உயிருக்குப் பாதுகாப்பான இடத்தைத் தேடிச் செல்லுங்கள். இவ்வாறு நெறியைக் கூறும் கொள்கையை உடையவன் நீ, சிறந்த வீரத்தையும் உடையவன் நீ, பகைவர்களைக் கொல்லும் யானையின் மீது பறந்து கொண்டிருக்கும் கொடி, வானத்திலே நிழலைச் செய்யும்படியான சிறப்புடைய எமது மன்னனே, நீ வாழ்க' என்று வாழ்த்துகிறார் ஆசிரியர். இதனையே,''அறநெறி பிறழாத போர்முறையை அரசர் கடைப்பிடித்தனர்''[2]. இரவில் போர் நிறுத்தம், எளியார், கருவியில்லார் முதலியோரைத் தாக்காமை, புறப்புண் நாணல் முதலிய போர் அறங்களைக் கடைப்பிடித்தனர். என்று தேவநேயப்பாவணர் கூறுகிறார்.

**ஒழுக்கம் தவறாமை**

ஒழுக்கத்திலிருந்து தவறி நடந்தால் தமக்குத் தீங்கு நேரிடும் என்பதை உணர்ந்து, அறிவுடையோர் அவ்வொழுக்கத்திலிருந்து எப்போதும் தவறமாட்டார்கள் என்பதை வள்ளுவர்,

"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து" (குறள்: 136)

என ஒழுக்கம் குறித்து விளக்கமளிக்கின்றார். பண்டைத் தமிழர்கள் நல்லொழுக்கத்தில் சிறந்து விளங்கியவர்கள் உயிரினும் சிறந்தது ஒழுக்கமே என்ற உண்மையை உணர்ந்திருந்தனர். அறநெறிக்கு மாறான செயல்களில்

**பொய்கூறாமை**

ஒருவன் தன் மனதில் பொய்யை நினைக்காமல் நடப்பவனாக இருந்தால் உலகத்தவர் மனதில் எப்போதும் நிலைத்திருப்பான்.

"வலம்படு வான்கழல் வயவர் பெரும
நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்
புறஞ்சொற் கேளாய் புரைதீர் ஒண்மைப்" (பதிற்ற., 70:11-13)

செல்வக் கடுங்கோ வாழியாதன் விளையாட்டாகவேனும் பொய் சொல்லாத வாய்மை உடையவன். பகைவர் புறத்தே தன்னைப் பழித்தார் என்று கூறினும், அதனைக் கேட்டுச் சினவாத குற்றமற்ற சிறந்த அறிவினையும் உடையவன் எனக் கபிலர் பொய் கூறாமை குறித்துத் தம் பாடல் வழி உணர்த்துகிறார்.

**இரந்தும் கற்றல்**

கற்றல் என்பது எல்லாக் காலங்களிலும் அனைத்து மக்களிடமும் மிக முக்கியமானதாகவே கருதப்படுகிறது.

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (தொல். நூற் 972: 28)

*கல்வி கற்பது என்பது, தொல்காப்பியம் முதல் உயர்ந்தோர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது என்பதைக் காலந்தோறும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. கல்வியைக் கற்பதில் சிலருக்குக் கட்டுப்பாடுகள் வைத்துள்ளமையை,*

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நின்றே" (புறம் பா.எ.183)

*என்ற புறநானூற்றுப்பாடல் மூலம் அறியலாம்.*

**பண்டமாற்று முறை**

*ஐவகை நிலங்களிலும் பண்டமாற்று முறை வழக்கத்தில் இருந்துள்ளது மிக உயர்ந்த பொருள்கைளப் பெறுவதற்கு மட்டுமே சங்ககால மக்கள் காசுகளைப் பயன்படுத்தியுள்ளனர். பண்டமாற்றுமுறை நடந்த காலத்தில் பொருள்களுக்குப் பதிலாக காசுகளும் பெற்றனர் என்பதைச் சங்கப் பாடல்கள் சான்று பகர்கின்றன.*

**குறிஞ்சித் திணையில் கலை**

*உலகம் முழுவதும் மொழித்தேவையின்றி மாந்தரின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவை கலைகளே. அவை முறையே குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என ஐந்திணைகளிலும் தமிழர்கள் கலைகள் பரவலாக எங்கும் பரந்து கிடந்துள்ளன. குறுந்தொகையில், திணைவாரிக் கலைகள் பரிவியிருந்ததைப் பற்றிக்காணலாம்.*

*குன்றக் குறவனது நிலத்தில் பொன்போன்று விளைந்த தினைக்கதிர்களை இறைவனுக்குப் பலிப்பொருளாக இட்டது என்பதை அறியாது. அதன் செழுமை கண்டு பறவைகள் உண்டன. தெய்வம் ஏறி ஆடுகின்ற வெறியாட்டு ஆடுமகள் போல விளங்கியது... என உவமேயத்துடன் உரைக்கின்றார் நக்கீரர்(குறுந்.பா.எ.105)*

**முல்லைத்திணையில் கலைகள்**

*யாழ்ப்பாணர்கள் படுமலைப் பண்ணிணை வாசிக்கும் இசையானது மேகத்து, எழுகின்ற சுரத்தைத் தன்கண் கொண்ட நல்ல ஓசை போலச் செவியி;ல் விழ, தோழி, தலைவன் தோளில் துஞ்சி இன்பம் தருவதால் வாழும் நாளாகக் கருதுகிறாள். தலைவி என்கிறாள்.*

*வேந்தர் புனையகத்து, அவரவர்க்குரிய பாணர்கள் உடனிருந்து தலைவன் தலைவியர்க்கு இன்பம் மிகுமாறு வாசிக்கம் மரபு அந்தநாளில் இருந்தது படுமலைப் பண் என்பது, பாலைப் பண் பன்னிரண்டுள் ஒன்று தத்தம் குரலைக் கொண்டு பாடப்படுவது. மேட்டு நிலத்தில் பெய்யும் மழை, படுமலைப்பண் போன்றதாக உவமமாகிப் பொருள் உரைத்தலும் கூடும். (குறுந்.பா.எ.323)*

**மருதத்திணையில் கலைகள்**

*பெரும்பதுமனாரின் பாடலில்,கழைக் கூத்தர்களின் மூங்கிலின்மேல் கட்டிய கயிற்றின்மேல் ஏறி நின்று ஆடும்போது கொட்டப்படும் பறைஒலி, ஆரியர்களின்கூத்து வகைக்குப் பயன்படுத்தப்படும் கருவி ஆகும். விலக்கு உறுப்புகள் பதினான்கனுள் ஒன்றாகிய சேதம் என்பது இருவகை என்றும், அதன் ஒருவகையே ஆரியக்கூத்து என்றும அடியார்க்கு நல்லார் கூறுவார். (குறுந்.பா.எ.31)*

*மாட்சிமை பொருந்திய தகுதியுடைய என் தலைவன் வீரர்கள் கூடி எடுக்கும் வில்விழாவின் போது, மகளிர் தத்தமக்குரிய மள்ளரைத் தழுவியாடுகின்ற துணங்கைக் கூத்தின் கண்ணும், இவையல்லாத பிற இடத்தும் தேடியும் காணக் கிடைத்திலேன் என்று ஆதி மந்தி கூறுவதைக் காணலாம்.*

*மகளிர் தமக்குரிய ஆடவரைத் தழுவி ஆடும் கூத்து 'துணங்கைக் கூத்து' எனப்படும். ஈண்டு பரத்தையரோடு ஆடும் கூத்து துணங்கை எனப்பட்டது.*

**நெய்தல் திணையில் கலைகள்**

*இயலும் தேரிணை உடைய கடறகரைப் பகுதித் தலைவனே, நெய்தல் மணற்பரப்பி வண்டல் பாவையைக் கண் துயிலச் செய்து, நீ இருக்கும் இடத்திற்கு வந்தேன். ஆரல் மீனை உண்ட நிறைவயிற்றுடைய நாரைகள் என் மகளாகிய வண்டல் பாவையின் நெற்றியினை மிதித்துச் செல்லும் பொழுது சாய்ந்தமையால், நானும் தலைவியும் செல்வதற்று அவளை என்னுடன் செல்லுமாறு நீயே ஏவுவாயாக எனத் தோழி தலைவனை நோக்கி உரைக்கின்றாள். இதில் வண்டற்பாவை செய்யும் கலையைப் பார்க்க முடிகிறது. (குறுந்.பா.எ.114)*

**பாலைத் திணையில் கலைகள்**

*ஒருக்கண் மாக்கிணையை இயக்குகின்ற தாளததையுடைய பாணர் முதலிய இரவலர்களைப் பாதுகாக்கின்ற அரசனின் அதலை என்னும் குன்றத்தை உடையவன் தலைவன் என்கிறது மோசிகீரனாரின் பாடல். கிணைப்பறையை வாசிக்கும் கலையை பாடல் மூலம் உணரமுடிகிறது. (குறுந்.பா.எ.59)*

**முடிவுரை**

*மனிதனை நல்வழியில் பண்படுத்தும் செயல்கள் அனைத்தும் பண்படாயிற்று. பண்டைத் தமிழர்கள் பண்பட்ட வாழ்வினை பண்பாடுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களைக் கொண்டு பண்பாடு, உணவு, ஆடை, விருந்தோம்பல், பிறர்நலம் பேணல், கள்ளுண்ணுதல், விழாக்கள், வழிபாடு, நம்பிக்கைகள், பண்டமாற்றுமுறை, கலைகள், கடவுள் நம்பிக்கை, அட்டில் சாலை போன்ற வைகளை அறிய முடிகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. *சீ.பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.150-152*
2. *ஞா.தேவநேயப் பாவணர், பழந்தமிழர் நாகரீகமும் பண்பாடும், ப.250*
3. *ஞா.தேவநேயப் பாவணர், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள், ப.323.*
4. *ஞா.தேவநேயப் பாவணர், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள், ப.323.*

# தொல்லியல் நோக்கில் சங்க இலக்கியம்
## (கீழடி அகழாய்வுச் சான்றுகள்)

# ARCHAEOLOGICAL PERSPECTIVES ON SANGAM LITERATURE
## (Kizhadi Excavation Evidence)

**முனைவர். தி.பாலசுப்பிரமணியன்**
கௌரவ விரிவுரையாளர்,
வரலாற்று துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630003.
மின்னஞ்சல்: balasubramanian834@gmail.com

**பேராசிரியர். வே.வெங்கட்ராமன்,**
மேனாள் கல்லூரி முதல்வர்,
வரலாற்று உயராய்வு துறை,
ராஜுஸ் கல்லூரி
இராஜபாளையம்

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியம் காலங்கடந்தும் பேசப்படும் ஆய்வுச் சாகரமாக விளங்குகின்றது. பண்டைத்தமிழரது வாழ்வியலும், தமிழக வரலாறும் பற்றி அறிந்துகொள்வதற்குரிய மூலாதாரங்களாக இவ்விலக்கியங்கள் உள்ளன. காலத்துக்குக் காலம் வெவ்வேறு சிந்தனைகள் முக்கியத்துவம் பெறுகின்ற போது அவற்றுக்கு அமைய சங்க இலக்கியம ஆராயப்பட்டு வந்திருப்பதைக்காணலாம். அண்மையில் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வு, சங்க இலக்கியங்களை தொல்லியல் நோக்கில் ஆராய்வதற்கான வலுவான சூழலை ஏற்படுத்தியுள்ளது. அதனடிப்படையிலேயே இவ்வாய்வு கீழடி அகழாய்வுச்சான்றுகளை முன்வைத்து சங்க இலக்கியங்களைத் தொல்லியல் நோக்கில் ஆராய்வதாக அமைகின்றது. இவ்வாய்வுக்கு சங்க இலக்கியங்களும் கீழடி அகழாய்வுச் சான்றுகளும் மூலாதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் பேசுகின்ற பண்டைத்தமிழர்களது வாழ்வியல் நடைமுறைகள் வெறும் கற்பனையானவை அல்ல என்றும் சங்க இலக்கியங்களின்*

*வாழும் சாட்சியாக கீழடி அகழாய்வுச் சான்றுகள் உள்ளன என்றும் இவ்வாய்வு நிறுவுகின்றது. சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ள நகர நாகரிக வாழ்வியலைச் சான்று படுத்துகின்ற பல்வேறு தொல்லியல் ஆதாரங்கள் கீழடியில் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை முன்னர் கூறப்பட்ட பல்வேறு கருத்தியல்களை மறுபரிசீலனைக்கு உட்படுத்து கின்றனவாகவும் விளங்குகின்றன. தமிழர்களின் எழுத்தறிவு காலம் கி.மு.6-ஆம் நூற்றாண்டுக்குரியதென கீழடியில் கிடைக்கப்பெற்ற பானையோடுகள உறுதிப்படுத்துகின்றன. நெசவுத்தொழிலுடன் தொடர்புடைய சான்றாதாரங்கள் தமிழகத்தில் நகர நாகரிகம் சிறந்து விளங்கியமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. இவ்வகையில் சங்க இலக்கியங்களை முன்னிறுத்திய பலமான ஆய்வுகள் இடம்பெறவேண்டியது அவசியமாகின்றது.*

**திறவுச் சொற்கள்**

*சங்க காலம், சங்க இலக்கியம், தொல்லியல், தமிழர் பண்பாடு, அகழ்வாய்வு*

## Abstract

*The Sangam literature continues to be regarded as a significant repository of knowledge through the ages. These literary works serve as primary resources for understanding the life of ancient Tamils and the history of Tamil Nadu. As various ideas gain importance over time, the study of Sangam literature has progressed accordingly. A recent archaeological study conducted at Keeladi has created a strong environment for examining Sangam literature from an archaeological perspective. Based on this, the study proposes to explore Sangam literature in the context of archaeological findings at Keeladi. Both the Sangam literature and the excavation evidence from Keeladi have been utilized as foun-*

*dational materials for this research. This research establishes that the life practices of the ancient Tamils, as articulated in Sangam literature, are not merely imaginary, and that the excavated evidence from Keeladi serves as a living testament to this. Various archaeological evidences validating the urban civilization described in Sangam literature have been found in Keeladi. These are also seen as subjecting the previously mentioned theories to re-evaluation. The presence of pottery shards from the 6th century BCE found in Keeladi confirms the literacy era of the Tamils. Artifacts related to weaving serve as examples of the flourishing urban civilization in Tamil Nadu. It is essential that more robust studies highlighting Sangam literature be undertaken in this regard.*

*Keywords: Sangam Period, Sangam Literature, Archaeology, Tamil Culture, Excavations*



**அறிமுகம்**

சங்க இலக்கியங்களிலே பண்டைத்தமிழரது வாழ்வியல் நடைமுறைகளும் பழந்தமிழகம் பற்றிய செய்திகளும் இடம்பெற்றிருப்பதனை காலத்துக்காலம் நடைபெற்று வருகின்ற அகழாய்வுகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. அதன்வழி, இந்திய மற்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் மேற்கொண்ட கீழடி அகழாய்வுச் சான்றுகளும்

அனைவர் நடுவிலும் புத்தெழுச்சியை ஏற்படுத்தியதுடன் அத்தொல்லியல் சான்றுகளைச் சங்க இலக்கியங்களுடன் தொடர்புபடுத்தி ஆராயக்கூடிய ஏதுநிலையினையும் வலுவாக ஏற்படுத்தியுள்ளன. இதற்கமையவே இவ்வாய்வு சங்க இலக்கியங்களில் இடம்பெற்றள்ள கீழடி அகழாய்வுச் சான்றுகளை எடுத்துக்கூறி சங்க இலக்கியங்களின் வாழும் சாட்சியாக கீழடி காணப்படுகின்றதென்பதை முன்நிறுத்துவதாக அமைகின்றது.

**கீழடி அகழாய்வு**

அண்மைக்காலமாக பரபரப்பாகப் பேசப்படும் முக்கிய பேசுபொருளாக மாறியிருப்பது கீழடி குறித்த அகழாய்வாகும் ஏலவே வெவ்வேறு காலங்களில் கொடுமணல், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், காவிரியாற்றுப்படுக்கை, அழகன்குளம், காஞ்சிபுரம், பொருந்தல் ஆறு, ஆதிச்சநல்லூர் முதலான பலவிடங்களில் அகழாய்வுகள் இடம்பெற்றுள்ளபோதிலும் பண்டைத்தமிழக வரலாறு, பண்பாடு. வாழ்க்கை முறை, இலக்கியம் என்பவற்றுடன் தொடர்புடைய நடைமுறையிலுள்ள கருதுகோள்கள் பலவற்றை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தும் தொல்லியல் ஆய்வாக கீழடி அமைவதே அதற்கான முக்கிய காரணமாகும்.

கீழடி என்ற இடம் மதுரையிலிருந்து 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இடமாகும். ஆற்றுப்படுக்கைகளை அடிப்படையாகக் கொண்டே நாகரிகங்கள் தோன்றின என்ற வரலாற்றாசிரியர் களின் கருத்துக்கமைய கீழடி நாகரிகமும் வையை ஆற்றினை அடிப்படையாகக்கொண்டே உருவாகியுள்ளமையை அறியமுடிகின்றது. சிந்துவெளி நாகரிகத்திற்குச் சற்றும் குறைவில்லாத ஒரு நகர நாகரிகமாக கீழடி விளங்கியதென்பதை அங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள் நிரூபிக்கின்றன.

செங்கல்கட்டுமானங்கள், மழைநீர் வடிவதற்காகக் கைகளால் அழுத்தி உருவாக்கிய பள்ளங்களுடன் கூடிய கூரையோடுகள், சுடுமண் உறைகிணறுகள், அணிகலன்கள், சுடுமண் ஆட்டக்காய்கள், விளையாட்டுச்சில்லுகள்;, கல்மணிகள், மனிதர்கள், விலங்குகளைக் குறிக்கும் சுடுமண்ணாலான உருவங்கள், தந்தச்சீப்பு, மட்பாண்டங்கள், தமிழ் எழுத்துகளோடும் குறியீடுகளோடும் கூடிய பானையோடுகள், விலங்குகளின் எலும்புகள், பானை வனைவதற்கான சக்கரங்கள், நெசவுத்தொழில் செய்வதற்கான செம்பு, ஊசி, மண்குடுவைகள், சாயத்தொட்டி எனப் பல்வேறு சான்றாதாரங்கள் இதுவரையான கீழடி ஆய்வுகள் மூலம் கிடைக்கப்பெற்றுமைமயை தமிழக தொல்லியல் ஆய்வுத்துறையினரின் தரவுகள் மூலம் அறியமுடிகின்றது.

**சங்க இலக்கியமும் கீழடி அகழாய்வும்**

சங்க இலக்கியங்கள் தரும் செய்திகள் வெறும் கற்பனை யானவை அல்ல என்பதை கீழடி அகழாய்;வின் மூலம் பெறப்பட்ட பல்வேறு சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. அவற்றை பின்வருமாறு நோக்கமுடியும்.

**நெசவுத்தொழிலுடன் தொடர்புடைய சான்றுகள்**




கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் நெசவுத்தொழில் சிறப்பாக விளங்கியமையை

*புலப்படுத்துகின்றன. மத்திய தொல்லியல் துறையினர் கீழடியில் முன்னர் மேற்கொண்ட அகழாய்வின்போது சாயப்பட்டறையொன்று இருந்தமையைக் கண்டுபிடித்திருந்த நிலையில் தற்போதைய நான்காம் கட்ட அகழாய்வுப் பணியில் கீழடியில் நெசவுத்தொழில் இடம்பெற்றமையை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. நூல்களை நூற்கப்பயன்படும் தக்களிகள், துணியில் உருவ வடிவங்களைக் கீறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கூராக்கப்பட்ட எலும்புத் துண்டாலான கூரிய முனைகளைக் கொண்ட கருவிகள், செம்பினாலான ஊசிகள், தறியில் தொங்கவிடப்படும் கருங்கல், சுடுமண் என்பவற்றால் செய்யப்பட்ட குண்டு, சாயங்களைச் சேகரிப்பதற்கான வெவ்வேறு அளவிலான மட்பாண்டங்கள் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டன. நெசவுத்தொழிலை மேம்பட்ட வகையில் முன்னெடுப்பதற்குரிய தொழிற்கட்டமைப்பு காணப்பட்டமைக்கு இவை சான்று பகருகின்றன.*

*சங்க இலக்கியங்களிலும் நெசவுத்தொழில் பற்றிய சான்றுகள் இடம்பெற்றுள்ளன. மதுரைக்காஞ்சியில் பல்வேறு தொழில்களை மேற்கொள்கின்றவர்களுடன் ஒரு பிரிவினராக கம்மியர் எனப்படும் நெசவுத்தொழிலைமேற்கொள்வோரும் காணப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது.*

**ஒண்பல்**

**குறியவும் நெடியவும் மடிதரூஉ விரித்து**

**சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ,**

**நால்வேறு தெருவினும் கால்உற நிற்றர (மதுரை.519-522)**

*பெரியோர் மட்டுமன்றி சிறியோரும் திரண்டு நெசவுத் தொழிலை மேற்கொண்டமை 'சிறியரும் பெரியரும் கம்மியர் குழீஇ' என்ற தொடர் மூலம் அறிய இயலும். ஆற்றுப்படை நூல்களில் இரவலர்களுக்கு வள்ளல்களாலும் மன்னர்களாலும் நூலால் நெய்யப்பட்ட ஆடைகள்*

*வழங்கப்பட்டுள்ளன. தொண்டைமான் இளந்திரையன் தன்னிடம் வந்த பாணனுக்கு அப்பாணனின் அணிந்திருந்த கந்தலான ஆடையை அகற்றிவிட்டு நூலாய் நெய்யப்பட்ட ஆடையை வழங்கியமையை பின்வரும் வரிகள் கூறுகின்றன.*

**பாசி அன்ன சிதர்வை நீக்கி,**
**ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம் (பெரு.468-469)**

*நூலால் நெய்யப்பட்ட ஆடை வழக்கத்தில் இருந்துள்ளமைக்கு இப்பாடல் சான்றாக அமைகின்றது. சிறுபாணாற்றப்படையிலும் இரவலர்க்கு ஆடை வழங்கியமை கூறப்பட்டுள்ளது. (சிறு.235-236) இவ்வகையில் கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட நெசவுத் தொழில் மேற்கொள்ளப்பட்ட மையுடன் தொடர்புடைய சான்றுகள் சங்க இலக்கியங்களிலும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளமையை குறிப்பிடத்தக்கது.*

**அணிகலன்கள்**




*கீழடியில் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் தங்கத்திலான ஏழு ஆபரணத்துண்டுகள், செம்பு அணிகலன்கள், மதிப்பு மிக்க மணிகள், 4000-க்கும் மேற்பட்ட கல்மணிகள், கண்ணாடி மணிகள், சுடு மண்ணாலான மணிகள், சங்கு வளையல்கள், தந்தவளையல்கள், பளிங்கு கற்களினாலான மணிகள் ஆகிய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு தொல்லியல் முறையினரின் கருத்தினரின் கருத்து பல்வேறுபட்ட அணிகலன்களைத் தயாரிக்கக்கூடிய அளவிற்கான தொழில்நுட்ப ஆற்றல் பெற்ற சமூகமாக கீழடி சமூகம் விளங்கியுள்ளமையை புலப்படுத்துகின்றது.*

*சங்க இலக்கியங்களிலும் இப்பொருள்கள் பற்றிய சான்றுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. சங்கினை அறுத்து வளையலாகச் செய்யப்பட்ட அணிகலனே சங்கு வளையலாகும். மதுரைக்காஞ்சியில் சங்கினை அறுத்து வளையல் போன்றன செய்வோர் பற்றிக்கூறப்பட்டுள்ளது.*

**கோடுபோழ் கடைநரும் திருமணி குயினரும் (மதுரை.511)**

*கடல்மூலம் வரும் பிறநாட்டுப் பொருட்கள் அனைத்துடனும் மணிகள், முத்துக்கள், பொன்னையும் வாங்கிக்கொண்டு பிறநாடுகளிலிருந்துவரும் பொருள்களையும் விற்போர் வாழ்ந்திடும் வணிகர் தெரு, மதுரையில் காணப்பட்டமை பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது.*

**நீரவும் பிறவும்**
**பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு,**
**எத்துப் பண்ணியம் பகர்நரும் (மதுரை.504-506)**

*இதன்படி மதுரையில் பெரிய வணிகர் தெரு காணப்பட்ட தென்பதும் அதனூடாக அதுவொரு நகர நாகரிகப் பண்பாட்டைக்கொண்டு விளங்கியதென்பதும் சங்ககால மக்கள் விலையுயர்ந்த பொருள்களை வாங்கி அணிகின்ற பண்பாட்டைப் பேணியுள்ளனர் என்பதும் பெறப்படுகின்றது. மதுரை மாநகரில் வாழ்ந்த செல்வப் பெண்டிர் நிலாமாடத்தி லிருந்து திருவிழாக்காட்சியைக் கண்டு களித்தமையை மதுரைக்காஞ்சி கூறுமிடத்து அப்பெண்டிர் செல்வ வளம்மிக்க பல்வேறுபட்ட ஆபரணங்களை அணிந்து அழகாகக் காணப்பட்டார்கள் என்கிறது (மதுரை.444-452). இதில் பெண்கள் பூவேலைப்பாடுகளையுடைய வளையல்களை அணிந்திருந்தமை கூறப்படுகின்றது. இதன்மூலம் பூவேலைப் பாடுகளை மேற்கொண்டு அணிகலன்களைச் செய்யக்கூடிய மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன வசதிகள் சங்ககாலத்தில் காணப்பட்டுள்ளன என்ற தகவலும் பெறப்படுகின்றது. இத்தகைய தொழில்நுட்ப வசதிகளோடு*

*கூடிய நகரமயமாக்கச் சமூகமாக கீழடி மக்கள் வாழ்ந்துள்ளமை யினையே கீழடி அகழாய்வுகளும் உணர்த்துகின்றன.*

*கீழடியில் மணிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மதுரைக் காஞ்சி, பரிபாடல் முதலான இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் கல்மணிகள் 600 கிடைத்திருப்பதாக தொல்லியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இக்கருத்தை மெய்ப்பிப்பதாக சங்க இலக்கியங்களில் மணிகள் பற்றி பல பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க கால மக்கள் கல்மணிகளைப் பயன்படுத்தி அணிகலன்களைத் தயாரித்துள்ளனர். 'பல்வேறு திருமணி' (மதுரை.505), 'திருமணி குயினரும்' (மதுரை.511), 'அலங்குகதிர் மிருமணி' (பதி.58:17), 'இலங்கு கதிர் திருமணி' (பதி.76:14) என பல பாடல்களில் மணிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.*

**உறை கிணறு**



*கீழடி பற்றிய ஆய்வின் தொடர்ச்சியாக இடம்பெற்ற நான்காம் கட்ட ஆய்வுப்பணியில் 5820 அரும்பொருள்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் சுடுமண் உறைக் கிணறுகளும் அடங்குகின்றன. சுடுமண்ணாலான வளையங்*

களைக் கொண்டு அமைக்கப்பட்ட கிணறு 'உறை கிணறு' ஆகும். கடற்கரை, ஆற்றங்கரை முதலான மணற் பாங்கான இடங்களில் அல்லது அதனை அண்மித்த இடங்களில் மண் சரிந்து விழாமல் இருப்பதற்காக பெரும்பாலும் உறை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுறை கிணறு பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

**பறழ்ப் பன்றி, பல் கோழி**
**உறைக்கிணற்றுப் புறஞ்சேரி** (ப.பா:75-76)

உறைகிணறு அமைந்துள்ள பகுதியில் வளர்க்கும் பன்றி, கோழி முதலானவை காணப்படுவதை இப்பாடல் குறிப்பிடு கின்றது. இதனூடாக சங்ககால மக்கள் தமது உணவுத் தேவைக்காக பன்றி, கோழி ஆகியவற்றை வளர்த்துள்ளதுடன் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உறைகிணற்றைப் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் கிணற்றைப் பயன்படுத்தும் முறை சங்க காலம் தொடக்கம் தற்காலம் வரையும் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் கிணறு வெட்டியமை பற்றிய வேறு சான்றுகளும் இடம்பெற்றுள்ளன.

**தோட்பதன் அமைத்த சுருங்கை ஆடவர**
**கனைபொறி பிறப்ப நூறி, வினைப்படர்ந்து,**
**கல்லுறுத்து இயற்றிய வல்உவர்ப் படுவில்** (அகம்.79:1-3)

என்ற வரிகள் ஆடவர் தீப்பொறி உண்டாகும்படி பாறைகளை வெட்டி கிணறு அமைத்து நீர்பெற்றமையைக் குறிப்பிடுகின்றன. கிணறு வெட்டி நீரைப்பெற்றமை பற்றிய சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளதன் மெய்ம்மையை கீழடி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றாகிய உறைகிணறு முன்வைக்கின்றது.

**விலங்குகளின்; மற்றும் பறவைகளின் எலும்புகள்**

கீழடி அகழாய்வில் திமிலுள்ள காளை, எருமை, வெள்ளாடு, கலைமான், காட்டுப்பன்றி, மயில் ஆகிய விலங்குகளின் மற்றும் பறவைகளின் எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றினடிப்படையில் கீழடி நகர நாகரிகத்தின் ஒரு பண்பாடாக வேளாண் சமூகமும் விருத்தியடைந்துள்ளமை தெரியவருகின்றது. ஏறுதழுவுதல் தமிழர்களின் பாரம்பரிய திருமண நடைமுறைகளுள் ஒன்றாகும். ஆடவர் காளையயை அடக்கி தனக்குரிய மகளிரைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்துகொள்ளும் முறைமை ஏறுதழுவுதல் எனப்படும். கலித்தொகையின் முல்லைக்கலியில் பதினேழு பாடல்களில் ஏறுதலுவுதலுடன் தொடர்புடைய ஏழு பாடல்கள் உள்ளன.

ஏறு தழுவுதல் பண்டைத்தமிழரின் திருமணப் பண்பாடாக அமைந்த செய்தியை இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. பறை அறைந்து ஏறு தழுவியடக்கும் ஆடவரை ஒன்று சேருமாறு அறைகூவல் விடுத்தே பின்னர், ஒழுங்கமைக்கப் பட்ட தொழுவத்தில் இவ்விழா நடைபெற்றுள்ளது. ஏறுதழுவிய ஆடவருக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்கான பெண்கள் குழுமி நிற்பதை கலித்தொகை குறிப்பிடுகின்றது (கலி.101:10-14). ஏற்றினை தழுவி அடக்குவதற்காக தொழுவத்தில் பாயும் ஆடவர்கள் தமது தெய்வத்தை முறைப்படி வழிபட்டே சென்றனர் என்ற செய்தியையும் இப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. கொல்லுகின்ற ஏற்றுக்கு அஞ்சுகின்ற ஆடவனை மறுபிறப்பிலும் ஆயர்மகள் தழுவமாட்டாளென்ற கருத்தினையும் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்,
புல்லாளே, ஆய மகள். (கலி.103:63-64)

*இதன்மூலம் கொல்லேற்றினைத் தழுவியடக்கிய ஆடவனையே சங்ககாலப் பெண்கள் திருமணம் செய்வதற்கு விரும்பியுள்ளனர் என்ற செய்தியும் கிடைக்கின்றது. ஏறுதழுவுதலால் பிறருக்கு துன்பம் ஏற்படுமென்ற எவ்வித வருத்தங்களுமின்றி சங்ககாலத்தில் ஏறு தழுவுதலில் பல்வேறு விதமான ஏறுகள் ஏறுதழுவும் விழாவுக்காக தயார் செய்யப்பட்டமையும் அந்த ஏறுகள் எத்தகையவை என்பதுவும் கலித்தொகை முல்லைக்கலியில் கூறப்பட்டுள்ளன (கலி.105:1-22). கரிய ஏறு, சிவந்த மறுவினையுடைய வெள்ளிய ஏறு, கரிய சர்ச்சரையுடைய கழுத்தினையும் சினத்தையுமுடைய ஏறு, நன்றாக உயர்ந்த கால்களையுடைய ஏறு என பல்வேறு பட்ட ஏறுகள் பற்றிக் கூறப்பட்டிருப்பதை இப்பாடலினூடாக அறியமுடிகின்றது. பெண்கள் வரிசை வரிசையாகப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஆடவர்கள் ஏற்றினை அடக்கும்பொருட்டு தொழுவத்தில் பாய்ந்தமையும் குறிப்பிடப்படுகின்றது.*

*பல்வேறுபட்ட ஏறுகள் ஏறுதழுவும் திருவிழாவிற்காக வளர்க்கப்பட்டிருப்பதும், ஏறுதழுவும் ஆடவனை மணப்பதையே பெண்கள் விரும்பியமையும் அதுவொரு சமூக விழாவாக நடைபெற்றுள்ளமையும் சங்க காலத்தில் ஏறுதழுவுதல் பெற்றிருந்த முக்கியத்துவத்தையே காட்டு கின்றன. இவ்வாறு சங்க கால மக்களின் பண்பாட்டு மரபாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் தொல்லியல் எச்சங்களை கீழடி அகழாய்வுச் சான்றுகள் பிரதிபலித்து நிற்கின்றன. இன்றுவரை, இதுவொரு ஏறுதழுவுதல் தமிழர்பண்பாட்டு மரபினை வெளிப்படுத்துகின்ற ஒரு விளையாட்டாக ஜல்லிக்கட்டில் இடம்பெற்றுவருவதைக் காணலாம்.*

*உணவுக்காக மட்டுமன்றி வாழ்வியல் பண்பாட்டு நடைமுறைக்காகவும் காளை வளர்ப்பு முக்கியம் பெற்றிருந் திருக்க வேண்டும். அத்தகைய காளைகளின் எலும்புகள் கீழடியில் கண்டெடுக்கப்பட்டிருப்பது முக்கியமானதாகும்.*

*கீழடி அகழாய்வில் காட்டுப்பன்றியின் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சங்ககால மக்கள் தமது உணவுத்தேவைக்காக காட்டுப்பன்றிகளை தந்திரோபாய வழிமுறைகளைக் கையாண்டு பிடித்தமையை சங்க இலக்கியங்கள் அறியமுடிகின்றது.*

**சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்**
**வீழ்முகக் கேழல்** (மதுரை.294-295)

*மலையில் வாழும் குறவன் தோண்டி, மூடிய வாயையுடைய பொய்க்குழியில் விழுகின்ற ஆண்பன்றியை கொல்லுவது பற்றியதாக மேற்கூறிய பாடல் அமைந்துள்ளது. இதன்மூலம் காட்டுப்பன்றியைப் பிடித்து உணவுண்டமை நிரூபணமாகின்றது.*

*இதனடிப்படையில் சங்க இலக்கியத்தின் வாழும் சாட்சியாக தற்போது கீழடி ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட எலும்புத்துண்டுகள் உள்ளன எனலாம்.*

**தமிழி பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானையோடுகள்**




*தமிழர் எழுத்தறிவு பெற்றிருந்த காலம் கி.மு.3-ஆம்; நூற்றாண்டெனக் கூறப்பட்டு வந்த நிலையில் அதனை கி.மு.6-ஆம் நூற்றாண்டுக்கு முன்நகர்த்துவதாக கீழடி அகழாய்வில் கண்ா;டடுக்கப்பட்ட பானையோடுகளில் காணப்பட்ட தமிழ் எழுத்துகள் காணப்படுகின்றன.*

*கண்டெடுக்கப்பட்ட ஐம்பத்தாறு பானையோடுகளில் ஆதன், குவிரன் ஆதன், கோதிர, ஆதனெடுங்க, தீரஅன், ஓய், வானணை ஆகிய பெயர்கள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.*

*கீழடி அகழாய்வு மூலம் கிடைக்கப்பெற்ற பானையோடுகளில் உள்ள பெயர்களில் 'ஆதன்' என்ற பெயர் சங்க இலக்கியங்களில் பலவிடயங்களில் காணப்படுகின்றன. ஐங்குறுநூறில் மருதம் வேட்கைப்பத்தில் உள்ள பத்துப் பாடல்களும்*

**வாழி ஆதன் வாழி அவினி** (ஐங்குறு.1-10:1)

*என்றே தொடங்குவதைக் காணலாம். அதேவேளை 'ஆதன்' போந்தைப் பட்டினத்துக்குரியவன் என்பதை புறநானூற்றின் வழி அறியமுடிகின்றது. பெண்களின் அழகை அழகுமிக்க நகரங்களுக்கு ஒப்பிட்டுப் புலவர்கள் பாடியுள்ளமைக்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் பல உள்ளன. அவ்வழியே 'ஓரெயின' மன்னனது மகளின் சிறப்பினை 'ஆதன' என்பவனது போந்தைப் பட்டினத்துக்கு ஒப்பிட்டுக் கூறுவதாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது,*

**ஏர் பரந்த வயல், நீர் பரந்த செறுவின்**
**நென்மலிந்த மனைப், பொன் மலிந்த மறுகின்,**
**படுவண்டு ஆர்க்கும் பன்மலர்க் காவின்,**
**நெடுவேள் ஆதன் போந்தை அன்ன,**
**பெருஞ்சீர்** (புறம்.338:1-5)

*மேலும், 'ஆதன்;' என்ற பெயர் அழிசி என்ற பெயருடன் இணைந்து 'ஆதன் அழிசி'(புறம்.71:13) எனவரும் பாடலில் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்ற மன்னனது நண்பர்களுள் ஒருவனாக ஆதனழிசி குறிப்பிடப் பட்டுள்ளான். அதேவேளை குறித்த இப்பாடலில் கீழடி நகர நாகரிகம் அமையப்பெற்றுள்ள வையை ஆற்றின் பெயரும் இடம்பெற்றிருப்பது கூடுதல் ஆதாரமாகின்றது. அப்பாடல் பின்வருமாறு:*

**அறன் நிலை திரிய அன்பின் அவையத்துத்**
**திறன் இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து**
**மெலிகோல் செய்தேன் ஆகுக, மலி புகழ்**
**வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்**
**பொய்யா யாணர் மையல் கோமான்**
**மாவனும் மன் எயில் ஆந்தையும், உரை சால்**
**அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்,**
**வெஞ்சின இயக்கனும் உளப்படப்பிறரும்** (புறம்.71:7-14)

*அதேவேளை இந்த 'ஆதன' என்ற பெயர் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாக விளங்கிய 'ஓரி'யின் பெயருடன் இணைந்ததாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்**
**இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்**
**சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை**

**அடுபோர் ஆனா ஆதன் ஓரி**
**மாரி வண்கொடைகாணிய நன்றும்** (புறம்.153:1-5)

*இதன்படி, மழையையே அணியாகக்கொண்ட குன்றுகள் நிறைந்த மலை நாட்டுத்தலைவனாகவும் அன்றாடம் அணிமணி பூட்டிய யானைகளை யாசித்து வருவோர்க்குப் பரிசிலாகத் தருபவனாகவும் ஒளி வீசும் பொன்னாலான ஆபரணங்களையும் வளைந்த கடகத்தையும் அணிந்த முன்கையை உடையவனாகவும் போரில் வல்லவனாகவும் மழை போல் கொடை வழங்கும் வள்ளலாகவும் குறிப்பிடப்பட்டுள்ளான்.*

*இவ்வகையில் கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பானையோடுகளில் எழுதப்பட்டுள்ள 'ஆதன்' என்ற சொல் சங்க இலக்கியங்களில் தனியாகவும் அழிசி, ஓரி என்ற பெயர்களுடன் இணைந்ததாகவும் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். எழுத்தறிவுப் பயன்பாடுடைய சமூகமாக கீழடி நகர நாகரிக மக்கள் வாழ்ந்துள்ளனரென்பதை அங்கு கிடைக்கப்பெற்ற சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.*

**மட்பாண்டப்பொருள்கள்**



கீழடி அகழ்வாராய்ச்சியில் கறுப்பு, சிவப்பு நிறப் பானையோடுகள், சிவப்பு நிறப்பானையோடுகள், கருப்பு நிறப்பானையோடுகள், சொர சொரப்பான சிவப்பு நிறப் பானையோடுகள், சுடுமண் வட்டுகள் முதலான மட்பாண்டப் பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளதென தமிழ்நாடு தொல்லியல் துறை தகவல் வெளியிட்டுள்ளது. இவ்வகையில் கீழடி ஆய்வில் கிடைக்கப்பெற்ற பானை யோடுகளும் மட்பாண்டப்பகுதிகளும் கூரையோடுகளும் அக்காலத்தில் கீழடி, மட்பாண்டத்தொழிலில் மேன்மைபெற்று விளங்கியதென்பதை உணர்த்துகின்றன.

சங்க கால மக்கள் மட்;பாண்டப்பொருள்களை அதிகம் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக உணவுப்பொருட்களை சேமித்துவைக்கவும், உணவு சமைக்கவும், உணவு உண்ணவும், நீர், கள் முதலானவற்றைப் பருகவும், பூமரங்களை வைக்கவும், ஈமக்காரியங்களை நிறைவேற்றவும் என பல்வேறு தேவைகளுக்காக மண்ணால் செய்யப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனரென்பதை சங்கப் பாடல்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

*இதனை கீழடி அகழாய்வு மூலம்பெறப்பட்ட மட்பாண்டப்பொருள்களும் உறுதிப்படுத்துகின்றன. உணவு சமைப்பதற்கு பானையைப் பயன்படுத்தியமையை*

**நெடுங்கிணற்று**
**வல்ஊற்று உவரிதோண்டி; தொல்லை**
**முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி (பெரு.97-99)**

*என்ற தொடர் குறிப்பிடுகின்றது. அதாவது ஆழம்மிக்க கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்துவந்து வாய் விளிம்பு உடைந்த பானையில் கொண்டுவந்து உவர் நீரை உலை யாக ஊற்றி அடுப்பில் உணவு சமைத்தமையை இப்பாடல் மூலம் அறியமுடிகின்றது. அதேபோன்று பயணத்தின்போது கொண்டுசென்று உணவு சமைப்பதற்கு பானை பயன்படுத்தப் பட்டுள்ளது (பெரும்.362-367). கள் குடிப்பதற்காகவும் மண்பானை உபயோகிக்கப்பட்டுள்ளது (புறம். 297:6). அதேவேளைதயிர்எடுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது (புறம்.33:3, அகம்.276:6,கலி.9:2). மட்பாண்டங்களுள் தாழி என்பது பெரியதாகும். இது ஈமக்காரியங்களுக்காகப் பெரிதும் சங்ககால மக்களின் வாழ்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. புறநானூற்றின் 228-ஆம் பாடல் மட்பாண்டம் செய்பவனை நோக்கி ஈமக்காரியங்களுக்காக தாழி செய்வது பற்றியதாக அமைந்துள்ளது. இப்பாடல் மூலம் கிள்ளிவளவன் இறந்தபோது அவனுக்கான தாழியை வனைய முற்பட்டவனை விளித்து கிள்ளிவளவன் மிகவும் உயரமானவன் என்பதனால் அவனை முழுமையாக உள்ளடக்கக்கூடிய தாழியைச் செய்வது கடினமானதென்றும் நிலவட்டமே சக்கரமாகவும் மேருமலையினையே மண்ணாகவும் கொண்டு வனைந்தாலே வனைந்து முடிக்கலாமென்றும் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடல் மட்பாண்டங்களைச் சுடும் சூளையலிருந்து வெளியேறும் புகையின் தோற்றம் கருமையாகவும் மலையினை மறைக்கும் அளவிற்கு அதிகமாகவும் காணப்பட்டதென்பதையும் குறிப்பிடுகின்றன. இது தவிர*

*இப்பாடலில் மட்பாண்டத்தைச் செய்கின்றவனை 'கலம்செய் கோவே' என்று கூறுவதனையும் காணலாம். மரணச்சடங்கில் 'தாழி' என்னும் மட்பாண்டம் முக்கியம் பெற்றுவிளங்கி யமைக்கும் இப்பாடல் சான்றாகவுள்ளது.*

*கீழடி அகழாய்வின்போது சிவப்பு, கருப்பு முதலான நிறங்களைக்கொண்ட மட்பாண்டங்கள் பெறப்பட்டுள்ளன. சங்கப்பாடலில் சிவப்பு நிற தாழி காணப்பட்டமை பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.*

**கவிசெந் தாழிக் குவிபுறத்து (புறம்.238:1)**

*என்ற வரிமூலம் 'கவிழ்த்து வைக்கப்பட்ட சிவப்பு நிறமுடைய தாழி' என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிவந்த ஆலம் பழம் புதிய மண்பாத்திரத்திற்கு ஒப்பிட்டுக்கூறப் பட்டிருப்பதை பின்வரும் பாடல்வரிமூலம் காணலாம்.*

**புதுக்கலத்தன்ன கனிய ஆலம் (ஐங்குறு.303:1)**

*மட்பாண்டங்களைச் சுடும் சூளையிலுள்ள சூட்டின் தன்மைக்கு ஏற்பவே சிவப்பு, கருப்பு என வெவ்வேறு நிறம் அமையும். இவ்வகையில் வெவ்வேறு நிறங்களைக்கொண்ட பாத்திரங்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. அதிகமான மட்பாண்டங்கள் ஓரிடத்திலே கிடைத்திருப்பதனால் ஏனைய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பெரிய அளவில் கீழடியில் மட்பாண்டத் தொழிற்கூடம் இருந்து இயங்கியுள்ள தென்று கருத இடமுண்டு.*

## விளையாட்டுப் பொருட்கள்



விளையாட்டுக்கள் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவையாகவும் எல்லா மனிதர்களுக்குமான ஒரு பொதுவுணர்வாகவும் காணப்படுகின்றன. விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் பொருள்கள் அம்மக்களின் வாழ்வியல் மேம்பாட்டு நிலையை அறிய உதவுகின்றனவாகவும் உள்ளன. கீழடி அகழாய்வில் பொழுதுபோக்கு விளையாட்டு களுக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுடுமண்ணாலும் தந்தத்தாலும் தயாரிக்கப்பட்ட பகடைக் காய்கள், சுடுமண் உருவங்கள், நொண்டியாட்ட வட்டச் சில்லுகள் என பொழுது போக்கு விளையாட்டுக்கானகருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை நாகரிக சமூகத்தின் வெளிப்பாடுகளாக உள்ள அதேவேளை இவற்றினூடாக பண்டையகால மக்கள் மகிழ்வுதரும் பல்வேறு விளையாட்டுக்

*களில் ஈடுபட்ட ஒரு மகிழ்வுறு சமூகமாக வாழ்ந்துள்ளமையையும் அறிய இயலுகின்றது.*

*சங்கப்பாடல்களில் பல்வேறு விளையாட்டுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இதனூடாக சங்க காலமக்களின் வாழ்வியலோடு பொழுதுபோக்கு விளையாட்டுக்களும் ஓரம்சமாகக் காணப்பட்டமையை அறியமுடிவதோடு கீழடி அகழாய்வில் பெறப்பட்ட சில விளையாட்டுக்கருவிகளுடன் தொடர்புடையனவாக உள்ளமையினையும் காணமுடிகின்றது.*

*சங்க காலத்தில் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளமைக்குச் சான்றுகளுள்ளன. நீர் விளையாட்டு பற்றி பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. ஆணும் பெண்ணும் இணைந்து நீர் விளையாட்டில் ஈடுபட்ட மையை புறநானூற்றின் 243-ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. இளமையில் நீர்விளையாட்டில் ஈடுபட்ட நினைவை இப்பாடல் தருகிறது. பரிபாடலில் வையை ஆற்றில் நீராடச் செல்லும்போது மக்கள் நெய்பூசப்பட்ட விசிறி (பரி.6:12) வண்ணத்திரவம் நிரப்பி அல்லது நீரெக்கி(பரி.10:12), வட்டுக்கள் (பரி.11:55) முதலான நீர் விளையாட்டுக் கருவி களை எடுத்துச் சென்றமை கூறப்பட்டுள்ளது. வட்டாடல் விளையாட்டுப் பற்றி 'கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டு ஆடும' (நற்.3:4) என நற்றிணை கூறுகின்றது. பெரும்பா ணாற்றுப்படை(பெரு.311-312),*

**அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பு அறியாமை வந்துஈண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்அணங்கினோன்**
**புலிபொறித்துப் புறம்போக்கி** **(ப.பா.131-135)**

*இதன்மூலம் பொருள்களுக்கு முத்திரையிடும் முறை இருந்துள்ளமை உறுதியாகின்றது. 'சங்ககால மக்கள் தங்களின் வாணிப நோக்கத்திற்காகவே முத்திரைக் குறியீட்டைப்*

*பயன்படுத்தியிருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் நவில்கின்றனர். ஆக சங்க இலக்கியங்களின் தொல்லியல் ஆவணம் கீழடி என்ற கூற்றினைக் கட்டாயமாக மறுக்க இயலாது' (நா.கவிதா,2016).*

**நகர நாகரிகமும் வணிகப்பண்பாடும்**

*செங்கல் கட்டுமானங்கள், தொழிற்கூடம், நீர்மேலாண்மை, வேளாண்மை, பெரிய வீதிகள் உள்ளிட்ட பொருளியல் வளர்ச்சிகளையும் நெருக்கமான மக்கள் தொகை, அறிவியல் வளர்ச்சி, எழுத்துப்பயன்பாடு முதலானவற்றையும் உள்ளடக்கியது நகரநாகரிகம் எனக்குறிப்பிடப்படுகின்றது. இரா.சிவானந்தம், சுந்தர் கணேசன் ஆகியோர் நகர நாகரிகத்தின் அடிப்படைகளாகப் பத்து அம்சங்கள் உள்ளன என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். அவர்களின் கூற்று வருமாறு:*

*ஒரு நகர நாகரிகம் உருவாகுவதற்குக் குடியிருப்பின் பரப்பளவு, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கொண்டிருந்த வணிகத்தொடர்பு, முன்னேறிய தொழில்நுட்பங்கள், தொழில் கூடங்கள், பலஇனக்குழுக்களின் இருப்பு, பல மொழிகளின் பயன்பாடு, குறியீடு மற்றும் எழுத்தறிவு நிலை, நுண்கலைத்திறன், முதிர்ச்சி பெற்ற சமூகப்பண்பாட்டுக்கான அகங்காரப்பொருள்கள் ஆகிய பத்து அம்சங்கள் காரணிகளாகக் கருதப்படுகின்றன. (2019:20).*

*மேற்கூறியவற்றுள் பெரும்பாலானவை கீழடி அகழாய்வு மூலம் பெறப்பட்டுள்ளன. இவ்வகையில் கீழடி ஒரு நகரநாகரிகம் பண்பாட்டைக்கொண்ட தொன்மையான நகரமென வரையறுக்கமுடியும். இவ்விடத்தில் ஏற்கனவே நகர நாகரிகம் குறித்து வழங்கி வந்த கருதுகோளை கீழடி ஆய்வுகள் மாற்றியமைத்துள்ளன என்ற கருத்தும் ஆய்வாளர்களால் வலியுறுத்தப்படுகிறது.*

சங்க காலத்தில் நகர நாகரிகம் சிறப்புற்று விளங்கியமைக்கு சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை இரண்டு பத்துப்பாட்டு நூல்களும் நகரச்சிறப்பினை மிகுதியாகக் கூறுகின்றன.

கீழடி ஒரு வணிக நகரமாகவும் விளங்கியுள்ளது. ஆடை தயாரிக்கும் பொருட்கள், ஆடைகளுக்குச் சாயமேற்றும் சாயத்தொட்டி என்பவை நெசவுத்தொழிலும் பல்வேறு விதமான பெறுமதிமிக்க அணிகலன்கள் கிடைக்கப்பெற்றதன் மூலம் அணிகலன்களைத் தயாரிக்கும் தொழிலும், பானை யோடுகள், கூரையோடுகள் முதலானவை பெருமளவில் உள்ளமையினால் மட்பாண்டத் தொழிற்கூடமும் என மேம்பட்ட தொழில் உற்பத்தி நகரமாக கீழடி விளங்கியுள்ளது. அத்துடன் இது ஏனைய நாடுகளுடன் நீர்வழி வணிக தொடர்புகளைப் பேணியிருப்பதற்குரிய ஏதுநிலைகளையும் கொண்டுள்ளது. வையை ஆற்றுப்படுக்கையில் அமைந்து பல்வேறு தொழில்களில் மேம்பட்டு விளங்கிய ஒரு நகர நாகரிகம் ஏனைய தேசங்களுடன் வணிகத் தொடர்புகளைப் பேணாதிருந்திருக்க வாய்ப்புகளில்லை என்பதையே கீழடி அகழாய்வுச் சான்றுகள் புலப்படுத்துகின்றன.

எனவே மேற்கூறியதன்படி கீழடியை அண்மித்துள்ள தொன்மை மிக்க நகரம் மதுரை. இம்மதுரை குறித்து சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட செய்திகளும் கீழடி அகழாய்வு உணர்த்தும் வணிக நாகரிகப் பண்பாட்டை வெளிப்படுத்துவ னவாக உள்ளன.

சங்க காலத்தமிழகம் வணிகப் பண்பாட்டை வலுவாகப் பேணியதற்கு மதுரைக்காஞ்சியில் பல சான்றுகள் உள்ளன. நாட்டில் உள்ளவர்கள் சிறந்த பொருள்களை நுகரும் வகையில் வாணிகம் சிறப்பாக நிலைபெற கடலில் வரும் பாய்மரங்களை யுடைய நாவாய்கள் கரையை அடையும் என்றும்

அந்நாவாய்கள் மலைபோலப் பெரியனவாகக் காணப்படும் என்றும் மதுரைக்காஞ்சி கூறும் (மதுரை.75-84).

இவ்வரிகளினூடாக நாட்டிலுள்ளவர்கள் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொள்ளும்படி கடல்வழி வணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளமை உறுதியாகின்றது. வணிகர் பெருமக்கள் கொண்டுவந்த வெண் உப்பு, புளி, செழுமை மிக்க மீண் துண்டுகள் முதலான பல்வேறு பொருள்களை மக்கள் வாங்குவதும், வணிகர்கள் உலகின் பல்வேறு தேசங்களுக்கும் தமிழகத்தில் கிட்டிய அணிகலன்களைக் கொண்டு சென்றமையும் மேல் நாட்டிலிருந்து குதிரைகள் கொண்டுவரப்பட்டமையினையும் மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது (மதுரை.315-324). அறுத்த சங்கினை வளை முதலியனவாகக் கிடைகின்ற அழகிய மணிகளைத் துளையிடுவாரும், சுடப்பட்ட நல்ல பொன்னால் விளங்கும் அணிகலன்களைச் செய்யும் தட்டாரும் பொன்னை உரைத்த உரைகொண்டு அதன் தரத்தை அறிதியிட்டுக்கூறும் பொன்வாணிகரும் ஆடைகளை விற்பவரும், செம்பினை நிறுத்து வாங்கிக்கொள்பவரும் என பல்வேறுபட்ட தொழில்களைச் செய்வோரும் வணிகர்களும் மதுரைமாநகரில் தம்பொருள்களை விற்கும்பொருட்டு ஒன்று சேர்ந்தமையும் அதனால் நால்வகைத் தெருக்களிலும் அதிகமானோர் காணப்பட்டமை யினால் ஆரவாரம் காணப்பட்டமையும் மதுரைக்காஞ்சியில் கூறப்பட்டுள்ளன (மதுரை.511-526). பாய்மரக்கப்பல்கள் பல்வேறு வகையான பொருள்களை இறக்குமதி செய்கின்ற பட்டினத்தில் வணிகர்கள்பெறுமதிமிக்க நல்ல அணிகலன்களை வாங்கிக்கொண்டு உலாவியமை பற்றியும் மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது (மதுரை.536-539. இப்பாடல் வரிகளிலும் மேற்கூறிய பாடல்களின் கருத்துக்கள் அழுத்தம் பெறுவதைக் காணலாம். குறிப்பாக பல்வேறு பொருள்கள் கடல்வழியாக கப்பல்களில் கொண்டுவரப்பட்டதுடன் தமிழகத்திலிருந்து

*பெறுமதிமிக்க அணிகலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதோடு நன்கு அறியப்பட்ட வணிகநகரமாக மதுரை காணப்பட்டுள்ள தென்பதும் பல தேசத்தவர்களும் வந்துசெல்கின்ற ஆரவாரம் மிக்க இடமாகக் காணப்பட்டுள்ளதென்பவும் இதன்மூலம் அறியக்கூடியதாக உள்ளன.*

*தொண்டை நாட்டுப்பட்டினத்தில் வடநாட்டுப் பொருள்களும் மேலைநாட்டுக் குதிரைகளும் பிறவும் இறக்குமதி செய்யப்பட்டமையை பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு கூறுகின்றது:*

*புரவியொடு வடவளம் தரூஉம் நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை (பெரு.320-321) இதேவேளைகாவிரிப்பூம்பட்டினத்தி லுள்ள பெரிய துறைமுகத்திலும் குதிரைகள் மிகுதியாக இறக்குமதி செய்யப்பட்டமையும் சேர நாட்டிலிருந்து கடல்வழியாக மிளகுப்பொதிகள் வந்ததோடு தமிழகத்திற்கு வடபாலிருந்து மாணிக்கக்கற்களும் பொன்னும், குடமலைச் சந்தனக்கட்டைகளும், அகிற்கட்டைகளும், ஈழநாட்டின் உணவுப் பொருள்களும், கங்கைச் சமவெளியில் உண்டான பொருள்களும,; சீனம் முதலிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட கருப்பூரம், பன்னீர், குங்குமம் முதலியனவும் இறக்குமதி செய்யப்பட்டமை கூறப்பட்டுள்ளன. (ப.பா.184-193) தமிழகத்திலிருந்து வேறு தேசங்களுக்கு கடல்வழி வணிபம் சிறப்பாக நடைபெற்றிருப்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. கீழடியும் பல தேசங்களுடன் நிலத்தொடர்பும் நீர்த்தொடர்பும் சார்ந்து வணிகம் மேம்பட்டு விளங்கிய தொழில்நகரமாக விளங்கி யுள்ளது. வணிகப் பண்பாட்டில் சுங்கவரி வசூலிப்பது முக்கியமானதொன்றாகும். சங்க காலத்தில் வழிகளில் சுங்கச் சாவடிகள் இருந்துள்ளமைக்கான சான்றுகள் உள்ளன. பொருட்களுக்கான வரிகளை (உல்கு) வசூலிக்கும் பொருட்டு சுங்கச் சாவடிகள் நிறைந்த தெருக்கள் காணப்பட்டமையினை 'உல்குடைப் பெருவழி' (பெரு.81) என்ற தொடரால்*

குறிப்பிடுகின்றது. இதனை பட்டினப்பாலை 'அருங்கடிப் பெருங்காப்பின்' (ப.பா..133) என்று குறிப்பிடுகின்றது. இத்தகைய சங்கச் சாவடிகள் பற்றிய செய்திகளும் வணிகப் பண்பாடு சிறப்பாக இடம்பெற்றமையினையே புலப்படுத்து கின்றன.

இவ்வகையில் கீழடியில் கிடைக்கப்பெற்ற பல்வேறுபட்ட பெறுமதியான ஆபரணங்கள், பொருள்கள், நகரமயப் பண்பாட்டுக்குரிய ஏனைய சான்றுகள் சங்க இலக்கி யங்களில் வெளிப்பட்டு நிற்பதனூடாக பண்டைக்காலத்தில் மதுரை பிரசித்திபெற்ற வணிக நகரமாகவும் கடல்வழிப் போக்குவரத்து மேம்பட்ட இடமாகவும் விளங்கியதென்பதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

தமிழக வரலாறு, இலக்கியம் முதலானவை சார்ந்து பெரியளவிலான மாறுதலை ஏற்படுத்துவதற் ஏதுநிலைகளை கீழடி அகழாய்வு கொண்டுள்ளது. சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட பல்வேறுபட்ட செய்திகளை முதன்முதலில் தெளிவாக வெளிக்காட்டுபவை கீழடி அகழாய்வுச் சான்றுகளே யாகும். கீழடி அகழாய்வு மூலம்பெறப்பட்ட பல சான்றுகளை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. இதனால் சங்க இலக்கியங்கள் குறித்த கருத்துக்கள் பல மீளாய்வுக்கு உட்படவேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் மதுரை, வையை முதலியவை பற்றிய செய்திகள், வரலாற்றுக்குறிப்புகள் கீழடிய அகழாய்வுடன் பொருந்துகின்றன. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட நெசவுத் தொழிலுடன் தொடர்புடைய பொருள்கள், சாயத்தொட்டி, அணிகலன்கள், உறைகிணறு, விலங்குகளின் எலும்புகள், பானையோடுகள், தமிழி எழுத்துகளில் அமையப்பெற்ற பெயர்கள், விளையாட்டுப் பொருள்கள், செங்கல் கட்டுமானங்கள், சுடுமண் முத்திரை

முதலான தொல்லியல் சான்றுகளை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்களின் வாழும் சாட்சியாக கீழடி அகழ்வுச் சான்றுகள் உள்ளன. கீழடி ஒரு நகர நாகரிகமாகக் காணப்பட்டதென்று கூறப்படுகின்றது. இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக சங்க இலக்கியங்களிலும் நகர நாகரிகம் குறித்த செய்திகள் அழுத்தமாக இடமெ் பெற்றுள்ளன. அத்துடன் கீழடி கடல் வழி வாணிகத்திலும் சிறந்து விளங்கியதென்பது ஆய்வாளர்களின் தற்போதைய கருத்தாகவுள்ளது. இதனை ஆமோதிக்கும் வகையில் தமிழகத்தின் பலவிடங்கள் வணிக நகரங்களாக பிறநாடு களுடன் கடல்வாணிபத்தில் மேம்பட்டு பிரசித்தி பெற்று விளங்கியமை குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவ்விதத்திலேயே சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகளின் வாழும் தொல்லியல் சாட்சியாக கீழடியில் இருந்து பெறப்பட்டசான்றுகள் காணப் படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியதவசிய மாகின்றது.

**உசாத்துணைகள் REFERENCES**


1. *Wheeler, R.E.M.,Ghosh, A., and Krishna Deva (1946). "Arikamedu, An Indo-Roman Trading Station on the East Coast of India", Ancient India, vol.2, Archaeological Survey of India, New Delhi, Pp.17-125.*
2. *Subramanian, A., (1975). "Terracotta Art in Tamilnadu", Annals of Oriental Research, Silver Jubilee Volume, Pp.140-144.*
3. *Raman, K.V.,(1976). "Brahmi Inscription of Tamil Nadu: an historical assessment",The Sri Lanka Journal of South Asian Studies, vol.1(1), Pp.64-75.*

4. *Subramanian, N.,(1980) "Sangam Polity" - The Administration and Social life of the Sangam Tamils, Ennes Publications, Madurai.*

5. *Begley and Vimala (1988) "Rouletted ware at Arikamedu: A New Approach", American Journal of Archaeology, vol.92, no. 3, July, pp.427-440.*

6. *Rajan and Gurukkal, (1989). "Forms of Production and Forces of Change in Ancient Tamil Society", Studies in History, Vol. 5 (2), pp.159-175.*

7. *Rajan, K.,(1991). "New Light on Graffiti Marks", Journal of Marine Archaeology, vol.2 Pp.47-54.*

8. *Rajan K., (1995). "Traditional Bead Making Industry in Tamil Nadu", a report submitted to the Nehru Trust, New Delhi.*

9. *Gurumurthy, S. (1999). "Deciphering the Indus Script: From Graffiti on Ancient Indian Pottery", University of Madras, Madras.*

10. *Rajan K. and Osmund Bopearachchi, (2002). "Graffiti Marks of Kodumanal (India)and Ridiyagama (Sri Lanka) – A Comparative Study", Man and Environment, vol.27 (2), Pp.97-105.*

11. பரிமணம் அ.மா. மற்றும் பாலசுப்பிரமணியன் கு. வெ.,*(2004)*. பத்துப்பாட்டு, முதற் பகுதி, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ, சென்னை.

12. பரிமணம் அ.மா. மற்றும் பாலசுப்பிரமணியன்,கு. வெ.,*(2004)*. பத்துப்பாட்டு, இரண்டாம் பகுதி, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை.

13. *Begley and Vimala (2004). "The Dating of Arikamedu and its Bearing on the Archaeology of Early Historical South India", in Jean-Luc Chevillard (ed.), South-Indian Horizons: Felicitation Volume for Francois Gros, Institute Francais de Pondichery and EFEO, Pondicherry, pp.513-537.*

14. *Raman, K.V.(2006). "Heritage in Clay", in K.V.Raman,-Temple Art, Icons and Culture of India and South-East Asia, Sharadha Publishing House, Delhi, Pp.90-92*

15. *Shanmugam, P.,(2007). "Terracotta Art in the Tamil country", Bulletin of the Chennai Government Museum, Vol.XV, no.8, Chennai.*

16. *சுப்பிரமணியன், ச.வே., (2011). சங்க இலக்கியம் மூலமும் முழுமையும், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.*

17. *இராசமாணிக்கனார்,மா.(2016). பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகதெமி, சென்னை.*

18. *கவிதா,நா.(2016).சங்க இலக்கியங்களில்சான்றாவணம்-கீழடி, வல்லமை இணைய இதழ்: https://www.vallamai.com/?p=73746.*

19. *Prof. K. Rajan,(2019). Department of Archaeology, Government of Tamil Nadu, Chennai – 600 008.*

20. *அலெக்சாண்டர் நவீனா, (2019). கீழடி,கொடுமணல், அழகன்குளம் மற்றும் அரிக்கமேடு, அந்தாழை, சென்னை.*

21. *சசிகலா கோ.,(2019). தொல்லியல் நோக்கில் சங்ககால சமூகம், சிந்தன் புக்ஸ், சென்னை.*

*22.* *இளங்கோ,சி. (2019). தமிழகத் தொல்லியல் ஆய்வுகள் கீழடி வரை, சென்னை-அலைகள் வெளியீட்டகம்.*

*23.* *சிவானந்தம் மற்றும்; இரா.கணேசன் சுந்தர், (2019). கீழடி தென்னிந்திய தொல்லியல் வரலாற்றில் ஒரு ஒளிக்கீற்று, காலச்சுவடு பதிப்பகம், சென்னை.*

*24.* *சேரன் மற்றும்; எம்., சிவநாதம், (2019). கீழடி வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம்;, தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.*

# தமிழ்நாட்டில் சமணத்தின் எழுச்சியும் வீழச்சியும்
# (சங்க காலம் முதல் இடைக்காலம் வரை)
# THE RISE AND FALL OF JAINISM IN TAMIL NADU
# (From the Sangam period to the medieval period)

**முனைவர் ஜோ. மார்ட்டின் ஜெயபிரகாஷ்**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
அழகப்பா அரசு கலைக் கல்லூரி காரைக்குடி – 630003
மின்னஞ்சல்: martinjeyahistory@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*பாரத கண்டம் என்பது எண்ணற்ற மொழி, இனம், பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், சமயம் என பல வேற்றுமைகளைத் தன்னகத்தே கொண்ட தனிப்பெரும் துணைக் கண்டம் ஆகும். மனிதன் பிறந்த பிறகு தோன்றிய மொழி, இனம ஆகிய இரண்டில் முதலில் மொழிதான் முதலில் தோன்றியது என்பது அனைவரும் ஒருமித்து ஏற்றுக்கொள்ளும் ஒரு கருத்து.அம்மொழியே அனைத்திறக்கும் மூலமொழியாகும். அவ்வாறு ஒரு மொழி தோன்றிய பிறகு அம்மூலமொழியிலிருந்து பலக் கிளை மொழிகள் புதிதாக பரிணமிக்கிறது. பிறகு அம்மொழியைப் பேசிய மக்கள் சிறு சிறு குழுக்களாக தங்கள் வசதிக்கேற்ப்ப பிரிந்து சென்றனர். அவ்வாறு சிறு குழுக்களாக பிரிந்தவர்களை சிறு இனம் என்று வரையறைப்படுத்தப்பட்டனர். பிறகு ஒவ்வொரு இன மக்களும் தங்களுக்கென்று உணவு, உடை, இருபிடம், உருவ அமைப்பு, தொழில் முறை என தனித்துவமான பண்பாடு, கலாச்சாரம், நாகரீகத்தோடு வாழத் தொடங்கினார்கள்.*

இப்படி ஒவ்வொருப் பிரிவுகளாக மனித இனத்தில் பரிணமித்தப் பிறகு இறுதியாகத் தோன்றியது தான் சமயம் (மதம்) . மனித இனத்தில் இறுதியாக தோன்றிய அம்சமாக சமயம் இருப்பினும் அது சார்ந்த நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் மக்களுடன் புரையோடிப் போனதால் மனிதன் முன்னர் தோன்றிய அத்தனை அம்சங்களை விடவும் சமயத்திற்கு அதிமுக்கியத்துவம் அளிக்கத் தொடங்கிவிட்டான். சமயம் சார்ந்த நம்பிக்கைகளை தன்னோடு தனிப்பட்ட வாழ்க்கையாக கருதாமல் சமயத்தை சமூகத்தோடு இரண்டறக் கலந்துவிட்டான் மனிதன் . எவ்வாறு கலாச்சாரம்,பண்பாட்டை தங்களுக்கு ஏற்றார்ப்போல் உலக மக்கள் பங்கிட்டுக் கொண்டார்களோ அது போலவே சமயத்தையும் பல்வேறு சமயங்களாக பிரித்துவிட்டார்கள். அதன் விளைவு இன்றைய காலச் சூழலில் உலகம் முழுமைக்கும் 4000 – க்கும் மேற்பட்ட சமயங்கள் தோன்றியுள்ளன. அதில் இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டும் 20–க்கும் மேற்பட்ட சமயங்கள் பின்பற்றப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்**

மனிதன், குடும்பம், சமூகம், இனக்குழு, சமுதாயம், சமயம்,

## Abstract

*India is a vast country with various religions, languages, castes and cultures. It is a unanimous opinion that language was the first of the two languages and ethnicities that appeared after man was born. That's the root of it all. After the emergence of one language, many new languages have emerged from that language. After that, the people were divided into small groups. Those who were divided into small groups were defined as a small race. After that, people of every race started living with their own unique cul-*

*ture, culture, and civilization, such as food, clothing, appearance, image, and occupation. After the evolution of each of these sects in the human race, religion has finally appeared. Although religion was the last aspect of the human race, as its beliefs and practices became intertwined with those of the people, man began to attach more importance to religion than to any other aspect. A man does not consider religion as his personal life, he mixes religion with society. Just as the people of the world have divided the culture and the people have divided the religion into different religions. As a result, today there are more than 4,000 religions in the world. There are more than 20 religions in India.*

*Keywords: Human, Family, Community, Caste, Community, Religion*

இந்தியாவில் பெரும்பாண்மைச் சமயங்களாக இந்து, கிருத்தவம், இஸ்லாம், சீக்கியம், பௌத்தம், சமணம் போன்றவைத் திகழ்கின்றன. இந்து, கிருத்தவம் ,இஸ்லாம் என இம்மூன்று சமயங்கள் இந்தியாவில் அதீத வளர்ச்சியடைந்தாலும் இந்தியாவிலேயே தோன்றி வளர்ந்த சமயங்களாக சில சமயங்கள் மட்டுமே விளங்குகின்றன. வேத சமயம், சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்யம், சௌரம் (இவை அனைத்தும் சேர்ந்தது இந்து சமயம்), பௌத்தம், சமணம், சீக்கியம் இவைகள் இந்தியாவிலேயே தோன்றி வளர்ந்த சமயங்களாக விளங்கு கின்றன. 17–ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியில் பல சமயங்களை ஒன்றிணைத்து இந்து என்கிற பெயர் வடிவம் கொடுக்கப்பட்டது. அதன் விளைவாக சைவம் ,வைணவம் போன்ற பல சமயங்கள் தனிச் சமயம் என்கிற அந்தஸ்தை இழந்து இந்து சமயமாக மாற்றப்பட்டது.

இந்தியாவில் தோன்றி வளர்ந்த சமயமாக இந்து மதமும் பௌத்தமும் சமணமும் காணப்பட்டாலும் அவை ஒவ்வொன்றும் தன்னகத்தே தனித்தனியான வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. குறிப்பாக இந்து மதத்தில் காணப்பட்ட எண்ணற்ற சடங்கு முறைகள், புரியாத வேத உபாசகங்கள், வேள்விமுறைகள், ஆடம்பர சடங்குகள், தேவையற்ற செலவுகள், பெண்களுக்கான உரிமை மறுப்பு போன்றவற்றால் மக்களிடையில் ஏற்பட்ட வெறுப்புணர்வு மக்களை மாற்று சமயம் நோக்கி அழைத்துச் செல்லும் மனப்பங்கிறக்கு வித்திட்டது. அக்காலகட்டத்தில் பௌத்த சமய துறவிகளும் சமண சாதுக்களும் தங்கள் சமயத்தை சமூகத்தில் பரப்பியதன் விளைவாக இந்தியாவில் பலரது ஆதரவுகளை இச்சமயங்கள் பெறத் தொடங்கின. குறிப்பாக பல மன்னர்களது ஆதரவையும் இச்சமயங்கள் பெற்றன. எடுத்துக்காட்டாக கூறின், கலிங்கப் போருக்குப் பின் அசோகர் பௌத்த சமயத்தை தழுவி பல நினைவுச் சின்னங்களை நிறுவினார், தனது புத்திரர்களை பல நாடுகளுக்கு சமயப் பரப்புரைகளுக்காக அனுப்பினார். அது போல சந்திரகுப்த மௌரியர் தனது வாழ்நாள் இறுதியில் சமண சமயத்தை தழுவி சரவணபெலகோலா என்கிற இடத்தில் சமணர்களின் பழக்கமான வடக்கிருந்து உயிர் நீத்தார். இப்படி இந்தியாவில் மன்னர்கள் பின்பற்றக்கூடிய அளவிற்கு உயர்ந்த சமயமாக இவ்விரு சமயங்களும் மாறிப் போயின.

அப்படியே தமிழ்நாட்டைப் பொறுத்த வரை சமய நிலைப்பாட்டில் பெரிய அளவில் மாறுபாடில்லாமல் காணப் பட்டது எனலாம். பெரும்பாலானவர்கள் தமிழ்ச் சமயங்களாக கருதப்படுகின்ற சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்யம், சௌரம் போன்ற ஆறு சமயங்கள் பின்பற்றியதாக ஆய்வாளர் தொ.பரமசிவம் அவர்கள் குறிப்பிடுகிறார். அப்படி யிருக்க தமிழ்நாட்டில் எப்போது சமணமும் பௌத்தமும் அறிமுகமானது என்பதை ஆய்ந்தால், இச்சமயங்கள் கி.மு.

6ம் நூற்றாண்டில் தோன்றியதாக தெரிகிறது. ஆனால் இச் சமயங்கள் மிகப் பிந்தையதாக தான் தமிழ்நாட்டில் சங்கம் மருவிய காலம் என்று சொல்லப்படுகிற களப்பிரர் காலம் தொட்டு தமிழ்நாட்டில் தழைத்ததாக தெரிகிறது.தமிழ்நாட்டில் சமணமும் பௌத்தமும் ஒரு சேர நுழைந்தாலும் இந்தியா முழுமைக்கும் பௌத்தம் பெற்ற இடத்தை தமிழ்நாட்டில் அது பெறவில்லை. ஆம் தமிழ்நாட்டில் பௌத்த சமயத்தை விட சமண சமயம் பெருமளவில் மன்னர்களாலும் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமயமாக கி.பி.2-ம் நூற்றாண்டில் உருபெற்றது. குறிப்பாக களப்பிரர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் போன்றவர்கள் சமண சமயத்தை ஏற்றுக்கொண்டு அதனைக் கடுமையாகப் பின்பற்றியதாகவும் தெரிகிறது. சமணம் கி.பி.2-ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நுழைந்தாலும் அது மிக நீண்ட காலம் மக்களோடு நீடித்து நிலைத்திருக்க இயலவில்லை. தமிழ்நாட்டில் பிற மாற்று சமயத்தவர்களுக்கு எழுந்த எதிர்ப்புக்களை விட சமணத்தை வைதீக சமயத்தவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். கருத்தியல் ரீதியாகவும் சமய சண்டைகள் நடைபெற்றன. குறிப்பாக பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் தோன்றி வைதீக சமயம் மீண்டும் புத்துயிர் பெற்று மக்களிடம் பரப்ப சமய பரப்புரையாளர்கள் மேற் கொண்ட நடவடிக்கை சமணத்திற்க்குப் பேரிடியாக அமைந்தது எனலாம். வைதீக சமயத்தை பின்பற்றிய தமிழநாட்டு பேரரசர்கள் மாற்று சமயமான சமணம் வந்த பிறகு சமணத்தை தழுவியதும் பல இலக்கியங்கள் சமணர்களால் இயற்றப் படுதலும் சமண சாதுக்களை பேரரசர்கள் போற்றிப் புகழ்வதும் வைதீக சமய சான்றோர்களை எரிச்சலூட்டுவனவாய் அமைந்தது. மேலும் பாமர மக்களும் வைதீக சமயத்தில் புரையோடிக் கிடந்த சடங்குமுறைகள், ஆடம்பர வழிபாடு , புரியாத மந்திரங்கள் மக்களை ஆரம்ப கால கடவுள் வழிபாட்டிலிருந்து அந்நியப்படுத்துவதாய் அமைந்தது. இதனால் வைதீக சமயத்திறக்கு மாற்றாக அக்காலத்தில் சமண

சமயம் மக்களிடம் வெகுவாக பரவியது. திகம்பரர்கள் மற்றும் ஸ்வேதாம்பரர்கள் என்று இரு பிரிவு சமணர்களும் தமிழ் நாட்டில் இருந்தாலும் அவர்களில் ஸ்வேதாம்பர சமணர்கள் மக்களலோடு மக்களாக மக்கள் வாழ்வியலில் தங்களை தொடர்பு படுத்திக் கொண்டு எளிதில் தமிழ்நாட்டில் தங்கள் சமயத்தை வளர்த்துக் கொண்டனர். ஆனால் ஸ்வேதாம்பர சமணர்களை விட திகம்பர சமணர்களே தமிழ்நாட்டில் அதிகம் காணப்பட்டனர். அவ்வாறு தமிழ் நாட்டில் சமணர்கள் வளர்ந்த விதம் அவர்களின் அன்றைய நிலை எதிர்ப்புகளால் அவர்கள் சந்தித்த விளைவுகள் போன்றவற்றை இவ்வாய்வின் மூலம் தொகுக்கிறேன்.

**எது சமணம்? யார் சமணர்?**

இந்தியாவில் இந்து சமயம் ஆழ வேரூன்றிய காலத்தின் இடையில் இரண்டு வெவ்வேறு மார்க்கங்கள் அகிம்சை கோட்பாட்டை முன்நிறுத்தி உருவாக்கம் பெற்றன. அதாவது அன்பையும் அமைதியையும் உலகிற்கு போதித்த யேசு கிறிஸ்து இவ்வுலகில் தோன்றுவதற்க்கு பல நூறு ஆண்டு களுக்கு முன்பாகவே இந்தியாவில் அகிம்சையை போற்றுகின்ற சமணம், பௌத்தம் ஆகிய இரு சமயங்கள் தோன்றியது எனலாம். அவ்விருபெரிய சமயங்களின் வரலாற்றைக் குறித்து Cambridge பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள பண்டைய இந்திய வரலாற்று நூலிலே ‘அந்நூலைத் தொடுத்தஅறிஞர்கள் நன்குழைத்து, ஆராய்ந்து, கீழ்க்கண்டசிறந்த உண்மையை எழுதியுள்ளார்கள். பௌத்தத்திற்கு முன்னையது சமணம் என்று, இந்தியாவில் பௌத்ததிற்கு முன்னதாக சமணம் தோன்றிய இக்கருத்தியலை பல ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக சமண மதத்தை தோற்றுவித்தவர் மகாவீரர் என்று பலரால் அறியப்படுகிறது. மகாவீரரின் இயற்பெயர் வர்த்தமானன் என்றும் வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. வர்த்தமானன் என்றால் வளமையைக் கொண்டு வந்தவன் என்று பொருள். இப்படி வர்த்தமானன் என்று

*அழைக்கப்பட்ட மகாவீரர் தான் சமண சமயத்தை தோற்று வித்தார் என்கிற கருத்து ஒரு புறம் இருக்க சில அறிஞர்கள் அக்கருத்தை மறுக்கின்றனர். ஏனெனில் மகாவீரர் 24-வது தீர்த்தங்கரராக கருதப்படுகிறார் அவருக்கு முன்னே 23 தீர்த்தங்கரர்கள் இருந்துள்ளனர் எனவே மகாவீரருக்கு முன்னரே சமணம் தோன்றியிருக்க வேண்டும். கி.மு. 599-முதல் கி.மு. 527-வரை வாழ்ந்துவந்த மகாவீர வர்த்தமானர் சமணத்தைக் தோற்றுவித்தவரல்லர் என்பதும், அன்னாருக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்குமுன் வாழ்ந்த பார்சவநாதர் (23-வது தீர்த்தங்கரர்), வரலாற்று நூலிலே குறிக்கப் பெறுகின்றார் என்பதும், எல்லோராலும் இக்காலத்திலும் ஒப்புக் கொள்ளப்பெறும் உண்மைகளாகும். இப்படியிருக்க சமணத்தை உண்மையில் தோற்றுவித்தவர் மகாவீரரா? பார்சவ நாதரா? அல்லது ஆதி தீர்த்தங்கரர் என்று சொல்லப்படுகின்ற ரிஷப தேவரா? எனும் குழப்பம் நிலவுகிறது. எனினும் சமணம் எனும் மதம் தீர்த்தங்கரர்களால் உருவாக்கப்பட்டவை அல்ல. சமணத்தின் கோட்பாடுகளும் கருத்தியலும் வாழ்வி யலும் தத்துவங்களாக நிலைபெற்று அவை ஆதி நாதரான ரிஷப தேவர் முதல் வர்த்தமான மகாவீரர் வரை கடத்தப்பட்டு இம்மண்ணில் மகாவீரர் உச்சம் பெற்றது எனலாம். பின்னர் அவரையும் அவர் தத்துவத்தையும் பின்பற்றும் அடியார்களை ஜைனர்கள் என்றும் தமிழில் சமணர்கள் என்றும் அழைத்தோம். சிலர் சமணர்கள் வேறு ஜைனர்கள் வேறு என்று சொல்கிற கூற்றும் இங்கு நிலவுகிறது.*

*சமணம் அல்லது ஜைனம் என்கிற சொல்லின் பொருளை வரையறை செய்யும் பொருட்டு... அதன்பால் பல்வேறு வரையறைகள் பலரால் முன்வைக்கப்படுகின்றன. சமணம் என்கிற அதாவது ஜைனம் என்கிற சொல் 'JI' (ஜீ) என்ற சமஸ்கிருத சொல்லிலிருந்து பெறப்பட்டது ஆகும். என்றும் சமணம் என்னும் சொல் 'சிரமண' என்னும் வட சொல்லின்*

*திரிபாகும். அதனால் 'சிரமணர்' தமிழில் 'சமணர்' என்று அழைக்கப்பட்டனர். 'சிரமணர்' என்பதற்கு இன்ப துன்பங்களைச் சமமாக எதிரக்கொள்பவர் என்று பொருள் கொள்ளலாம். நட்பு, பகை அற்றவர் என்றும் கூறலாம். என்றும் அமணர் என்ற சொல் சமணராக மருவியது என்றும் சமணர்களைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகிறது. சமணர் என்கிற பெயர் தமிழ்நாட்டில் குறிபிடப்படுகிறது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் திகம்பர சமணர்கள் வாழ்ந்து வந்தனர். அதாவது திசையையே ஆடையாக உடுத்தியவர்கள். (ஆடை அணியாதவர்கள்) எனவே தமிழர்கள் ஆடையற்ற இவர்களை அமணர்கள் என்று அழைத்ததாகவும் பின்னர் அமணர்கள் சமணர்களாக மருவியதாகவும் கூறுவர். தேவாரத்தில் சம்பந்தர் கூட அதிகமாக சமண என்றும் அமண் என்றும் அமண என்றும் அடிக்கடி குறிப்பிடுகிறார். மேலும் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் 'SHRAMANA' என்கிற சமஸ்கிருத சொல்லிருந்து வருவிக்கப்பட்டதே சமணம் என்றும் , 'SHRAMANA' என்ற சொல் புத்த,சமண என்ற இரண்டையும் இணைத்துக் குறித்தது. பின்னாளில் சமணத்தை மட்டும் குறித்தது என்று குறிப்பிடுகிறார்.*

**சமணமும் அதன் கோட்பாடும்**

*சமண சமயத்தை பொறுத்தவரை அச்சமயத்தின் அடித்தளமாக கருதப்படுகின்ற தீர்த்தங்கரர்கள் முன்வைத்த அமைதியும் அகிம்சையும் தான் அதன் மையத் தத்துவமாகத் திகழ்கின்றன. அச்சமயத்தின் 24 தீர்த்தங்கரர்கள் இருப்பதாகவும் அவர்களின் பெயர்களையும் காலத்தையும் உயரத்தையும் சமண இலக்கியத்தின் வாயிலாக அறியலாம். 24 தீர்த்தங்கரர் ஒவ்வொருவருக்கும் முறையே தனித்தனியாக வாகனங்களை வைத்தும் அவர்களை அடையாளப் படுத்தலாம்.*

| பெயர் | உயரம் | ஆயுள் |
|---|---|---|
| விருஷபர் | 500-வில் | 84 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| அஜிதநாதர் | 450-வில் | 71 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| சம்பவநாதர் | 400-வில் | 60 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| அபிநந்தனன் | 350-வில் | 50 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| சுமதிநாதர் | 300-வில் | 40 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| பதுமநாதர் | 250-வில் | 30 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| சுபார்சவநாதர் | 200-வில் | 20 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| சந்திரப்பிரபர் | 150-வில் | 10 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| புஷ்பதந்தர் | 100-வில் | 2 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| சீதளநாதர் | 90-வில் | 1 லட்ச பூர்வ ஆண்டுகள் |
| சிறீயாம்சநாதர் | 80-வில் | 80 லட்ச ஆண்டுகள் |
| வாசுபூஜ்யர் | 70-வில் | 72 லட்ச ஆண்டுகள் |
| விமலநாதர் | 60-வில் | 60 லட்ச ஆண்டுகள் |
| அநந்தநாதர் | 50-வில் | 30 லட்ச ஆண்டுகள் |
| தருமநாதர் | 45-வில் | 10 லட்ச ஆண்டுகள் |
| சாந்திநாதர் | 40-வில் | 1 லட்ச ஆண்டுகள் |
| குந்துநாதர் | 35-வில் | 95 ஆயிரம் ஆண்டுகள் |
| அரநாதர்3 | 0-வில் | 84 ஆயிரம் ஆண்டுகள் |
| மல்லிநாதர் | 25-வில் | 55 ஆயிரம் ஆண்டுகள் |
| முனிசுவர்த்தர் | 20-வில் | 30 ஆயிரம் ஆண்டுகள் |
| நமிநாதர் | 15-வில் | 10 ஆயிரம் ஆண்டுகள் |
| நேமிநாதர் | 10-வில் | 1 ஆயிரம் ஆண்டுகள் |
| பார்சுவநாதர் | 9-முழம் | 100 ஆண்டு |
| மகாவீரர் | 7-முழம் | 72 ஆண்டுகள் |

இத்தகைய 24 தீர்த்தங்கரர்கள் உபதேசித்த கோட்பாடுகள் சமணத்தின் உயரிய தத்துவங்களாக கருதப் படுகின்றன. சமணத் தத்துவம் என்பது ஆறு மெய்ப்பொருள்களில் உயிர், உயிரற்றதுகுறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, அதனால் பெறப்பட்ட இறுதி முடிவை ஒட்டி தருவிக்கப்பட்ட கொள்கைகளேயாகும்.மேலும் தீர்த்தங்கரர் என்றால் பிறவிக் கடலைக் கடக்க உதவுபவர் என்று பொருள். இத்தகைய தீர்த்தங்கரர்கள் மனிதன் நிர்வாணப் பேறு (மோட்சத்தை) அடைய உரிய வழியை காட்டுபவர்கள். சமணர்கள் தங்களால் உணர முடியாத கடவுள் இருப்பதாக அவர்கள் கூறவில்லை. கிட்டத்தட்ட இதுவும் கடவுள் மறுப்பு வாதத்துடன் ஒன்றுபட்டது தான். மாறாக 18 வித குற்றங்களை கலைந்து, தர்மத்தை உணர்ந்து, அதனையே அறிவித்த மகான்களை "ஆப்தன்" அல்லது "ஜினன்" (கடவுள்) என்று சொல்கிறது. சமணம் பட்டியலிடும் 18 வித குற்றங்கள் "பசி, தாகம், பயம், ஆசை, கோபம், மயக்கம், சிந்தனை, மூப்பு, வியாதி, இறப்பு, வியர்வை, இளைப்பு, கர்வம், பற்று, தூக்கம், வருத்தம் ." போன்றவனவையாகும். இது தவிர பேராசிரியர் தொ.பரமசிவம் அவர்கள் சமணர்களுக்கு ஆன்ம கோட்பாடு உண்டு என்றும் கூறுகிறார். இவை தவிர சமணர்கள் பரிநிர்வாணம் அடைய நான்கு வித தியானங்களை மேற் கொள்கிறார்கள். அவை,

1. ஆர்த்த தியானம் – தூக்கத்திலிருந்து விடுதலை
2. ரௌத்திரதியானம் –கொலை,கொள்ளை,ஏமாற்றுதல் போன்றவற்றிலிருந்து விடுதலை
3. தர்ம தியானம் – முன்னோர்கள் வகுத்த நல்வழியை சிந்தித்தால்
4. சுக்ல தியானம் – ஆன்மாவின் உண்மையை உணர்தல்

**தமிழ்நாட்டில் சமணம் வந்த விதம்**

*தமிழ்நாட்டில் சமணம் எப்பொழுது வந்தது என்பது பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவியவண்ணம் உள்ளது. இதுகுறித்து மயிலை சீனி. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் மகாபாரத காலத்திலேயே அதாவது கண்ணபிரானுடைய காலத்திலேயே சமணர்கள் தமிழ்நாட்டிற்க்கு வந்ததாக தெரிகிறது. 22-வது தீர்த்தங்கரராகிய நேமிநாதசுவாமி கண்ண பிரானுடைய நெருங்கிய உறவினர் என்றும் கண்ணபிரான் எதிர்காலத்தில் 24-வது தீர்த்தங்கரராக பிறந்து சமண சமயத்தை நிலைநாட்டப் போகிறார் என்றும் சமண நூல்கள் கூறுகின்றன. இக்கால சமணர்களது நம்பிக்கையும் இதுவே. கண்ணபிரானும் அவரைச் சேர்ந்தவர்களும் சமண சமயத்தவர்கள் என்றே சமண சமய நூல்கள் கூறுகின்றன. இக்கருத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் பேராசிரியர் சக்கரவர்த்தி அவர்களும் பின்வருமாறு தனது கூற்றை விவரிக்கிறார். "சமணசமயப் பரம்பரைச் செய்திகளின் படி , மகாவிரர் மகாபாரதத்தில் புகழப்பெறுகின்ற கண்ணபிரானின் ஒன்றுவிட்ட சகோதரரும்22-வது தீர்த்தங்கர ராகிய நேமிநாதர் என்பவர்வேதங்களில் அரிஷ்டநேமி என்று குறிக்கப்பெறுவதைக் காண்கின்றோம். மகாபாரதக் கண்ணன் ஒரு வாசுதேவராகச் சமணர்களாலும் ஒப்புக்கொள்ளப் பெறுகின்றார். வருங்காலத்தில் ஒரு தீர்த்தங்கரராகஅவர் பிறப்பாரென்று சமணர்கள் கருதுகின்றனர்."மேலும் சந்திர குப்த மௌரியர் சமண சமயத்தை தழுவி ஆட்சி அரச பதவி களைத் துறந்து சமணத் துறவியாக தென்னிந்தியா நோக்கி வருகை புரிந்தார். அவர் கர்நாடக மாநிலத்தில் உள்ள சரவணபெலகோளா என்கிற இடத்தில் சமண முறைபடி பசித்திருந்து வடக்கிருந்து உயிர் நீத்தார் என்பது வரலாறு. இவ்வாறு சந்திரா குபத்த மௌரியரின் தென்னிந்திய வருகையின் பொது அவரைப் பின் தொடர்ந்து பல சமணத் துறவிகள் தென் திசை நோக்கி வந்திருக்கலாம் . இதனை மெய்ப்பிக்கும் வகையில் மகாவீரர் வீடுபேறு அடைந்தபின்*

அவர்களின் சீடர்களான கௌதம இந்திரா பூதி மற்றும் சுதர்மர் ஆகியோர் மகாவீரருக்குப் பின் இந்திரா பூதி சமண சமயத் தலைவராகத் திகழ்ந்தார். சுதர்மர் சமயக் குரவராக விளங்கினார். சுதர்மருக்குப் பின் அவரது சீடரான சம்பு ஸ்வாமியும், விட்ணு தேவரும் பின்னர் நந்தி மித்திரரும் அவருக்குப்பின் அபராசிதரும் அவருக்குப் பின் கோவர்த்தனரும் அதனைத்தொடர்ந்து பத்திரபாகுவும் சமய குரவராக இருந்தார். இந்த பத்திரபாகு முனிவர் காலத்தில் தான் தமிழ்நாட்டில் சமணம் நுழைந்தது என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி நாட்டார்.

இந்த பத்திரபாகு முனிவர் சமண சமயத் தலைவராக(கி. மு.317–கி.மு.297) மட்டுமல்லாது மௌரிய பேரரசர் சந்திரகுப்தருக்கு சமய குருவாக திகழ்ந்தார். மகத நாட்டில் பன்னிரெண்டு ஆண்டுகள் வற்கடம் (வறட்சி /பஞ்சம்) வரப்போவதை அறிந்து அந்த அரசனுக்கு தெரிவித்து பத்திரபாகு அவரைச் சார்ந்த 12 ஆயிரம் சமணர்களை அழைத்துக்கொண்டு தென்னிந்தியா புறப்பட்டார் . அப்போது சந்திரகுப்த மௌரியர் தனது அரச பதவியைத் துறந்து துறவு மேற்கொண்டு பத்திரபாகு முனிவனுக்கு சீடனாக இருந்து தென்னிந்தியா புறப்பட்டார். பத்திரபகுவும் அவரது சீடர்களும் மைசூரில் தாங்கினார்கள். அவரது சீடரில் விசாக முனிவர் என்பவரை மட்டும் பாண்டிய மற்றும் சோழ பகுதிகளில் சமணத்தை பரப்ப அனுப்பினார். இவ்வாறு தமிழ்நாட்டில் சமணம் பரவியது. இந்தச் செய்திகளை சமண சமய நூல்களின் வாயிலாகவும் அரிசேனர் இயற்றிய பிரகத் கதா கோசம் எனும் நூலிலும் ராஜாவளி எனும் நூலிலும் அறியலாம்.

இது தவிர தமிழ்நாட்டில்மதுரை மாவட்டத்தில் கி. மு மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்த பல சமண கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இவை இக்கருத்தை மெய்ப்பிக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் மாங்குளம், அழகர்மலை ஆகிய இடங்கலைல கண்டுபிடிக்கப்பட்டுள்ள குகைக் கல்வெட்டுகள்

கி.மு-1 மற்றும் 2 ம் நூற்றாண்டை சேர்ந்தவை என்றும் அவை சமண சமயத்தை சார்ந்தவை என்றும் வியப்பூட்டும் செய்தியைத் தருகிறார் கல்வெட்டாய்வாளர் ஐராவதம் மகாதேவன். ஆந்திர மாநிலம் , நெல்லூர் மாவட்டம் கண்டகூர் பகுதியில் மாலகொண்டா எனும் மலைமேல் உள்ள குகையில் எழுதப்பட்ட சாசனம் ஒன்று உள்ளது. அங்குள்ள கல்வெட்டு பிராகிருத மொழியில் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டுள்ளது. இது கி.மு 3 ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டாகும் அச்சாசனம் தெரிவிக்கும் செய்தியாவன; “அருவாஹி (ள) குளத்து நந்த செட்டி, மகன் சிறீவீரி செய்வித்த குகை” இக்குகை ஒரு சமணக் குகை என்றும், அருவாளர் என்பவர்கள் சமண சமயத்தை பின்பற்றியவர்கள் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்க்கு சமண சமயம் பரவியதாகவும், அதற்க்கு சான்றாக கொங்கு மண்டலத்தை சார்ந்த புகழியூர் எனும் ஊரில் கி.மு-3 ம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமி கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. பின்னர் அங்கிருந்து பாண்டிய, சோழ நாடுகளுக்கும் பின்னர் தொண்டை மண்டலத்திற்கும் சமணம் பரவியது. அதற்க்கு சான்றாக பாண்டிய நாட்டுப் பகுதிகளில் கி.மு-2,3 நூற்றாண்டுகளைச் சேர்ந்த பிராமி கல்வெட்டுகள் ஆங்காங்கே கிடைக்கிறது. கி.பி.-3 ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி கல்வெட்டுகள் தொண்டை நாட்டிலும் கிடைக்கின்றன. இதன் மூலம் முதலில் கொங்கு மண்டலத்திலிருந்து பாண்டி நாட்டிற்கும் பிறகு தொண்டை மண்டலத்திற்கும் சமண சமயம் வந்திருக்கக் கூடும். எப்படியாயினும் பல்வேறு கல்வெட்டுகள் கி.மு-3ம் நூற்றாண்டில் சமணம் தமிழ் நாட்டிற்கு வந்த செய்தியை தெளிவாக உறுதிப்படுத்துகிறது.

மேலும் இதே கருத்திற்க்கு வலிமை சேர்க்கும் விதமாக இலங்கையில் உள்ள மகாவம்சம் நூலின் வாயிலாக அறியலாம். கி.மு377 முதல் கி. மு.307 வரை இலங்கையை

*ஆண்டு வந்த பாண்டுகாபயன் எனும் அரசன் இலங்கை அநுராதபுர நகரத்தில் சோதியன், கிரி, கும்பண்டன் ஆகிய நிகண்ட (சமண) மத குருமார்களுக்கு பள்ளிகள் அமைத்துக் கொடுத்ததாக மகா வம்சம் கூறுகிறது. இந்த பாண்டுகாபயன் காலமும் சந்திரகுப்த மௌரியர் காலமும் சமகாலமாக உள்ளது. எனவே இதன் மூலம் இலங்கையில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சமணம் இருந்தமைக்கான ஆதாரம் உள்ளன. ஆனால் சமண சமயம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பரவியதென்றால் எப்படியாயினும் தமிழ்நாட்டின் வழியாக தான் சென்றிருக்க வேண்டும். வடநாட்டில் இருந்தே கப்பல் ஏறி கடல் கடந்து இலங்கைக்கு சென்றிருக்க முடியாது. ஏனென்றால் அவர்களின் சமய மார்க்கம் நீண்ட கடலை கப்பலில் கடந்து செல்வதை எதிர்க்கிறது. எனவே தமிழ்நாட்டில் ஆழமற்ற கடல் பகுதியான ஒரு நாளில் இலங்கைக்கு கடந்து செல்லும் தூரத்தில் இருந்த மன்னார் வளைகுடா பகுதியிலிருந்து இலங்கை சென்றிருக்க வேண்டும். எனவே அப்போது தமிழ்நாடு வந்த சமணர்களால் தமிழ்நாட்டில் சமணம் பரவியிருக்க வேண்டும்.*

### தமிழ்நாட்டில் சமணப் பரவலும் ஆதரவும்

*தமிழ்நாட்டில் சமணம் பரவிய காலம் பற்றி பல்வேறு கருத்துகள் நிலவினாலும் பெரும் அறிஞர்கள் பட்டாளம் சமணர்கள் கி.மு-3 முதல் 2-ம் நூற்றாண்டில் தான் தமிழ் நாட்டிற்கு வந்ததாக கூறுகிறார்கள். கி.மு 3-ம் நூற்றாண்டில் சமணர்கள் தமிழ்நாட்டில் நுழைந்திருந்தாலும் அவர்கள் சங்கம் மருவிய காலம் என்று சொல்லப்படுகின்ற சங்க கால நிறைவுக் காலத்தில் தான் பெருமளவு செல்வாக்கு பெறாத் தொடங்கினார்கள். சமணர்கள் தமிழ் மண்ணில் நிலைக்கத் தொடங்கிய காலத்தில் சமணத்தோடு ஒத்த கோட்பாடுடைய பௌத்தமும் இங்கு வேரூன்றியது. தமிழ்நாட்டில் சமணம் மக்களிடம் தமது நெறிமுறைகளையும் தத்துவங்களையும் கொண்டு செல்வதற்க்கு உள்ளபடியே பல கடின சூழல்களைக்*

கடந்தனர். ஒன்று; ஆயிரம் ஆண்டுகளுக்கு வடக்கிலிருந்து தெற்கு வந்த வைதீக மதங்களுக்கு மக்கள் தங்களை மாற்றியப் பின் அவ்வைதீக மதங்களுடன் சமணம் போராட வேண்டிய தாயிற்று. ஏற்கானவே ஒரு சமயத்தையும் அது சார்ந்த நம்பிக்கைகளையும் பின்பற்றும் மக்களிடம் மேலும் ஒரு புதிய மதம், புதிய தத்துவம், புதிய கோட்பாடு, புதிய நம்பிக்கை இவற்றை மக்களை ஏற்கச் செய்ய இத்தனை சவால்களையும் சமணம் சந்திக்க வேண்டியதாயிற்று. இது தவிர சமணத்தோடு ஒன்றிய கருத்துடைய பௌத்தமும் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கியது. இது புதிய எதிரியாக சமணத்திற்க்கு உருவெடுத்தது. எனவே சமணத்திற்க்கும் பௌத்ததிற்கும் இடையே அடிக்கடி சமயச் சண்டைகள் நிலவியது. இதனை தமிழும் பௌத்தமும் என்று மயிலை. சீனி.வேங்கடசாமி அவர்கள் எழுதிய நூலின் வாயிலாக அறியலாம். இரு சமய சண்டைகளால் பல புத்த சமய கோவில்கள் சமண சமயக் கோவில்களாக மாற்றப்பட்டன. மேலும் சமணர்கள் காஞ்சி காமக்கோட்டத்தில் கி. பி-8 ம் நூற்றாண்டில் பௌத்தர்களுடன் சமய வாதம் செய்து அதில் தோற்ற பௌத்தர்களை சிங்கள நாட்டிற்கு நாடு கடத்திய தாகவும் தெரிகிறது. மேலும் சமணர்களுக்கும் பௌத்தர் களுக்கும் அடிக்கடி சமய சண்டைகள் நடந்தன அவற்றின் சமணர்களின் கைகளே ஓங்கியிருந்தன.

சமணம் தமிழ்நாட்டில் இருந்த வைதீக சமயங்கள் பின்பற்றிய பிறப்பால் மனிதன் உயர்வு தாழ்வு பாகுபாட் டினைப் பின்பற்றவில்லை,யவராயினும் தம் சமய மார்க்கத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களைப் போற்றினார்கள். இதனை சமண நூலான அருங்கல செம்பு எனும் நூலின் வாயிலாக அறியலாம்.

**“பறையன் மகனெனினும் காட்சி யுடையான்**
**இறைவன் எனஉணரற் பாற்று”**

இந்த அருங்கால செம்பு சமண நூலின் நற்காட்சி அதிகாரத்தில் இடம்பெறும் இப்பாடலில் தமிழ்நாட்டில் தாழத்தப்பட்ட சமூகமாக கருதப்பட்ட பறையர் இன மக்களா யினும் நல்நம்பிக்கை உடையவன் யாவரும் இறைவனின் பெருமையை அடைந்தவன் என குறிப்பிடுகிறது. மேலும் தமிழ் மண்ணில் சமணம் நிலைபெற பலவித முயற்சிகளை மேற்கொண்டனர். குறிப்பாக நான்கு விதமான தானங்களை சமணர்கள் செய்தார்கள்.

அன்னதானம் - உணவுக் கொடை

அபய தானம் - அடைக்கலக் கொடை

ஔடத தானம் - மருத்துவக் கொடை

சாத்திர தானம் - கல்விக் கொடை

உள்ளிட்ட பலக் கொடைகளை சமணர்கள் செய்ததாக சமண நூலின் வாயிலாக அறியலாம். ஏழை எளியவர்களுக்கு உண்ண உணவும் , எதிரிகளைக் கண்டு அஞ்சி வந்தவர்களுக்கு அடைக்கலமும் சமணர்கள் கொடுத்தனர். அப்படி அவர்கள் அடைக்கலம் கொடுக்கும் இடங்களுக்கு "அஞ்சினான் புகழிடம்" என்று பெயர். தென் ஆற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் தாலுகா ஜம்பை எனும் கிராமம் அருகில் சமணர்களின் சாசனம் ஒன்று கிடைத்துள்ளது."ஜம்பை எனும் கிராமத்திற்கு வீரராசேந்திர புரம் என்று பெயர் இருந்ததாகவும் அங்கு அங்கு கண்டராதித்தப் பெரும்பள்ளி எனும் சமணக் கோவில் இருந்ததாகவும் அங்கு அடைக்கலம் புகுபவரை காப்பாற்ற வேண்டுமென்பது அப்பள்ளியில் எழுந்தருளிய நேமிநாதசாமியின் ஆணை" என்றும் அந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு அவர்கள் அடைக்கல தானம் செய்து வந்தது உறுதியாகிறது. சமணர்கள் ஔடத தானம் என்று சொல்லப்படுகின்ற மருத்துவக் கொடையை அளித்துள்ளனர். இதனை அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்க்கு

அறிவுக்கொடையாக அளித்த ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஆகிய நூல்களின் வாயிலாக உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் சமணர்கள் தமிழ் நிலத்தில் செய்த கல்விக் கொடை பெரும் புரட்சி என்று வர்ணிக்கும் வகைக்கானது. கல்வி முறையில் சமணர்கள் உள்நாட்டுத் தாய்மொழியினை கடைபிடித்தனர். இது புரியாத மொழியில் தெரியாத வேதத்தை கற்ற தமிழர்களுக்கு பெருவரமாக அமைந்தது. மேலும் வைதீக வேத சாத்திரங்களை குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே படித்தல் வேண்டும். பிற சாதியினர் படித்தால் கூடாது என்கிற ஆரிய வேத அறத்தின் தாக்கம் தமிழ் நாட்டிலும் இருந்தது. எனவே தான் தமிழர்களில் கற்றறிந்த சங்கப் புலவர்கள் சாதிய ஒழுகுமுறை பின்பற்றப்பட்ட வைதீக வேத அறங்களைப் பாடாது மக்களின் அகம் புறம் சார்ந்த அற இலக்கியங்களைப் பாடினார்கள். ஏன் சங்கப் புலவர்கள் வேதத்தைப் பாடவில்லை? அவர்களும் வேதத்தைப் படிக்க கூடாது என்கிற சாதிய பாகுபாடுகளுக்கு உட்படுத்தப் பட்டார்களா? அப்பாகுபாடுகளால் சினந்து வேதத்தைப் துறந்து(புறக்கணித்து) மக்கள் அறத்தைப் அவர்கள் பாடினார்களா? என்கிறக் கருத்தெல்லாம் ஆய்வுக்குறியன. எனினும் கற்பதில் பாகுபாடு காட்டப்பட்ட காலத்தில் சமணர்கள் அம்மண்ணின் உள்நாட்டுத் தாய்மொழியில் கல்வியை கொடையாக கொடுத்தது மாபெரும் புரட்சியாகும். மேலும் அவர்கள் புரியாத மொழியில் கல்வி வழங்கப்படுவதை வரவேற்க்கவில்லை. கடுமையாக எதிர்த்தனர்.

சமணர்கள் தான் பள்ளிக் கூடங்களை இம்மண்ணில் அறிமுகம் செய்து வைத்தார்கள். திகம்பரத் துறவிகள் கல்வி தானம் செய்வதற்காக பிள்ளைகளை தங்கள் இருப்பிடத்திற்க்கு அழைத்தனர். அவர்களின் குகைகளில் சமணர்களின் பள்ளித் தளத்தில் தான் அமர்ந்து கல்வி கற்றனர். பிள்ளைகள் பள்ளித்தளத்தில் அமர்ந்து கல்வி கற்றதால் கல்விக்கூடங்கள் பள்ளிக் கூடங்கலாயின. இன்றும் நம்மோடு புழக்கத்தில்

இருக்கும் பள்ளிக்கூடம் எனும் சொல் சமணர்களின் பள்ளிகளிலிருந்து வந்ததாகும்.

சமணர்கள் பெண்களையும் தங்களது அறப்பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டனர். சமணர்கள் ஆண் பெண் பாடுபாடு பார்த்தவர்களாகவும் தெரியவில்லை. தமிழ்நாட்டில் 50-க்கும் மேற்பட்ட சமணப் பள்ளிகள் இருந்துள்ளன. அங்கு ஆண் துறவிகளைப் போல பெண் துறவிகளும் இருந்துள்ளனர். 'கனகல குரத்தியார்' 'பட்டினிக் குரத்தியடிகள்' 'மாணாக்கன்' 'மாணாக்கி' போன்ற பல சொற்கள் சமண கல்வெட்டுகளில் காணப்படுகிறது. ஒன்பது மற்றும் பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த பல சமண கல்வெட்டுகள் சமண பெண் துறவிகள் சிறிது கல்விப் பணி செய்து வந்ததை உறுதிப்படுத்துகிறது.

சமணர்கள் நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் மலைக் குகைகளிலும் அதிகமாக வாழந்தனர். மேலும் பல பள்ளிக் கூடங்களை நிறுவி தமிழில் பல அரிய நூல்களையும் இலக்கண நூல்களையும் இயற்றி பொது மக்களுடன் தங்களிடையிலான தொடர்பை உறுதிப்படுத்திக் கொண்டனர். இவர்களின் இந்த முயற்சி எளிதில் சமணம் மக்களிடம் பரவ வழி வகுத்தது. சமணர்கள் மொழியாளும் இனத்தாலும் நாகரீகத்தாலும் அன்னியர்கள் தான். ஆனால் இவ்வளவு ஆழமாகவும் அழகாகவும் அவர்களால் நிலைத்து நிற்கக் கூடிய இலக்கணத்தை தமிழில் படைக்க முடிந்ததென்றால் அவர்கள் தமிழ் மொழிக்கு அன்னியமாக இருந்திருக்க முடியாது.

இப்படி மக்களிடம் செல்வாக்கை முதலில் பெற்ற சமணம் பின்னர் அரசியலில் மன்னர்களின் ஆதரவையும் பெறாத் தொடங்கியது. களப்பிரர்,பாண்டியர்,பல்லவர் போன்ற அரசர்களும் அரச மரபைச் சார்ந்தவர்களும் சமண சமயத்தை போற்றி ஆதரித்து வளர்த்து வந்துள்ளனர். 7-ம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனான மாறவர்மனும்

காஞ்சியை ஆண்ட பல்லவ அரசன் மகேந்திரவர்மானும் சமண சமயத்தை தழுவியிருந்தனர். அரச ஆதரவு பெற்றதாக சமணம் அக்காலத்தில் விளங்கியதால் பொது மக்களும் அரச ஆதரவைப் பெற அச்சமயங்களைத் தழுவத் தொடங்கினார். மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசா பிரகாசம் என்கிற நூலின் வாயிலாகவும் சமணக்கருத்துகளை வெளிப்படுத்தினான். மேலும் முதலாம் ராஜாராஜா சோழனின் தமக்கையான குந்தவை திருமலை முதலான பல இடங்களில் சமண சமயக் கோவில்களைக் நிறுவியதாகவும் கூறப்படுகிறது. பல அரச குலங்கள் சமண சமயத்தை போற்றி ஆதரித்ததோடு மட்டுமல்லாது அதற்கு உதவிகளும் அளித்து வந்துள்ளனர். பல மன்னர்கள் சமண சமயத்தை போற்றி வளர்க்க ‘பள்ளிச் சந்தம்’ போன்ற தானங்களை வழங்கியுள்ளனர். பள்ளிச் சந்தம் என்றால் சமணக் கோவில், மடங்கள், அறநிலையம் உள்ளிட்டவைகளுக்கு அரசு சார்பில் வழங்கப்படும் தானம் ஆகும். இவ்வாறு சமணம் பொதுமக்கள் மற்றும் மன்னர்களின் ஆதரவோடு தமிழ் மண்ணில் நிலைபெறலாயின.

### தமிழ்நாட்டில் சமண எதிர்ப்பும் விளைவும்

எந்த அளவிற்கு தமிழ் நாட்டில் சமணம் வெகுஜன ஆதரவு மற்றும் அரச மரபுகளின் ஆதரவுகளோடு பரவியதோ.. அது பரவிய வேகத்திலேயே பெருத்த வீழ்ச்சியயும் கண்டது எனலாம். கி.பி.3-ம் நூற்றாண்டு வரை செழித்திருந்த சமணம் கி.பி.-6 ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டு பக்தி இயக்க காலத்தில் பேரழிவை சந்தித்தது. ஒரு புறம் பக்தி இயக்கத்தைப் பரப்பிய சமயக் குரவர்களின் பெரும் கருத்தியல் தாக்கத்தை எதிர்கொள்ள இயலாமல் சமணம் திணறியது, மறுபுறம் மக்கள் ஏற்றுக்கொள்ளவியலாத நடைமுறைக்கு ஒவ்வாத பல நம்பிக்கைகளைச் சமணமும் சமணத் துறவிகளும் பின்பற்றினார்கள். இது பொது மக்களை சமணர்கள் மீது வெறுப்படயச் செய்தது. மேலும் சமணத்தை தழுவிய அரச மரபுகளும் பக்தி இயக்க தாக்கத்தால் மீண்டு வைதீக

சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினார். இது சமணத்திற்கு பேரிடியாக விளங்கியது. எந்த மன்னர்களால் சமணம் போற்றி வளர்க்கப்பட்டதோ, யாரால் தமிழ்நாட்டில் சமணப் பள்ளிகள் எழுப்பப்பட்டதோ, எந்த மன்னர்களால் சமணத் துறவிகள் ஆதரிக்கப்பட்டார்களோ அதே மன்னர்களால் சமண சமயம் வெறுக்கப்பட்டது. அவர்களாலயே சமண அடையாளங்கள் பெரிதும் அழிக்கப்பட்டது. பல சமணர்கள் கொல்லவும் பட்டனர்.

சமணம் கிமு. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு பல தரப்பு எதிர்ப்புகளால் நசுக்கப்பட்டது. வேத சமய எதிர்ப்புப் பரப்புரைகளுக்கும் உள்ளானது.சமணர்கள் மக்களுக்கு போதித்த கல்விமுறையானது தமிழர்களின் வழிவந்த அறத்தை மறத்தையும் வழுவிழக்கச் செய்வதாகவும். இதனால் தமிழர்கள் கோழைகளாயினர் என்கிற பெரும் குற்றச்சாட்டை வைக்கிறார் பெரும்புலவர் குழந்தை அவர்கள். அகிம்சை எனும் பெயரில் சமணர்களின் போதனைகளால் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று ஆகியவற்றை இழந்ததாக கூறுகிறார். சமணர்கள் தங்கள் சமய நம்பிக்கைகளால் பல அறிவிற்கொவ்வாத செயல்களை செய்தனர். அவர்கள் தலையில் உள்ள மயிர்களைப் பறித்து, முண்டிதம் செய்து கொண்டு, கூறையைக் கட்டிக் கொண்டு, பீலியை இடையில் சொருக்கிக் கொண்டும் செல்வார்கள். உணவை இரு கைகளால் ஏந்தி நின்று கொண்டு தான் உண்பார்கள். பல் தேய்க்காமல் பாசி படர்ந்தும், உடல் குளிக்காமல் சுத்தமற்றும் இருந்தனர். மேலும் அவர்கள் கண்களில் பீழைக் கட்டிக்கொண்டு எப்போதும் கொசுக்கள் மொய்த்துக் கொண்டே இருப்பதாய் தேவாரத்தில் கூட குறிப்புகள் உள்ளன. அவர்கள் தலைமயிர் மற்றும் உடம்பிலுள்ள அனைத்து மயிர்களையும் இமை புருவம் உட்பட அனைத்தையும் கைகளால் பிடுங்கும் லோச்சனம் எனும் நோன்பினை இருந்துள்ளனர். இது பற்றி திருநாவுக்கரசர் கூட சமணத்திலிருந்து சைவத்திற்க்கு மாறிய

பின்பு சமணனாக இருந்த அனுபவத்தை தேவாரத்தில் வடித்துள்ளார்.

**குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார்**
**நகைநாணா துழிதர்வேனைப் பண்டமாப்**
**படுத்தென்னைப் பாறலையிற் .........**

இத்தகைய சமணர்களின் தோற்றம் மக்களிடமிருந்து அவர்களை அன்னியப்படுத்துவதாகவும் மக்களை அவர்கள்மீது வெறுப்படையச் செய்வதாகவும் இருந்தது.

சமணர்கள் வீழச்சிக்கு மற்றுமொரு காரணம் அவர்கள் மேற்கொண்ட கடினமான துறவு நெறி எனலாம். சமணமும் பௌத்தமும் தான் தமிழ்நாட்டிற்க்கு துறவு நெறியை அறிமுகப்படுத்தியது. துறவு என்றால் திருமணம் வேண்டாத நிலையைக் குறிப்பதாகவே தமிழ்நாடு கருதியது. எனவே தமிழர்களால் சமணம் பௌத்தம் இவை இரண்டும் வலியுறுத்திய துறவு நெறியை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இந்நெறி அறிமுகமான காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் செல்வாக்கு பெறவில்லை. தமிழர்களின் அற நூல்களான சங்க இலக்கியம் கூட காதல், கற்பு, திருமணம் இவற்றைப் பற்றி அதிகமாக குறிப்பிடுகிறது. துறவு நெறியை முதலில் போற்றியத் தமிழராக வள்ளுவரைக் கருதலாம். ஆனால் வள்ளுவர் கூறிய அனைத்து அதிகாரங்களையும் ஏற்று நடந்த தமிழர்கள். கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், துறவு வாழக்கை இவை மட்டும் பின்பற்றப் படாமல் போயின. எனவே துறவு நெறியை சமணம் போற்றியதும் குடும்ப வாழ்வை சைவம் போற்றியதும் சமணத்தின் வீழச்சிக்கும் சைவத்தின் எழுச்சிக்கும் வித்திட்டது.

சமணர்கள் பின்பற்றிய நிர்வாண முறை முற்றிலும் தமிழர்கள் ஏற்கத்தக்கதாக இல்லை. திகம்பர சமணர்கள் திசையை ஆடையாக உடுத்தியதாக அடையற்று காட்சி யாளித்தனர். இதனால் ஆடையில்லா சமணத் துறவிகள்

மக்களுடன் தொடர்புகளற்று.மலைக் குகைகளில் வாழந்து வந்தனர். மேலும் நிர்வாண சமணர்கள் (திகம்பரர்கள்) பசித்த போது மட்டும் பிச்சை பெற்று உண்ண வேண்டும் என்றும், உணவை கலத்தில் ஏந்தாமல் கைகளில் ஏந்த வேண்டும் என்றும். நின்று கொண்டே உணவருந்த வென்றும் என்றும் சமண மதம் கட்டப்பாடுகளை விதித்திருந்தது. ஆடையில்லா சமணர்கள் பிச்சை எடுக்க ஊருக்குள் வரும் பொழுது பெண்கள் கேலி செய்ததாகவும்,பயந்து போய் கதவை தாழிட்டதாகவும் சமணத்திலிருந்து சைவம் திரும்பிய திருநாவுக்கரசர் வருந்தி பாடுகிறார்.

**சமண்நீசர் சொல்லே கேட்டுக்**
**காவிசேர் கண்மடவார்க் கண்டோடிக்**
**கதவடைக்கும் கள்வ னேன்றன்.........**

இவை தவிர வைதீக சமயத்திலிருந்து சமண சமயம் மாறிய பல்லவ பாண்டிய மன்னர்கள் மீண்டும் வைதீக சைவ சமயத்தை தழுவினர். குறிப்பாக நாவுக்கரசர் மகேந்திரவர்ம பல்லவனை சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்க்கு மாற்றினார். மதுரையில் கூன் பாண்டியன் எனும் மாற வர்மனை சம்பந்தரும் சமண சமயத்திலிருந்து வைதீக சமயத்திற்க்கு மாற்றினார்கள். இப்படி இவர்களுக்கு ஆதரவாக இருந்த மன்னர்களும் இவர்களுக்கு எதிராக திரும்பியது சமணம் இம்மண்ணில் பெரும் போர்க்களம் காண அடிகோலியது.

தீண்டாமையை வலியுறுத்திய வைதீக சமயத்திற்கு மாற்றாக அனைவரையும் போற்றி ஒழுகிய சமயமாக சமணம் விளங்கியது. ஆனால் அப்படிப்பட்ட சமணமே பின்னாளில் புதுவித தீண்டாமைக் கொள்கையைப் பின்பற்றியது. இவர்கள்பிற சமயத்தரையும் பிற துறவிகளையும் 'கண்டால் முட்டு' 'கேட்டால் முட்டு' என்று நவீனத் தீண்டாமையை பின்பற்றியது. மேலும் இதைப் பற்றி மனோன்மணீயம். தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்கள் சம்பந்தரும் சமணரும்

*எனும் நூலில் பின்வருமாறு விளக்குகிறார். எறும்பையும் ஈயையும் தொடவும் அஞ்சிய அன்புருவானோர், தம்மொடு மாறுபட்ட மக்களை 'கண்டு முட்டு' 'கேட்டு முட்டு' என்று அன்பிலாது பழித்துப் புறத்தே ஒதுக்கினார். இது அவர்கள் ஆரம்ப கால கட்டத்தில் அனைவரையும் ஒன்று போல பார்த்த மானப்பான்மைக்கு எதிரான ஒன்றாகும். இத்தகைய சமணர்களின் செயல் உள்ளபடியே தமிழர்களை வெறுப்படையச் செய்திருக்கும்.*

*பக்தி இயக்கத்தின் எழுச்சியும் வைதீக சமயத்திலிருந்த குறைபாடுகளைக் களைய புதிய சீர்திருத்தங்களுடன் பக்தி மார்க்கம் எழத்தொடங்கியது. இப்புதிய வைதீக சமயத்தின் எழுச்சிக்கு இடையே சமணர்களால் தாக்குப்பிடிக்க இயல வில்லை. அடிக்கடி சமணத்திற்க்கும் சைவத்திற்க்கும் இடையே தமிழ்நாடு முழுவதும் சண்டைகள் நிலவியவண்ணம் இருந்தன. குறிப்பாக இரு சமயங்களும் மாறி மாறி எதிர் எதிர் பரப்புரைகள் செய்தவரே இருந்தனர். மதுரை வந்த சம்பந்தர் பாண்டியமன்னன் மாறவர்மனின் வெப்பு நோயை தனது திருநீட்றின் மகிமையால் குணப்படுத்தினார். இதனால் மனம் மகிழ்ந்த பாண்டியன் சைவ சமயத்தை தழுவினான். சமணர்கள் மீது மன்னன் கோபம் கொள்ள சமணர்கள் சம்பந்தருடன் வாதம் செய்ய மன்னரிடம் அணுகினார், வாதத்தில் தோற்பவரை கழுவில் ஏற்றுமாறும் கூறினார்கள். இதனை மதுரையில் உள்ள எட்டு குன்றுகளில் வாழுகின்ற எண்ணாயிரம் சமணர்களும் வழிமொழிந்தனர். அனல் வாதம் , புனல் வாதம் என்கிற இரண்டு வாதம் நடைபெறுகிறது. இரண்டு வாதத்திலும் சம்பந்தர் வெல்லவே எண்ணாயிரம் சமணர்களையும் பாண்டியன் கழுவில் ஏற்றியதாக பெரிய புராணம், தக்கயான பரணி, போன்றவை குறிப்பிடுகின்றன.*

**கோதைவேல் தென்னன்தான் கூடல் குலநகரில்**
**வாதில் அமணர் வலி தொலையக்-காதலால்**

**புணர் கெழுவு செம்புனல் ஆறுஓடப் பொருதவரை**
**வன் கழுவில் தைத்த மறையோன்**

*என்று சம்பந்தர் குறித்து ஞானசம்பந்தர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி குறிப்பிடுகிறார்.*

**வேதப் பகைவர் தம்உடம்பு**
**வீங்கத் தூங்கும் வெங்கழுவிற்க்கு**
**ஏதப் படும்எண் பெருங்குன்றத்து**
**எல்லா அசோகும்' எனவே.**
**மண்ணா உடம்பு தம்குருதி**
**மண்ணக் கழுவின் மிசைவைத்தார்**
**எண்ணாயிரவர்க்கு எளியவரே**
**நாற்பத் தெண்ணா யிரவரே**

*எனும் தக்கயாகப் பரணி நூலில் ஒட்டக்கூத்தர் சமணர் கழுவேற்றம் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வாறாக சமணம் எண்ணற்ற மோதல்களை தமிழ்நாட்டில் கிபி. ஆறாம் நூற்றாண்டு முதல் சந்திக்க வேண்டியதாயிற்று. பின்னர் சமணர்கள் பிற்காலத்தில் கையாண்ட சடங்கு முறை , நோன்புகள், துறவுரம், நிர்வாணம், மற்ற பிற நம்பிக்கைகள் மக்களை வெறுப்படையச் செய்தது இப்படி பல்வேறு காரணங்களால் சமணம் தமிழ்நாட்டில் சிதைந்தது. சமணம் அழிந்தது என்று சொன்னாலும் அது முழுமையாக அழிய வில்லை இன்றும் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் சமணர்கள் வாழ்ந்துகொண்டுதான் உள்ளனர்.*

**முடிவுரை**

*அன்பையும் அகிம்சையையும் உலகிறக்கு கற்றுக் கொடுத்த ஏசு கிறிஸ்து தோன்றுவாதற்க்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவில் அன்பை விதைத்து இரண்டு சமயங்கள் வேரூன்றியது. ஒன்று சமணம் மற்றொன்று பௌத்தம். காலத்தோடு ஒப்பிட்டால் பௌத்ததிற்கு முந்தையது சமணம் எனப் புலப்படும். இந்தியாவில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய மகாவீரர் காலத்தில் சமணம்*

உச்ச நிலையை அடைந்தது. பின்னர் பத்திரபாகு முனிவரும் அவரப் பின் தொடர்ந்து வந்த சமணத் துறவிகளாலும் தென்னிந்தியாவில் சமணம் பரவியது. பின்னர் தமிழ்நாட்டிற்க்கு வந்த சமணம். பல எண்ணற்ற தடைகளையும் சவால்களையும் வைதீக சமய மாச்சரியங்களையும் கடந்து இம் மண்ணில் நிலை பெறலாயின. சடங்குகள், நம்பிக்கைகள், வேள்விமுறை, பலியிடுதல் என பல மூட நம்பிக்கைகளுக்கு இடையில் இருந்த வைதீக சமயத்தைப் பின்பற்றி வந்த மக்களுக்கு சமண சமயம் என்பது புது வித மார்க்கமாக தென்பட்டது., ஆரம்ப காலத்தில் சமணர்கள் அளித்து வந்த நான்கு வித தானங்களின் மூலம் அவர்கள் மக்களிடம் எளிதில் போய் சேர்ந்தனர். சமணம் குறித்து பல அறிஞர்கள் பல தரப்பட்ட கருத்துக்களை தெரிவித்தாலும் பேராசிரியர் அருணாசலம் அவர்கள் கூற்றுப்படி சமணர்கள் இனத்தாலும் மொழியலும் நகரீகத்தாலும் அந்நியராக இருக்கலாம். ஆனால் அவர்கள் தமிழ் மொழிக்கு அன்னியர் அல்ல. என்பது போல.. அவர்கள் தமிழுக்கு அன்னியமாக இருந்ததில்லை. தமிழில் தோன்றிய எண்ணற்ற பல இலக்கியங்கள் சமண சமயத்தை சேர்ந்தவை என்பது தமிழுக்கு அவர்கள் ஆற்றிய அறப்பணியை குறிக்கிறது. சமணர்கள் செய்த கல்விப் பணி கல்வி முறையில் இருந்த சமூக பாகுபாட்டை நீக்கியது எனலாம்.

சமணமும் பிற்காலத்தில் பல கட்டுப்பாடுகள் தோன்றி மக்களை அது வெறுப்படையச் செய்தது. குறிப்பாக தமிழ் மக்களுக்கு ஒவ்வாத துறவு,நிர்வாணம் போன்ற கோட்பாடுகள் தமிழ் மக்களை சமணத்திலிருந்து வெறுப்படையச் செய்தது. மேலும் அரச ஆதரவையும் இழந்து நிற்கதியான சமணம் வீழச்சிப் பாதைக்கு சென்றது. இன்றும் சமணத்தை பின்பற்றும் துறவிகள் தமிழ்நாட்டில் இருந்தாலும் முன்னிருந்த அப்புகழினை சமணம் இழந்து விட்டது என்பது ஏற்றுத் தான் ஆக வேண்டிய ஒன்றாகும். சமணர்கள் வீழந்தாலும் சமணம் (தத்துவம்) அழிவதில்லை. அவர்கள் தமிழுக்கு விட்டுச்

சென்ற இலக்கியச் செல்லவங்கள் காலந்தோறும் நிலைத்து நிற்கக் கூடியானவகும்.

**துணை நூற்ப்பட்டியல்**

1. *448 of 1937-38, Ep.Rep.1937-38, Page-89*
2. *No.531 Of 1937-38 Annual Rep. South Indian Epi.1938*
3. *Rajeshwari.M,Amirthavalli.Lt.A ,A Study on Jainism History, Philosophy and Traditions in Tamilnadu, International Journal of Arts, Science and Humanities, April 2021,*
4. அருங்கல செம்பு – சமண நூல்
5. அருணாசலம்.மு, தமிழ் இலக்கிய வரலாறு 13-ம் நூற்றாண்டு , 1990
6. அறவாணன் க.ப, சமணம் வளர்த்த தமிழ் – இலக்கணம், சபாநாயகம் அச்சகம், சிதம்பரம், 1993
7. இராகவன். பா, சமணம் ஓர் அறிமுகம், 2008, *DIGITALEDITIONPUBLISHEDBYBUKPET*
8. இராசமாணிக்கனார்.மா பாண்டியர் வரலாறு, சரண் புக்ஸ்,2020
9. ஏகாம்பரநாதன்.ஏ, கல்வெட்டில் சமணம், ஜைன இளையோர் மன்றம்-2012
10. கார்த்திகேயன். ஆ, பழந்தமிழில் சமண சமய சொற்கள் வருகை-வளர்ச்சி-ஒடுக்கம், *KEETRU.COM*, 2023
11. குமரவேலன்.இரா, தக்கயாகப் பரணி- மூலமும் உரையும்
12. குழந்தை.புலவர், கொங்கு நாடு
13. கோவை கிழார், கொங்கு நாடும் சமணமும்

14. சக்கரவர்த்தி நயினார் . A, சமணமும் - சைவமும் ,1946 முத்தமிழ் நிலையம் சென்னை -1

15. சம்பகலக்குமி.ஆர்.டாக்டர், 'சமணம்' ஆய்வுத்தேன்

16. செங்குட்டுவன்.கோ,சமணர் கழுவேற்றம் ,கிழக்கு பதிப்பகம் -2017

17. திருநாவுக்கரசர் , தேவாரம் , நான்காம் திருமுறை

18. நம்பியாண்டார் நம்பி, திருஞானசம்பந்தர் திருவந்தாதி

19. பரமசிவம்.தொ.பேராசிரியர், பண்பாட்டு அசைவுகள், சரண் புக்ஸ், சென்னை-2022

20. பிள்ளை.கே.கே.டாக்டர், தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்

21. பிள்ளை.கே.கே.டாக்டர், தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்

22. பூபாலன்.திரு.து. B.E.,சமண சித்தாந்த நுழைவாயில், ஸ்ரீ அகளங்கர் அநேகாந்த மன்றம்,சென்னை-2021.

23. மகாவம்சம் X, பக்-97,98,99

24. மன்னர்மன்னன்.இரா, பல்லவர் வரலாறு,பயிற்று பதிப்பகம் ,2023,

25. மாணிக்க சாஸ்திரி. டாக்டர் T.A, சமணத்தின் காலமும் சமய மாறுதல்களும், செஞ்சி

26. மீனாட்சி சுந்தரனார்.தெ.பொ.மனோன்மணீயம், சம்பந்தரும் சமணமும்

27. வர்த்தமான சாகர சுவாமிகள்,ஸ்ரீ 108, தமிழ்நாடு விஜயம், ஸ்ரீ ஆசாரிய நிர்மல ஸாகர சங்கம், பாரி அச்சகம்-சென்னை -1978

28. வெங்கடேசன். க,பண்டைய கால இந்தியா வரலாறு, வர்த்தமானன் பதிப்பகம் -2018

29. வேங்கடசாமி. சீனி. மயிலை, சமணமும் தமிழும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் – 1959

30. வேங்கடசாமி. சீனி. மயிலை, சமணமும் தமிழும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்– 1959

31. வேங்கடசாமி. சீனி. மயிலை, தமிழும் பௌத்தமும்

32. வேங்கடராமையா.கா.ம ,இலக்கியக் கேணி

33. வேதத்தா.வி.பி. பேராசிரியர், சமணம், பௌத்தம், அன்னைத் தெரசா மகளிர் பல்கலைக்கழகம்– கொடைக்கானல்,

# சங்க கால மக்களின் சமூக பண்பாட்டு அமைப்பும் நாகரிகமும்

# SOCIAL AND CULTURAL STRUCTURE OF THE PEOPLES OF THE SANGAM PERIOD

**முனைவர்.ச.மீனாட்சி**
உதவி பேராசிரியர்
வரலாற்று துறை
தமிழ் நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம்
சென்னை-600015.
மின்ன்ஞ்சல்: meenakshihis2020@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலம் என்பது தமிழர்களின் சிறப்பான பண்பாட்டுத் தொட்டியின் பொற்காலம் ஆகும். இக்காலத்தில் தமிழர் வாழ்வு கலை, இலக்கியம், சமூக அமைப்பு, மற்றும் மத அடிப்படைகளால் செழித்து விளங்கியது. சங்கி இலக்கியங்கள், தொல்பொருள் ஆய்வுகள் மற்றும் சமகாலச் சான்றுகள் மூலம், இக்காலத்தின் தமிழர் அறிவியல் திறமைகள், கைவினைகள், விவசாயம், போர்த்தொழில், மற்றும் அரசியல் ஆளுமைகள் ஆகியவை மிகுந்த வளர்ச்சியடைந்திருந்தன என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வு, காதல், தோழமை, வீரக்களிப்பு மற்றும் இயற்கை மீதான பண்பாட்டுப் பார்வைகளை வெளிப்படுத்துகின்றன.*

**திறவுச் சொற்கள்**

*இலக்கியம், தமிழ் இலக்கியம், சங்க இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு*

**Abstract**

*Sangam age is the golden age of Tamil culture. During this period, Tamil life flourished on the basis of art, literature, social structure, and religion. Sanghi literature, archaeological excavations, and contemporary evidence suggest that the Tamils of this period were highly developed in terms of scientific skills, crafts, agriculture, warfare, and political personalities. Sangam literature expresses the cultural views of Tamils on life, love, friendship, valour and nature.*

*Keywords: Literature, Tamil Literature, Sangham Literature, Tamil Culture, Tamil History*

*சங்க காலத்தின் தமிழர் சமூகம் மிகவும் ஒழுங்கமைக்கப் பட்டதாக இருந்தது. சமூகத்தில் பல்வேறு மரபுகள், விழாக்கள், கலாச்சார நிகழ்வுகள் முக்கியத்துவம் பெற்றன. விவசாயம், பரந்த பரம்பரைக் கருப்பொருட்கள் மற்றும் வர்த்தகம் ஆகியவை தமிழர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தின. சங்க இலக்கியங்களில் புறநானூறு, ஏதுக்கைப் பாடல்கள் போன்ற நூல்களில் போர்வீரர்களின் புகழ், அரசியல், மற்றும் நட்பு தொடர்பான குணாதிசயங்கள் அடிபடியாகக் கூறப்பட்டுள்ளன. தமிழர் கலாச்சாரம் பெரும்பாலும் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தது, மலை, கடல், நிலம் ஆகியன வாழ்வின் முக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டன.*

*தமிழ் சமூகம் நீண்ட வரலாற்று மரபினைக் கொண்டது. உலகத்தில் வாழுகின்ற மானுட இனங்களுள் தொல் பழமையும், வரலாற்றையும் பண்பாட்டையும் கொண்டிருப்பது தமிழினமாகும். மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத பழக்கவழக்கங்கள், வழக்காறுகள், வாய்மொழிப் பாடல்கள், நிகழ்த்துக் கலைகள், வழிபாடுகள், சடங்குகள் முதலியவற்றின் மூலமாகத்தான் மனிதனின் பண்பாட்டு வேர்களைப்*

பிரித்தறிய முடியும். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் வாழும் இடங்களில் எல்லாம் தமக்கான பண்பாட்டு அடையாளதக் தினைக் காத்து வாழுகின்றனர். மக்களின் பண்பாடு, திருவிழாவில் பின்பற்றப்படும் சடங்குகள், உணவு முறையில் பயன்படுத்தப்படும் சடங்குகள், தமிழரின் வீரத்தினை வெளிப்படுத்தும் மஞ்சு விரட்டில் காணப்படும் சடங்குகள் ஒவ்வொரு சமூகத்திலும் இருந்து வருகின்றன. சங்க காலத்தில் தமிழர் பண்பாடு வரலாறு என்ற ஆய்வுக் கட்டுரையில் பல்வேறு அரிய தகவல்களை அறிய முற்படுவோம்.

**சங்க காலம்: தமிழ் பண்பாட்டின் பொற்காலம்**

சங்க காலம், தமிழ் மக்களின் நாகரிகத்தின் பொற்காலமாக கருதப்படுகிறது. இது கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை ஆண்டுகள் நீடித்த தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான காலம். சங்க காலம் என்று அழைக்கப்படும் இந்த காலம், தமிழின் முதல் மூன்று சங்கங்களின் காலகட்டமாகக் குறிக்கப்படுகிறது. இந்த சங்கங்கள் பாண்டிய அரசர்களால் நடத்தப்பட்ட இலக்கிய சபைகளாக இருந்தன.

இவ்வேளையில் பிறந்த சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்க்கை முறையை, சமூக அமைப்புகளை, காதல், போர், களம், இயற்கை அழகு போன்றவை குறித்த தகவல்களை முழுமையாக வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை காதல் (அகம்) மற்றும் போராட்டம் (புறம்) ஆகிய வாழ்வியல் அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டவை. இப்பாடல்கள் யாவும் வாழ்வின் பல்வேறு கோணங்களைப் பிரதிபலிக்கின்றன.

சங்க காலத்து தமிழர் சமூக அமைப்பு நாகரிகமாகவும், விவசாயம், வணிகம், கைத்தொழில், வாணிபம் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் மிகுந்த நிலையிலும் இருந்தது. சமுதாயத்தில் இளவரசர்கள், அரசர்கள், வீரர்கள், கலைஞர்கள்,

புலவர்கள், விவசாயிகள், வணிகர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் இருந்தனர். இந்த காலத்தின் மிகச் சிறந்த தோரணையான கற்பகத்து அரசன் நெடுஞ்செழியன், பாண்டிய மன்னன் உட்பட பல வீரர்களின் புகழ்மிக்க ஆட்சிகள் சங்க இலக்கியத்தில் பெரிதும் புகழப்பட்டுள்ளன.

இந்த காலத்தில்தான் மலை, கடல், புல் நிலம், காடு மற்றும் பள்ளத்தாக்கு போன்ற புவியியல் பகுதிகளின் அடிப்படையில் தமிழ் மொழியின் பிரிவுகள் உருவாகின. தமிழ்நாட்டின் புவியியல் அழகும், மக்களின் பண்பாடும் சங்க இலக்கியங்களில் சிறப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இலக்கியங்கள் தமிழர் அடையாளம் மற்றும் மரபுகளின் பொக்கிஷமாக இருப்பதுடன், தமிழின் கலை, கலாச்சாரம், மொழி வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் கருதப்படுகிறது.

சங்க கால வாழ்வு திணை சார்ந்த இயற்கையோடு இயைந்த வாழ்வாகும். அவர்கள் அகவாழ்கையையும் புறவாழ்க்கை யையும் பண்பாட்டு நெறியுடன் வாழ்ந்தார்கள். பண்பாடு என்பது மனிதன் சமூகத்தை பண்படுத்தி, நல்ல பழக்க வழக்கங்களைக் கடைபிடித்து, வாழ்வை அர்த்தமுள்ளாக்குவ தாகும். இப்படி தமிழர்கள் தனக்கென்று வாழாத பண்பாட்டு கூறுகள் மூலம் வாழ்வாங்கு வாழ்ந்த பதிவினை நாம் காணலாம்.

**பண்பாடு**

ஒரு இனத்தின் பண்பாடு அதன் இலக்கியம் நடையுடை, மொழி, கலைகள், குறிக்கோள், சமயக்கொள்கை, சமயப் பொறை, அரசியற் கொள்கை, சமுதாய நிலை என நீட்சி கொள்கிறது. தனிமனிதனின் பண்பாடாக பார்த்தால் அறிவு நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு நலம், வாழ்க்கை நலம் என்ற அர்த்தத்தளத்தில் விரிவதை நாம் கவனிக்கலாம்.

"பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டமாக சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தை முறையாகும்"1 என பக்தவத்சல பாரதி கூறுகிறார். இயற்கையுடன் இணைந்த மனிதனுடைய வாழ்க்கை அனுபவத்தில் அவன் கற்றுக் கொண்டவைகள், தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் நல்வாழ்வு வாழக் கற்றுத் தரும் பாடங்கள் பண்பாடு எனும் சொல்லிற்கு பொருந்துவதாக அமைகிறது. ஒவ்வொரு இனக் குழுவிற்கும் வந்த வழி வேறாக இருந்தாலும், வேட்டையாடும் சமூகத்திலிருந்து நாகரீக சமூகத்திற்கு மாறுதல் சார்ந்த நகர்வு அடையும் போது அது தன்மையும், சமூகத்தையும் பண்படுத்தும் பல கூறுகளைக் கொண்டதாக இருப்பதைப் பண்பாடு என்றழைக்கலாம்.

## சங்க கால பாடல்களில் பண்பாட்டுக் கூறுகள்

சங்க கால பாடல்கள் தமிழரின் வாழ்க்கையும் பண்பாடு களையும் பிரதிபலிக்கும் முக்கியமானவைகளாகும். சங்க இலக்கியத்தில் வாழ்ந்த தமிழ் சமூகத்தின் பண்பாட்டு கூறுகள் பலவாக காணப்படுகின்றன. அவற்றில் சில முக்கியமான கூறுகளை நாம் காணலாம்.

## உணவு பண்பாடு குறித்த கூறுகள்

பண்டைய தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென நிலத்தை ஐந்தாக பிரித்து, முதல் கரு உரி பொருளென பகுத்து உணவு பொருள்கள், வழிபடும் தெய்வங்கள், தொழில்கள் என மக்களின்வாழ்வியல் ஒழுக்கங்களையும் மன உணர்வுகளையும் கட்டியமைத்தனர். ஒவ்வொரு திணைக்குரிய உணவு பொருட்களை அந்தந்த திணை சார்ந்து பயன்படுத்தியதை நாம் பார்க்கலாம். "நம் படப்பைத் தேன் மயங்கு பாலினும்"[2] என்ற வரிகளில் தேனை தங்களது உணவு பொருளாக பயன்படுத்தினர் என்பதை அறியலாம். "செம்புற்று ஈயலின் இன்னளை புளித்து ஈயலை புளி சேர்த்து உண்டதான"[3] குறிப்பினைத் திணை சார்ந்த

ஒழுக்க பின்புலத்தோடு நாம் பார்க்கலாம். “உறு வெய்தற்கு உலை இய உருப்பு அலின் குடும்பை எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு தேமாமேனிசில் வளை ஆயமொரு ஆமான் சூட்டின் அமைவர பெறுகுவீர்”[4] குடிசையில் வாழும் எயினக் குல பெண்கள் புளியுடன் சேர்த்து சமைத்த வெப்பமான சோற்றுடன் ஆமான் இறைச்சியும் சுட்டு உணவாக்கி உண்ட நிகழ்வினை பார்க்கலாம்.

அதுபோல “வேட்டை சிறாஅர் சேட்புலம் படராது படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின் விழக்கு நிணம் பெய்த”[5] என்ற பாடலில், பெண்கள் வீட்டின் அருகிலுள்ள மடுக்களிலிருந்து பிடித்த உடும்பின் இறைச்சியை சமைத்து பிறருக்கு வழங்கி தானும் உண்டனர். இப்படியான ஒரு வாழ்வினை பல்வேறு சங்க இலக்கியங்கள் மூலம் நாம் பார்க்கலாம்.

### விருந்தோம்பல் குறித்த பண்பாட்டு கூறுகள்

**“இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு”[6]**

என்ற வள்ளுவரின் கருத்திற்கேற்ப, சங்க கால மக்கள் பசி என்று வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாமல் வீட்டில் வந்த விருந்தினர்களை பேணி வாழ்ந்த குறிப்பினை பார்க்கலாம். விருந்தினர்கள் புறந்திருக்க சாகா மருந்தாக இருந்தாலும் வேண்டாமென சங்க தமிழர்கள் தமிழ் பண்பாட்டின் அடையாளமாக திகழ்ந்ததை

**“விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டாற் பாற்றன்று”[7]**

என வரிகள் மூலம் நாம் உணரலாம். வீட்டில் வருகின்ற விருந்தினர்களை வரவேற்றல், இன்முகத்தோடு பேசுதல், இனிய சொற்களை கூறுதல் அவர்களோடு சேர்ந்து விருந்து பரிமாறுதல், விருந்து பரிமாறும் போது இன்முகத்தோடு

*இருத்தல் என வள்ளுவரின் கருத்துக்களைச் சங்க தமிழர்கள் கடைபிடித்து வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறியலாம்.*

**“மனையோள் விரும்பி**
**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்**
**குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ விலள்”[8]**

*அரசனை காண செல்லும் புலவர்களுக்கு செல்லும் வழியில் உள்ள வீடுகளில் பெண்கள் வரகு. தினை ஆகிய உணவுகளை சமைத்து பரிமாறினர் என்றும் அந்த உணவு தீர்ந்தால் மீண்டும் வருகின்றவர்களுக்கு விதைப்பதற்கு வைத்திருந்த காணம் மற்றும் தினையை உரலில் போட்டு இடித்து உணவு சமைத்து கொடுத்ததாகவும் புறநானூற்று பாடல் கூறுகிறது.*

**“விளைக வயலே வருக இரவலர்**
**என் வேடோளே யாயே யாமே”[9]**

*அக்கால மக்கள் விருந்தினர் வரவுக்காக எதிர்பார்த்து காத்து நின்றனர் விருந்தினரின் வருகை அவர்களால் மிகவும் விரும்பப்பட்டது. தனக்கென வாழாமல் பிறர்கென்று வாழும் தமிழர்களின் பண்பு இப்பாடல்களில் உணரலாம்.*

*சங்க காலத்தில் ஆண்களை விட பெண்களே விருந்தோம்பும் பண்பை பேணி பாதுகாத்து வந்தனர். என்பதை*

**“பூவிற் படுவிற் கூவல் தோண்டிய**
**செங்கட் சின்னீர் பெய்த் சீறில்**
**மூன்றில் இருந்து முதுவாய்ச்சாடி**
**வாடாத தாமரை சுட்டுவன் நினக்கே”[10]**

*நேரத்தில் வீட்டிற்கு வந்த வயதான பாணனை பார்த்து பெண்ணொருத்தி, இரவு நேரத்தில் வந்ததால் சுட்ட இறைச்சியே வீட்டில் உள்ளதாகவும், மட்டுமின்றி செம்மண்*

*நிலத்திலுள்ள ஊற்றில் ஊறிய தண்ணீரும் பழஞ்சாடியில் உள்ளதாகவும் அதனால் இவை இரண்டையும் உண்டு களைப்பை போக்கி கொள்க எனவும், மன்னனிடம் போருக்கு சென்ற தலைவன் வந்தால் பட்டினிக்கு பொன்னரி மாலையும் வாடாத பொற்றாமரையும் வழங்குவதாக என கூறுகின்ற பதிவினை பார்க்கலாம். அதுபோல அறச்செயல்களை செய்வதிலும், ஆணும் பெண்ணும் சிறந்து விளங்கினர் குறிப்பாக தன்னை சுற்றி உள்ளவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் மட்டுமே தானும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை உணர்ந்து வாழ்ந்து வந்தனர். மனிதர்களை மட்டுமல்லாது சங்க கால மக்கள் தங்களை சார்ந்திருந்த உயிரினங்களையும் பெரிதும் நேசித்த பதிவையும் பார்க்க முடிகிறது.*

**"படலை முன்றிற் சிறுதிணை உணங்கள்**
**புறவும் இதலும் அறவும் உண்கெனப்"[11]**

*என்ற வரிகளால் அக்கால மக்கள் மனிதனையும் உயிரினங்களை யும் நேசித்து வாழ்ந்து வந்தனர் என்பதை உணரலாம்.*

*விருந்தோம்பல் பண்பு என்பது மக்களிடம் மட்டுமல்லாமல் அரசர்களிடமும் இருந்துள்ளதை நாம் சங்க இலக்கிய பிரதிகள் மூலம் உணரலாம் அரசனிடம் பரிசு பெற எண்ணி அரண்மனையை அடைபவர்களுக்கு நல்ல இறைச்சியோடு கூடிய உணவினை கன்னோடு சேர்த்து உண்ண செய்து, உடுத்திருந்த கந்தலாடையையும் களைய செய்து அவர்களுடன் அமர்ந்து தானே பரிமாறிய காட்சி பதிற்றுப்பத்தில் இவ்வாறு பதிவாகி உள்ளது.*

**"தொல்பசி உழந்த பழங்கண் வீழ**
**எஃகுபோழ்ந்(து) அறுத்த வான்நிணக் கொழுங்குறை**
**மைஊன் பெய்த வெண்நெல் வெண்சோறு**
**தனைஅமை கன்னின் தேறலொடு மாந்தி**
**நீர்ப்படு பருந்தின் இருஞ்சிற(கு) அன்ன"[12]**

**கொடை குறித்த குறிப்புகள்**

*சங்க கால மக்கள் செல்வத்தின் பயன் ஈதலே என்ற உயர்ந்த பண்பினை கொண்டு வாழ்ந்து வந்தனர். மன்னர்கள் தங்களை விட மக்களையே பெரிதும் நேசித்து வந்தனர். இந்த பண்பினை நாம் ஆற்றுப்படை இலக்கியங்களில் அதிகமாக காணலாம். மன்னன் தன்னிடமுள்ள அனைத்து பொருட்களை யும் கொடையாக கொடுத்துள்ளான் என்பதை சங்க கால பாடல்கள் வழி காணலாம். தேடிய செல்வத்தை பிறருக்கு கொடுத்து வாழ்வதில் தான் வாழ்வின் உண்மையான மகிழ்ச்சி அடங்கியுன்னதை உணர்ந்த தமிழர்கள் தன்னிடம் உன்ன பொருட்களை பிறருக்கு கொடுத்து மகிழ்ந்தனர்.*

**"கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்**
**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஒரொக்கும்மே**
**அதனால் செல்வத்துப் பயனே ஈதலே"[13]**

*அரசனானாலும் ஆண்டியானாலும் ஒரு மனிதனுக்கு தேவை உணவு உடை இரண்டே அதனால் செல்வத்தை சேர்த்து வைப்பதால் எந்த நன்மையுமில்லை என்பதை உணர்ந்த தமிழர்கள் அதனை ஈந்து கொடுத்து மகிழும் போது அடைகின்ற மகிழ்ச்சி ஆயுளையும், வாழ்வையும் நீட்டிக்க உதவும் என்பதை உணர்ந்து தமிழர்கள் கொடை பண்பை வாழ்வின் ஒரு பகுதியாக கொண்டு வாழ்ந்து வந்தனர். இமையவரம்பனின் கொடை பண்பினை பற்றி,*

**"எமர்க்கு பிறர்க்கு பாலர் ஆயினும்**
**பரிசில் மக்கள் வல்லார் ஆயினும்**
**கொடைகடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்**
**…………………வயிறுமாக இலியர்"[14]**

*என்ற பாடலால் இமையவரம்பன் தம்மவரென்றோ பிறவ ரென்றோ பாராமல் அனைவரையும் ஒரே போல கண்டு ஈயும் நெஞ்சமுடையவன் என்பதால் தன்னை நாடி வந்தவர்களுக்கு*

முகம் பாராமல் வாரி வழங்கினான் என்பதை பார்க்க முடிகிறது. அதுபோல,

**"பெறுவரம் கூர்ந்த கானம் கல்லென**
**கருவி வானம் துளி சொரிந்து ஆங்கு**
**பழும் பசி கூர்ந்த எம் இரும் பேர் ஒக்கலொடு**
**வழங்க தவா அபெரு வளன் எய்தி**
**வால் உளை புரவியொடு வய கனிறு முகந்து கொண்டு**
**யாம் அவனின்றும் வருதும் நீயிரும்..."[15]**

தொண்டைமான் இளந்திரையனின் கொடைத் தன்மை இப்பாடலால் நாம் அறியலாம். அரசனிடமிருந்து கொடை பெற்று வந்த புலவர்கள் தான் பெற்றுவந்த செல்வத்தை பற்றி கூறும் போது தொண்டைமான் பல செல்வ வனங்களைத் தனக்கு நல்கியதாகவும், அவற்றை குதிரைகள் மீதும் யானைகள் மீதும் ஏற்றிக் கொண்டு வருவதாகவும், தான் மட்டுமல்லாமல், தன்னுடன் வந்த சுற்றத்தாரும் யானை மீது பரிசுகளை பெற்றுக் கொண்டு வருவதாக பதிவு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், நல்லூர் நத்தனாரால் பாடப்பட்ட சிறுபாணாற்றுப்படையில் கடையெழு வள்ளல்கள், குறித்த சித்திரங்களை பார்க்க முடிகிறது. மயிலுக்கு போர்வை தந்த பேகன், முல்லைக்கு தேர் கொடுத்த பாரி, குதிரையுடன் நாடு தந்த திருமுடிக்காரி, நாட்டை பரிசாக வழங்கிய ஓரி, சிவபெருமானுக்கு கலிங்கம் நல்கிய ஆய் ஆண்டிரன், ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியமான், நாட்டு மக்களுக்கு வாரி வழங்கிய நன்னி ஆகிய வள்ளல்கள் கொடை பண்புக்கு இன்றளவும் தமிழர்களின் உள்ளங்களில் வாழ்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. எல்லாம்எனக்கே, எல்லாம் என்னுடையது என்ற சிந்தனையை விடுத்து வாழ்பவன் உண்மையான வெற்றியையும் இன்பத்தையும் அடையலாம்.

**ஈகை குறித்த பண்பாட்டு கூறுகள்**

**"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
**அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வும் ஈனம்என**
**வினைவயின் பிரிந்து வேறுபடு கொள்கை"[16]**

*புகழ், இன்பம், ஈகை ஆகிய மூன்றையும் பெற்றிட தலைவன் பொருள் ஈட்டுவதற்காக தலைவியை விட்டு பிரிந்து செல்கின்றான், சங்க கால ஆண்கள் தன் இல்லற சுகத்தையும் விடுத்து பொருள் தேடுவதற்கு சென்றதன் முக்கிய காரணம் ஈகை செய்வதற்கே. ஈகை செய்வதற்கு இல்லறத்தாரும் உறுதுணையாக இருந்தனர் என்பதை உணர்த்தும் பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.*

**அக ஒழுக்கம் சார்ந்த பண்பாடு**

*சங்க கால நூல்களில் தலைவன், தலைவி, செவிலி, நற்றாய், தோழி, வாயிலாக அக ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கையை களவு கற்பென இருவகைகளை கருத்தில் கொண்டு வாழ்ந்தனர். திருமணத்திற்கு பிறகான வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கைக்குள் அடக்கினர். கற்பு வாழ்வு குறித்த ஒரு மிக சிறந்த பாடல் இப்படி வருகிறது.*

**"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅதுடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே"[17]**

*என்ற பாடலால் திருமணத்திற்கு முன் சமையல் அறைக்குள் சென்று சமைத்தறியாத பெண் ஒருத்தி திருமணத்திற்குப் பிறகு சமைக்கும் போது தன் அழகான கண்கள் புகையினால் கலங்குவதைக்கூட பொருட்படுத்தாமல் தன் கணவனுக்காக சமைத்து அவன் இனிது என உண்டதை கண்டு*

மகிழ்ச்சியடைகிறாள் இல்லற வாழ்வின் இன்பத்திற்கு விட்டு கொடுத்து வாழ்தலை பார்க்கமுடிகிறது. தலைவன் தலைவி உறவு விட்டுகொடுத்தல் மூலம் சிறக்கிறது என்பதை பல பாடல்கள் உணர்த்துகின்றன.

பண்டைய தமிழர் வாழ்வு மனித நேயம், விருந்தோம்பல், கொடை சிறப்பு, ஈகை இவ்வாறு மிக உயர்ந்த பண்பாட்டு கூறுகளுடன் சம்பந்தப்பட்டது. சமகால வாழ்வியல் பின்புலத்திலிருந்து, நாம் நெருக்கடி மிக்க சமூக சூழலில் இருந்து சிந்தனை செய்து பார்த்தோமானால் பண்டைய தமிழர் வாழ்வின் முக்கியத்துவம் புலப்படும் என்பதை மறுப்பதற்கில்லை.

தமிழர் வாழ்ந்த காலத்தில், குறிப்பாக சங்க காலத்தில், சமூக அமைப்பு முறைகள் மற்றும் பண்பாட்டு கூறுகள் பல தளங்களில் வளர்ச்சி அடைந்தன. குடும்ப அமைப்புகள், மன்னராட்சி, போர்க் கலாசாரம், விளை நிலப் பயிர்ச்சி, கலைகள் மற்றும் மழை வேண்டிய வழிபாடுகள் போன்றவற்றில் ஆழமான மரபுகளை கொண்டு வந்துள்ளனர்.

இக்காலத்தில் தமிழ் இலக்கியம், பண்பாடு, மற்றும் சமூக அமைப்புகள் பெரிதும் வளர்ச்சி பெற்றன. சங்க இலக்கியம் முக்கியமாக அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு போன்ற நூல்களை உருவாக்கியது, இதனால் தமிழர்கள் வாழ்ந்த காலத்தின் காதல், போராட்டங்கள், அரசியல் மற்றும் சமூக வாழ்வியல் பிரகாசித்தது. பொருளாதாரம் விவசாயம், கடல் வாணிபம், மற்றும் கைத்தொழில் ஆகியவற்றில் நிலை கொண்டது. தெய்வ வழிபாடு மற்றும் இயற்கை வழிபாடு முறைவழக்கமாக இருந்தது.

**சமூக அமைப்பு**

சங்க காலம் தமிழ் மொழியின் செழிப்பையும், சமுதாயத்தின் உயர்ந்த பண்பாடுகளையும் பிரதிபலிக்கும் முக்கியமான காலமாகும். கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம்

நூற்றாண்டு வரை பரவிய இந்த காலகட்டத்தில், தமிழ் சமுதாயம் தனித்துவமான சமூக அமைப்பை உருவாக்கியது. மனித வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்கள், சங்க இலக்கியங்களின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

**நிலப்பரப்புகள் மற்றும் திணைகள்**

சங்க இலக்கியத்தில் மனிதர்கள் மற்றும் அவர்கள் வாழும் நிலப்பரப்புகள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றன. ஐந்து திணைகள் என்று அழைக்கப்படும் இந்த நிலப்பரப்புகள் மனித உணர்வுகளையும், வாழ்க்கை முறைகளையும் பிரதிபலித்தன:

- குறிஞ்சி (மலைப்பகுதி) - இதன் மக்கள் வேட்டைக்காரர்களும் காதலர்களும்.
- முல்லை (காடு) - மாடுகளை மேய்க்கும் கறவைக் கூட்டங்களின் வாழ்விடம்.
- மருதம்(விவசாய நிலங்கள்) - விவசாயத்தின் செழிப்பு மற்றும் உழவுக்காரர்களின் வாழ்விடம்.
- நெய்தல்(கடற்கரை) - மீனவர்கள் மற்றும் கடல் சார்ந்த தொழிலில் ஈடுபட்டவர்களின் இடம்.
- பாலை(வறண்ட நிலம்) - போராளிகள் மற்றும் கஷ்டங்களை எதிர்கொள்பவர்களின் புழக்கத்தில் உள்ள பகுதி.

இவை மட்டுமல்லாமல் ஒவ்வொரு திணையும், அங்கு வாழும் மக்களின் பண்பாட்டையும், பொருளாதார நடவடிக்கைகளையும் குறிக்கிறது.

**பெண்களின் நிலை**

சங்க காலத்தில் பெண்களுக்கு ஒரு முக்கியமான இடம் இருந்தது. பெண்கள் சமூகத்தில் பெருமளவில் ஈடுபடுவதும்,

*சுதந்திரமாக செயல்படுவதும் பாராட்டத்தக்கது. பெண்களின் அறிவு, ஆற்றல், மற்றும் நெறிமுறைகளைப் பற்றி சங்க இலக்கியங்களில் அதிகம் விவாதிக்கப்பட்டுள்ளது. கண்ணகி போன்ற கதாபாத்திரங்கள், பெண்களின் நீதி மற்றும் வீரத்தை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய கதாபாத்திரங்கள் அன்றைய பெண்களின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு சமூகத்திலும் உயர்த்தின.*

**சமூகத்தின் நெறிமுறைகள்**

*சமுதாயத்தில் ஒழுங்கும், நெறிமுறைகளும் பாதுகாக்கப் பட்டன. சிறப்பு குறிப்பாக, பண்பாட்டு விழாக்கள், இசை, நடனம் மற்றும் கலைகள் சமூகத்தில் பெரும் இடத்தை பெற்றிருந்தன. மனிதர்கள் தங்கள் பண்பாட்டை வளர்ப்பதற்கும், மற்றவர்களுடன் இணைந்து வாழ்வதற்கும் முக்கியத்துவம் அளித்தனர்.*

*சங்க காலத்தின் சமூக அமைப்பு தமிழ் பண்பாட்டின் செழுமையை பிரதிபலிக்கிறது. நிலப்பரப்புகளுடன் உள்ள தொடர்பு மற்றும் பெண்களின் நிலை, அனைத்தும் சங்க காலத்தில் மக்களின் முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. சங்க இலக்கியங்கள், தமிழ் சமூகத்தின் அடிப்படைகளை நிர்ணயித்து, நம் வாழ்க்கைக்கு இன்னும் வழிகாட்டுகின்றன.*

**விளையாட்டும் வேளாண்மையும்**

*சங்க காலத்தின் முக்கிய தொழில் வேளாண்மை. நிலம் கைவசம் இருந்தவர்களே சமூகத்தில் முதன்மை பெற்றிருந்தனர். தமிழர்களின் வாழ்க்கை முழுக்கவே பூமியுடனான உறவை மையமாகக் கொண்டு பிணையப்பட்டிருந்தது. மழைவேளைப் பொறுத்து அவர்கள் விளைச்சல் செய்யும் முறைகள் இருந்தன. விலங்கு வேட்டை, மல்யுத்தம் போன்ற விளையாட்டுகள் இந்நாட்களின் பொழுதுபோக்குகளாக இருந்தன.*

வேளாண்மை தமிழர்களின் முக்கிய தொழிலாக இருந்தது. நான்கு நிலத் தரைகளில் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) வாழ்ந்த மக்கள், தங்களுக்கு பொருத்தமான விளைச்சலை மேற்கொண்டனர். மருதநிலம் தான் வேளாண்மைக்கு மிகச்சிறந்த பகுதியாக விளங்கியது, ஏனெனில் இது சீரான நீர்ப்பாசன வசதிகளை கொண்டிருந்தது. நதிகள், ஓடைகள், குளங்கள் ஆகியவை நீர்பிரவாகத்தை உறுதிப்படுத்தின. பசு மாடு, நிலம், மழை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழர்கள் விவசாயம் செய்தனர். சிறுதானியங்கள், நெல், பருப்பு, தேங்காய், வெள்ளரி போன்ற பல்வேறு விளைச்சல்கள் இக்காலத்தில் பெரிதும் பயிரிடப்பட்டன. மழைக்காலத்தில் விவசாயம், குளங்கள் மற்றும் கால்வாய்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டு, உணவுப் பாதுகாப்பிற்காக இயங்கியதாகச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. விளைச்சல் உணர்வும் தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தது.

தமிழர்கள், தங்கள் உடல் மற்றும் மனதைத் தக்கவைத்துக் கொள்ள பல்வேறு விளையாட்டுகளை விளையாடினர். இவை தமிழ் மக்களின் பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தன. சங்க காலத்தில் விளையாட்டுகள், போர்க் கலைகளைப் பயிற்சியாகவும், பொழுதுபோக்காகவும் இருந்தன. மல்யுத்தம், சிலம்பம், வில்வித்தை போன்ற போராட்ட விளையாட்டுகள் வீரத்தை மேம்படுத்தி, போர்க்களத்தில் அவர்களை தயாராக வைத்தன. இவைகள் மன்னர்கள் மற்றும் வீரர்களிடையே பிரபலமாக இருந்தன.

இவை தவிர, விலங்கு வேட்டை போன்ற விளையாட்டுகளும், வேளாண் நிலப்பகுதிகளில் வழக்கமாக நடந்தன. இதன் மூலம் தமிழ் மக்கள், தங்கள் நிலத்தில் வாழும் விலங்குகளை அடையாளம் காண்பதோடு, நிலத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் கவனித்தனர். இவை அனைத்தும்

சங்க கால தமிழர்களின் வீரம், கைத்திறன், மற்றும் வாழ்வியல் கற்றல்களுக்கு வழிவகுத்தன.

விளையாட்டு மற்றும் வேளாண்மை, மக்கள் இடையேயான பகிர்ந்துணர்வையும், ஒற்றுமையையும் ஊக்குவித்தன. மழைக்கால விளையாட்டுகள், விழாக்கள், பொங்கல் போன்ற வேளாண் பண்டிகைகள், சமூக ஒற்றுமையை மேம்படுத்தக் காரணமாக இருந்தன. உழவர் தொழில் மற்றும் அனைவருக்கும் உணவு ஆகியவையும் தமிழர் சமூகம் மிகுந்த மரியாதையுடன் பின்பற்றியது.

**அரசியல் அமைப்பு**

சங்க காலத்தில் மூன்று பெரும் தமிழ அரசுகள் புகழ் பெற்றிருந்தன: சோழர், சேரர், பாண்டியர். இவை முப்பெரும் மன்னர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களது ஆட்சிப் பகுதிகள் வெவ்வேறு, ஆனால் ஒரே பண்பாட்டைப் பகிர்ந்தனர். அரசர்கள் தங்கள் அரசுகளை திறமையாகவும் கண்ணியமாகவும் ஆட்சி செய்தனர். போர்த்தொழில், கலைகள் மற்றும் கலாச்சாரம் அனைவருக்கும் மிக முக்கிய மானவையாக கருதப்பட்டது. சேரர், சோழர், பாண்டியர் எனப்படும் மூன்று முத்தரசர்கள். இவர்கள் தமிழகம் முழுவதையும் தங்கள் அதிகாரத்திற்கு கீழ் வைத்திருந்தனர். இத்தரசுகளின் ஆட்சி கி.மு. 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ம் நூற்றாண்டு வரை நீடித்தது.

இரண்டாம் பாண்டிய மன்னன் தலைமையிலான பாண்டிய அரசு மதுரை நகரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தது. இது இலக்கிய வளர்ச்சிக்கும், கலைக்குமான முக்கிய மையமாக இருந்தது. சங்கப் பாடல்களில் பாண்டிய மன்னர்கள் நீதி நிர்ணயத்திலும், வீர சாசனங்களிலும் சிறந்தவர்களாக போற்றப்பட்டுள்ளனர்.

சோழர் புலியூர் (உழுமுறை நகரம்) மற்றும் தஞ்சை போன்ற இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர்.

புறநானூறு போன்ற இலக்கியங்கள் சோழ மன்னர்களின் வீரத்தைப் புகழ்ந்து பாடுகின்றன. காவிரியின் நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் கப்பல் போக்குவரத்தையும் சோழ மன்னர்கள் திறம்பட கையாள்ந்தனர்.

சேரர், வெள்ளை மலைகளை தங்கள் தலைநகராகக் கொண்டிருந்தனர். சேர மன்னர்கள் பெரும்பாலும் கடல் வாணிபத்தில் ஈடுபட்டனர், குறிப்பாக மேற்கத்திய நாடுகளுடனான வணிக உறவுகள் அவர்களின் செல்வாக்கை அதிகரித்தது. சங்க இலக்கியங்களில் சேர மன்னர்களின் கடல் வழிப் போக்குவரத்து மற்றும் நீர்முக நகரங்களின் மேம்பாட்டு திட்டங்கள் புகழாகத் தோன்றுகின்றன.

மூன்று அரசுகளும் வம்ச அரசு முறையில் கட்டமைக்கப்பட்டன, அதாவது தந்தை-மகன் வழியில் ஆட்சிக்குத் தொடர்ச்சி வழங்கப்பட்டது. மன்னர் ஒருவரின் கடமை சிறந்த போராளியாக இருப்பது மட்டுமல்ல, தனது நாட்டின் நலனை உறுதி செய்வதும் ஆவார். மன்னர்களுக்கு கீழ் பல சிற்றரசர்கள் மற்றும் தலைவர்கள் இருந்தனர், அவர்கள் மன்னர்களுக்கு நெறிபாதையில் நடந்து வரித்தொகைகள் செலுத்தினர்.

அரசியல் மட்டும் இல்லாமல், இக்கால அரசுகளுக்கு சமயத்தின் மீதான செல்வாக்கும் அதிகமாக இருந்தது. தமிழ் மன்னர்கள் வேதக் கோயில்கள், யாக சாலைகள் மற்றும் கலைப்பண்பாட்டு மையங்களை ஆதரித்தனர். சங்க இலக்கியங்களில் மன்னர்கள் தங்கள் மக்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்ததாகவும், சமூக நலனுக்காக பல திட்டங்களை அமல்படுத்தியதாகவும் காணப்படுகின்றது.

சங்க காலத்தில் ராஜவழிகள், சிற்றரசுகள், துறைமுகங்கள், வணிகம், யுத்தம் மற்றும் சமூகவியலின் முக்கியமான தளங்களிலும் மன்னர்கள் மேன்மை பெறுவது குறித்த மாபெரும் விலங்குகளாக அவர்களின் ஆட்சி அமைந்திருந்தது.

**வழிபாடு**

சங்க காலத்தில் வழிபாடுஎன்பது தமிழர் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாய் இருந்தது. தமிழ் சமூகம் இயற்கையுடனும் அதன் பல்வேறு கூறுகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்தது, இதனால் அவர்களின் வழிபாட்டு முறைகளும் இயற்கையை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தன. அவர்கள் பல தெய்வங்களையும் சக்திகளைப் போற்றியிருக்கின்றனர், குறிப்பாக முருகன், மயன், வான்கோத்திரம், காற்று, மழை போன்றவை மிகவும் முக்கியத்துவம் பெற்றன.

சங்க காலத்தின் மிகவும் மதிக்கப்பட்ட தெய்வம் முருகன் ஆவார். அவரை தமிழர் "சேவல்", "சேவெழு", "வேலன்" எனவும் அழைத்தனர். முருகன் யுத்தத்தின் தெய்வமாகவும், வீரம், போராட்டம், மற்றும் காவலராகவும் கருதப்பட்டார். தமிழ் மரபில், முருகனைப் புகழ்ந்து பாடிய பல பாடல்கள் இருக்கின்றன. குறிப்பாக, முருகனுக்கான குன்றுக்களான பழனி, திண்டுக்கல் போன்ற இடங்களில் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வந்தது. அவரின் தாயாரான கார்த்திகை மங்கைகளும் அவருக்குப் பணி செய்தனர் என்ற நம்பிக்கை தமிழர்கள் இடையே நிலவியது.

இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்களில், வெள்ளாற்றான் என்பவரும் முக்கிய தெய்வமாக வழிபட்டனர். நதி, மலைகள், காடுகள் போன்றவற்றுடன் தொடர்புடைய தெய்வங்கள் எப்போதும் தமிழர்களின் வாழ்வியல் வழிபாட்டில் இருந்தன. வெள்ளாற்று போன்ற ஆற்றுகளை பூஜிக்கும் வழக்கம், இவ்வருகையும் பொருளாதார வாழ்க்கையில் முக்கியமாக இருந்தது.

சங்க காலத்தினர் இயற்கையை ஒரு தெய்வமாகவே கருதி வழிபட்டனர். மழை, மலைகள், ஆறுகள், மற்றும் வனங்கள் ஆகியவை பெரும் முக்கியத்துவம் பெற்றன. தமிழர்கள்

மழையைப் பெரிதும் மதித்தனர், ஏனெனில் அதுதான் அவர்களின் விவசாய வாழ்க்கைக்கு உயிர்நாடியாக இருந்தது. வான்பாரி போன்ற மழைத்தெய்வங்களை அவர்கள் வழிபட்டனர். இது பல இடங்களில் "வளிபூசை" எனப்படுகிற பழக்கத்தில் வெளிப்பட்டது.

சங்க இலக்கியம், குறிப்பாக புறம் பாடல்கள், வீரத் தெய்வங்களான முருகன் மற்றும் தெய்வக் காவல்துறைகளைப் புகழ்ந்து பாடுவதில் மிக்கது. இவை போர் மற்றும் துன்பங்களை சமாளிக்கத் தெய்வத்தின் அருளை நாடுவதற்கான பாடல்களாகும். இவ்வகை பாடல்கள் தமிழர்களின் நம்பிக்கை மற்றும் தெய்வ அனுபவங்களை பிரதிபலிக்கின்றன.

பல தெய்வ வழிபாட்டுச் சடங்குகள் மற்றும் பண்டிகைகள் நடைபெற்றன. முக்கியமாக வேலன் விழா, கார்த்திகை தீபம் போன்ற பண்டிகைகள் மக்களின் சமூகம் மற்றும் வாழ்வியலில் இன்றியமையாதவையாக இருந்தன. இவையெல்லாம் அவர்கள் தெய்வங்களைப் போற்றிப் பரவசமாகக் கொண்டாடிய முக்கிய வழிபாட்டு நிகழ்வுகளாக இருந்தன.

சங்க காலத்தில் தெய்வ வழிபாடு என்பது, தனிப்பட்ட நம்பிக்கை முறையாக இருந்ததுடன், சமூக ஒற்றுமையை உணர்த்திய ஒன்று கூட ஆகும். கிராம மக்கள் கூட்டமாகக் கூடிப் பல்வேறு விழாக்களில் தெய்வங்களை வழிபட்டனர். இது மக்களை ஒற்றுமையாக்கி, சமுகத்தில் நம்பிக்கையும் அமைதியும் ஏற்படுத்தியது. கிராம மக்கள் தெய்வங்களின் அருளால் தம் நிலங்களில் விளைச்சலைக் குறைந்த சிரமத்தில் பெறுவார்கள் என்று நம்பினர்.

இயற்கை வழிபாடு, தமிழர் மத்தியில் அதிகம் பரவியது. அவர்களுக்கு ஒவ்வொரு இயற்கை வடிவமும் (பழநி மலை, வள்ளுவர் நதி, மதுரை வளநிலம் போன்றவை) தெய்வீக உணர்வுகளைப் பொறுப்பனவு செய்தன. குறிப்பாக, தமிழர் தங்களின் பரம்பரைப் பழக்க வழக்கங்களைத் தொடர்ந்தும்

கடைபிடித்து வந்தனர். தெய்வங்களை மட்டும் அல்லாமல், பறவைகள், விலங்குகள், மரங்கள், மற்றும் இயற்கை வடிவங்களை அன்போடு பாதுகாத்தனர்.

தெய்வங்களை வழிபடும் தனிச் சடங்குகள் கோவில்களிலும் நடைபெற்று வந்தது. கோவில் கட்டிடக் கலை மிகுந்து வளராதிருந்தாலும், கிராம மக்கள் தற்காலிக கோவில்கள் அல்லது மலைகளில் தெய்வங்களை வழிபட்டனர். சிறிய ஆலயங்கள் அல்லது குன்றுகள் தெய்வத் தாயகமாகக் கருதப்பட்டன.

தமிழர் வழிபாட்டு முறைகள் தங்கள் பண்பாட்டின் ஒரு முக்கியமான அங்கமாக இருந்தது. தெய்வங்களை மட்டுமல்ல, இயற்கையையே தெய்வமாகக் கருதி, தமிழர் தங்கள் வாழ்வியல் முறையையும் வழிபாட்டு வழக்கங்களையும் இணைத்து வாழ்ந்தனர்.

**நாகரிகம் மற்றும் பொருளாதாரம்**

சங்க காலத்தினர் மிகப்பெரும் நாகரிகத்தை அடைந்து வாழ்ந்தனர். சமூக அமைப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, குடும்பம், குலம், மற்றும் அரசியல் அமைப்புகள் நன்றாக முறையாக வளர்ந்தன. முக்கியமான சமூக அமைப்பு "குடும்பம்" ஆகும், இதில் ஆணும் பெண்ணும் சமமாகக் கருதப்பட்டனர், மற்றும் குடும்ப உறவுகள், மக்களின் அடிப்படை வாழ்வியல் முறையை நிர்ணயித்தன. குடும்பம், காதல், திருமணம் போன்றவை முக்கியமான இடம் பிடிக்கின்றன. அகம் பாடல்கள் காதல், குடும்ப வாழ்வியல், மற்றும் சிறு குடும்ப சிக்கல்களைப் பற்றிப் பேசுகின்றன. பெண்ணிற்கும் ஆணிற்கும் சமமான இடம் கொடுக்கப்பட்டது, மேலும் பெண்கள் தங்கள் மனம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்த உரிமை கொண்டிருந்தனர்.

சமூக அமைப்புகள் சீரான முறையில் பிரிக்கப்பட்டிருந்தன. வணிகர், வேளாண்மை தொழிலாளர்கள், யாதவர்கள் (மாட்டு

வளர்ப்போர்), கைவினைஞர்கள் ஆகியவை பன்முகமாக இருந்தனர். ஒவ்வொரு சமூகத்தினரும் தங்கள் தொழில், பண்பு, மற்றும் கலாசாரத்தில் தனித்தன்மையைப் பேணி வளர்த்தனர். சங்க காலத்தின் பொருளாதாரம் மிகவும் செழித்த நிலையிலிருந்தது. இயற்கை வளங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தினர். விவசாயம், வணிகம், கைத்தொழில், மற்றும் மாட்டு வளர்ப்பு போன்றவை சங்க காலத்தின் முக்கிய பொருளாதார துறைகளாக விளங்கின.

நெல் பயிர்ச்செய்கை மிக முக்கியமானதாக இருந்தது, ஏனெனில் தமிழ் மண்ணின் பெரும்பாலான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். மழைக்காலங்கள் நன்கு இருந்தால் நல்ல விளைச்சல் கிடைத்தது. நீர் ஆதாரங்கள், ஆறுகள், ஏரிகள், மற்றும் குளங்கள் பெரிதும் முக்கியத்துவம் பெற்றன. புகழ்ந்த மருதம் நிலப்பகுதிகளில் நீர்ச்செய்கைகள் நடைபெற்று வந்தது. புலவர்கள் பாடல்கள் வழியாகவும் விவசாயத்திற்கு பெரும் பாராட்டு கிடைத்தது.

வணிகம் மிகப் பெரிய அளவில் செழித்தது. தமிழர்கள் தமது கடல் கடந்த வணிகத் தொடர்புகளால் உலகின் பல நாடுகளுடன் வணிகம் செய்து வந்தனர். நவமலர், முத்துக்கள், மற்றும் இரும்பு போன்ற பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவர்கள் பரந்த கடல் வணிகப் பாதையில் பண்டை கிரேக்க மற்றும் ரோம நாடுகளுடன் பொருள்கள் பரிமாற்றம் செய்தனர். கடல் வணிகம் தமிழர்களுக்கு செழிப்பை ஏற்படுத்தியது. சங்க இலக்கியங்கள், குறிப்பாக புறம்பாடல்கள், வணிகர்களின் பெருமையை மிகுந்து கூறுகின்றன. தமிழர்கள் சங்க காலத்தில் கைவினைத் தொழில்களில் மிகுந்த திறமையை காட்டினர். பொற்காசுகள், வாள்கள், ஆபரணங்கள், பட்டு உடைகள், மற்றும் பளிங்கு போன்ற கைவினைப் பொருட்கள் மிகப் பிரசித்தியாக இருந்தன. கைவினைகள் இடம், குறிப்பாக, உளுந்தை

மற்றும் பருத்தி போன்ற பயிர்களிலிருந்து ஆடைகள் மற்றும் துணிகள் தயாரிப்பது, அதனை மன்னர் மற்றும் வணிகர்களுக்கு விற்கும் பணி பிரபலமாக இருந்தது.

மாட்டு வளர்ப்பு சங்க காலத்தில் மற்றொரு முக்கிய பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. மாடு, ஆடு, மற்றும் மின்னியன்கள் வளர்ப்பது, இப்பகுதி மக்களின் பண்ணைப்புற வேலைகளில் அடிப்படையாக இருந்தது. மாடு பால், மண் உரம், மற்றும் ஏராளமான பொருட்களுக்கு பயன்பட்டது. சங்க இலக்கியங்களில், மாட்டுப் பண்ணையினர் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் தமிழர் நாகரிகமும் பொருளாதாரமும் உயர்ந்த நிலையில் இருந்தன. மக்கள் விவசாயம், வணிகம், கைத்தொழில், மற்றும் மாட்டு வளர்ப்பு போன்ற பல துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். சங்க இலக்கியங்கள் அந்தக் காலத்தின் செழுமை, பண்பாடு, மற்றும் பொருளாதார வளர்ச்சியை பிரதிபலிக்கின்றன.

**தொழில்நுட்பமும் அறிவும்**

தமிழர்கள் தொழில்நுட்பத் திறனிலும் அறிவில் சிறந்தவர்களாக விளங்கினர். குறிப்பாக கட்டிடக் கலை, உலோக பண்பாடு, நடப்பியல் போன்றவற்றில் அவர்கள் மிகுந்த ஆற்றல் பெற்றிருந்தனர். தமிழ் இலக்கியங்கள் அவர்களின் அறிவுத் திறனையும் நவீனத்தையும் வெளிப்படுத்து கின்றன. விவசாயத் தொழில்நுட்பத்தில் நீர் மேலாண்மை, மருந்தியல், மற்றும் பருத்தி, உளுந்து போன்ற பயிர்களை வளர்க்கும் முறைகள் ஆழமாகத் தெரிய வருகின்றன. மழைநிலங்களில் சதுரகோணம் முறையில் நிலங்களை மண் அறுக்கவும், உழவுக்கு தேவையான கருவிகளை உருவாக்கவும் தொழில்நுட்பப் புதுமைகள் இருந்தன.

சங்கக் காலத்திற்கேற்ப கைத்தொழில் மிகுந்த வளர்ச்சி யடைந்தது. கைவினைஞர்கள் துணிகளுக்கு, கல்லுப்

பொருட்களுக்கு, தங்கம் மற்றும் வெள்ளியைப் பயன்படுத்தி அழகிய ஆபரணங்கள், கைரேகைகள், மற்றும் உலோகக் கருவிகள் உருவாக்கினர். சுதந்திரம் பெற்றவர்கள் தங்களின் கைவினைச் செயல்களில் மிகவும் திறமையானவராக இருந்தனர். கோவில்கள், வீடுகள், மற்றும் குடியிருப்புகள் ஆகியவை உயர் தரமான கட்டுமானப் பொருட்களைப் பயன் படுத்தி கட்டப்பட்டன. அவற்றில் அழகான பொற்கொலை மற்றும் மரக்கட்டிடக் கலைகளும் காணப்பட்டன. மக்கள் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செழிப்பான நகரங்களை உருவாக்கினர். இயற்கை, வானியல், மற்றும் வேதியியல் போன்ற துறைகளில் தமிழர்கள் பெரும் ஆர்வம் காட்டினர். மரபுவழியாக கற்றுக் கொண்ட அறிவியல் செயல்முறைகள், பருத்தி மற்றும் உளுந்து போன்ற விவசாயப் பொருட்களைப் பயன்படுத்துவதில் தெரிய வருகிறது. மேலும், மருத்துவவியல் துறையில் உள்ள அறிவியல் புதுமைகள் கசாப்சிரியில் உள்ள விலங்குகளின் மருத்துவம், மூளைக்கு போதிய மருந்துகள் ஆகியவை உருவானது. சங்க காலத்தில் தொழில்நுட்பமும் அறிவும் பெரிதும் வளர்ந்திருந்தது. விவசாயம், கைத்தொழில், கட்டிடக்கலை, மற்றும் அறிவியல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தமிழர்களின் நாகரிகத்தை செழுப்பாக்கின. இதனால், சங்க காலத்தின் மரபுகளைத் தொடர்ந்து இன்று வரை தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் வளர்ச்சி தொடர்கிறது.

சங்க காலம் தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு, அறம் மற்றும் வீரத்தை மையமாகக் கொண்டிருந்த ஒரு துல்லியமான வரலாற்றுக் காலமாகும். இது தமிழர்களின் வாழ்வியல் முறையையும், அறிவையும் ஆழமாகப் பிரதிபலிக்கிறது. சங்க காலத்தில் தமிழர் பண்பாடு பல்வேறு கூறுகளால் அடிப்படையைக் கொண்டதாக இருந்தது, இது இக்காலத்தின் செழுமையைப் பதிவுசெய்தது. அங்கு உள்ள

*கல்வி, கலை, அறிவியல், மற்றும் சமூக அமைப்புகள் அனைவருக்கும் உள்ளடக்கிய ஒரு சூழலை உருவாக்கின. இக்காலம், தமிழர்களின் வரலாற்றில் மட்டுமல்லாமல், உலகளாவியமாகப் பெருமிதத்தை ஏற்படுத்தியுள்ளது. சங்க காலத்தில் தமிழர்களின் பண்பாட்டின் செழுமை இன்று நம்மை ஆழமாகப் பிரபலமாக்கும் உருப்படியாக மாறியுள்ளது, மேலும் இது எதிர்கால சந்ததிக்கு ஒரு போதுமான அடிப்படையாக அமைந்துள்ளது.*

**நூற்பட்டியல்**


1. *சங்க இலக்கியமும் சமூகமும் - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் (2007)*
2. *சரளா ராஜகோபாலன் (2002), சங்க இலக்கியம்,, ஒளி பதிப்பகம், சென்னை, இந்தியா .*
3. *அருணாச்சலம்,ப.(முதன்மைப் பதிப்பாசிரியர்)., சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி மூன்று, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (2001).*
4. *சோமசுந்தரனார், பொ.வே., ஐங்குறுநூறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (2009).*
5. *துரைசாமிப்பிள்ளை ஔவை.சு., புறநானூறு (பகுதி I, II), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை, (2007).*
6. *நாராயணசாமி ஐயர், பின்னத்தூர்.அ., நற்றிணை நானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, (2007).*
7. *கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (தலைமைப்பதிப்பாசிரியர்கள்)*
8. *குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட்., சென்னை, (2007).*

9. பரிமணம், அம .பாலசுப்பிரமணியன், கு. வெ. (தலைமைப் பதிப்பாசிரியர்கள்) பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2007).

10. பரிமணம், அ. ம, பாலசுப்பிரமணியன். கு. வெ. (தலைமைப் பதிப்பாசிரியர்கள்) புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2007).

11. பாலசுப்ரமணியன், கு.வெ. தொல்காப்பியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (2019).

12. ராஜம், மர்ரே எஸ்., பரிபாடல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை, (1981).

13. வேங்கடசாமி நாட்டார், ந.மு., வேங்கடசாமி பிள்ளை, ரா. அகநானூறு-(களிற்றியானைநிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், QESITSST, (2009).

14. சிவசுப்பிரமணியன், ஆ. 2016. சங்ககால உழுதொழிலின் தோற்றமும் வளர்ச்சியும். புதிய ஆராய்ச்சி. இதழ் 5: 181-197.

15. பக்தவத்சல பாரதி (ப-ர்). தமிழர் உணவு. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம். (2011).

16. மானிடவியல் கோட்பாடுகள். புத்தாநத்தம்: அடையாளம்(2011)

17. மணவழகன், ஆ. பழந்தமிழர் தொழில்நுட்பம். சென்னை: அய்யனார் பதிப்பகம். 2010.

18. மணி, ஆ.தொ-ர்).தமிழர் உணவுகள். புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம். 2010.

19. மாதையன், பெ. சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம். சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ். 2010.

**அடிக்குறிப்புகள்**

1. *பக்தவல்சல பாரதி பண்பாட்டு மானுடவியல், ப.34.*
2. *ஐங்குறுநூறு பாடல் எண். 203.*
3. *புறநானூறு பாடல் எண். 119.*
4. *சிறுபாணாற்றுப்படை 175-177.*
5. *புறநானூறு பாடல்,326*
6. *திருக்குறள் எண்.81.*
7. *திருக்குறள் எண்.82,*
8. *புறநானூறு பாடல்,333*
9. *ஐங்குறுநூறு பாடல்,2*
10. *புறநானூறு பாடல்.319.*
11. *புறநானூறு பாடல்.319.*
12. *பதிற்றுப் பத்து பாடல் 12, வரி 15.25*
13. *புறநானூறு பாடல்.189.*
14. *பதிற்றுப் பத்து பாடல்.20 -30.*
15. *பெரும்பாணாற்றுப்படை பாடல், 23-28.*
16. *நற்றிணை பாடல்,214,*
17. *குறுந்தொகை பாடல், 167*

# செப்பேடுகள் மூலம் அறியலாகும் பாண்டிய மன்னர்களின் வரலாறு
# HISTORY OF THE PANDYAN KINGS AS KNOWN THROUGH THE SEPPADS

**த. முத்துகிருஷ்ணன்**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை
அண்ணாமலை பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர்
சிதம்பரம் 608 002, தமிழ் நாடு

**முனைவர்.க.குமரன் (மாற்றுப் பணி)**
உதவிபேராசிரியர்,வரலாற்றுத்துறை
திரு.வி.க.அரசினர் கலைக்கல்லூரி, திருவாரூர்

**ஆய்வுச் சுருக்கம்**

*பாண்டியர் செப்பேடுகள் என்பது பாண்டிய வேந்தர்கள் கொடுத்த நில தானங்களையும், தன் முன்னோர் நில தானங்களை ஆவணப்படுத்தவும் உருவாக்கப்பட்ட பட்டயங் களாகும். பாண்டியர் செப்பேடுகளில் இடைக்கால மற்றும் பிற்கால பாண்டியர்கள் காலத்தில் கொடுக்கப்பட்ட ஏழு செப்புப்பட்டயங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைந்தன. இவை கிடைக்காமல் போயிருந்தால் களப்பிரர் ஆட்சியைத் தமிழ்நாட்டில் வேரறுத்த பாண்டியர் வேந்தன் கடுங்கோன் பற்றி வரலாறு அறியாமலேயே போயிருக்கும். இடைக்கால மற்றும் பிற்கால பாண்டியர்களின் காலங்களைக் கணிப்பதற்கும், முறைப்படுத்துபவதற்கும் வகையிலாமல் போயிருக்கும்.*

**திறவுச் சொற்கள்:**

*இளையன்புதூர் செப்பேடுகள், வேள்விக்குடிச் செப்பேடுகள், திருவரமங்கலத்துச் செப்பேடுகள், சின்னமனூர் செப்பேடுகள்*

**Abstract**

*Pandyar seppeds are charters created to document the land grants made by Pandyan vendars and the land grants of their ancestors. Among the Pandyan copperplates, the seven copperplates issued during the medieval and later Pandyan period are of historical importance. Had these not been available, history would have gone without knowing Pandyar Vendhan Katungon, who rooted Kalaprar rule in Tamil Nadu. To estimate the periods of medieval and later Pandyas*

*Keywords: Ilayanpudhur inscriptions, Velvikkudi inscriptions, Thiruvaramangalam inscriptions, Chinnamanur inscriptions.*

**முன்னுரை**

கல்வெட்டுகளைப் போலவே கொடைக்கான ஆவணங்களாக விளங்குவது செப்பேடுகள் செப்பு ஏடுகள் செப்பேடுகள் என்று வழங்கப்படுகின்றன. சிறப்பை உருவாக்கி செப்பேடுகள் செய்யும் வழக்குமே பழங்காலத்தில் தகடுகளை தட்டி நீட்டி அதிலுள்ள எழுத்துக்களை அளித்து விட்டு செப்பேடுகள் செய்யப்பட்டுள்ளன. பழங்காலத்தில் ஓலை வடிவில் செவ்வகமாக இருந்த செப்பேடுகள் காலப்போக்கு சதுர வடிவிலும் நீள் சதுர வடிவிலும் செய்யப்பட்டுள்ளன. செப்பேடுகளின் இடது பக்கத்தில் ஒரு துளைத்து அவை இணையும் இடத்தில் வட்ட வடிவில் அரசர்கள் முத்திரைகள் இருக்கும். பாண்டியரைப் பற்றிக் கூறுவனவற்றுள் காலத்தால் முந்தியன மெகச்தனீசர் எழுதிய இந்திகா, சாணக்கியனின் அர்த்தசாத்திரம், அசோகனின் கல்வெட்டுக்கள் என்பனவாம். பாண்டியர் மதுரை, நெல்லை, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் ஆண்டார்கள். பாண்டிய நாடு பருத்திக்கும் முத்துக்கும்

*பெயர்பெற்ற நாடாகும். பிளினி பாண்டிய நாட்டைப் பற்றிக் கூறியுள்ளார். கி.மு. 40-லிருந்து கி.மு. 30 வரை ஈழ நாட்டைப் பாண்டியன் ஆண்டதாக மகாவம்சம் கூறுகிறது. ஒரு பாண்டிய மன்னன் ரோம் நாட்டுக்கு அகச்டசுசீசர் காலத்தில் ஒரு தூதுக்குழுவை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. கி.பி. 300 முதல் 600 வரை ஆண்ட பாண்டியரைப் பற்றி அறிய ஒருவிதச் சான்றும் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் களப்பிரர் ஆட்சியே. அதுமட்டுமல்ல; சோழரும் பல்லவரும் தத்தம் ஆட்சிக் காலங்களில் பாண்டியரைத் தலைதூக்கவொட்டாது அடக்கி ஒடுக்கியமையும் ஒரு காரணமாகும். பல்லவரும் பிறரும் எவ்வளவோ அடக்கியும் பாண்டியர்கள் கி. பி. 600-இல் தமக்கென ஒரு தனியரசை ஏற்படுத்திக்கொண்டனர். கி.பி. 600 முதல் 800 வரை ஆண்ட பாண்டியர்களைப் பற்றி நாம் அறியப் பெருந்துணை புரிவன பாண்டியன் நெடுஞ் சடையன் வெளியிட்ட வேள்விக்குடிப் பட்டயமும், பிற பாண்டியர் பொறித்த கல்வெட்டுக்களுமாம்.*

**பாண்டியர் காலத் தமிழகம்**

*பாண்டியர் ஆட்சி முறை சோழர் ஆட்சி முறையைப் போன்றதே. கிராமச் சபைகளிடமே கிராம ஆட்சி இருந்தது. பெரும் பெரும் அணைக்கட்டுகள் கட்டப்பட்டன. தமிழ் நாட்டுக்கோவில், பண்பாட்டின் உறைவிடமாகவும், மடங்கள் கல்விக் கழகங்களாகவும் திகழ்ந்தன. சைவ வைணவ சமயங்களோடு சமணமும் பௌத்தமும் வளர்ந்தன. அரபு நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும் இடையே சிறந்த வாணிகம் நடந்தது. அரேபியர்கள் பாண்டிய நாட்டில் காயல் பட்டினத்தில் குடியேறினர். பாண்டிய நாட்டுக் கடற்கரை அவர்களால் மலபார் என்று அழைக்கப்பட்டது. இந்தச் சொல்லே பின்பு கொல்லத்திலிருந்து நெல்லூர் வரையிலுள்ள கடற்கரையைக் குறிக்கலாயிற்று. பாண்டிய, சோழர் காலக் கல்வெட்டுக்கள் அக்கால மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றை அறியப் பேருதவி புரிகின்றன. தமிழர்கள்*

இந்த இடைக்காலத்தில் சாதிகளாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். தேவதாசிகள் சமுதாயத்தில் மிகுந்த உரிமையோடு உலவினர். அஃதோடு அவர்கள் பல அன்பளிப்புகளும் தந்தனர். அடிமைமுறை அக்காலத்தில் நிலவியது. திருமறைக் காட்டிற் காணப்படும் மூன்றாம் இராசராசனின் கல்வெட்டுக்கள் இரண்டு, ஆரியன்பிச்சன் என்பான் 5 ஆண்களையும், 5 பெண்களையும் 1000 காசுக்கு விற்றதாகக் கூறுகின்றன. சதியும் அக்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

இரண்டாம் பராந்தகனின் மனைவியாகிய வானவன் மாதேவியும், ஒரு மல்லன் மனைவியாகிய தேக்கபியும் உடன்கட்டை ஏறியதாகத் தெரிகிறது. சாதிவெறி அக்காலத்தில் கடுமையாகவே இருந்தது; நிலங்கள் மன்றங்களுக்கும், தனியாருக்கும் சொந்தமாய் விளங்கின. வைரமேகதடாகம், வீர சோழன், கீர்த்தி மார்த்தாண்டன் முதலிய குளங்களாலும், கால்வாய்களாலும் வேளாண்மை செழிப்பாக நடைபெற்றது. கோவில்கள் மிகவும் சீரும் சிறப்பும் கொண்டு திகழ்ந்தன. கோவிற்குப் பல ஆயிரம் பணம் பெறுகின்ற நகைகள் தேவைப்பட்டன. இதனால் நகைக்கலை செழித்தது. காஞ்சியிலும், மதுரையிலும் கைத்தறித் தொழில் ஓங்கியது. குமரி முனையிலும், மரக்காணம் (தென்னார்க்காடு) என்ற இடத்திலும் உப்பளங்கள் மிக்கு விளங்கின. நாட்டில் பொதுவாக நிலவிய வட்டி விகிதம் 12 1/2%. உறுதித் தாள்கள் (Promissory notes) நடைமுறையில் இருந்தன. 72 தானிய எடை உள்ள காசு அல்லது மடை என்ற தங்க நாணயமும் அக்காலத்தில் பழக்கத்திலிருந்தது.

காசு என்பது அரைப்பொன். கழஞ்சு என்பது நாணயமாக வழங்காத தங்கமாகும். நாணயங்களில் வில், கயல், புலி பொறிக்கப்பட்டிருந்தன. மேலை நாடுகளுக்கும், கீழை நாடுகளுக்கும் இடையே பெருத்த வாணிகம் நடைபெற்றது. மூன்று தூதுக் குழுக்களைச் சீனாவிற்குப் பாண்டியன் அனுப்பினான்.இக்காலத்தில் சைவமும் வைணவமும் நன்கு

*வளர்ந்தன. சமயப்பொறை நிலவியது. எனினும் சில போழ்து சமய வெறியும் கொலைகள் பல நடத்தியது. காளமுகம், பாசு பதம், கபாலிகம் முதலியனமிகுந்த செல்வாக்கோடு உலவின. மடமும், கோவிலும் பண்பாட்டுக்கும் கல்விக்கும் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. சுருங்க உரைப்பின், அக்காலக் கோவில்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகளாகவும், நிதியகங்களாகவும், செழுங்கலை நிலையங்களாகவும், கலைக் கண்காட்சிகளாகவும், பொருட்காட்சி சாலைகளாகவும், மருந்தகங்களாகவும், அற நிலையங்களாகவும் திகழ்ந்தன. பெரும்பாலான கோவில்களில் நூல் நிலையங்கள் இருந்தன. நாடகமும், நடனமும் நன்கு வளர்க்கப்பட்டன. நெல்லைக்கருகிலுள்ள பத்தமடைக் கல்வெட்டு ஒன்று, திருவிழாக்களில் நடனமாடவும், நாடகம் நடிக்கவும் ஒரு நடன மங்கைக்கு நிலம் மானியமாக விடப்பட்டிருந்தது எனக் கூறுகிறது. சமண, பௌத்த சமயங்களும் ஓரளவுக்கு அடியார்கள் மிகப்பெற்றிருந்தன. சமணம் பௌத்தத்தைவிட நன்கு செல்வாக்கோடு திகழ்ந்தது என்னலாம்.*

*இடைக்காலத்திலே தமிழிலக்கியமும் ஓரளவுக்கு வளர்ச்சி பெற்றது என்னலாம். சமண, சைவ, பௌத்த, வைணவ அடியார்களால் பல அழகிய தமிழ் நூற்கள் எழுதப்பட்டன. திருத்தக்க தேவர் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணியை எழுதினார். சிதறிக் கிடந்த சைவ நூற்களைத் திருமுறை என ஒரு ஒழுங்குபடத் தொகுத்து வகுத்தது கி. பி. 1100-லேதான். சேக்கிழார் தித்திக்கும் பெரிய புராணம் எழுதியது இக்காலத்தில்தான். அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் வாழ்ந்தது இக்காலத்திலேதான். வீரசோழியம் பிறந்தது இந்தக் காலத்திலேதான். யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம், கலிங்கத்துப்பரணி, இராமகாதை, மூவருலா, நளவெண்பா போன்ற தமிழ்ப் பெருநூல்கள் இந்த இடைக்காலத்திலே தான் எழுந்தன. குணவீரபண்டிதரால் நேமிநாதம் இக்காலத்திலேதான் எழுதப்பட்டது. நன்னூல்*

என்னும் பொன்னூல் தோன்றக் காரணமாக இருந்தது இந்த இடைக்காலமே. தண்டியலங்காரம் என்னும் அணிநூல் இக்காலத்திலேதான் எழுந்தது. சுருங்க உரைப்பின் இடைக்காலம் என்பது தமிழ் மொழி வரலாற்றிலே ஒரு திருப்பு மையம் என்று கூறலாம்.

**மெகெசுதெனீசு கண்ட பாண்டிய நாடு**

வரலாற்றிகளின் தந்தை என்று அழைக்கப்படும் ஹெரோடோட்டஸ் முதன் முதலில் தென்னிந்தியாவை பற்றிய குறிப்புகளை பதிவு செய்தார். அதற்குப் பிறகு மெகஸ்தனிஸ் தன்னுடைய குறிப்புகளில் பல ஆதாரங்களை அந்த கால சூழ்நிலையை விளக்கி காட்டி இருக்கிறார். சிந்து நதியை எட்டிப் பார்த்துவிட்டு இந்தியாவை கண்டுபிடித்து விட்டேன் என்று சொல்லித்திருந்தவர்களிடம் இல்லை நான் கண்டது கையளவு நீர் கடலை காண வேண்டுமானால் இங்கு வாருங்கள் என்று தென்னிந்தியாவிற்கு உற்சாக அழைப்பு விடுத்திருக்கிறார் மெகஸ்தனிஸ். அவருடைய முதல் குறிப்பு தெற்கின் இயல்பை சுட்டிக்காட்டி விடுகிறது .ஆரம்பம் முதலே வடக்கு எந்த வழியில் செல்கிறது என்று கவனித்து நேர் எதிரான வழியில் செல்வதன் தெற்கு என்று அவர் குறிப்பிடுவது போல் அவருடைய குறிப்புகள் அமைந்திருக்கிறது. அலெக்ஸாண்டரின் வருகைக்குப் பிறகு இந்தியாவின் அரசியல் சூழ்நிலை வெகுவாக மாறி இருக்கிறது கிமு 326 இல் அலெக்சாண்டர் வந்த பிறகு பல கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வருகை தந்திருப்பதை அறிய முடிகிறது. அதில் சந்திரகுப்தரின் அவையில் இருந்த மெகஸ்தனிஸ் இண்டிகா எனும் நூலை எழுதினார். அதில் சிறு,சிறு பகுதிகள்தான் தற்போது பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவருக்கு பின்வந்த எழுத்தாளர்கள் அந்தப் பகுதியை மேற்கோள் காட்டி எழுதி வந்திருக்கிறார்கள். மௌரிய நிர்வாக அமைப்பை பற்றியும் மௌரியர் காலத்து சமூகப் பிரிவுகள் பற்றியும் பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும்

*பல அறிய தகவல்களை தனது இண்டிகாவில் எழுதியிருக்கிறார். பிறகு கிபி முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் பல கிரேக்க, ரோமானிய கடல் பயணிகள் இந்திய நாட்டின் துறைமுகங்கள் பற்றி பல குறிப்புகளை தந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.(மெகெசுதெனீசு) (கிமு 350 - கிமு 290) ஒரு கிரேக்கப் பயணியும், புவியியலாளரும் ஆவார். இவர் இண்டிகா என்னும் நூலை எழுதினார். ஆசியா மைனரில் பிறந்த இவர், பாடலிபுத்திரத்தில் இருந்த சந்திரகுப்த மௌரியனின் அரசவையில், செலுசிட் பேரரசர் செலுக்கசு நிகோடரின் தூதுவராக இருந்தார். இவர் அங்கு தூதுவராக இருந்த காலம் தெளிவாகத் தெரியாவிட்டாலும், இது சந்திரகுப்தன் இறந்த ஆண்டான கிமு 288 க்கு முன்னர் என வரலாற்றாளர்கள் கூறுகின்றனர்.*

*வட இந்தியாவை ஆண் கடவுள்கள் உருவாக்கி இருக்க தென்னிந்தியாவை மட்டும் பெண் கடவுள்கள் படைத்திருக்க முடியுமா என்று அவர் குறிப்பிடும் வாசகங்கள் பாண்டிய நாட்டில் பெண்களை ஆட்சிபீடத்தில் வைத்து ஆட்சி செய்த குறிப்புகளை நமக்கு வரலாற்று பூர்வமாக உணர்த்தி இருக்கிறது. இது மதுரையில் ஆட்சி செய்த பாண்டியர்கள் அன்று அவர்களின் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு இருந்தது என்றும் பாண்டிய மன்னர்கள் அரசியர் தலைமையில் ஆட்சி செய்ததையும் பாண்டிய நாட்டு அரசு 13,000 காலர் படைகளும் 4000 குதிரைப்படைகளும் 400 யானைகளும் இருந்ததாக மெகஸ்தனிஸ் பதிவு செய்திருக்கிறார். தென்னிந்தியா தாய் வழி சமூகமாக இருந்திருப்பதை இந்த ஆதாரத்தின் மூலமாக நாம் புரிந்து கொள்ள முடிகிறது. பாண்டிய நாட்டின் ஆட்சி பகுதி குறித்து கிடைக்கும் தகவல்களில் அது முத்துக்கள் நிறைந்து பலர் முத்து வாணிபம் செய்ததையும் அலெக்ஸாண்டர் வருவதற்கு முன்பு முத்து கருப்பா, சிவப்பா என்பது கூட கிரேக்கர்களுக்கு தெரியாது. என்றும் பாண்டிய நாட்டின் முத்துக்களை பார்த்த பிறகுதான் அவர்கள் அதை கண்டு*

வியந்து போனார்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார். இந்தியாவிலேயே பாண்டிய நாட்டில் தான் அதிக முத்துக்கள் கிடைக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அர்த்த சாஸ்திரத்திலும் பாண்டியர்களின் தலைநகரமாக மதுரை இருந்து இருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் மதுரையில் பட்டு, தந்தம், மிளகு ஆகியவை அதிக அளவில் வணிகம் செய்யப்பட்டதையும் முத்துக்கள் அங்கு வெகு பிரபலமாக இருந்ததையும் மெகஸ்தனி குறிப்புகள் மூலமாகவும் அர்த்தசாஸ்திர மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.

பாண்டிய நாட்டில் கடலுக்கு மத்தியில் இருக்கக்கூடிய ஒரு தீவிலும் வாழ்ந்த மக்கள் முத்துக்களை இங்கு கொண்டு வந்து வழங்கி இருப்பதையும் அதிசயத் தீவு என்றும் குறிப்பிடுகிறார். மேலும் மெகஸ்தனிஸ் பனைமர தோப்பு மதுரையில் அதிகம் இருந்ததையும் பனை மரங்கள் மிக நீண்டு வளர்ந்திருப்பதையும் பாண்டிய மன்னர்கள் பெரிய தோட்டங்களை வைத்து பராமரித்ததையும் பாண்டி நாட்டு மக்கள் மீன்பிடிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருந்திருப்பதையும் மெகஸ்தனிஸ் பதிவு செய்திருக்கிறார்.

**தமிழ்ச் செப்பேடுகள்**

தமிழ்ச் செப்பேடுகள், பல்வேறு தென்னிந்திய அரச மரபினரால், தனிப்பட்டவர்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட, ஊர்கள், வேளாண்மை நிலங்கள் மற்றும் வேறு கொடைகள் குறித்த பதிவுகள் ஆகும். தமிழ் நாட்டின் வரலாற்றை மீளுருவாக்கம் செய்வதில் இச் செப்பேடுகள் பற்றிய ஆய்வுகள் முக்கியமானவை ஆகும். தமிழ்ச் செப்பேடுகள் தொடர்பான கொடைகள் கி.பி 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 19 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும், சாளுக்கியர், சோழர், விசயநகர

அரசர்களின் காலத்தைச் சேர்ந்தவை. மத்தியகாலத் தென்னிந்தியாவின் சமூக நிலை பற்றி அறிவதற்கு உதவுவதால் இவை கல்வெட்டியல் தொடர்பில் மிகப் பெறுமதியானவை. அத்துடன், தென்னிந்திய அரச மரபினர் தொடர்பான வரலாற்றில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதிலும் இவை பெரிதும் துணை புரிகின்றன.

**இளையன்புதூர் செப்பேடுகள்**

இளையன்புதூர் செப்பேடுகள் எனப்படுபவை கி.பி.726 ஆம் ஆண்டு முற்கால பாண்டிய அரசனான அரிகேசரி பராங்குசன் மாறவர்மனின் 36 ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட செப்பேடுகள் ஆகும்.இந்த செப்பேடுகள் மதுரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த செப்பேடுகள் மூலம் முற்கால பாண்டியர் வரலாறு குறித்த செய்திகள் கிடைத்துள்ளன.வடிவம்பலம்ப நின்ற பாண்டியன் வழி வந்த ஜயந்தவர்மன் என்ற மன்னன மகன் அரிகேசரி பராங்குசன் மாறவர்மன், ஆசி நாட்டு கம்பலை என்னும் மறவனை வென்று அவன் நிலத்தை அரசுடைமையக்கினான். காடாக கிடந்த அந்த நிலங்களை கி.பி. 726 ஆம் ஆண்டு சீரமைத்து இளையன்புதூர் என்று பெயரிட்டு பாரத்வாஜி நாராயணபட்ட சோமாயாஜி என்னும் அந்தணருக்கு கொடை வழங்கி செப்பெடும் வெட்டித்தந்தான் எனவும் அந்த நிலத்தின் நான்கு பக்க எல்லைகளும் இந்த செப்பெட்டில் விரிவாக விளக்கப் பட்டுள்ளன. சேந்தன் மகனாகிய அரிகேசரி பராங்குசன் மாறவர்மனை சேந்தமாறன் என்றும் தேர்மாறன் என்று செப்பேடு கூறுகிறது.

இந்த செப்பேடு இரணியகற்பம், துலா பாரம் செய்து கொடை கொடுத்தான் எனவும், களக்குடி என்ற ஊரில் அரிகேசரி ஈஸ்வரம் என்ற சிவாலயத்தை கட்டி எழுப்பினான் எனவும் கூறுகிறது. பாண்டி பெரும்பணைக்காரன் மகன் அரிகேசரியே, சின்னமனூர் செப்பேட்டையும் எழுதி

*இருக்கலாம் ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.வைகைக்கரை, ஏனாதி ஆகிய ஊர்களில் கிடைத்த கல்வெட்டுகள் இந்த மன்னனின் 50 ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. வேள்விக்குடி மற்றும் சிறிய சின்னமனூர் செப்பேடுகளில் கூறப்பட்ட செய்திகள் இந்த செப்பேடுகளிலும் ஒன்றி வருகிறது என ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. இந்த மன்னன் பெயரால் சின்னமனூர் அரிகேசநல்லூர் என அழைக்கப்படுகிறது.*

**வேள்விக்குடி செப்பேடுகள்**

*சங்ககாலத்தில் தானம் வழங்கிய நிலத்தைக் கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளுக்குப் பிறகு சான்று காட்டிப் பெற்றுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய மன்னர் பெருவழுதியின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளதும், சங்க காலப் பாண்டியர்க்குப் பின் தமிழகத்தைக் களப்பிரர் ஆட்சி செய்தனர் என்பதற்கான அரிய சான்றாக அமைவதும் இச்செப்பேட்டின் சிறப்பாகும். இச்செப்பேடு இல்லையெனில் சங்க காலத்திற்குப் பிறகு ஆட்சி செய்த ஆறுக்கும் மேற்பட்ட பாண்டிய மன்னர்களின் சிறப்புகளும் விவரங்களும் அறியப்படாமலேயே போயிருக்கக் கூடும். வேள்விக்குடி என்ற ஊர் சங்க காலத்தில் (பொ.ஆ.மு.300) கொற்கைக் கிழான் நற்கொற்றன் என்ற அந்தணர்க்குப் பல்யாக முதுகுடுமி பெருவழுதி என்ற பாண்டிய மன்னால் வழங்கப்பட்டுள்ளது. நடுவிலே நாட்டின் ஆட்சி களப்பிரரிடம் மாறியிருந்தது. அந்நாளிலே தானக்கிராமத்தை அந்த வேற்று அரசாங்கம் கைப்பற்றிவிட்டது. மீண்டும் பாண்டிய வம்சத்தின் அரசு நிறுவப்பட்ட பிறகும் நெடுங்காலம் கழித்தும் (கிட்டத்தட்ட 500 ஆண்டுகள்) அந்த ஊர் முதலில் தானம் பெற்றவனுடைய வம்சத்தாருக்குக் கிடைக்கவில்லை. பாண்டியர் ஆட்சி மீண்டும் நிறுவப்பட்டு 6 அரசர்களின் காலம் முடிந்து 7-ஆம் அரசனான பராந்தக நெடுஞ்சடையனுடைய ஆட்சியிலேயே முன்னர்த் தானம் பெற்ற அந்தணரின் வாரிசு அச்செய்திகளை அரசரிடம்*

கூறுகின்றார். மீண்டும் அவ்வூர் பராந்தக நெடுஞ்சடையனின் காலத்தில் (பொ.ஆ. 8-ஆம் நூற்றாண்டில்) சான்றுகளைக் காட்டியப் பிறகு அந்தணரின் வாரிசுக்குக் கொடையாக வழங்கப்படுகிறது. இதுவே இதன் செய்திச் சுருக்கமாகும்.

**சின்னமனூர் செப்பேடுகள்**

சின்னமனூர் செப்பேடுகள், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள சின்னமனூர் பகுதியில் கிடைக்கப்பெற்ற மூன்று செப்பேடுகள் ஆகும். இந்தச் செப்பேடுகளில் பாண்டிய மன்னர்களைப் பற்றிய புராணக்கதைகளும், பராக்கிரமச் செயல்களும் கூறப்பெற்றுள்ளது. இந்தச் செப்பேடுகளில் குறிக்கும் ஆணத்தி எனப்படுபவர் பாண்டிய மன்னரின் தலைமை அமைச்சரான குண்டூர்த்தாயன்சிங்கன் ஆவான். இச்செப்பேட்டை எழுதிவித்தவர் பாண்டிப்பெரும் பணைக்காரன் மகன் அரிகேசரி ஆவான். மூன்று செப்பேடு களும் பராந்தக நெடுஞ்சடைன்யனால் அளிக்கப்பட்டது.

சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள், பாண்டிய மன்னர் இரண்டாம் இராசசிம்மன் வெளியிட்ட இச்செப்பேடு ஏழு ஏடுகளைக் கொண்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் பெற்ற வெற்றியும், அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கிபி 650 - 700) பிறகு அவனுடைய வழித்தோன்றல்களான முதலாம் வரகுணன், ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன், சடையவர்மன் இரண்டாம் வரகுணன் போன்ற பாண்டிய மன்னர் குல மரபும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

**தாருகாபுரம் செப்பேடு**

தென்காசிப் பாண்டியர் எல்லைக்குட்பட்ட மலையங்காட்டுப் பகுதியில் தீயவனும், மிருகத்தன்மையுடையவனுமான சந்திரன் என்ற ஒரு எதிரி இருந்ததாகவும் அவன் பல அரசர்களை கொன்று வந்ததாகவும் அவனை கொண்டையன் கோட்டடை மறவரின் ஒருவனான திருவண்ணாத் தேவர் வெட்டி வெற்றி கண்டனையால் திருவண்ணாதேவர்க்கு

இந்திரத்தலைவன் என்று பட்டம் தரப்பட்ட செய்தி சொல்லப் படுகிறது. இவருக்கு நிலமை காணியாட்சியாக, உம்பளச் சர்வமானியமாக 22-க்கு மேற்பட்ட கிராமங்கள் வழங்கப் பட்டன.

**முடிவுரை**

பழங்காலத்தில் மன்னர்களின் கோவில் தானங்கள், வம்சாவழி(பரம்பரை), போர்க்குறிப்புகள், மரபு வழிக்கதைகள் போன்ற நிகழ்வுகளைப் பதிந்து வைப்பதற்குப் பயன்படுத்தப் பட்ட உலோகத் தகடு ஆகும். இவை தற்காலத்தில் பழங்காலத்தைப் பற்றி அறியும் தொல்லியல் சான்றுகளாக இருந்து வருகின்றன. இவற்றில் சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கும் 280 செப்பேடுகளை படியெடுக்க -முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இயற்கையாக ஓலைச்சுவடிகள் அழிவது போலச் செப்பேடுகள் அழிவது இல்லை. எனவே பண்டைய மக்கள் செப்பேடுகளைப் படிக்கவும் பாதுகாக்கவுமின்றிப் பூமியில் புதைத்து வைத்தனர். மேலும் பல செப்பேடுகள் உருக்கப்பட்டுப் பாத்திரங்களாக மாறின. செம்பின் உபயோகத்துக்காக பல செப்பேடுகள் அழிக்கப்பெற்றன. இவற்றை மீறி சில செப்பேடுகள் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டன. செப்பேடுகள் அவை கிடைத்த இடத்தைக் கொண்டோ அவை இருக்கும் இடத்தைக் கொண்டோ பெயரிடப்படுகின்றன. செப்பேடுகளை அவை கிடைக்கும் இடத்தை மட்டும் வைத்து அவ்விடத்திற்கே உரியது என்று கூறமுடியாது. ஏனெனில் செப்பேடுகளை எடுத்துச் செல்வது எளிமையாக இருப்பதன் காரணமாக ஓரிடத்திற்குரியவை வேறுபட்ட தொலைவான இடங்களில் கூடக் கிடைக்கலாம்.

**ஆதாரங்கள்**

1. தமிழர் நாகரிகமும் பண்பாடும், டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி, பக்கம்-448,

2. கந்தையா பிள்ளை, ந. சி., காலக்குறிப்பு அகராதி, வெளியீடு ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960

3. பராந்தக பாண்டியனும் அவனது மகனும் (கி.பி. 885-920)''. தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

4. பாண்டியர் வரலாறு ஆசிரியர்:T.V.சதாசிவ பண்டாரத்தார் பக்கம்:88 பதிப்பகம்:நாம் தமிழர் பதிப்பகம்,சென்னை,5. Ins.117 of 1907

5. S.I.I. Vol. VII,Nos.459,55, 793 and 128

6. பாண்டியர் வரலாறு ஆசிரியர்:T.V.சதாசிவ பண்டாரத்தார் பக்கம்:88 பதிப்பகம்:நாம் தமிழர் பதிப்பகம்,சென்னை,5

7. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி, ப. எண் 91-95.

8. சடையவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி, ப.எண். 51-55

# சங்க காலம் முதல் தற்காலம் வரை பெண்களின் நிலை

# STATUS OF WOMEN FROM SANGAM PERIOD TO PRESENT

**முனைவர் மு. முத்துலெட்சுமி,**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
கைக்குறிச்சி, புதுக்கோட்டை.
மின்னஞ்சல்: lakshmiprabu87@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ்நாட்டின் சங்க கால இலக்கியத்தின் பார்வையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக இருந்ததில்லை, அது எப்போதும் ஆண்களின் பார்வையில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. கட்டுக்கதைகளை உடைத்து தமிழ் சங்க கால இலக்கியத்தில் நிரந்தர முத்திரை பதித்த பெண் கவிஞர்கள் மிகக் குறைவு. ஆரம்பம் முதல் இடைக்காலம் வரை 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை முழு வரலாற்றிலும் பல்வேறு மற்றும் வேறுபட்ட இலக்கியப் படைப்புகள். பெண்களின் உணர்வு மற்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு வழியாக இது பெண்களால் மிகவும் விரும்பப்பட்டு பாராட்டப்பட்டது. சங்க காலம் முதல் 21 ஆம் நூற்றாண்டு வரையிலான பெண்களின் வரலாற்றுச் சிந்தனைகள் மற்றும் தமிழ் இலக்கியத்தில் பெண்களின் பங்கு ஆகியவற்றைக் கட்டுரை பேசுகிறது.வீரமும் காதலும் சங்க காலப் பண்பாட்டின் இரு கண்கள். கடின உழைப்புக்கும் ஒழுக்கத்துக்கும் உயிர் கொடுத்த சமூகப் பின்புலம் கொண்ட பெண்கள் இளமைப் பருவத்தில் பெற்றோர் மற்றும் தோழிகளுடன் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தனர். சங்க*

காலப் பெண்களின் நிலை, மற்றும்தற்காலப் பெண்களின் நிலையைப் பற்றியும் பின்வரும் இக்கட்டுரையில் காணலாம்.

**திறவுச் சொற்கள்:**

*சங்க காலம், பெண்கள், பெண்கள் நிலை, தற்காலம், தற்காலப் பெண்களின் நிலை*

## Abstract

*The Sangam age in Tamil Nadu has never been equal for men and women in the eyes of literature, it has always been dominant in the eyes of men. There are very few women poets who have broken myths and made a permanent mark in Tamil Sangam literature. Various and diverse literary works in the whole history from the beginning to the middle of the 20th century. It is very much liked and appreciated by women as a way of expressing their feelings and emotions. The article talks about the historical thoughts of women from the Sangam age to the 21st century and the role of women in Tamil literature. Love and lust are the two eyes of culture. Women of social background, who gave life to hard work and discipline, lived a happy life with their parents and friends in their youth. The following article will discuss the status of women in the Sangam age and the status of women in the modern age.*

*Keywords: Sangam Period, Women, Status of Women, Modern Times, Status of Contemporary Women*

**முன்னுரை**

சங்க காலத்தில் பெண்கள் ஒன்றாக ஆடி, பாடி, ஓடுதல், நடனம் ஆடுதல், ஆறுகளில் ஒன்றாகக் குளித்தல்,வரிப்பந்தடல் விளையாடுதல் போன்றவற்றில் மகிழ்ச்சியடைந்தனர். சங்க காலத்தில் இளம்பெண்கள் பாடியும் நடனமாடியும் மலையக

நிலங்களில் கம்புகளை காத்துக்கொண்டிருப்பதையும், கரையோரங்களில் இளம்பெண்கள் கடல் நண்டுகளை துரத்திச் செல்வதையும், அவள் மலரும் சூழ்நிலை மாறுவதையும் காட்டுகிறது. ஆண்களுடன் சுதந்திரமாக பழகும் வாய்ப்பு முழுமையாக நிறுத்தப்படவில்லை. திருமணமாகாத கன்னிப் பெண்கள் சிறந்த வரன்களைப் பெற விரதம் மேற்கொள்வார்கள். பெண்களின் கல்வி நிலை மற்றும் ஆதிக்க நிலை ஆகியவற்றின் அடிப்படையில் பொதுவான வளர்ச்சிகள் எண்ணங்களாக இருக்கலாம். தமிழ்ச் சமூகத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் தனி இடம் உண்டு. தமிழ் முக்கியமாக கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது, இது கல்வித் துறையில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் குறிப்பிட்டது. சுதந்திரம் மற்றும் சம்மதத்திற்கான உரிமை, சமய சடங்குகளில் கவனம் செலுத்தும் உரிமை மற்றும் சங்க காலத்திலிருந்து பல்வேறு நூற்றாண்டுகளாக நிலையானது. பண்டைய தமிழ் சமூகத்தில் பெரும்பாலான பெண்கள் மிகவும் இன்றியமையாத இடங்களை வகித்தனர். அவர்கள் சமூகத்தில் ஒரு அதிகாரபூர்வமான பாத்திரத்தை வகித்துள்ளனர் மற்றும் உண்மையில் உயர்ந்த பாராட்டுடன் கருதுகின்றனர். கூடுதலாக, அவர்கள் குடும்ப சடங்குகளின் பாதுகாவலர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். 300 BCE முதல் 300 CE வரையிலான சங்க காலத்தில், பெரும்பாலான பெண்கள் தங்கள் கலாச்சாரங்கள், சடங்குகள் மற்றும் அரசியல், இராணுவம் மற்றும் வணிகத்துடன் அடையாளம் காணப்பட்டதை விளக்கி வெளிப்படுத்தினர். பாண்டியர்கள், சோழர்கள் மற்றும் சேரர்களின் அரச ஆதரவின் கீழ் 3 சங்கங்கள் செழித்து வளர்ந்தன. இது கிமு 300 முதல் கிபி 300 ஆண்டுகளுக்கு இடையில் நடந்தது. இது தமிழ் வரலாற்றில் சங்க காலம் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இக்காலகட்டத்தில் பல இலக்கியப் படைப்புகள் செழித்து வளர்ந்தன.

1. பழம்பெரும் முனிவர்களும் தேவர்களும் கலந்து கொண்ட முதல் சங்கம் மதுரையில் நடைபெற்றது. ஆனால் இச்சங்கத்தின் இலக்கியப் பணிகள் எதுவும் அப்போது அடையப்படவில்லை.
2. இரண்டாம் சங்கம் அடிப்படையில் கபாடபுரத்தில் நடத்தப்பட்டது ஆனால் தொல்க்காப்பியம் தவிர முழு இலக்கியப் படைப்புகளும் உறைந்தன.
3. மூன்றாம் சங்கம் அடிப்படையில் மதுரையில் நடத்தப்பட்டது. முடத்திருமாறனால் நிறுவப்பட்டு, மற்றும் திறன்மிக்க இலக்கியங்களை உருவாக்கிய பல்வேறு கவிஞர்கள் கலந்து கொண்டனர்.

சங்க இலக்கியங்களில் தொல்காப்பியம், அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு, மதுரைக் காஞ்சி, நற்றிணை, நெடுநெல்வாடை, திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம் எனப் பல பகுதிகள் உள்ளன.

**சங்க காலத்தில் பெண்களின் நிலை**

பிள்ளையின் கூற்றுப்படி (1968), சங்க காலப் பெண்கள் மீது நிறைய பொறுப்புகள் இருந்தன. அதேசமயம், கணவர் சம்பாதித்த பணத்தை, தன் குடும்பத்தின் எதிர்காலத் தேவைகள் மற்றும் பராமரிப்பிற்காக ஒதுக்குவது பெண்களின் கடமை மற்றும் பொறுப்புகள் இருந்தது. சங்க காலப் பெண்கள் மற்றும் அவர்களின் தரம் தொடர்பான தெளிவான மற்றும் நேர்த்தியான உருவத்தையும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர். சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே தெளிவான பாரபட்சம் இருந்தது. பெண்களின் கூச்சம், அன்பு மற்றும் மறைமுகமாக ஏற்றுக்கொள்வது மற்றும் பெரியவரின் அறிவுரைகளை எந்தக் கேள்வியும் இன்றி திருப்திப்படுத்துவது போன்றவற்றால் அறியப்படும் பெண்களின் மருத்துவப் பராமரிப்பு", அடிப்படையில் பெண்களுடைய பண்புகளாகும்.

*பயமுறுத்தும், புரிந்துகொள்ளும், நல்ல வார்த்தைகளைப் பேசுவதும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருப்பதாக தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களின் மிக இன்றியமையாத அம்சம் என்பதை தமிழில் உள்ள பெரும்பாலான சமூகங்கள் முன்னிலைப்படுத்தி வருகின்றன. பெண்கள் தங்கள் நகரங்களில் அல்லது கிராமங்களில் நடக்கும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், நடந்த தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடவும் முற்றிலும் சுதந்திரமாக உள்ளனர். அகநானூறு கோட்பாட்டின்படி, சங்க காலப் பெண்களில் பெரும்பாலானோர் சிறந்த கல்வி மற்றும் கற்றலுடன் சுதந்திரத்தை அனுபவித்தனர். உதாரணமாக, சங்க கால இலக்கியத்தில் சுமார் 26 புலவர்கள் இருந்ததாகக் கூறுகிறது. அவ்வையார், கவர் பெண்டு (புறநானூறு), வெள்ளிவீதியார் மற்றும் பொன்முடியார் ஆகியோர் பல பெண் கவிஞர்கள். "அவ்வையார்" இக்காலத்தில் பிரபலமான கவிஞர். சங்க கால இலக்கியத்தில் அவ்வையார் எழுதிய சுமார் 58 செய்யுட்கள் இருந்தன. மாண்டோத்ரியும் சீதாவும் போட்டியாளர்களின் மனைவிகள், அவர்கள் தூய்மைக்காகப் போற்றப்பட்டனர். கார்கி வச்சகன்வி பண்டைய காலகட்டத்தின் பெண்களின் கல்வி மற்றும் கற்றலுக்காக மேற்கோள் காட்டப்பட்டார். தத்துவ விஷயத்தைப் பற்றி விவாதிக்க அறிஞர்கள் கூட்டத்தில் சேரவும் அவர் அழைக்கப்பட்டார். புறநானூற்றில் முடிமழிர் என்று குறிப்பிடப்படும் போர்வீரர் குழுவில் பெண்களும் சேர்க்கப்பட்டனர். பலதரப்பட்ட சமூக மற்றும் மத வசதிகளில் பங்கேற்பதன் காரணமாக பல பெண்கள் இச்சமூக தரத்தின் ஏணியில் மிகப்பெரிய பீடத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.*

### சங்க கால காலத்தில் பெண்களின் உள்ளார்ந்த நற்பண்புகள்

*சங்க காலத்திலிருந்தே பெண்களின் நிலைகள் முற்காலத்தில் வளர்ந்து வருவதை இலக்கியங்கள் பலமுறை கண்டுயுள்ளன. சங்கத்தின் தமிழ் இலக்கியங்களில் உலகிலேயே அதிக*

எண்ணிக்கையிலான பெண் கவிஞர்கள் உள்ளனர். அவர்கள் கவிதைகள் இயற்றும் திறன் மற்றும் கூட்டங்களில் சேர்ந்துள்ளனர். சங்க இலக்கியமான புறநானூறு போர் அல்லது சண்டையின் போது பெண்கள் வெளிப்படுத்தும் இறுதி தைரியம் தொடர்பான சான்றுகளை வழங்குகிறது. கிமு 105-27 இல், பாண்டிய மன்னர் கைசின வழுதி முதல் தமிழ் சங்கத்தை நிறுவினார், இதில் சுமார் 4449 கவிஞர்கள் இந்த சங்கத்தில் கூடினர். முதுனாரை, முதுகுரு, களரியவிளை போன்ற சில படைப்புகள் இக்காலத்தில் எழுதப்பட்டவை. அஞ்சி ஆட்டை மகா நாகையார், அல்லூர் நன் முல்லையார், ஆதி மண்டியார், உத்தியார், உன்பிட்டையார், ஒக்கூர் மாசத்தியார், அவ்வையார், நன்னகையார், காக்கைப் பட்டினியார், நாச்செள்ளையார், கவர்பெண்டு, குறமகள் இளவேயிழையார், நக்கன்பள்ளியார், நக்கன்பள்ளியார், நக்கன்பள்ளியார் போன்ற சிறந்த புலவர்கள் , புடப்பாடியன் தேவி, பெருங்கோப்பேழு, பேய்மகழ் ளவேயினி, பொட்டியார், பொண்டைப்பசாலையார், மரொக்காட்டு நப்பசலையார், வருமுளையாரிட்டி, வேழிக்குயட்டியார், வெள்ளிவீதியார், வெறி பதிய கமக்காழியார்.

**சங்க காலத்தில் பெண்களின் ஏழு நிலைகள்**

இந்த சங்க இலக்கியம் பெண்களின் வாழ்க்கையை 7 கட்டங்களாக வகைப்படுத்துகிறது. பெண்களின் 7 நிலைகள் அவர்களின் குழந்தைப் பருவம் முதல் முதுமை வரை அமைகிறது.

**ஏழு பருவ மகளிரும் அந்த கட்டங்களும் பின்வருமாறு:**

1. பேதை நிலை (அப்பாவி குழந்தை) 5 முதல் 7 வயது வரை (3 வயது)
2. பெதும்ம்பை நிலை (இளம் பெண்) 8 முதல் 11 (4 வயது)

3. *மங்கை நிலை (இளம் பருவம்) ) 12 மற்றும் 13 (2 வயது)*
4. *மாடந்தை நிலை (நுபில் பெண்) 14 முதல் 19 (6 வயது)*
5. *அரிவை நிலை (கன்னி) 20 முதல் 25 (6 வயது)*
6. *தெரிவை நிலை (பெண்மை) 26 முதல் 32 (7 வயது) மற்றும்*
7. *பேரிளம்பெண் நிலை (அதிக முதிர்ச்சியடைந்த பெண்) 32 முதல் 40 (9 வயது)*

**வேத காலத்தில் பெண்களின் நிலை**

*கிமு 1500-1200 க்கு இடைப்பட்ட வேத கால காலங்கள், பெண்கள் மாய மற்றும் அறிவுசார் சாதனைகளின் சாரமாக இருந்தனர். வேதங்கள் இந்த பெண்களைப் பற்றி விளக்கியுள்ளன, அவர்கள் தங்கள் ஆண் துணைக்கு துணையாகவும் விசுவாசமாகவும் இருந்தனர். ரிக் வேதம் வேத காலத்தில் பெண்களைப் பற்றி பேசுகிறது. சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு பெண்களுக்கும் சமூகத்தில் உயர்ந்த இடம் ஒதுக்கப்பட்டது. அவர்கள் ஆண்களுடன் சமமாக நடத்தப்பட்டுள்ளனர் மற்றும் முற்றிலும் சமூகத் தடைகளைக் கொண்ட சுதந்திர வகைகளை அனுபவித்தனர். "சக்தி" என்ற பண்டைய இந்து தத்துவத்தின் அடிப்படைக் கருத்து, ஆற்றலின் பெண்பால் கொள்கையும் இந்த காலகட்டத்தில் ஒரு துணை விளைபொருளாக இருந்தது. முழுமையான மற்றும் பிரபலமான இந்து தெய்வங்களின் பெண்பால் வடிவங்கள் வேத சகாப்தத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டதாக அறியப்படுகிறது. இந்தப் பெண்களின் வடிவங்கள் அனைத்தும் பிரம்மனின் பல்வேறு பெண் குணங்களையும் ஆற்றல்களையும் காட்ட வந்தன. காளி தேவி அழிக்கும் ஆற்றலையும், துர்கா தேவி பாதுகாப்பு ஆற்றலையும், லட்சுமி தேவி ஊட்டமளிக்கும் உருவத்தையும், சரஸ்வதி தேவி படைப்பு ஆற்றலையும்*

சித்தரிக்கிறாள். அம்பிர்னியு, ரோமாசா, கோனா, கார்கி மற்றும் வாக் போன்ற வேத யுகத்தின் பெண் கல்வியாளர்கள் மற்றும் முனிவர்களைப் பற்றி வேத சாஸ்திரத்தில் குறிப்பிடுவது இதை உறுதிப்படுத்துகிறது.வேத பகுப்பாய்வின் பாதையைத் தேர்ந்தெடுக்கும் இந்த மிகவும் புத்திசாலி மற்றும் மிகவும் கற்றறிந்த பெண்கள் அனைவரும் 'பிரம்மவாதிகள்' என்றும், திருமண வாழ்க்கைக்குப் பிறகு கல்வியைத் தொடர முடிவு செய்த பெரும்பாலான பெண்கள் 'சத்யோவாதுகள்' என்றும் அழைக்கப்பட்டனர்.

## சைவம், வைஷ்ணவம் மற்றும் பௌத்த காலத்தில் சிறந்த பெண் கவிஞர்கள்

### சைவம் காலத்தில் பெண் கவிஞர்கள்

சைவமதத்தில் ஈர்க்கக்கூடிய பல அசாதாரண பெண்கள் உள்ளனர். பிரபஞ்ச தேவி சக்தியின் தாயிடமிருந்து தொடங்கி, பக்தியின் உண்மையான உருவமாக உலகம் முழுவதும் தோன்றியது. காரைக்கால் அம்மையார் தான் முக்கிய திருப்பதிகத்தைப் பாடினார், இது மூத்த திருப்பதிகம் என்றும் குறிப்பிடப்படுகிறது, மேலும் புனிதர்களும் அன்பர்களும் இந்த புனித நபருக்கு அசாதாரணமான வழிபாட்டுடன் இதைப் பின்பற்றினர். ஆழ்ந்த நாட்டத்தில் தங்கள் வாழ்க்கையை முழுவதுமாக அர்ப்பணிக்கும் நல்லொழுக்கம் அவர்களிடம் இருந்தது. மங்கையர்க்கரசியார் (50வது நாயன்மார்), இசைஞானியார் (63வது நாயன்மார்), காரைக்கால் அம்மையார் (24வது நாயன்மார்) ஆகியோர் சைவ இலக்கியத்திற்குப் பங்களித்த பெண் நாயன்மார்களை வியக்க வைத்தனர். மங்கையர்க்கரசியார் சிவபெருமான் மீது கொண்டிருந்த பக்தியை, கலைஞரான சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர் தொகையைப் போலவே சேக்கிழார் கட்டளையிட்ட பெரியபுராணத்திலும் விளக்கப்பட்டுள்ளது. காரைக்கால் அம்மையார், தென்னிந்தியாவில் உள்ள தமிழ் மக்களாலும், சைவர்களான வேறு எங்கோ உள்ள தமிழ்

*எறும்பியூர்க் கோயில் விமானத்திலுள்ள ஆறு பஞ்சரங்களில் தென்கிழக்குத் தவிர்த்த ஏனைய ஐந்தின் கிரீவகோட்டங்டகளும் சிற்பங்கள் கொண்டுள்ளன. இவ் ஐந்து சிற்பங்களுமே ஆடற்சிற்பங்களாக அமைந்துள்ளமை எறும்பியூர்க் கோயிலின் தனிச் சிறப்பு எனலாம்.*

**மகரதோரணச் சிற்பங்கள்**

*விமான, முகமண்டபக் கோட்டங்களின் தலைப்பாய் விளங்கும் மகரதோரணங்கள் ஐந்தும் மேல், இடை, கீழ் என மூன்று அலங்கரா வளைவுகளையும் மூன்றாம் வளைவின் கீழுள்ள உள்வளையத்தில் சிற்பத்தையும் பெற்றுள்ளன. ஐந்து தோரணங்களுமே மேல் வளைவில் கொடிக்கருக்கு அழகூட்டலும் அதற்கு சற்று மேலிருக்குமாறு கவிழ்ந்த ஊமத்தம்பூ போன்ற ஐந்து அலங்கரிப்புகளைப் பெற்றிந்த போதும் இடை, கீழ்வளைவுகளில் மாறுபட்ட செதுக்கல்களைக் கொண்டுள்ளன. கருவறைத் தென்கோட்டம் தவிர, பிற நான்கு தோரணங்களிலும் மகர இணைகளின் வாய்களிலிருந்து வெளிப்பட்டுப் போரிடும் யாளிவீரர்களையே இடைவளைவு கொண்டுள்ளது. அவர்களுள் ஒருவர் கொடியேந்தி வரும் காட்சி முகமண்டபத் தெற்குத் தோரத்தின் தனித் தன்மையாக விளங்குகிறது.*

**சிறப்புச் சிற்பங்கள்**

*ஆடல், ஊர்தி இறைகள் தவிர்த்த சிற்பங்களில் நான்கினை அவற்றின் செதுக்குத் திறத்துக்காகவும் தனித்தன்மைக்காகவும் விரிவாகப் பார்ப்பது பயன் தரும். சோழர் காலப் பாதச்சிற்பங்களில் அரிதாகக் காணப்படும் சூரிய சந்திரர் இங்கு இணைந்த நிலையில் பறக்கும் கோலத்தில் மிகச் சிறந்த உடலமைப்புடன் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.*

**செப்புத்திருமேனிகள்**

*இங்குள்ள ஆடவல்லான் தொகுதியில் சிவபெருமான் உமை, மாணிக்கவாசகர் என மூன்று வார்ப்புருவங்கள் உள்ளன. குப்புறப்படுத்துள்ள முயலகன் முதுகின்மீது வலப் பாதத்தைப் பார்சுவமாகப் பதித்து இடக்காலை வலப்புறம் வீசி ஆனந்த தாண்டவக் கோலத்தில் காட்சி தரும் சிவபெரு மானின் பின் கைகளில் வலப்புறம் துடி, இடப்புறம் தீச்சுடர், வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை வேழமுத்திரையில் உடலின் குறுக்காக வலப்புறம் வீசப்பட்டுள்ளது.*

**பள்ளியறை நாச்சியார்**

*கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்பரிநூல், கைவளைகள், பட்டாடை, தாள்செறிகள் அணிந்து தாமரைத் தளத்தில் சுகாசனத்திலுள்ள பள்ளியறை நாச்சியாரின் வலக் கையில் நீலோத்பலம். இடக்கை அருள் முத்திரையில் உள்ளது.*

**கல்வெட்டுகள்**

*எறும்பியூர் கோயிலிலிருந்து 1892இல் மூன்று கல்வெட்டு களும் 1914 இல் 47கல்வெட்டுகளும் இந்திய தொல்லியல் துறையால் படியெடுக்கப்பட்டுள்ளன. 1892இல் படையெடுக்கப் பட்ட மூன்று கல்வெட்டுகளும் 1914இல் மீள பதிவாகியுள்ளமை யால், இங்கிருந்து பதிவான கல்வெட்டகளை 47ஆகக் கொள்ள லாம் அவற்றின் பாடங்கள் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 4, 13, 19, 34 அகியவற்றில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. 34ம் தொகுதி 47 கல்வெட்டுகளின் பாடங்களையும் கொண்டுள்ளது. அவற்றுள் 96, 102ஆம் எண்களின் கீழ்க் பதிப்பிக்கப்பட்டுள்ள பாடங்கள் ஒரே கல்வெட்டின் இரு பகுதிகளாகும். முதற்பகுதியை 102 ஆம் எண்ணிட்டும் பிற்பகுதியை 96ஆம் எண்ணிட்டும் பதிப்பித்துள்ளனர். முதற்பகுதியைக் கண்டராதித்தர் கால முற்றுப் பெறாத*

கட்வெட்டு என்ற குறிப்போடும் இரண்டாம் பகுதியை, அது 'பன்மர்க்கு யாண்டு இருபத்து மூன்றாவது" என்று தொடங்கியபோதும் கல்வெட்டுக்குரிய மன்னரைப் பரசேகரி வர்மர், முதல் பராந்தகர் என அடையாடப்படுத்தியிருப்பதுடன், கல்வெட்டின் முதற்பகுதி கட்டமைப்பில் சிக்கியுள்ளதாகக் குறிப்பிட்டும் பதிப்பித்துள்ளனர்.

தொல்லியல் துறை பதிப்பித்துள்ள இந்த 46 கல்வெட்டுகள் தவிர, இந்நூலாசியர்கள் 1986இல் எறும்பியூர் கோயிலில் மேற்கொண்ட முதல் ஆய்வின் போது 4 புதிய கல்வெட்டுகளும் 1999ஆம் ஆண்டில் நிகழ்ந்த கள ஆய்வில் 5 புதிய கல்வெட்டு களும் கண்டறியப்பட்டன. 2016ஆம் ஆண்டு மீளாய்வின் போது கண்டறியப்பட்ட பல துண்டுக் கல்வெட்டுகளின் தரவுகளை (கோயிலின் அக, புற மதில்களில் இணைக்கப் பட்டிருந்தவை, அகழ்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அகமதிலின் தென்சுவர் மீது சாய்த்து வைக்கப்பட்டிருந்தவை) ஒன்றிணைத்த நிலையில் அவை ஐந்து புதிய கல்வெட்டுகளை வெளிப்படுத்தி யுள்ளன. இந்த 60 கல்வெட்டுகளின் பாடங்களையும் ஆய்வுக் குட்படுத்திய நிலையில் கோயிலின் வரலாற்றையும் ஏறத்தாழ 600 ஆண்டுக் கால எறும்பியூர் சார்ந்த சமுதாய வரவாற்றையும் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றையும் அறியமுடிந்தது.

**அரசியல் வரலாறு**

இங்கிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் காலத்தால் முற்பட்டதாக முதலாம் ஆதித்த சோழரின் 18, 19 ஆம் ஆண்டு ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்ளை குறிக்கலாம். மதுரை கொண்ட பரசேகரிவர்மரான முதலாம் பராந்தகரின் கல்வெட்டுகள் மூன்று இங்குள்ளன. வானவியல் குறிப்புகள், உள்ளீடு ஆகியவற்றின் வழிகாட்டலில் கண்டராதித்தர் காலக் கல்வெட்டுகளாக 15 கல்வெட்டுகள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. உத்தமசோழருடையதாகக் கருதப்படும் பரசேகரி வர்மனின் கட்வெட்டுகள் முதலாம், இரண்டாம் இராஜராஜர்

*காலக் கல்வெட்டுகள் ஆறாம் முதலாம் இராஜேந்திரர் காலக் கல்வெட்டுகள் ஐந்தாம் முதலாம் இராஜாதிராஜர் காலக் கல்வெட்டு ஒன்றும் இங்குள்ளன. சாளுக்கிய சோழர்களின் கல்வெட்டுகளாக 13 உள்ளன. பிற்பாண்டியர்களுள் மாறவர்மர் சுந்தரபாண்டியர் காலக் கல்வெட்டுகள் இரண்டாம் விஜய நகர அரசர்களுள் விருப்பண்ணர் காலக் கல்வெட்டுகள் இரண்டாம் விஜய நகர அரசர்களுள் விருப்பண்ணர் காலக் கல்வெட்டு ஒன்றாம் மன்னர் பெயரற்றற முற்சோழர் காலக்கல்வெட்டு ஒன்றாம் மன்னர் யாரென்று அடையாளப் படுத்த முடியாத இராஜசேகரிக் கல்வெட்டு ஒன்றாம் பிற்சோழர் காலத்ததாகக் கொள்ளத்தக்க கல்வெட்டுகள் ஆறும் பிற்கால எழுத்தமைதிக் கல்வெட்டு ஒன்றும் இங்குள்ளன.*

**மண்டலம், வளநாடு**

*பாண்டியர் பகுதி பாண்டிமண்டலம் என்று ஒரு கல்வெட்டி லும் சோழபாண்டிய மண்டலம் என்று ஒரு கவ்வெட்டிலும் குறிக்கப்பட்டுள்ளது. 7 வளநாடுகளின் பெயர்கள் எறும்பியூர் கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளன. அவற்றுள் பின்னாளில் பாண்டிகுலபதியான பாண்டிகுலாசனி வளநாடும் நித்த விநோத வளநாடும் தென்கரை வளநாடுகளாக இருந்தன. மதுரோதைய வளநாடு மதுரையை உள்ளடக்கியிருந்தது.*

**ஊர்கள்**

*86 ஊர்களின் பெயர்களை எறும்பியூர்க் கல்வெட்;டுகள் கொண்டுள்ளன. அவற்றுள் ஊர் என முடியும் பெயர்கள் 31 இப்பின்னொட்டுடன் முடியும் ஊர்களில் மிகச் சிறியதாக மூன்றெழுத்துப் பெயர்களே உள்ளன. நான்கெழுத்துப் பெயர்கள் கொண்டவனாக 14 ஊர்களும் ஐந்தெழுத்து பெயர்களுடன் ஐந்து ஊர்களும் ஆறெழுத்துப் பெயர்கள் பெற்றவனாய் நான்கு ஊர்களும் உள்ளன. மிக நீண்ட பெயராகத் தடங்கண்ணிச்சிற்றூர் அமைய, பெருவேங்கூர் பிராமணக் குடியிருப்பாக விளங்கியது. தென்னூர் எறும்பியூரின்*

ஒரு பகுதியாக இலங்க, வேம்பற்றூர் எதிரிலிவ்சோழச் சதுர்வேதிமங்கலமாகவும் அறியப்பட்டது.

குடி என முடியம் ஊர்ப்பெயர்கள் 10 ஆம் மங்கலம் அல்லது சதுர்வேதிமங்கலம் எனும் கின்னொட்டுக் கொண்ட ஊர்ப்பெயர்கள் 7ஆம் புரம் என அமைந்த ஊர்ப்பெயர்கள் இரண்டும் உள்ளன. குடிகளின் பூரிக்குடியே மிகச் சிறிய பெயராக அமைய, நெட்டணங்குடி நீண்ட பெயராக உள்ளது. சதுர்வேதி மங்களங்களுள் ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலம் எறும்பியூரைத் தழுவியிருந்த பிராமணக் குடியிருப்பாகத் திகழ, அதன் அருகிலிருந்த பிற பிராமணக் குடியிருப்பாகத் திகழ, அதன் அருகிலிருந்த பிற பிராமணர் குடியிருப்புகளாகப் பெருவேங்கூர், உத்தம சீலிச் சதுர்வேதிமங்கலம், சோழமாதேவிச் சதுர்வேதி மங்கலம் ஆகியன் இருந்தன.

**பிடாகை**

பேரூர்களை சந்தித்திருந்த சிற்றூர்கள் பிடாகை எனப் பட்டன. எறும்பியூர் கல்வெட்டுகளில் வெளிப்படும் பிடாகைகள் பிராமணக் குடியிருப்புகளைச் சார்ந்தே இருந்தன. கரம்பை என்றும் அழைக்கப்பட்ட வீரநாராயணநல்லூர் ஸ்ரீகண்டசதுர்வேதி மங்கலத்தின் வடபிடாகையாகவும் இராஜாதிராஜ வதி மேற்பிடாகையாகவும் முருங்கூர் உத்தம சீலிச் சதுர்வேதி மங்கலத்தின் திசை சுட்டப்படாத பிடாகை யாகவும் இராஜேந்திர சோழபரம் திரிபுவனமாதெவிச் சதுர்வேதிமங்கலத்தின் கீழ்ப் பிடாகையாகவும் குறிக்கப்படு கின்றன.

**அரசாணைகளும் அரசு அலுவலர்களும்**

எறும்பியூர் கல்வெட்டுகளில் மூன்று அரசாணைகள் பதிவாகியுள்ளன. அவற்றுள் ஒன்று மூன்றாம் இராஜராஜரின் 30ஆம் ஆட்சியாண்டிலும் மற்றொன்று இரண்டாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் 11ஆம் ஆட்சியாண்டிலும் (பொ.கா.1249) வெளியானவை. மூன்றாம் அரசாணை துணுக்குகாகச்

சிதறியிருப்பதால் அதை வெளியிட்ட மன்னர் பெயரை அறியக்கூடவில்லை. சுந்தரப்பாண்டியரின் அரசாணை, அதைத் திருவாய் மொழிந்தருளியபோது அரசர் மாடக்குளக்கீழ் மதுரை அரண்மனையில் பள்ளியறைக்கூடத்துப் பீடம் மழவராயனில் வீற்றிருந்ததாகவும் எறும்பியூர்க் கோயில் தானத்தாருக்கும் தேவகன் மிக்கும் இவ்வாணை பிறப்பிக்கப்பட்டதாகவும் கூறுகிறது.

**சபை**

ஸ்ரீ கண்டசதுர்வேதிமங்கலம், பெருவெங்கூர், சோழ மாதேவிச் சதுர்வேதிமங்கலம் ஆகிய மூன்று சபைகளின் நடவடிக்கைகள் குறித்த பதிவுகளை எறும்பியூர்க் கல்வெட்டுகள் கொண்டுள்ளன. இம்மூன்றனுள், எறும்பி யூரைத் தழுவியிருந்த பிராமணர் குடியிருப்பு என்பதால் கோயில் சார்ந்த செயற்பாடுகளில் ஸ்ரீகண்டசதுர்வேதி மங்கலத்தின் ஆளுகை மிக்கிருந்ததைக் காணமுடிகிறது. 25 கல்வெட்டுகள் இவ்வூரின் பெருங்குறி மகாசபைக்கும் கோயில் சார்ந்த நிகழ்வுகளுக்கும் இடையிலிருந்த தொடர்பினை வெளிபடுத்துகின்றன. அவற்றுள் நிலம், நெல், குளநீர், வரிவிற்பனை தொடர்பானசை 12. நிலவிற்பனைக்கு சபைப் பொதுநிலங்களே ஆட்பட்டன. தனியர், கோயில் நிலங்களை இறையிலி செய்தமை குறித்த கல்வெட்டுகள் 10. அவற்றுள் ஒன்று, கோயலி; அறக்கட்டளைப் பொறுப்பையும் சபை ஏற்றுக்கொண்டமை தெரிவிக்கிறது. எஞ்சிய மூன்றனுள், நாடு வகைசெய்த அரசு அலுவலர் ஆணை ஏற்றுக் கோயிலிலிருந்த சேத்ரபாலர் வழிபாட்டிற்காக, சபை நிலக்கொடை அளித்தமை குறித்து ஒரு கல்வெட்டும், எறும்பியூரின் ஆட்சியமைப்பான ஊராருடன் இணைந்து நில விற்பனை மேற்கொண்டமை பற்றி மற்றொரு கல்வெட்டும், இறையிலியாக்கப்பட்ட கோயில் நிலங்களுக்கு வரி கேட்கும் சபை சார்ந்தவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகள் பற்றியதாகப் பிறிதொரு கல்வெட்டும் அமைந்துள்ளன. இந்த

25 ஆவணங்களில் சிலவற்றிலேயே சபை உறுப்பினர்கள் பலராகக் கையெழுத்திட்டுள்ளனர். சபை வாரியம் பற்றிய குறிப்பு ஒரே ஒரு கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது.

**ஆளுங்கணம்**

சீராப்பள்ளி மாவட்டக் கல்வெட்டுகளின் மிக அருகிக் காணப்படும் ஆளுங்கணம் எனும் குழு சார்ந்த கல்வெட்டுகள் எறும்பியூரில் 5 உள்ளன. ஐந்திலும் இக்குழு ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கல யாளுங்கணம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. கோயிலுக்கான கொடைப்பதிவுகளாக அமைந்துள்ள அவற்றுள், நான்கில் ஆளுங்கணம் சேர்ந்த மூன்று ஆடவர்களும் ஒன்றில், ஆளுங்கணத்தாருள் ஒருவரான திம்மிக்குழகிழான் நாராயணன் நக்கனின் பிராமணியான தத்தன்சேந்தியும் கொடையாளிகளாக வெளிப்படுகின்றனர்.

**வரிகள்**

இறை, எச்சோறு, வெட்டி, வேதினை, முட்டையாள் வாசலில் வந்த குடிமை என்னும் வரிகள் சோழர் கல்வெட்டு களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. வெட்டி முட்டையாள் ஊர் ஒப்பில் வரும் வரியினமாக ஒரு கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ளது. முதல் இராஜாதிராஜரின் கல்வெட்டு வாசலில் வந்த முடிமையைத் திருக்கொற்றவாசலில் போந்த குடிமையாகச் சுட்ட, சுந்தரபாண்டியரின் கல்வெட்டுக் காராண்மை, மீயாச்சி, கடமை, அந்தராயம், விநியோகம், தருவதான அச்சு, காரிய ஆராய்ச்சி, பாடிகாவல், பொன்வரி, கோயிற்றமர்ப்பேறு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. ஊரிடு வரிப்பாடு ஊராட்சியமைப்பு அரசுக்குச் செலுத்திய வரியினங்களைக் குறித்தது.

**மக்கள்**

சமூகத்தில் பிராமணர், வேளாளர் முதன்மை பெற்று விளங்க, மன்றாடி, வேட்கோவர், கொல்லர், தச்சர், வியாபாரி எனப் பல தொழிற்சார்ந்த மக்களையும் காணமுடிகிறது. சபை

உறுப்பினர்களாக இருந்த பிராமணர்களில் சிலர் தற்குறிகளாக விளங்கினாற் போலவே வேளாளர் சிலரும் தற்குறிகளாக இருந்தனர். பல உறவுப்பெயர்களைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. பிராமணர்தம் மணைவியர் பிராமணி என்று வேளாளர் மனைவியார் அகமுடையாள் என்றும் அழைக்கப் பட்டமையைக் காணமுடிகிறது. தந்தையாரின் இளைய சகோதரர்கள் சிறுதாதை என்றழைக்கப்பட்டனர்.

**கோயில் நிருவாகம்**

தேவர்கன்மி, மாகேசுவரக் கண்காணி எனப் பிரித்து அறியப்பட்டாலும் ஏறத்தாழ 9 சேழர் கல்வெட்டுகளில் ஸ்ரீகோயிலுடையோம் என்ற பொதுப்பெயரிலேயே கோயில் நிறுவாகத்தினர் பதிவாகியுள்ளனர். கண்டராதித்தர் காலந் தொட்டு முதல் இராஜராஜர் காலம் வரை கோயில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த இக்குழுவினர் கோயிலில் விளக்கேற்றத் தரப்பட்ட பொன், காசு, ஆடு ஆகிய கொடைப் பொருள்களைப் பெற்று அறக்கட்டளைகளைப் நிறைவேற்றியுள்ளனர்.

**விளக்குக் கொடை**

எறுப்பியூர் கோயிலில் 7 சந்திவிளக்குகளும் நான்கு நந்தா விளக்குகளம் இரண்டு பகல் விளக்குகளும் ஒளி தந்தன. நான்கு சந்தி விளக்குகள் ஸ்ரீகண்டசதுர்வேதி மங்கலத்து யாளுங்கணத்தைச் சேர்ந்த கங்காதர, நாராயண, தோணைய கிரமவித்தர்களால் வழங்கப்பட்டன. மூன்று சந்தியும் ஒளிதரவேண்டும். (பாடேநின்றெரிய) என்ற வேண்டலுடன் வழங்கப்பட்ட இவ்விளக்குகளுக்கு கங்காரதன் ஐந்து கழஞ்சுப் பொன்னும் தோணையன் 8 காசுகளும் இருவிளக்குகளை ஏற்ற நாராயணன் விளக்கிற்கு 34 ஆடுகள் என 68 ஆடுகளும் அறித்தனர். ஸ்ரீகோயிலுடையாரிடம் ஒப்படைக்கப்பட்ட இக்கொடைகளுள், கணவதி திருமன் ஒளிதர நாராயணன் வைத்த விளக்கு, பொது அரைப்பிடி நெய் கொண்டு ஏற்றப்பட்டது. நாராயணன் அறித்த மற்றொரு விளக்கு அவர்

தந்த தரா நிலை விளக்கில் இறைவனின் வலப்பக்கம் ஏற்றப்பட்டது.

எழும்பியூர் கோயிலில் இருந்த "கோயில் பிள்ளையார்" என்றழைக்கப்பட்ட சேத்ரபாலதேவர் திருமன் மூன்று சந்திக்கும் மூன்று விளக்குகள் ஏற்றப்பட்டன. அதற்கான நிலக் கொடையை நாடு வகைசெய்த சுந்தரசோழநல்லூர் உடையாரான நல்லூரடிகள் ஆமல்லவர் ஆணைப்படி ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கல சபை வழங்கியது. முதல் இராஜேந்திரர் காலத்தே எறும்பியூரில் வாழ்ந்த மாறன்காரி இக்கோயில் சண்டேசுவரர் திருமன் சந்திவிளக்கேற்ற 34 ஆடுகள் தந்தார். மூன்று சந்தியும் ஆறு விளக்குகள் ஏற்ற விக்கிரமசோழர் காலத்தில் நிலம் வழங்கப்பட்டாற் போலவே சோழர் கால இறுதியிலும் கொடை வழங்கப்பெற்றதைத் துண்டுக் கல்வெட்டு உணர்த்துகிறது.

**வழிபாடு, படையல், விழா**

ஒரு குடத்தால் இரண்டு தூணி அளவு ஆற்றுநீர் கொணர்ந்து இறைவனை முழுக்காட்ட இராஜேந்திரசோழபுரி வியாபாரி கண்டியூருடையான் திருவன் பெரியாழ்வான் பெரியாழ்வான் அன்றாடுநற்காசுக்கு ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கல சபையாரிடம் நிலம் பெற்று உரிய தொகையளித்து அதை வரிநீக்கிக் கோயிலுக்குத் தந்தார்.

ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலச் சீராளன் விழுமியான், சீராளன் அழகிய மணவாளன், கூற்றான் ஆகிய மூவரும் எறும்பியூர் இறைவனின் உத்தராயன, தட்சிணாயனத் தேவைகளுக்கும் பள்ளியறை நட்பிராட்டிக்கு உச்சிச்சந்தி அமுதிடவும் இருவருக்கு சட்டிச்சோறு வழங்கவும் மூன்று சந்திகளில் ஆறு விளக்குகள் ஏற்றவும் கோயிலிடம் நிலம் வழங்கினார். இரண்டாம் குலோத்துங்கச் சோழர் கால நாடாள்வார் ஒருவர் ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கல சபையாரிடம் நிலத்துண்டொன்றை விலைக்குப் பெற்றுக் கோயிலுக்களித்தார். கல்வெட்டு மிகவும்

*சிதைந்திருப்பதால் நாடாள்வாரின் பெயரையோ, கொடைக்கான காரணத்தையோ அறியக்கூடவில்லை.*

*எறும்பியூர்க் கோயில் இறைவனுக்கு நாளும் சிறுகாலைப் போதில் பருப்புப்போனகம் படையலிட எறும்பியூர் ஏரார் 71ം%2 மா ஊர்நிலத்தை இறையிலியாக்கிக் கோயிலுக்களித்தனர். ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலத்து மத்யஸ்தரான ஆயிரவன் திருவாலந்துறை உடையானான உத்தமப்பிரியன் இறைவனுக்கு உச்சிச் சந்திச் சிறப்புத் திருப்போனகம் அளிக்க 13 1/2 காசுக்கு விலைக்குப் பெற்ற நிலத்தை மேலும் 13/12 காசு அளித்து வரிநீக்கிக் கோயிலுக்களித்தார். உச்சம்போதில் இறைவனுக்கு அமுது, வெற்றிலைப்பாக்குப் படையலிடப் பல துண்டு நிலங்கள் இணைத்து அறுமாச் செய்யாக வழங்கப்பட்டன.*

*இந்நிலத்துண்டுகளின் எல்லைகள் கட்டும்போது எறும்பியூர் இறைவனின் விளக்குப்புறம், நந்தவனப்புறம், மடைவிளாகம், திடல் நிலம் ஆகியவற்றோடு வேதிவேளான் இறைவனுக்கான விலைக்குப் பெற்ற நிலத்தின் மாறன் தூதுவன் பண்;படுத்தி வைத்த நிலம், கோயிலில் பதியம் பாடுவார் நிலம், எறும்பியூரார் எல்லை, குன்றப்போழன் பண்படுத்தி வைத்த விளக்குச்செய், மலை ஆகியன சுட்டப்படுகின்றன.*

**பிற கோயில்கள்**

*எறும்பியூர் கல்வெட்டுகள் மலை மேலேயுள்ள எறும்பீசர் கோயிலைக் குறிப்பது போலவே எறும்பியூரிலும் ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கலத்திலும் இவ்விரு ஊர்களைச் சூழவிருந்த பிற ஊர்களிலும் விளங்கிய கோயில்களையும் காட்டுகின்றன.*

**தென்கயிலாயம்**

*முதலாம் ஆதித்தரின் 18ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வெளிபடும் இக்கோயில் ஸ்ரீசதுர்வேதிமங்கலத்தில் கண்டராதித்தரின் 4ஆம் ஆட்சியாண்டுவரை வாழ்ந்த கோயிலாகும். நெற்குன்றத்து நீலகண்டனிடம் விலைக்கு*

*பெற்ற 6மாச் செய்யைத் தென்கயிலாய மகாதேவருக்கு நந்தாவிளக்கேற்ற நம்பன் கேசுவன் சபையாரிடம் 15 கழஞ்சுப் பொன்னளித்து வரிநீக்கிக் கோயிலுக்களித்தார். முதல் பராந்தகரின் 26ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள நிறைவடையாக கல்வெட்டு தென்கயிலாய மகாதேவருக்கு அமுதுக்காக அளிக்கப்பட்ட கொடையை சுட்டுகிறது. அதே அரசரின் 34ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, எறும்பியூர் நக்கநாதன் ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலத்தின் வடபிடாகையில் 10 செய் நிலம் சபையாரிடம் விலைக்குப்பெற்று வரிநீக்கித் தென்கயிலாய மகாதேவர் முன் நந்தாவிளக்கேற்றக் கொடையளித்த தகவலைத் தருகிறது.*

**துண்டு கல்வெட்டுகள்**

*கோயில் கட்டுமானங்களின் சிதைவாலும் வரலாற்று நோக்கற்ற திருப்பணிகளாலும் நம் முன்னோர்களின் வாழ்க்கைப் பதிவுகளான கல்வெட்டுகள் கோயில்தோறும் துண்டாடப்பட்டுள்ளமை தமிழ்நாட்டு வரலாற்றின் மீட்டுரு வாக்கத்திற்குப் பெரும் இடையூறாக உள்ளது. எறும்பியூரில் 45ம் மேற்பட்ட துண்டுக் கல்வெட்டுகள் கோயில் வெளிச்சுற்றின்பெரும்பாலானஇடங்களில்காணப்படுகின்றன. மிகுந்த முயற்சிக்குப் பிறகே அவற்றுன்பெரும்பாலானவற்றைத் தொடர்புப்படுத்திப் பொருள் கொள்ளமுடிகிறது.. இவ்வூர் மலையடிவாரத்தே அமைந்திருந்த அகத்தீசுவரம் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடையை பற்றிய கல்வெட்டு 15 துண்டுகளாகச் சிதறியுள்ளது. கூத்தப்பார் திருவுடை மருதுடை நாயனார் கோயிலின் கொடைக் கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கவில்லை என்றாலும், பயனுள்ள மூன்று துண்டுகள் வழி அதன் திரண்ட பொருளைக் கொள்ளமுடிந்தது.*

**காலம்**

*இந்தியத் தொல்லியல் துறையின் பராமரிப்பிலும் இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழும் செழிப்புடன்*

விளங்கும் இத்திருக்கோயில் அப்பர் பெருமான் பாடல் பெற்றுப் பொ.கா. 6 நூற்றாண்டுக் கோயிலாகப் பொலிகிறது. செங்கல் தளியாக இருந்த இக்கோயிலின் விமானத்தை பொ.கா.952க்கு முன்னால் வீரநாராயணனான செம்பியன் வேதிவேளான் கற்கட்டுமானமாக மாற்றினார். பிற்சோழர் காலத்தே அம்மன் திருமுன், சுற்று விரிவு எனக்கோயில் கூடுதல் கட்டுமானங்களைப் பெற்று விஜயநகலக் காலம்வரை புரவலர்களின் தழுவலில் செழித்திருந்தது.

**முடிவுரை**

தமிழகத்தில் காணப்படும் சிறப்புமிக்க திருத்தலங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எறும்பீஸ்வரர் கோவில் மிகச்சிறப்ப மிக்கதாக உள்ளது. இந்த திருத்தலம் சோழர்கள் காலம் தொடங்கி இந்நாள் வரை இவ்வூர் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு ஊராகத் திகழ்கிறது என்பதை அறிகிறோம்.

இக்கோயிலின் சிறப்பு சோழர் கால முதல் தொடங்கியது அதன் பிறகு வந்த பல்லவர் பாண்டியர் விஜயநகர மற்றும் நாயக்கர்கள் காலத்திலும் திருவெறும்பூர் தமிழகத்தில் வரலாற்றில் சிறப்புக்குரிய ஒரு தலமாக காணப்படுகிறது.

இந்தியத் தொல்லியல் துறையின் பராமரிப்பிலும், இந்து சமய அறநிலைத்துறையின் ஆளுமையிலும் செழிப்புடன் விளங்கும் இத்திருக்கோயில் அப்பர் பெருமான் பாடல் பெற்ற தலம் 6 ஆம் நூற்றாண்டுக் கோயிலாகப் பொலிகிறது. செங்கல் தனியாக இருந்த இக்கோயிலின் விமானத்தைப் 952க்கு முன்னால் செம்பியன் வேதிவேளான் கற்கட்டுமானமாக மாற்றினார். பின் சோழர் காலத்தே அம்மன் திருமுன் சுற்று விரிவு எனக் கோவிலில் கூடுதல் கட்டுமானங்களைப் பெற்று விஜயநகரக் காலம் வரை புரவலர்களின் தழுவலில் செழத்திருந்தது.

ஒரு ஆலயத்தின் சிறப்பை வெளிபடுத்துவது அதன் சிற்பக் கலையாகும். இந்த எறும்பீஸ்வரர் திருக்கோவில் சிறப்பு

*மிக்கதாக காணப்படுகிறது. அக்கால மக்களின் வாழ்க்கை சித்தரிக்கும் சிற்பங்களும், ஓவியங்களும் சிறப்புமிக்கதாக காணப்படுகின்றன.*

**குறிப்புகள்**

*தினமணி 18.07.1986 பிற்சோழர்கள் அல்லது விஜயநகர மன்னர்கள் காலக் கோயிலமைப்பு என்கின்றனர். கி.அமர்நாத் இராமகிருஸ்ணாவும், சி.சண்முகவேலும். திருவெறும்பூர் திருத்தல வரலாறு, புனிதர் பேரவை, திருவெறும்பியூர், 2004, ப.34 (பெயர் சூட்டா நிலையில் இனிவரும் குறிப்புகள் அனைத்தும் இந்நூலாசிறியர்களின் கருத்தாய் அவர்தம் நூலில் இடம் பெற்றனவே.)*

*ஏழு கன்னியர்களிகளின் சிலைகள் என்று ஓரிடத்திலும் ஒரு கன்னிமார் இடம்பெறவில்லை என்று மற்றோர் இடத்திலும், ஏழுகன்னியர்கள் அனைவரும் என்றும் பிறிதோர் இடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.*

*இதைக் குறிப்பிடும்போது ‘மடப்பள்ளி மண்டபத்தின் கீழ்ப் பாதுகாப்பு அறை ஒன்று இருப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர்’ என்று எழுதியுள்ளனர்.*

*திருத்தல நூலசிறியர்கள் இச்சிற்பத்தை குறிப்பிடவில்லை.*

*13.04.1999: தினமணி, தினமலர் 11.04.1999 தோரணத்தையும் மிக அழுகுடன் காட்சி தருகின்றன. இவ்வாறு திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் கோயில் சிற்பகலையில் சிறப்பு பெற்று விளங்குகிறது.*

*திருத்தல வரலாறு நூலாசிரியர்கள் 2 என்கின்றனர். ப.100: யுசுநு 1914: 96-142.*

*யுசுநு 1892: 100இ 100யுஇ 101 ல யுசுநு 1914: 108இ 109இ 127 மூன்று கல்வெட்டுகள் மீள்பதிவாகியிருப்பதை அறியாத நிலையில் திருத்தல வரலாறு நூலாசிரியர்கள் 50 கல்வெட்டுகள்*

இந்தியத் தொல்லியல் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறித்துள்ளனர். ப. 100.

*SII 4: 547 – 549; 13:50, 51, 88, 110-114, 138-140, 162-166, 283, 286, 287; 19:372, 395; 34: 96-142.*

*SII 34: gf;. 106, 98.*

*Deccan Chronicle 22.6.2018 jpdfud; 21.6.2018.*

*SII 34: 119, 110, 118.*

*SII 34: 108, 111, 115.*

*SII 34: 101-105, 112, 117, 123, 126, 127, 129, 130-133.*

# சங்க இலக்கியத்தில் இருபாலர் விளையாட்டுகள்
# IN SANGAM LITERATURE, THERE ARE GAMES PLAYED BY BOTH MEN AND WOMEN.

**முனைவர் செ.த.ஜாக்குலின்**
இணைப் பேராசிரியர் (ம) துறைத்தலைவர்,
அகராதியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010.
மின்ன்ஞசல்:stjaquline@gmail.com

## முன்னுரை

*சிறுவர்களுக்கு மனமகிழ்ச்சியையும், உற்சாகத்தையும், உடல் வலிமையையும், புத்துணர்வையும் கொடுப்பது விளையாட்டு. பொழுது போக்காக அல்லாமல் உடல் நலம், மன நலம் என்ற வகையில் மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவது விளையாட்டு. சங்க காலத்தில் இருபாலர் விளையாட்டுகள் விளையாடப்பட்ட செய்திகளைச் சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. அந்த வகையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் இருபாலர் விளையாட்டுகள் குறித்த செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## திறவுச்சொற்கள்

*தமிழ் இலக்கியம், சங்க்க இலக்கியம், விளையாட்டு, இருபாலர் விளையாட்டு*

## Abstrct

*Games provide children with happiness, enthusiasm, physical strength, and freshness. Unlike mere pastimes, games naturally engage in activities that promote physical*

*and mental well-being, bringing joy. Sangam literature reveals that games played by both genders were prevalent during the Sangam period. This paper aims to explore the information available in Sangam literature regarding games played by both genders.*

*Keywords: Tamil Literature, Sangha Literature, Sports, Bisexual Sports*

**அசதியாடல்**

*தனித்தும் ஓரிருவரைத் தனக்கு துணையாகவும் சேர்த்துக் கொண்டும் விளையாடுவது அசதியாடல் ஆகும்.ஆண், பெண் இருபாலரும் ஒருவருக்கொருவர் வேடிக்கையாகப் பேசிக் கொண்டும் பரிகாசித்துக் கொண்டும் பொய்யாயினவற்றைச் செய்துக் காட்டியும் பொழுதுப்போக்கிற்காக மகிழ்ந்தும் விளையாடியுள்ளனர். தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் பரிகாசித்தல் என்பதற்குப் பரிகாசம் செய்தல், கேலி செய்தல், கிண்டல் செய்தல், நையாண்டி செய்தல் என்ற நான்குப் பொருளைத் தருகிறது. (தற்காலத் தமிழ் சொற்களஞ்சியம், ப. 260)*

*இவ்விளையாட்டைச் சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் குறிப்பாக கூனி, குறளன், விதூடகன் போன்றோரும் விளையாடியுள்ளனர்.மேலும், அரசன்.அரசி, அமைச்சன் ஆகியோரும் தமக்குள் அசதியாடி விளையாடி மகிழ்ந்துள்ளனர். நெஞ்சொடு தனக்கு மட்டுமே கேட்பதாகப் பாடுவதும், பேசிப் பரிகாசம் செய்வதும், அடுத்தவர் காதுபடக் கூறுவதும் கற்பனை மிகுபட அந்தந்த இடத்திற்கும் நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு பேசி சிரிப்பதும் போன்றவை இவ்விளையாட்டின் செயலாகின்றன. இவ்விளையாட்டு பகலிலும், முன்னிரவுப் பொழுதிலும்நடைபெற்றுள்ளது.*

**"வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன**
**கல்லாக் குறள! கடும்பகல் வந்தெம்மை**

**இல்லந்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்**
**பெண்டிருளர் மன்னோ கூறு?" (கலித். 94:13-16)**

*என்ற கலித்தொகை பாடலடிகளும்,*

**"மக்கள் முரியே ட நீ மாறினத் தொக்க**
**மரக்கோட்ட சேர்ந்தெழுந்த பூங்கொடி போல**
**நிரப்பமில் யாக்கை தழி இயினர் எம்மைப்**
**புரப்பேமென் பலரால்: பரலாற் பரத்தையென்**
**பக்கத்துப் புல்லீயா யென்னுமால் தொக்க**
**உழுந்தினும் துவ்வா குறுவட்டா! நின்னின்**
**இழந்ததோ கூனின் பிறப்புப்" (கலி. 94:22-28)**

*இவ்விளையாட்டிற்குரிய சான்றுகளாகும்.*

*சங்க இலக்கியங்களுக்குப் பிறகு இவ்விளையாட்டு தொடர்ந்து நடைபெற்றதென்பதைக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் தெரிவிக்கின்றன.*

**"நின்மா னாக்கியரேம் ஆயினெ மினியென**
**அசதியாடிய மைதவழ் கண்ணி" (பெருங் 15:16-17)**

*என்று பெருங்கதையடிகள் சுட்டுகின்றது.*

*இவ்விளையாட்டு இன்றும் காணப்படுகின்றது, திருமணம் தொடர்பான நிகழ்ச்சியில் இளைஞர்கள் பங்கேற்கும் பொழுது இது நிகழ்கின்றது.*

**அம்புலி காட்டல்**

*வானத்திலுள்ள நிலவைக் குழந்தைகளுக்குச் சுட்டிக் காட்டி அதன் அழகுப் பற்றிக் கூறுதலும், நிலவைப் பூமிக்கு இறங்கி வந்து குழந்தையுடன் விளையாட வேண்டுமாறு பொழுது போக்காக விளையாடுவதும் அம்புலிகாட்டல் ஆகும். இவ்விளையாட்டை மரபாக சங்க காலத்திலும் விளையாடி யுள்ளனர். குறிப்பாக முன்னிரவுப் பொழுதினில் ஆண், பெண் என்ற இருபால் குழந்தைகளிடமும் பெரியவர்கள் அம்புலிக் காட்டி பொழுதுபோக்கி மகிழ்ந்து விளையாடியதை,*

**“ஐய! திங்கம் குழவி வருக ! என யான் நின்னை**
**அம்புலி காட்டல் இனிது”** **(கலி. 80: 18-19)**

*என்று கலித்தொகைப் பாடல் சுட்டுகின்றது.*

*சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டு ‘அம்புலி அழைத்தல்’ என்று சிறப்பித்து விளையாடப்பட்டுள்ளன என்பதைக் காப்பியங்களும் சிற்றிலக்கியங்களும் குறிப்பிடு கின்றன. இவ்விளையாட்டு இக்காலத்திலும் பள்ளிகளிலும், வீடுகளிலும் அம்புலிகாட்டல், அம்புலி அழைத்தல் என்று சிறுகுழந்தைகளுக்கு விளக்கப்படும் விளையாட்டு நிகழ்ச்சியாக உள்ளது.*

**அலவன் ஆட்டல்**

*கடற்கரைப் பகுதி, நீர் தேங்கும் பகுதிகளில் கரையை நோக்கி வரும் அலவன்களை (நண்டுகளை) அலைத்து ஆட்டி மகிழ்ந்து விளையாடுவது அலவன் ஆட்டம் ஆகும்.சங்க காலத்தில் ஆடவரும், பெண்டிரும் கடற்கரையில் நீர் படிந்த மணல் பகுதிகளில் கரையை நோக்கி வரும் அலவன்களைக் கைகளால் பிடித்து ஆட்டியும் மோதவிட்டும் விளையாடினர். பகல் பொழுதிலும் நிலாக் கால முன்னிரவுப் பொழுதிலும் நெய்தல் நிலத்து மக்கள் பொழுதுப் போக்காக மகிழ்ந்து விளையாடுதல் அலவன் நெய்தல் நிலத்து மக்களின் அன்றாட வாழ்வில் சிறப்பிடம் பெற்றதாக அமைகின்றது.*

**“மாசுபோகப் புனல் படிந்தும்**
**அலவன் ஆட்டியும்”** **(பட்டின. 100-101)**

**“அலவன் ஆட்டு வோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே”(நற்.363:7)**

**“பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே!”** **(குறு. 303:7)**

**”திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி”** **(அகம். 280:3)**

*ஆகிய பாடலடிகள் இவ்விளையாட்டு இருந்தமைக்கு சான்றுகளாகும்.*

*சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டு இருந்ததை,*

**"புணர்து துணையோடு ஆடமூ பொறி அலவன் நோக்கி**
**பொறி அலவன் நோக்கு" (சிலம்பு. 7:31)**

*என்ற சிலப்பதிகார அடி மூலம் அறியலாம்.*

**உலாவல்**

*நிதானமாக நடப்பதும் தனித்து நடப்பதும் மகிழ்வாக சிற்றடி எடுத்து வைப்பதும் என்று வீட்டிலும் வெளியிலுமாக பொழுதுபோக்கிற்காக உலாவுதல் உலாவலாகும்.சங்க காலத்தில் ஆயரும், பெண்டிரும் விடியற் காலையிலும், மாலையிலும், முன்னிரவு பொழுதிலும், வீட்டின் நிலா முற்றத்திலும் பின்புறத்திலும் வெளிப்புறச்சோலைகளிலும், கடற்கரை மணலிலும் பொழுது போக்காக உலாவி மகிழ்ந்து விளைடியுள்ளனர். உலவும் போது பெரும்பாலும் அதில் அணிகளை அணிந்து கொள்வதில்லை. உலாவுவதற்கான உலாவல் அமைக்கப்பட்டு இருந்தன என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

**"அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்**
**மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ**
**வொண்குழை திகழ மொளிகெழு திருமுகந்**
**தின்கா ழேற்ற வியலிருவிலோதந்**
**தென்கடற் றிரையி னசைவளி புடைப்ப**
**நிரைநிலை மாடத் திரமிலந் தோறும்**
**மழைமாய் மதியான் தோன்றுபு மறைய" (மது.க.466-452)**

*சங்க காலத்திற்குப் பின்னரும் மக்கள் உலாவி மகிழ்ந் துள்ளனர். என்பதைக் காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இவற்றை, மாதர்கள் மைந்தர் வாவிதாவில் உலாவி மகிழ்ந்தனர் என்ற சீவக சிந்தாமணியடிகளால் அறியலாம். உலாவும் பெண்கள் சிலவாகிய அணிகலன்களை அணிந்துக் கொண்டு உலாவியதை,*

"சீர்ப்புண் களைந்த சில்லென் கோலமொடு
நிலா வெண் முற்றத்துலாவி யாடி" (பெரும் 54:23-24)

என்று பெருங்கதை வரிகள் குறிப்பிடுகின்றது.இக்காலத்திலும் இவ்விளையாட்டுப் பொழுது போக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் விளையாடப்படுகிறது.

**ஊசல்**

மரத்தின் கிளையில் கயிற்றினைக் கொண்டு கட்டப்பட்ட ஊசலில் அமர்த்து ஆடிமகிழ்வது. சங்க கால மகளிர் பெரிய மரக்கிளைகளில் கயிற்றினைக் கொண்டு கட்டப்பட்ட பலகையில் மீது அமர்ந்துக் கொண்டு இரு கைகளாலும் கையிற்றினைப் பிடித்துக் கொண்டு கால்களால் பூமியை உதைத்தவாறு முன்னும் பின்னுமாக வேகமாக ஆடுகையில், கயிற்றில் மிதப்பது போன்ற உணர்வு ஏற்படும் ஆகையினால் இவ்விளையாட்டினை விரும்பி ஆடி மகிழ்ந்துள்ளன. இவ்விளையாட்டில் பெண்கள் மட்டுமே ஈடுபட்டாலும் சில நேரங்களில் ஆண்களும் ஈடுபட்டு விளையாடியுள்ளனர். ஊஞ்சல் நிலச் சூழலுக்கு ஏற்ப செல்வ நிலைக்கு ஏற்றாற் போலவும் அமைந்துள்ளனர். ஊஞ்சல் விளையாட்டிற்கான கருவிகளைத் தங்கள் வாழிடங்களுக்கேற்ற பொருட்களின் துணைக் கொண்டும் அமைத்துள்ளனர்.

நெய்தல் நில மகளிர் ஞாழல் மரக்கிளையில் தாழை விழுதால் கட்டிய ஊசலிலும் சுறாமீன் கொம்பாலாகிய பலகையில் தாழை விழுதாலாகிய கயிற்றினைக் கொண்டு அமைக்கப்பட்ட ஊசலிலும் விளையாடியுள்ளனர். மேலும், செல்வநிலையில் உள்ளவர்களின் வீட்டினுள் அமைக்கப் பட்டிருக்கும் ஊஞ்சல் பலகை வேலைப்பாடுகளை உடையதாய் இருந்துள்ளன. சங்கிலியால் இணைத்துக் கட்டப்பட்ட பலகைகளையும் ஊஞ்சல் விளையாட்டுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

*மகளிர் ஊஞ்சலாடும் போது மனம் மகிழ்வான நிலையில் பாடி மகிழ்ந்துள்ளனர். அந்நிலையில் பாடப்படும் பாடலை "ஊசல் வரி" எனவும் குறிப்பிடுவர். இவ்விளையாட்டுப் பகல் பொழுதினில் விளையாடப்பட்டுள்ளது.வீட்டுக்கு வெளியே சோலைகளிலும் இல்லத்தினுள்ளும் வீட்டு விளை யாட்டாகவும் விளையாடப்பட்டுள்ளது.*

**"ஊசல் ஊர்ந்து ஆட ஒருஞான்று வந்தானை" (கலி. 37:14)**

**"தணதாழை வீழ் ஊசல்" (கலி.131: 10-11)**

**வழிநார் ஊசலின் கோடை தூக்குதொறும்" (நற். 162: 10)**

**"தாழ்வி லோங்கு சினைந் தொடுத்த வீழ்வபூற்**
**றூகன் மாறிய மருங்கும் பாய்புடன்" (அகம் 38:7-8)**

**"ஓங்குசினைத் தொடுத்த ஊசல் பாம்பென" (அகம். 686)**

*என்ற அடிகளின் மூலம் அறியலாம்.*

*சங்க இலக்கியங்களுக்குப் பிறகும் இவ்விளையாட்டு மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற காப்பியங்களில் இடம் பெற்றுள்ளதை,*

**"மடவோர்க் கியற்றிய மாமணியூசல்" (மணி. 58: 75)**

**"மகளிராடும் ஊசல்" (சீவ. சிந். 58: 2268)**

*என்ற வரிகளால் அறியலாம்.*

*இவ்விளையாட்டு இன்றும் மழலைப் பள்ளிகளில் குழந்தை களுக்குப் பயிற்சியாகவும் விளையாட்டாகவும் உள்ளன.*

**எண்ணி விளையாடல்**

*ஒன்று, இரண்டு, மூன்று என விரல் விட்டும் விரலால் சுட்டி எண்ணியும் விளையாடுவது எண்ணி விளையாடல் ஆகும். ஓரிடத்தில் அதிக எண்ணிக்கையில் பொருளைக் கண்டால் அவற்றை ஒன்று. இரண்டு, மூன்று என்றவாறு எண்ணி வியந்து பொழுது போக்குவது மாந்தரிடம்*

காணப்படும் பண்பாகும். சங்க காலத்தில் பெண்கள் பலர் கூடி நின்று சாலைகளில் வரும் உப்பு வண்டிகள், படகுகள், யானைகள், குதிரைகள் ஆகியவற்றைக் கண்டு எண்ணி மகிழ்ந்து பொழுது போக்கினர்.

"உவர்விளை உப்பின் உழாஅ உழவர்
ஓகை உமணர் வருபத நோக்கிக்
கான லிட்ட காவற் குப்பைப்
புலவுமீன் உணங்கல் படுபள் ஓட்டி
மடநோக்கு ஆயமொடு உடனுப்பு ஏறி
எந்தை திமிலிது நுந்தை திமிலென
வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்
திண்திமில் என்னும் தண்கடற் சேர்ப்ப" (நற். 331:1-8)

சங்க இலக்கியங்களுக்குப் பிறகு இவ்விளையாட்டு தொடர்ந்து இருந்ததை,

"வேறிகண் மாதரார்
பைங்கிளி முன்கைமேற் கொண்டு பார்ப்பெனும்
கொங்கலர் தாமரைக் கிடங்கு கூறுவாம்" (சீவக. சிந். 58-94)

என்ற வரிகளால் அறியலாம்.

மேலும், கிளிகளைத் தம் கைகளின் மீது வைத்துக் கொண்டிருந்த பெண்கள் தாமரைத் தடாகத்திலிருந்தப் பறவைக் குஞ்சுகளை எண்ணி மகிழ்ந்துள்ளனர். இவ்விளை யாட்டுப் பகலிலும் இரவிலும் விளையாடப்பட்டுள்ளது. ஆண், பெண் இருவருமே விளையாட்டில் ஈடுபட்டு இருந்தாலும் பெண்கள் அதிகமாக பங்கேற்று விளையாடினர்.

**சுண்ண விளையாட்டு**

சுண்ணம் என்பது ஒரு வகை வாசனைப் பொடி, சங்க காலத்தில் இச்சுண்ணப் பொடியினைக் கொண்டு விளையாடி யும் உள்ளனர். பலரும் கூட்டமாகச் சேர்ந்து சுண்ணப் பொடியினைக் கையில் வைத்துக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் தூவிக் கொண்டு மகிழ்ந்து விளையாடியுள்ளனர்.

*சுண்ணப்பொடியினைத் தயாரிப்பதில் பெண்கள் மிகுந்த ஈடுபாடுக் கொண்டு தயாரிக்கும் பொழுது தங்களது, திறமைகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.இதற்கான போட்டி முறைகளும் காணப்பட்டுள்ளன.*

**"புன்காயச் சுண்ணம் புடைத்த" (பெரும். 221)**

**"பலர் தொகுபு இடித்த தாது உரு சுண்ணத்தார்" (மது.கா. 399)**

**"சுண்ண நீறு ஆடி" (கலி. 97: 10)**

*ஆகிய வரிகளின் வழியே இவ்விளையாட்டினைப் பற்றி அறியலாம்.*

*சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டுத் தொடர்ந்ததை,*

**"வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணுறுஞ்**
**சாந்தரும்" (சிலம்பு. 13)**

*என்ற சிலப்பதிகார அடிகள் மூலம் அறியலாம்.*

*இக்காலத்திலும் இவ்விளையாட்டு நடைமுறையில் உள்ளது. சுண்ணத் தயாரிப்பு ஒரு சிறுதொழிலாகவே வளர்ந் துள்ளது. வண்ணப் பொடிகளை கொண்டு வாசலில் கோல மிடுதல், ஒப்பனைக்குப் பயன்படுத்துதல் தண்ணீரில் கரைத்து மேலே தெளித்துக் கொண்டு விளையாடுதல் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**சூது**

*சூதாட்ட ஆட்டம் பொழுது போக்குக்காக விளையாட்டப் படுவது காலப் போக்கில் பிறரைக் கெடுக்கும் மனப்பான்மை யும் வளரத் தொடங்கியது. சங்க காலத்தினர் இவ்விளையாட்டை 'வல்லு விளையாடல்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆயம், கவறு, வட்டு, வல் என்றப் பொருட்களைக் கொண்டு உருட்டி*

விளையாடியுள்ளனர். இவ்விளையாட்டில் சில குறிப்பிட்ட சொற்களைக் கூறிக் கொண்டு விளையாடியுள்ளனர். பொழுதுப் போக்காக போவதே தெரியாமல் விளையாடிய விளையாட்டு பந்தய விளையாட்டாக மாறியது. இதற்கான பந்தயம் பொருளை மையமாக வைத்து விளையாடும் பொழுது வெற்றி பெறுபவருக்கே அப்பந்தயப் பொருள் உரிமையுடைய தாகும்.

இவ்விளையாட்டில் போட்டி மனப்பான்மை ஏற்படுகிறது. சூதாட்டத்தில் தனக்கு ஒப்பார் இல்லையெனக் கூறுவது எதிர்த்து ஆடுவோரை வீழ்த்துவதாகக் கூறுவதும்.எவர் எதிர்த்தாலும் தானே வெல்லுவதாகக் கொடி உயர்த்துவதும் கொடிய எண்ணங்களாயின. இவ்விளையாட்டை ஆண்கள் விளையாடியுள்ளனர். காலப் போக்கில் பெண்களும் விளையாடலாயினர். இவ்விளையாட்டை பகல், இரவு என்று நேரம் கருதாமல் பொழுது போக்கி மகிழ்ந்து விளையாடி யுள்ளனர். பொது இடங்களும், வீடுகளும் விளையாட்டுக் களமாக அமைந்தன. இவற்றைக் "கழகம்" என்று அழைத்துள்ளனர். சூதாடிய இடத்தினை "ஓவாச் சூதுபொரு கழகம்" என்று குறிப்புகளும் கிடைக்கின்றன.

பிறரை ஏமாற்றும் நோக்கிலும் விளையாடியுள்ளனர்.

"பொதியில்
நரை மூதாளர் நாயிடக் குழிந்த
வல்வின் நல்லுயகம்" (புறம்.52:4-6)

"மன்றத்து
நரை மூதாளர் அதிர் தலை யிறக்கிக்
கவை முனத் திருந்தும் வல்லு" (அகம். 377: 7 - 9)

"சூதார் குறுந்தொடிச் சூரமை
நுடக்கத்து" (ஐங். 71:1)

ஆகியவை சான்றுகளாகும்.

*சங்க காலத்திற்குப் பின்னரும் மக்களால் விரும்பி ஆடப்பட்டதைக் காப்பியங்களும் சிற்றிலக்கியங்களும் குறிப்பிடப்படுகின்றன.*

**"வல்லாடாய்த்து மண்ணரை சீழந்து"** (சிலம்பு. 21:50)

*என்பது சிலப்பதிகாரம்.*

**"சூது உந்தலின் பொழுதுபோம் சிலர்க்கு"**

*என்பது கம்பராமாயணமும் கூறுகின்றன.*

**நீர் விளையாட்டு**

*நீரில் நீச்சலடித்து மகிழ்ந்து பொழுது போக்குக்காகவும் வெற்றி பெற வேண்டுமென்றும் விளையாடுவது இவ்விளை யாட்டாகும். சங்ககாலத்தில் ஆடவரும் பெண்டிரும் ஆறுகள், குளங்கள் போன்ற நீர் நிலைகளில் நீச்சலடித்தும், தான் கற்ற வித்தைகளைக் காட்டியும் படகுகளைப் பயன் படுத்தியும் மகிழ்ந்து பொழுதுபோக்காக விளையாடியுள்ளனர். மேலும் நீர் விளையாட்டை ஒரு விழாவாகப் பலரும் வேடிக்கைப் பார்க்கும் வகையில் விளையாடி அதில் வெற்றிப் பெறுவோர்க்குப் பரிசுகளும் பாராட்டுக்களும் கொடுத்து ஊக்கப்படுத்தியுள்ளனர். பகல் பொழுதில் விளையாடி மகிழ்ந்துள்ளனர்.*

*சில நேரங்களில் ஆடவருடன், பரத்தையருடனும் புனலாடி மகிழ்ந்துள்ளனர்.*

**"மலி புனல் நிகழ்தரும் தீம் நீர் விழாலின்"** (பதிற். 48:14)

**"இறுவரை யுரையுமாறு இருகரை ஏமந்து**
**வரைபுரை உருவின் நுரைபல சுமந்து**
**பூ வேந்து பொழில் பரந்து**
**துணைந்து ஆடுவார் ஆய் கோதையர்"** (பரிப். 7:40 - 43)

**"அறம் காவற் பெண்டிர்**
**மணி அணிந்த தம் உரிமை மைத்தரோடு ஆடித்**
**தணிவின்றி, வையைப்புனல்"** (பரிப். 48 - 50)

ஆகியவை இவ்விளையாட்டின் சான்றுகளாகும்.

சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து விளையாடியதைக் காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.நீர் விளையாட்டு ஒரு விழாவாக நடைப்பெற்றுள்ளது. அவற்றை 'நீரணிவிழவு' எனச் சிலப்பதிகாரம் கட்டுகின்றது. உயரமான மாடம் மீது ஏறி அங்கிருந்து பெண்கள் நீரில் பாய்ந்தும்.நீரில் இசைக் கருவிகளை இசைத்தும் விளையாடியதைப் பெருங்கதைக் குறிப்பிடுகின்றது.

இதைச் 'சல விளையாட்டு', 'மஞ்சனம் ஆடல்', 'ஆய விளையாட்டு' என்ற பெயர்களில் அழைக்கின்றனர். ஆற்றோரம் இருந்த நகர மக்களெல்லாம் ஆண்டுதோறும் ஆற்றில் புது வெள்ளம் வந்தவுடன் ஒரு பகற்பொழுதில் வெள்ளத்தில் திளைத்தாடி இன்புற்று விளையாடுவர். கிளை புனலாட்டு என்றும் கூறுவர்.

**பந்து**

உருண்டை வடிவமுள்ள விளையாட்டுக் கருவி பந்து எனப்படும். இப்பந்தைக் கைகளால் தூக்கிப் போட்டும், கோல் கொண்டு தட்டியும் விளையாடுகின்றனர். சங்க காலத்தில் கூட்டமாகவும், சேர்ந்து பொழுதுபோக்கவும், போட்டி முறை வைத்தும், பந்தயம் கூறியும் விளையாடி யுள்ளனர். இதற்காகப் பந்தெறிகளும், பந்தடி மேடையும் இருந்துள்ளது. இப்பந்து பூவினால் ஆக்கப்பட்டும் நூலினால் வரிந்து கட்டப்பட்டும் காணப்பட்டது. மேலும், வீடுகளிலும் மேல் மட்டத்திலும், வெளிப்புறமான பொது இடங்களிலும் மாலைநேரங்களிலும்பொழுதுபோக்காக விளையாடியுள்ளனர். இவ்வாறு விளையாடும் பொழுது பாடல்கள் பாடிக் கொண்டும் விளையாடி மகிழ்ந்துள்ளனர்.

"வரிப்புனை பந்தொடு பாவை தூங்க" (திருமுரு. 68)

"நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்துப்
"பந்தொடு பெயரும் பரிவி லாட்டி" (நற். 140:6-7)

"பந்து நிலத்து எறிந்து பாவை நீக்கி" (நற். 179:2)

ஆகிய வரிகள் இவ்விளையாட்டிற்குச் சான்றுகளாகும்.

சங்க காலத்திற்குப் பின் மிகச் சிறப்பாக விளையாடப் பட்டுள்ளதைக் காப்பியங்கள் குறிப்பிடுகின்றன.

"செம் பொன் செய்த வரிப்பந்து"

"பஞ்சுடைப் பந்து பூப்பந்து"

என்ற பகுதிகளால் பந்துச் செய்யப்பட்ட வகைகளைப் பெருங் கதைப் புலப்படுத்துகின்றது. சிலப்பதிகாரத்தில் கந்தகம், கந்து என்னும் சொற்களால் பந்தைக் காப்பியங்கள் குறிப்பிட்டுள்ளன என்பதைக் கந்துகவரி என்ற பகுதிகளில் காணமுடிகின்றது. மேலும், இருபத்தொரு பந்துகளைப் பயன்படுத்தி "எண்ணாயிரம் கை" பந்தடித்த மானனீகை என்ற பெண்ணைச் சீவகசிந்தாமணி குறிப்பிடுகின்றது. இக்காலத்தில் இவ்விளையாட்டு சில மாற்றங்கள் பெற்று காணப்படுகின்றது.

சிறுவர்கள் விளையாடும் விளையாட்டைப் 'போர் பந்து', 'குழிப்பந்து', 'பிள்ளையார் பந்து' எனவும் குறிப்பர். குழிப் பந்து, பிள்ளையார் பந்து போன்ற விளையாட்டுகளில் விளை யாடும் பொழுது பந்து வாய்த்தால். நமக்கு, வாய்க்காவிட்டால் பிள்ளையார்க்கு எனக்கூறி விளையாடி மகிழ்வர்.

**பறவைகளைக் காணலும் அவற்றின் செயல்கள் போல செய்தலும்**

பறவைகளைக் காண்பதற்காக வெளியிடங்களுக்குச் சென்று தேடிக் கண்டுபிடித்து அவற்றின் செயல் போல் செய்து மகிழ்வது சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் வெளியிடங்களில் காணும் பறவைகளைக் கண்டு அவற்றின் செயல்களைப் போல செய்து மகிழ்ந்தனர். குறிப்பாகக் கிளி, மயில், குயில் போன்ற பறவைகளின் செயல்களைக் கண்டு அவற்றைப் போன்று செய்து மகிழ்ந்தனர். பெண்கள் கிளியுடன் மழலை மொழி பேசியும் குயில் கூவும் பொழுது

*அவற்றைப் போன்று எதிர்கூவல் கூவியும் மயில் ஆடுவதைக் கண்டு ஆடியும் மகிழ்ந்து பொழுது போக்கினர்.*

**"நறவுண் வண்டாய் நரம்பு ஊர்நரும்**
**சிகைமயிலாய்த் தோகை விரித்து ஆடுநரும்**
**கோகுலமாய்க் கூவுநரும்.**
**ஆகுலம் ஆடுநரும்"** (பரி. 9: 63-66)

*இவ்விளையாட்டு சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்ததைப் பெருங்கதைக் குறிப்பிடுகிறது.*

*மயில் கூட்டத்தின் அழகைக் கண்டும் ஆடலைக் கண்டும் பெண்கள் பொழுதுப் போக்கி மகிழ்ந்துள்ளதை,*

**"மணிமயிற் பீலி மாமயிற் றொழுதி**
**அணிநல நோக்கிய மாடல் கண்டுவந்தும்"**
(பெருங்.2112:137-138)

*என்ற பெருங்கதை வரி குறிப்பிடுகின்றது.*

*இக்காலத்திலும் பறவைகள் போலச் செய்து காட்டுதல் வித்தையாகவும் திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சி யாகவும் வளர்ந்துள்ளது. சிறார் பள்ளிகளில் விளையாட்டாகவும் இசையுடன் சொல்லத் தரப்படுகிறது.*

**பறவை – விலங்குகளுடன் விளையாடல்**

*பறவை - விலங்குகளுடன் விளையாடுவது மரபாகத் தொடர்ந்து வரும் விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்படு கின்றது. பெண்கள் மான் குட்டிகளுடனும், சிறுவர்கள் புலிக்குட்டிகள் மற்றும் யானைக் கன்றுகளுடனும் பொழுது போக்கியுள்ளனர். யாரிடமும் சொல்ல முடியாத ரகசியங்களை விலங்கிடம் சொல்லி மனதில் உள்ள கனத்தைக் குறைத்துக் கொண்டனர். ஆகையால் மனிதர்களை நேசிப்பதை விட விலங்கு பறவைகளை நேசித்துள்ளனர். இவ்விலங்குப் பறவைகளை விளையாடுதல் மூலம் மகிழ்ச்சி அமைவது மட்டுமல்லாமல் உயிரினும் இனிதாகக் கருதினர். இவ்விளை*

*யாட்டைப் பகல்பொழுதினில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகப் பொழுதுபோக்காக விளையாடி மகிழ்ந்துள்ளனர்.*

**"சிறு குறும் பறவைக் கோடி**
**விரைவுடன்"** **(நற். 277:9)**

**"தாதுதேர் பறவையின் அருந்து இறல் கொடுக்குங்கால்"**
**(கலி. 22: 7)**

*ஆகிய அடிகளின் மூலம் இவ்விளையாட்டை அறியலாம். சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டுத் தொடர்ந்து விளையாடப்பட்டுள்ளதைப் பிற்கால இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

*சான்றாக,*

**"களிற்றோ டாடித் தொழுதகக்**
**கழிப்பர் வேந்தே"** **(சீவக சிந். 58:289)**

*என்ற சீவக சிந்தாமணி அடியும் குறிப்பிடுகிறது.*

*சங்க இலக்கிய ஆண்பாலர் விளையாட்டும், விளையாட்டுக் கருவிகளும்*

**ஏறுகோள்**

*கூறிய கொம்புகளை உடைய எருதுகளைப் போர்க் கருவிகள் ஏதுமின்றித் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் தம் உடல் வலிமையால் அடர்ந்தும், ஊர்ந்தும் இளைஞர் அடக்கி மகிழ்ந்து விளையாடுவது.*

**குதிரை ஏற்றமும் யானை ஏற்றமும்**

*அரசர், வீரர் முதலியோர் யானை, நேர் போன்றவற்றைச் செலுத்தியும், ஊர்ந்து போர்ப் பயிற்சி செய்வது தொழிலாகவும் பொழுது போக்காகவும் அமைந்த இவை விளையாட்டாகவும் விளங்கியது.*

**சாம விளையாட்டு**

*சமமான கற்பனை பெயர்களை இட்டு ஆடும் விளையாட்டு.*

**குறும்பு விளையாட்டு**

*சிறுவர்கள்தனித்தும், கூட்டமாகவும் இணைந்து பல வகை ஓசைகளை எழுப்பிக் கொண்டும், கைத்தட்டிக் கொண்டும் ஆடி மகிழ்ந்து விளையாடினர்.*

**சிறுதேர்**

*சிறுதேரினைச் செய்து அவற்றை உருட்டி விளையாடுவது.*

**சிறுபறை**

*தோற்கருவி கையில் வைத்துக் கொண்டு அடித்து விளையாடும் பறை.*

**மல்**

*மெல்லிய இழையால் நெய்யப்பட்ட துணி.*

**வட்டு**

*உருண்டையான விளையாட்டுக் கருவி.எறிதல் முறையில் விளையாடப்படுகிறது.*

**வில் விளையாட்டு**

*வில் வித்தை விளையாட்டு.*

**வேட்டை**

*வில், அம்பு, ஈட்டி*

**பெண்பாலர் விளையாட்டு**

**எதிரொலி கேட்டல்**

*ஆரவாரம் இல்லாத மலைப்பகுதிக்கு சென்று ஒலி எழுப்பி அந்த ஒலியே எதிரொலித்து கூறுவதை கேட்டு எதிரொலி கேட்டல் ஆகும்.*

**கண் புதைத்து ஒளிந்தாடல்**

கண்களைப் பொத்திக் கொண்டு மறைந்திருப்பவர்களைக் கண்டுபிடித்து விளையாடுவது.

**கவண்**

புள் ஓட்டவும், போர் புரிவதற்காகவும், தற்காப்புக்காகவும் மாந்தர்க்குப் பயன்படும் ஒரு கருவி கவண் இதனைக் "கைகவண்" எனவும் குறிப்பிடுவர்.

**குளிர்**

குளிர் என்பது சிறுவர்களுக்கான ஒரு விளையாட்டுக் கருவி குளிர் கருவியைச் சுற்றும் போது கடக் கடக் என ஓர் ஓசை உண்டாகும். அது சிறுவர்களுக்கு இன்பம் பயக்கும் சற்று பெரிதான வலிமையான குளிர் தினைப்புனம் காக்கும் மகளிர்க்கு ஓசையால் கிளிகளை விரட்ட உதவும் ஒரு கருவி, சங்க கால மகளிர் தினைப்புனம் காக்கும் போது தினைக்கதிர்களைக் கவர வரும் கிளிகளை ஓட்டக் குளிர் என்னும் கருவியைப் பயன்படுத்தினர்.

**தட்டை**

தட்டை என்பது ஒரு விளையாட்டுக் கருவி இதனைப் புடைக்கும் போது டப் டப் என ஒலி கேட்கும்.தட்டப்படும் கருவி தட்டை தட்டையைப் புடைத்து அதன் ஒலியை கேட்டு மகிழ்வது பிள்ளைகளுக்கு மகிழ்வு தரும் விளையாட்டு. சங்க கால மகளிர் தினைப்புனம் காக்கும்போது தட்டை புடைத்துக் கிளிகளை ஓட்டியதாகச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

தட்டை செய்முறை: ஒரு முழம் நீளமுள்ள தென்னை மட்டையைப் பிளந்து செய்யும் தட்டை ஒரு வகை. ஓரடி நீளமுள்ள வாழையிலை அடித்தண்டைப் பிளந்து செய்யும் தட்டை மற்றொரு வகையாகும்.

தென்னை மட்டையைப் பிளந்தும் தட்டை செய்துள்ளனர்.

"அவ்வாய்த் தட்டையொடு அவனை ஆக!" (நற். 134:5)

தழல் என்பது ஒரு விளையாட்டுக் கருவி.வளைந்து இசை எழுப்பும் கருவி சங்க காலத்தில் காதலன் தன் காதலிக்குத் தரும் விளையாட்டுக் கருவி இது. தழல், தட்டை குளிர், முறி என்பன அவன் தந்த விளையாட்டுப் பொருள்கள் என சங்க

காலப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் தட்டை குளிர் ஆகியன விளையாட்டுப் பொருட்கள் என்பது வெளிப்படை, முறி என்பது காதலி உடுத்திக் கொள்ளக் காதலன் தந்ததழையாடை எனவும் கூறப்படுகிறது. தட்டையைத் தட்டிக் குறமகள் தினை கவரவரும் பறவைகளை ஓட்டினாள் எனக் கூறும் பாடல் தழலை வளைத்துப் பறவைகளை ஓட்டினாள் எனவும் குறிப்பிடுகிறது.'தழங்கு குரல்' என்னும் தொடர் இடி முழக்கத்தையும், முரசு முழக்கத்தையும், நாத் தழுதழுக்கும் பேச்சையும் உணர்த்து வதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றால் 'தழங்கும் ஓசை எழுப்புவது தழல்' என்னும் கருவி என்னும் தெரியவருகிறது. ஆண்பால் பிள்ளைத்தமிழ் பாடல்களில் வரும் சிறுபறை போல இந்தத் தழல் மகளிர் முழக்கும் பறை என உணரமுடிகிறது. ஆண்டாள் முழங்கிய பன்ற இந்தக் கருத்தோட்டத்தில் நினைவுக்கு வருகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்களின் வாழ்க்கையிலும், பண்பாட்டிலும் விளையாட்டுக்கள் இரண்டறக் கலந்து காணப்படுவதைச் சங்க கால இலக்கியச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி விளக்கப்பட்டுள்ளது. ஆயக்கலைகள் அறுபத்து நான்கில் விளையாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. அவை யானை யேற்றம், குதிரையேற்றம், விற்போர், மற்போர் போன்றவை யாகும். மன மகிழ்ச்சியாகச் செய்யக்கூடிய எளி அல்லது வேடிக்கையான செயல்களை விளையாட்டு என்கிறார் சு.

*சக்திவேல். உடல் உறுப்புகள் எல்லாவற்றிற்கும் தக்க பயிற்சி அளிக்க வேண்டும் என்று உணர்ந்த நம் முன்னோர் பலவகையான உடற்பயிற்சியிலும் ஈடுபட்டார்கள். ஆசனம், தண்டால், பஸ்கி போன்ற போர் விளையாட்டு, யானை ஏற்றம், தேர் ஏற்றம் போன்ற சவாரி விளையாட்டு, நீந்துதல் போன்ற நீர் விளையாட்டு முரட்டு காளையை அடக்குதல் போன்ற வீரவிளையாட்டு வேட்டையாதல் போன்ற விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்துள்ளனர். பந்து, கவண், பாவை, குளிர், தட்டை, ஊஞ்சல், கழற்காய் போன்ற பல விளையாட்டுக் கருவிகள் பயன்படுத்தி விளையாடி யுள்ளனர். ஆயின், கெடவரல், பண்ணை, ஓரை ஆகிய விளையாட்டு குறித்த சொற்கள் தொல்காப்பியர் காலத்தி லிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை அறியலாம்.*

**துணைநூற் பட்டியல்**


1. *அறவாணன்.க.ப, தமிழ் சமுதாய வரலாறு, தமிழ்க்கோட்டம் வெளியீடு, புதுச்சேரி, 1994.*
2. *இராசமாணிக்கனார்.மா, தமிழர் நாகரீகமும் பண்பாடும், பாரிநிலையம், சென்னை, 1975.*
3. *இராமநாதன். ஆர், தமிழர்கலை இலக்கிய மரபுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1998.*
4. *இராசமாணிக்கனார்.மா, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதமி, டில்லி, 2012.*

# சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்
# HOSPITALITY IN SANGAM LITERATURE

**பா.விக்னேஷ் குமார்**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவேற்காடு சென்னை –600077
மின்னஞ்சல்: vikki6493@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைய தமிழர்களின் பண்பாட்டினை அறிந்துகொள்ள உதவும் வரலாற்றுப் பெட்டகமாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. இவ்விலக்கியங்கள் அரசர்களின் அரசியல் சிறப்புகளையும், மக்களின் வாழ்வியல் விழுமியங்களையும் மக்கள் மானுடத்துடன் மட்டுமில்லாது மானுடம் அல்லாத பிற உயிர்களிடமும் எவ்வாறு அன்புடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதையும் விவரிக்கின்றன. சங்கத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்ந்த நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைகளாகப் பிரித்ததுள்ளனர். இந்நிலங்களுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறை மாறுபட்டிருந்தன என்பதையும் இவ்விலக்கியங்கள் வாயிலாக உணர முடிகிறது. இத்தகைய சிறப்பு மிக்க தமிழ் முன்னோர்கள் தம் வாழ்வில் பின்பற்றி நடந்த அறங்களில் ஒன்றாகத் திகழும் விருந்தோம்பல் என்னும் பண்பினைக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச் சொற்கள்**

*தமிழ், இலக்கியம், சங்க்க இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், விருந்தோம்பல்*

## Abstract

*The ancient Tamil epics serve as a treasure trove of knowledge about the culture and traditions of our ancestors. These epics not only reveal the political and social excellence of rulers but also portray the daily lives, struggles, and relationships of common people, as well as their bond with nature and other living beings. The Sangam Tamil people categorized their land into five regions: Kurinji, Mullai, Marutham, Neythal, and Palai. The way of life in these regions was unique and distinct, shaped by the natural environment. Our literature takes us through this world, revealing the values and principles that our ancient sages and leaders lived by. This article explores the significance of the concept of "Virundhoompul" (hospitality) in the lives of our ancient Tamil forebears, highlighting the importance of morality, ethics, and way of life.*


*Keywords: Tamil, Literature, Sangha Literature, Tamil Culture, Tamil Civilization, Hospitality*

### தன்னலம் அற்றது விருந்தோம்பல்

*பண்டைய காலத் தமிழர்கள் தனக்கு என்ற தன்னலம் உடையவர்களாக இல்லாது அனைவருக்கும் வேண்டும் என்ற பொதுநலம் உடையவர்களாக வாழ்ந்துள்ளனர். ஏனெனில் இல்லறக் கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பலைக் கருதியுள்ளனர். இது தலைவன் தலைவிக்கு இடையே ஏற்படும் ஊடல் தீர்க்கும் பாலமாகவும் திகழ்ந்துள்ளது. விருந்தோம்பலின் சிறப்பினை நற்றிணைத் தலைவன் பொருளீட்டச் செல்வதாகக் கூறுகிறான் தலைவி வருத்தமடைகிறாள் இருப்பினும் தலைவனின் சிறப்பினைத் தலைவி,*

**தம் வயின்**
**இரந்தோர் மாற்றல் ஆற்றா**
**இல்லின் வாழ்க்கை வல்லா தோரே (நற்றிணை, பா. 84)**

என்னும் வரிகளில் பொருள் இல்லையென்று யாசகம் கேட்டு நிற்பவரின் பசியைப் போக்க பொருள் இல்லாத இல்லற வாழ்வை நெறிப்படி நடத்த முடியாத தலைவன் தான் தற்போது பொருள் தேடச் செல்ல வேண்டும் என நினைக்கிறார் என்று தலைவனின் சிறப்பைத் தலைவி தன் தோழிக்கு கூறுகிறாள். இங்கு தன் மனைவி வருந்தினாலும் பரவாயில்லை தான் பொருளீட்டச் செல்வதே அறம் என்று கருதும் தலைவனின் மனம் வெளிப்படுகிறது. ஏனெனில் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டி வந்தால் தான் தலைவன் தலைவி இருவரும் தங்களது பசியைப் போக்கிக் கொள்வதுடன் பிறர் பசியையும் போக்க முடியும். இதனை இல்லற வாழ்வின் சிறந்த அறங்களில் ஒன்றாக முன்னோர் கருதியுள்ளனர். விருந்தினர்களின் வருகையை நற்றிணை

**அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்**

இரவு நேரத்தில் விருந்தினர்கள் வருவார்கள் எனில் அந்நிலையிலும் மகிழ்ந்தவர் தமிழர் என்கிறது. இதனை வள்ளுவர்,

**ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின் (குறள். 225)**

என்னும் குறளில் தன் பசியை அடக்கும் ஆற்றல் துறவிகளிடம் உண்டு. இது சிறப்புடையது எனினும் அதனை விட பிறர் பசியைப் போக்குவரின் ஆற்றல் சிறந்தது என்கிறார்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவு. பெரும்பான்மையான மக்கள் உணவு கிடைத்தால் போதும் என்று உழைக்கிறார்கள். ஒரு சில மக்கள் ஒருவேளை உணவுக்கே வழியில்லாது வாழ்கிறார்கள். ஒரு வேளை உணவு கிடைத்தால் போதும் ஒரு நாள் பசியைப் போக்கி

விடலாம் என்று வாழ்பவர்களும் காணப்படுகிறார்கள். ஒரு நாடு மேன்மையடைய வேண்டுமெனில் அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் பசியில்லாது வாழ வேண்டும். உணவு கிடைக்காத நாட்டில் வாழும் மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். பசியற்ற நாடு மேன்மைத் தன்மை உடையதாகத் திகழும். மனிதனின் நடத்தைகளை மாற்றும் ஆற்றல் பசிக்கு உண்டு. பசியால் தவிக்கும் மனிதன் தன் பசியைத் தீர்க்க பல்வேறு செயல்களை மேற்கொள்கிறான். அவ்வாறு அவர்கள் வாழும் வாழ்க்கை நரகம் என்பதை இறையன்பு

**பசி அவர்களது நரகம்**

**(பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் ப.6)**

என்னும் வரிகளில் பசியுடன் வாழும் மனிதர்களின் நிலைமை நரகத்திற்கு ஒப்பானது என்கிறார். பசியை விட ஒரு மனிதனுக்குத் துன்பமானது வேறு எதுவுமில்லை. பசியுடன் வாழும் மனிதர்களுக்குத் தன் பசியைப் போக்குவதற்கான உணவு கிடைத்துவிட்டால் அந்த உணவே அவர்களுக்குச் சொர்க்கம் என்பதை இறையன்,

**உணவு சொர்க்கம்**

**(பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் ப.26)**

என்கிறார். உணவு கிடைத்தாலே போதும் அவர்களிடம் தேவையற்ற கவலைகள் இருக்காது. அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வார்கள். உணவில்லாமல் மக்கள் வாழ்வது நரகத்தைப் போன்றது. ஒரு மனிதன் வாழ்வில் பசியில்லாது வாழ்வதைப் போன்று வேறு எதுவும் இல்லை. அதுவே சொர்க்கம் என்பதும் வெளிப்படுகிறது. உணவில்லையெனில் உயிர்கள் இல்லை. உயிர்கள் இல்லையெனில் உலகம் இல்லை. எல்லா வேலைகளும் வயிற்றுக்காகத் தான். போதிய உணவினைப் பெற்று வாழும் மக்களிடம் நாகரிகம் அமைதி அன்பு இன்பம் என அனைத்தும் காணப்படும். இந்த உண்மையைத் தமிழ்

*மக்கள் என்றும் கடைப்பிடித்தவர்களாகத் திகழ்ந்துள்ளனர். அதனைப் பாரதிதாசன் 'உலகம் உண்ண உண்' என்கிறார். உணவு அருந்துவதற்கு முன்பு உலகில் உள்ள அனைவருக்கும் உணவு கொடுத்து அவர்களின் பசியைப் போக்கிய பிறகு உணவு உண்ண வேண்டும் என்கிறார்.*

*சேர மன்னர்களின் ஒருவர் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன். சேரமான் என்பது அவர்களின் குடிப்பெயர் பெருஞ்சோறு என்பது சிறப்புப் பெயர் உதியன் என்பது இயற்பெயர்; சேரலாதன் என்பது பட்டப்பெயர் அனைவருக்கும் உணவு கொடுத்தவர் ஆதலால் உதியன் என்ற பெயர் செஞ்சோற்று உதியன் என்று ஆயிற்று எனப் புறநானூறு தமிழர் நாகரிகம் என்ற நூலில் (ப.151) சாமி சிதம்பரனார் குறிப்பிடுகிறார். அவருடைய காலத்தில் நாட்டில் பஞ்ச மில்லை. பட்டினியில்லை வறுமையில்லை அனைத்து வசதிகளையும் பெற்று மிகுந்த மகிழ்ச்சியுடன் மக்கள் வாழ்ந்தனர். நாட்டை ஆளும் தலைவர்களுக்கு முக்கியமான ஒன்று தன்னுடைய நாட்டில் வாழும் மனிதர்கள் அனை வருக்கும் உணவினைக் கொடுத்துப் பசி இல்லாது வாழ வழி செய்வதாகும். ஒருவனுக்குப் பசிப்பிணி ஏற்படும் போது அவனிடம் உள்ள நற்குணங்கள் அனைத்தும் பறந்து போகும் என்பதை ஔவையார்*

**"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்"** (நல்வழி. ப.26)

*மேற்கண்ட வரிகளில் ஒரு மனிதனின் நற்குணங்களும் பசி ஏற்பட்டால் பறந்து போகும் என்கிறார். சமுதாயத்தில் பசியால் வருந்துபவர்களுக்கு உணவு கொடுத்து அனைவரும் பசி இல்லாது வாழ வழிசெய்ய வேண்டும் என்பதைப் பாரதியார்*

**“தனி யொருவனுக்கு உணவில்லையெனில்**
**ஜெகத்தினை யழித்திடுவோம்”** **(பாரத சமுதாயம், ப.31)**

என்னும் வரிகளில் அனைவரும் உணவினைப் பெற்று வாழ வேண்டும். தனி ஒரு மனிதனுக்கு உணவு கிடைக்கவில்லை எனில் மனிதர்களாக வாழ்வதில் பயனில்லை என்கிறார். மனிதன் பசி ஏற்படும் போது உணவு அருந்துகிறான். ஒரு சிலர் பசி ஏற்படாவிட்டாலும் உரிய நேரம் வந்தவுடன் உணவு அருந்துகிறார்கள். அவ்வாறு உணவு அருந்துபவர்களுக்கு உணவின் ருசி தெரிவதில்லை. மாறாகப் பசித்தபோது உணவு அருந்துபவர்களுக்குத் தான் உணவின் ருசி தெரியும்.

பசியைப் பற்றி வள்ளலார் யோசித்ததைப் போல வேறு யாரும் யோசித்திருக்க முடியாது. ஒருவன் உற்றார்களைக் கண்டால் அடையும் இன்பத்தை விடப் பசியால் வாடும் போது உணவு கிடைத்தால் அவன் அடையும் இன்பம் அதிகம் என்கிறார் வள்ளலார். பசியால் வருந்துபவர்களைக் கண்ட வள்ளலார் அவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்று சத்திய தரும சாலையை ஏற்படுத்தினார். ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்கிறது மணிமேகலை. உணவு கொடுத்து பிறர் பசியைப் போக்க வேண்டும் என்பதை வலியுறுத்துதற்காகவே எழுதப்பட்ட காப்பியம் மணிமேகலை.

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். ஒரு சில மனிதர்களுக்குத் தேவையான உணவு கிடைக்கிறது. ஒரு சிலருக்குப் போதிய உணவும் கிடைப்பதில்லை. அவ்வாறு உணவு கிடைப்பவர்கள் பிறருடைய பசியைப் பற்றித் தெரிந்து கொள்ள அவ்வப்போது பசியுடன் இருக்க வேண்டும். அவ்வாறு பசியுடன் இருந்தாலே பிறரின் பசி தெரியும். உண்ணும் ஒவ்வொரு பருக்கையும் உயிர் வாழ்வதற்கு அவசியம் என்பதை உணர்ந்து உணவு அருந்த வேண்டும். மனிதர்களின் எண்ணம் எல்லாம் நன்றாக உணவு அருந்த வேண்டும் என்பதே.

*பிறர் பசியைப் போக்க இயலாத இல்வாழ்க்கையை வாழ நினையாதவர்கள் நம் முன்னோர்கள். தன் பசி மட்டுமில்லாது பிறர் பசியையும் போக்கி இல்லற வாழ்வை மேற்கொள்வதே சிறந்த அறம்.*

**ஊடல் தீர்க்கும் விருந்தோம்பல்**

*சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவி இடையே ஏற்படும் ஊடல்களைத் தவிர்ப்பவர்களாகப் பாங்கன் தோழி போன்றோர் இருப்பினும் வீட்டிக்கு வரும் விருந்தினர்களும் ஊடல் தீர்ப்பவர்களாக இருந்துள்ளனர். ஊடல் நிகழும் சமயத்தில் தலைவி வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடம் ஊடலை மறைத்து வந்தவர்கள் மகிழும் வண்ணம் விருந்தளிப்பாள். அச்சமயத்தில் தலைவனும் பேசுவான். இதன் மூலம் தலைவி தனது ஊடலைத் தவிர்ப்பாள். இதனை நற்றிணை குழையணிந்த காதினையுடைய தலைவி தனது மோதிரம் அணிந்த விரல்கள் சிவக்கும் வண்ணமாக சமைக்க முயல்கிறாள். அவ்வாறு சமைக்கும் போது எழுந்த புகை அவளது கண்களில் பட்டு சிவந்த கண்களை உடையவளாகவும். அத்துடன் சேர்த்து வியர்வை வடிகிறது அதனை தான் அணிந்திருக்கக் கூடிய துணியால் துடைத்துக் கொண்டு சமையலை வேகமாக சமைத்துக் கொண்டு நம் மீது சிறிது கோபம் இருந்தாலும் அவ்வப்போது சமைக்கும் தருவாயில் சிறிது பேசி தலைவி தன் ஊடலைத் தவிர்த்து விடுவாள். இதற்குப் பிறகு எங்களுக்கு இதுபோன்ற விருந்தினர் வருவார்களாக. இவ்வாறு வந்தால் தலைவி என்னிடம் ஊடல் கொள்ள மாட்டாள். விருந்தினர் வருகின்ற சமயத்தில் தலைவியின் சிறு பல்வரிசை தெரிய புன்னகை ததும்பும் முகத்தைக் காணலாம். இது போன்று எப்போதும் நிகழட்டும் என தனக்குத் தானே தலைவன் கூறிக் கொள்கிறான்.*

**கொடுங்குழை பெய்த செழுஞ்சேய் பேதை**
**சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப**
**வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்**

**புகையுண்டு அமர்த்த கண்ணள், தகைபெறப்
பிறை நுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே, சிவப்பாள் அன்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே (நற்றிணை பா. 120)**

*இங்கு செஞ் சேய் வல்லிதின் வகை, அம்மா அரிவை சிவப்பாள் அன்று என்னும் நான்கு சொற்கள் தலைவியின் சிறப்பு எத்தகையது என்பதை உணர்த்துகிறது. செழும் சேய் என்பது தலைவி செல்வ செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பெண் என்பதையும். வல்லிதின் வகைஇ எனும் சொல் பெண் சமைப்பது வலிமை குறைவான தன்மையுடைய வாழைத்தண்டு என்றாலும் அதனைப் ஒடிப்பதற்கே அவள் வலிதாக முயல வேண்டியுள்ளது என்பதன் வாயிலாக அவ்வளவு மெல்லியவளாக தலைவி காணப்படுகிறாள் என்பதை உணர்த்துகிறார். அம்மா அரிவை என்னும் சொல் தலைவி மிகுந்த அழகுடையவள் என்பதை உணர்த்துகிறது. சிவப்பாள் அன்று என்னும் சொல் முகம் சிவக்க மாட்டாள் விருந்தினர்களிடம் கோபம் கொள்ள மாட்டாள். விருந்தினர் இல்லத்தில் இருப்பதால் தலைவனிடமும் கோபம் கொள்ள மாட்டாள் என்பதை உணர்த்துகிறது. அத்துடன் தலைவி செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்திருந்தாலும் பசியென்று வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாது உணவு கொடுக்க வேண்டும் என்ற அறத்தைக் கடைபிடிக்கும் பெண்ணாக வளர்க்கப்பட்டுள்ளாள் என்பதும் புலனாகிறது. ஒரு சிலர் கோபம் கொள்ளும் போது அவர்களது முகம் இயல்பாகவே சிவக்கும். விருந்தோம்பலின் சிறப்பினைக்கூறும் வள்ளுவர் விருந்தோம்பல் என்னும் ஓர் அதிகாரத்தை இயற்றியுள்ளார். இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை தன் முக மலர்ச்சியுடன் வரவேற்று விருந்து உபசரிப்பவர்களின்*

இல்லத்தில் திருமகள் மனம் மகிழ்ந்து குடியிருப்பாள். இதனை வள்ளுவர்

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல் (குறள். 84)**

என்கிறார். திருமகள் என்று குறிப்பிட்டதன் நோக்கம் செல்வம் எப்போதும் குறைவில்லாது இருக்கும் என்பதை உணர்த்தவே. பிறருக்குத் தன்னிடம் உள்ள பொருளைச் செலவழிக்கும் போது பொருள் குறையத்தானே வேண்டும். ஆனால் வள்ளுவர் செழிக்கும் என்கிறாரே என்று எண்ணத் தோன்று கிறது. இவ்வாறு நவில்வதன் நோக்கம் ஒருவன் தன்னிடம் உள்ள செல்வத்தை எவ்வழியில் பயன்படுத்துகிறானோ அதனைப் பொறுத்து ஒருவனிடம் செல்வம் சேரும் அல்லது செல்வம் அவனை விட்டு விலகும். பிறருக்கு கொடுத்து பிறர் மனத்தை மகிழ்விப்பதன் மூலம் செல்வம் செலவழிக்கப்படுகிறது. இதன் மூலம் பெறுபவரும் மனம் மகிழ்கிறார் தருபவரும் அகமகிழ்கிறார். எனவே பிறருக்கு பயன் தரும் வகையில் பணம் செலவழிக்கப்படுமாயின் செல்வம் சேரும் என்பது வள்ளுளர் வாக்கால் வெளிப்படுகிறது.

**மன்னர்களின் விருந்தோம்பல்**

வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு இல்லையென்று கூறாது உணவு கொடுத்துள்ளனர் நம்முடைய முன்னோர்கள். சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவன் விருந்தினர்களின் பசியைப் போக்கும் குணம் உடையவராக சிறுகுடி கிழான் பண்ணன் திகழ்ந்துள்ளான் என்பதை

**சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்**
**இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்**
**மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்**
**பசிப்பிணி மருத்துவம் இல்லம்**
**அணிந்தோ சேய்தோ கூறுமின் (புறம்,173)**

*என்னும் வரிகளில் பசியும் அத்துடன் நெடுந்தூரம் நடந்து வந்த வலியும் வாட்டுகிறது இதனையுணர்ந்து பசியைப் போக்கும் அப்பண்ணனின் இல்லம் துரமா அல்லது பக்கமா என்று கூறுங்கள். அவர் இவ்வுலகத்தில் நெடுங்காலம் வாழட்டும் என்கிறார். பண்ணன் இருக்கும் இடத்திற்குச் சென்றாலே பண்ணன் வறியவர்களின் நிலையறிந்து உதவுவான் என்பதும் இவர் பசியுடன் வருபவர்களுக்கு இல்லையென்று உணவு கொடுக்கும் வள்ளல் தன்மையுடையவராகத் திகழ்ந்துள்ளான் என்பதும் வெளிப்படுகிறது.*

*மன்னர்கள் தன்னை நாடிவரும் விருந்தினர்களுக்கு இல்லை யென்று கூறுதல் அறமற்ற செயல் என்று கருதியுள்ளனர். அதனை மதுரைக் கள்ளிக்கடையத்தன் வெண்ணாகனார் என்னும் புலவர்*

**நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்று இக்**
**கருங்கோட்டுச் சீரியாழ் பணையம் இது கொண்டு**
**ஈவதுஇலாளன் என்னாது நீயும்**
**வள்ளி மருங்குல் வயங்கு இழை அணியக்**
**கள்ளுடைக் கலத்தேம் யாம் மகிழ் தூங்கச்**
**சென்று வாய் சிவந்து மேல் வருக (மேலது. 316 )**

*என்னும் வரிகளில் பாணம் கூறுகிறான் வந்தவர்களிடம் நான் அவருடைய பாணன் நேற்று வந்த விருந்தினருக்குக் கொடுக்க ஏதுமில்லை ஆதலால் தன்னுடைய பழைய வாளினைப் பனணயம் வைத்தான். இன்று வெற்றி களிப்பில் இருக்கிறான். தருவானோ தரமாட்டோனோ என்று கருதாது நீயும் நின்னுடைய விறலியும் அவரிடம் செல்லுங்கள். விறலிக்கு அணியும் நமக்கு சோறும் கள்ளும் தருவான். நும் வாய் சிவந்து வருக என்று கூறுகிறார். அரசர் தன்னை நாடிவரும் விருந்தினர்களுக்காகத் தன்னிடம் உள்ள பழமையான பொருட்களைப் பனணயம் வைத்து விருந்தினர்களை உபசரிப்பவராகத் திழ்ந்துள்ளனர். ஏனெனில் நம் முன்னோர்கள்*

*விருந்து உபசரித்தலை எத்தகைய உயர்வானதாகக் கருதியுள்ளனர் என்பதும் விருந்தினர்களுக்கு விருந்தளிப்பதை விட வேறு சிறந்த அறம் வேறு ஒன்றும் கிடையாது என்றும் கருதியுள்ளனர் என்பது புலனாகிறது.*

*ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியின் விருந்தோம்பல் பண்பினை*

**மகிழ்தர மரபின் மட்டே அன்றியும்**
**அமிழ்தன மரபின் ஊதுவை அடிசில்**
**வெள்ளி வெண்கலத்து ஊட்டல் அன்றி**
.........
**பகடுதரு செந்நெல் போரோடு நல்கி** (புறம்.390 )

*என்னும் வரிகளில் அதியமான் வெள்ளி வெண்கலத்து உணவு ஊட்டினான் அத்துடன் ஊருக்கு முன்பாக பெதினியில் இருந்த என் சுற்றத்தாரின் பசி தீரும் பொருட்டுப் போரோடு செந்நெல்லும் அளித்தான். அல்லது இவையெல்லாம் பெறுக என்று கூறினான் என்கிறார். உயர் மதிப்புடைய பொருட்களில் ஒன்றாகக் கருதும் வெள்ளிப் பாத்திரத்தில் விருந்தினருக்கு அதியமான் விருந்து உபசரித்தார் எனில் விருந்தினர்களை அதியமானும் தமிழ் மக்களும் உயர்வுடையவர்களாகக் கருதியுள்ளனர் என்பது புலனாகிறது.*

*கரிகால் பெருவளத்தான் விருந்து உபசரிக்கும் பண்பினைப் பொருநராற்றுப்படையில் பொருநன் மகிழ்ச்சியுடன் கூறுகிறான். உரிய நேரத்தில் எங்களை அழைத்து சூடாகச் செய்த இறைச்சித் துண்டுகளை எடுத்து பலமுறை உண்ணுங்கள் என்று சொல்லிக் கொடுத்தார். நாங்களும் அதனைப் பெற்று சூடு தாங்க முடியாமல் வாயின் வலப்புறமும் இடப்புறமுமாக மாறி மாறி அதனைத் தின்று இவை போதும் என்று சொல்லும் தருவாயில் பணியாரங்களைக் கொண்டு உண்ணச் செய்தான் என்பதை*

**பதன் அறிந்து**
**துராஅய் துற்றிய துருவை அம்புழுக்கின்**
**பராஅரை வேலை பருகு எனத் தண்டிக்**
**காழின் கட்ட கோழ் ஊன் கொழுங் குறை**
**ஊழின் ஊழின் வாய் வெய்து ஒற்றி**
**அவை அவை முனிவகும் எனினே சுவைய**
**வேறு பல் உருவின் விரகு தந்து இரீஇ (பொருநராற்றுப்படை)**

என்ற வரிகளில் கரிகால் பெருவளத்தான் விருந்து உபசரிக்கும் பண்பினைப் பொருநன் கூறுகிறான். மன்னர்கள் பசியென்று வருபவருக்கு அவர்களின் தேவையை அறிந்து உணவு கொடுக்கும் பண்பினையுடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பதை விட பொருளைக் கொடுப்பவரிடம் நடந்து கொள்ளும் விதமும் சிறப்பாக இருக்க வேண்டும். பொருள் கொடுப்பவர் உள்ளக்கனிவுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அது அவர்கள் பற்றிய எண்ணத்தை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும்.

பொருள் இல்லாதவர்களுக்கு உதவி செய்யும் போது கொடுக்கப்படும் பொருள் அவர்களுக்கு உரிய நேரத்தில் உதவக்கூடியதாக உள்ளதா என்பதை அறிந்து கொடுக்க வேண்டும். ஏனெனில் நம்மிடம் பொருள் நிறைய உள்ளது என்பதற்காகப் பொருள் இல்லாதவரின் தேவைக்கு அதிகப்படியான பொருளைத் தருவதும் தவறு அதே சமயத்தில் தன்னிடமுள்ள பொருளாதார வசதியைப் பிறருக்குக் காண்பிக்க வேண்டுமென்பதற்காக அளவுக்கு அதிகமாகப் பொருளைப் பிறருக்குக் கொடுத்தலும் தவறு. தானத்தைச் சரியான அறிந்து முறையாக பிறருக்குக் கொடுக்க வேண்டும். கரிகாலன் தன்னை நாடி வந்த விருந்தினர்களை முறையாக வரவேற்று அவர்களின் மனம் மகிழும் விதமும், தான் அகமலர்ச்சியுடன் உணவு கொடுத்தாது மட்டுமின்றி, அவர்கள் விடைபெற்றுச் செல்லும் போது அவர்களின் பின்னால் ஏழடி

நடந்து சென்று வழி அனுப்பினார் என்பதை பொருநராற்றுப் படை,

**காலின் ஏழ் அடிப் பின்சென்று கோலின்**
**(பொருநராற்றுப்படை. 166)**

என்கிறது. கிராமப்புறங்களில் வீட்டுக்கு வந்த விருந்தினர்கள் திரும்பிச் செல்லும் போது சிறிது தூரம் பின் சென்று வழியனுப்பும் வழக்கம் தற்காலத்திலும் காணப்படுகிறது. இது பண்டைய காலத்தில் தோன்றிய பன்பாட்டின் வெளிப்பாடு என்பது சாலப் பொருந்தும்.

## வறுமையிலும் செம்மை

வறுமை என்பது ஒரு குறியீடு மட்டுமே. செம்மையான வாழ்வு வாழ்வதற்கு வறுமை தடையில்லை. வறுமையிலும் செம்மையாக வாழ்வதே சிறப்பு. ஏனெனில் வறுமையில் பிறந்த நிறைய மனிதர்கள் வெற்றி பெற்றுள்ளனர். வறுமை எதற்கும் எதனைச் சாதிப்பதற்கும் தடையில்லை. வறுமையைக் காரணம் கூறுபவர்கள் சாக்குப் போக்கு சொல்பவர்கள் என்பதே நிதர்சனமான உண்மை. இவர்கள் தன் இயலாமையை வெளிப்படுத்துபவர்களாகவும் உள்ளனர். சங்ககாலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் வறுமை நிலையிலும் தன் இல்லற வாழ்வைச் செம்மையாக வழிநடத்திச் சென்றுள்ளனர். வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு இல்லையென்று சொல்லாது பொருள்களை நல்கியுள்ளனர். அதனை

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்து மாறு எதிர்ப்பை பெறாஅ மையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல் வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ விடலோ (புறம். 333 )**

என்னும் வரிகளில் முயல்கள் துள்ளிக் குதித்து விளையாடும் அவன் ஊருக்குச் செல்லுங்கள். உண்க எனச் சொல்லி உபசரிக்கும் நிலையில் அவர்கள் இல்லாத போதும் அங்கு

தங்கிச் செல்லலாம். அவ்வாறு சென்றால் உனக்கு நன்மை ஏற்படும். வரகும் திணையும் உணவும் இல்லையென்று வந்தவர்கள் உண்டு தீர்த்தனர். புதியதும் வரவில்லை. எனினும் கதிரைக் கொய்து உலர்த்தி உரலில் போட்டு குத்தி உங்களுக்கு உணவு தருவாளேயன்றி. ஒருபோதும் என் தலைவி இல்லையென்று கூறி உங்களைப் பசியுடன் செல்ல விடமாட்டாள் என்கிறார். வள்ளுவர் உணவினை விட உணவு பரிமாறுபவரின் பண்பு நலனே முக்கியம் என்பதை

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து (குறள்.90)**

அனிச்சப் பூவானது முகர்ந்தவுடன் வாடிவிடும் தன்மை யுடையது. அதனைப் போல இல்லத்திற்கு வரும் விருந் தினர்களை முகமலர்ச்சியோடு நோக்கும்போது அவர்களது முகம் மகிழ்ச்சியாக இருக்கும் என்கிறார். விருந்தினர் என்பவர் புதியவர் என்பதால் இவர்கள் வறுமையின் காரணமாக பொருளின்றிப் பிழைப்பு கருதி வருபவர்கள் அல்ல. இயல்பாகவே பிறருக்குப் பணி செய்யும் எண்ணத்துடனும் நோக்குடனும் வருபவர்களே விருந்தினர் எனலாம். இத்தகைய சிறப்பு மிக்க விருந்தினர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்று உபசரிக்க வேண்டும். முகமலர்ச்சியில்லாது விருந்து உபசரித்தல் கூடாது. விருந்தோம்பலின்போது பரிமாறப்படும் உணவினை விட உணவு பரிமாறுபவரின் பண்பு நலனே முக்கியம்.

தன் வீட்டில் சிறிதளவு உணவுப் பொருள் இருக்க நிறைய விருந்தினர்கள் வந்துள்ளனர் என்று தலைவி பதற்றம் அடையாது. தன்னிடமுள்ள பொருளைக் கொண்டு சமைத்த உணவினை அனைவரையும் அமரச் செய்து கொடுத்து மகிழ்வாள் என்பதை உறையூர் முது கடத்தனார்

**கல்லா இடையன் போலக் குறிப்பின்**
**இல்லது படைக்கவும் வல்லன் உள்ளது**

**தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்**
**நீள் நெடும் பந்தர் ஊண் முறை ஊட்டும்** (புறம்.331 )

*என்கிறார். பண்டைய காலம் தொட்டு தமிழர்கள் விருந்து உபசரிப்பதில் தன்னலமில்லாது பொது நலம் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இல்லத்திற்கு வருபவர்களுக்கு இல்லை யென்று கூறுதல் அறமாகாது. தன்னிடம் உள்ளப் பொருட்களைக் கொண்டு எத்தனை பேர் வந்தாலும் அவர்கள் அனைவருக்கும் கொடுத்து மகிழ்ந்துள்ளனர் அதுமட்டுமின்றி இருப்பதைக் கொண்டு சிறந்த நிர்வாகமும் செய்துள்ளனர். இவ்வாறு தலைவனுடன் சேர்த்து இல்வாழ்வில் துணை நிற்பவள் தலைவி என்பதாலேயே வள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் என்கிறார். ஏனெனில் பசியும் பட்டினியும் இல்லாது விளங்கும் சமுதாயத்தில் அன்பும் பண்பும் பாசமும் செழித்தொங்கும்.*

*வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர். கற்பியலில் இல்லத்தலைவியின் பண்புகளாக*

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பவும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்** (தொல், நூ .1098)

*என்னும் நூற்பாவில் தலைவனிடம் கொண்ட காதல் நல்லொழுக்கம் பொறுமை விருந்தினரை பேணிக்காக்கும் தன்மை சுற்றத்தைக் காத்தல் முதலிய பண்பு நலன்கள் குடும்ப தலைவிக்குரியது என்கிறார். நாட்பால் ஒழுக்கம் என்பது தன் குலத்தின் பொறுமையை உணர்ந்து ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தல். மெல்லியற் பொறையும் என்பது பண்பட்ட உள்ளத்தை உடையவளாய் எத்தகைய சூழல் ஏற்படினும் தன் நிலையை உணர்ந்து பிறரிடம் கோபம் கொள்ளாது இருத்தல். விருந்து புறந்தருதல் என்பது தன் நிலையினை உணர்ந்து இயன்றவரை விருந்தினர்களுக்கு விருந்து கொடுத்து*

அவர்களின் மனதை மகிழ்வித்தல். தொல்காப்பியர் பெண்களுக் குரிய இன்றியமையாப் பண்பு நலன்களில் ஒன்றாக விருந்தோம்பலைக் கூறுகிறார். இதனைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவு. உணவின் தேவையை நன்கு உணர்ந்தவர்களாக நம் முன்னோர்கள் இருந்துள்ளனர். சங்ககாலத்தில் மக்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப உண்ணும் உணவு முறையும் மாறுபட்டுள்ளது. இவர்கள் உணவு தனக்கு மட்டும் வேண்டும் என்ற சுயநலமுடையவர்களாக இல்லாது. வறுமையில் வாடிய ஏழை மக்களுக்கும் கொடுத்து அவர்களின் பசியினைப் போக்கி அவர்களையும் மகிழச் செய்து விருந்து கொடுத்ததன் மூலம் தானும் மகிழ்ந்து பொதுநலம் உடையவர்களாக தமிழர்கள் திகழ்ந்துள்ளனர். விருந்தினருக்கு உணவளிக்கும் அறத்தை நம் முன்னோர்கள் பெரிதும் போற்றியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

1. குறள் - திருக்குறள்
2. தொல் – தொல்காப்பியம்
3. நூ - நூற்பா
4. புறம் – புறநானூறு
5. மேலது - மேல் குறிப்பிட்ட நூல்

**துணை நூல் பட்டியல்**

1. திருக்குறள்
2. தொல்காப்பியம்
3. நல்வழி

4. *நற்றிணை மலர்கள்*
5. *நற்றிணை*
6. *புறநானூறு*
7. *பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்*
8. *பொருநராற்றுப்படை*

# பண்டைத் தமிழர்கள் கோவில்க்ளுக்கு வழங்கிய கால்நடை நிவந்தங்கள்
# ANIMAL SACRIFICES GIVEN TO TEM-PLES BY ANCIENT TAMILS

**முனைவர். மு. கலா**
இணைப் பேராசிரியர்
முதுகலை வரலாறு மற்றும் ஆராய்ச்சித் துறை
அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம் - 612 001.
தஞ்சாவூர் மாவட்டம்.
மின்னஞ்சல்: muthusamy.kala@gmail.com

**முனைவர்.ரா. தாமரைக்கண்ணன்**
உதவிப் பேராசிரியர்
நாகரத்தினம் அங்காளம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மதுரை-22
மின்னஞ்சல்: r1thamarai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தை ஆட்சி செய்த நமது முன்னோர்களான சேரர், சோழர், பாண்டியர், பல்லவர் என பல்வேறு வம்சத்தினர் ஆண்டு வந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஒரு பொது வான ஒற்றுமை உண்டு என்றால் அது கோவில் கட்டுவது என்று கூறலாம். அவ்வாறு கட்டப்பட்ட கோவில்களை பராமரிப்பதற்கும், பூசைகளை செய்வதற்கும் மன்னர்கள் ஆட்களை நியமிப்பதை வழக்கமாக கொண்டிருந்தனர். நியமிக்கப்பட்ட நபர்களின் அன்றாட தேவைக்கும் கோவில் செலவினங்களை மேற்கொள்வதற்கும் மன்னர்களாலும் அவர்களின் சார்பாக பொதுமக்களும் நிவந்தங்களை வழிபாடு தோன்றிய காலம் முதலாகவே அளித்து வருகின்றனர். அத்தகைய நிவந்தங்களில் நிலம், கால்நடைகள், பொருட்கள், காசு, பொன், வெள்ளி என்று பல்வேறுவிதமானவற்றை

*வழங்கி வந்துள்ளனர். இவற்றில் குறிப்பாக கால்நடைகள் நிவந்தம் வழங்குவதில் ஏதேனும் வரைமுறைகள் உண்டா என்ற நோக்கில் ஆய்வு செய்ய முற்படுகிறது இக்கட்டுரை.*

**திறவுச் சொற்கள்**

*தமிழர், வழிபாடு, கோவில் வழிபாடு, காணிக்கைகள், கால்நடை நிவந்தங்கள்*

**Abstract**

*Our ancestors, the Cheras, the Cholas, the Pandyas and the Pallavas ruled Tamil Nadu. If there is one thing common to all of them, it is the construction of a temple. It was customary for the kings to appoint men to maintain the temples built and to perform the poojas. From the beginning of the time of worship, the kings and the people on their behalf have been providing the Nivantas to meet the daily needs of the appointed persons and to meet the expenses of the temple. They were given land, cattle, goods, money, gold, silver and many other things. This article specifically seeks to examine whether there are any rules for the provision of livestock leave.*

*Keywords: Tamils, Worship, Temple Worship, Offerings, Animal Sacrifices*

**நிவந்தம்**

*நிவந்தம் என்பது நிபந்தனை என்றும் நிபந்தனையுடன் கூடிய ஒப்பந்தம் என்றும் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. மேலும் மணி மேகலை என்னும் காப்பியம் கடவுளை வழிபடும் இடம் என்றும் கூறுகிறது. பொதுவாக நிவந்தங்கள் ஒருவர் தீராத நோய் காரணமாக அவை நீங்கி நலம்பெறும் பொருட்டு வழங்கக்கூடியதாகவும், ஒருவர் இறந்த பிறகு அவரின் நற்கதி அதாவது அவரின் ஆன்மா சாந்தியடைய*

வேண்டும் என்று கருதி குடும்பத்தார்கள் அல்லது உறவினர்கள் வழங்கும் நிபந்தனையுடன் கூடிய பொருட்கள் அல்லது கால்நடைகளே நிவந்தமாகும். இந்த நிவந்தமானது கோவில்களின் உண்ணாழிகைகளில் (கருவறை) என்றும் அணையாத விளக்காக தொடர்ந்து எரியும் பொருட்டு வழங்கிய தானத்தைக் குறிக்கிறது.

**இருளில் மூழ்கா உண்ணாழிகை**

பொதுவாக நமது முன்னோர்கள் கோவில்களைக் கட்டிய பிறகு அதனை தொடர்ந்து வழிபாட்டிற்கு உட்படுத்தும் நடவடிக்கையாக கோவில் பராமரிப்பிற்கு என்று ஆட்களை நியமனம் செய்வர்.

அதன் பிறகு அவர்களைக் கொண்டு கோவிலில் விளக்கேற்ற பணிப்பர். அவ்விளக்கினைத் தொடர்ந்து எரிய வைக்க எண்ணெய் தேவைப்படும் என்பதால் மன்னர்கள் அவ்வேலை யில் ஈடுபடுவோருக்கு நெய் வழங்க கால் நடைகளையும், நிலங்களையும், காசு, பொருள் போன்ற வற்றையும் நிவந்தம் வழங்கினர். இவ்வாறு வழங்கப்பட்ட நிவந்தத்தின் மூலமாக கிடைக்கும் நெய்யினை வைத்து நாள்தோறும் உண்ணாழி கையை (கருவறையை) இருளில் மூழ்க விடாமல் பார்த்துக் கொண்டனர். அதற்கு உதவிய விளக்கினை "நந்தா விளக்கு" என்பர்.

**நந்தா விளக்கு**

நந்தா விளக்கு என்பது இறைவன் துயிலும் அறையின் மேற்கூரையிலிருந்து சங்கிலி அமைப்புடன் கீழே தொங்கும் ஒரு வகையான விளக்காகும் . இவ்விளக்கின் மேற்பகுதியில் ஒரு கலயம் போன்ற அமைப்பு இருக்கும். அதில் நெய் அல்லது எண்ணெய் ஊற்றி வைப்பர். அக்கலயத்திலிருந்து சிறு துவாரம் வழியாக விளக்கில் திரி இருக்கும் பள்ளமான பகுதிக்கு எண்ணெயானது சிறு சிறு துளியாக விழுந்து கொண்டே இருக்கும். இதன்காரணமாக எண்ணெய் தீர்ந்து

*விடாமல் அணையாமல் தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். இவ்விளக்கிற்கு அணையா விளக்கு, தூண்டா விளக்கு, நுந்தா விளக்கு, நந்தா விளக்கு, நொந்தா விளக்கு, திரு நொந்தா விளக்கு, திரு மணி விளக்கு, மணி விளக்கு, தூங்கா மணி விளக்கு, தீண்டா விளக்கு போன்ற பெயர்கள் வரலாற்றில் வழங்கிவந்துள்ளது . மேலும் இவ்விளக்கு பற்றி அகநானூறு, பரிபாடல், பட்டினப்பாலை, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற இலக்கியங்களிலும் தமிழகத்தில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளிலும் பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன.*

**நெய் தேவைக்காக வழங்கப்பட்ட கால்நடை நிவந்த வரைமுறைகள்**

*கோவிலில் விளக்கேற்ற கால்நடை வளர்ப் போரிடம் அல்லது பொதுமக்களிடம் ஒரு நாள் விளக்கு எரிக்க தேவைப்படும் நெய்யின் அளவிற்கு ஏற்ப ஆடுகளையும், பசுக்களையும் நிவந்தம் கொடுத்து நெய்யினை பெற்றுள்ளனர். நிவந்தம் கொடுக்கப்பட்ட ஆடுகள், பசுக்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் நெய்யின் தேவை அடிப்படையிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் வரலாற்று ஆய்வாளர்களிடையே ஒரு மித்த கருத்துக்கள் நிழவவில்லை. சிலர் ஆடுகள் 99-க்கு குறைவாகவே நிவந்தம் கொடுக்கப்படும் என்றும் என்ற எண்ணிக்கைகளிலே வழங்கி வந்துள்ளனர். ஆனால் ஒரு நபருக்கு 10 ஆடுகள், 25 ஆடுகள், 50 ஆடுகள், 25 பசுக்கள் என்ற எண்ணிக்கைகளிலே வழங்கி வந்துள்ளனர். இந்த எண்ணிக்கையானது சோழப் பெருவேந்தன் முதலாம் இராசராசன் காலத்திற்கு பின்பே பின்பற்றி வந்துள்ளனர் என்பதற்கான கல்வெட்டுச் சான்றும் 100 ஆடுகளுக்கு மேலும் நிவந்தங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன என்பதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் நமக்கு கிடைத்துள்ளன. அவற்றை ஒவ்வொன்றாக காண்போம்.*

*1. ஶ்ரீ.. கோமாறஞ்சடைய...*

2. இருபத்தாறு இவ்வாண்டு வெண் ...
3. க்குறண்டித் திருக்காட்டாம்பள் (ளி).
4. திங்கட் பதினாழி நெய்க்கு ...
5. நிலக்குடி நாட்டுக் குண்ணூர்ச்சா ...
6. ங்குணத்தான் அட்டின ஆடு நூறு ...

மேற்கண்ட கல்வெட்டு வாசகமானது பொது ஆண்டு எட்டாம் நூற்றாண்டில் முற்கால பாண்டிய மன்னன் "மாறஞ்சடையன் என்ற பராந்தக நெடுஞ்சடையனின்" 26 வது ஆட்சி ஆண்டில் குரண்டி என்ற ஊரில் இருந்த சமணப் பள்ளிக்கு ஒவ்வொரு திங்களும் பதினாழி நெய் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கரு நிலக்குடி நாட்டு குண்ணூரைச் சேர்ந்த "சாத்தங் குணத்தான்" என்பவர் நூறு ஆடுகளை நிவந்தம் கொடுத்த செய்தி இடம்பெறுகிறது. இதன்மூலம் எட்டாம் நூற்றாண்டு காலகட்டத்தில் 99 ஆடுகளுக்கு குறைவான எண்ணிக்கையில்தான் நிவந்தம் கொடுப்பார்கள் என்ற கூற்று தவறானது என்பது தெளிவாகிறது.

1. ஸ்ரீசோழன்தலை கொண்ட கோவீரபாண்டியற்கு யாண்டு பதின்மூன்று இ
2. (ப) ரித்திக்குடி நாட்டு தேவதானம் திருச்சுழி(ய)ல் பள்ளிமடை-
3. ச் சுந்தரபாண்டிய... ரத்து தேவர்க்கு பொழியூர் நாட்டு சுடுவூர் பொழியூர் நாட்
4. மூவேந்த வேளானாயின அரங்கம் பூதி வைத்த திருநொந்தாவிளக்கு இரண்டு இவற் றினுக்கு அ-
5. டுத்த ஆடு நூறு . இந் நூற் ( றிற் ) கழகன் நாரணன் கொண்ட ஆடு ( உ ) யரு நெய் ஆழாக்கு மேற்படியான் கொற்றஞ் சா-

6. த்தன் கொண்ட ஆடு உயரு நெய் ஆழாக்கு மேற்படி கிழவ னப்பி கொண்ட ஆடு ய உ அரை மேற்படி விர-
7. அருமானி கொண்ட ஆடு ய உ அரை நொய் இரு செவிட்டரை

இக்கல்வெட்டு தற்போது விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே பள்ளிமடம் என்ற ஊரில் உள்ள காளைநாதர் கோவிலில் காணப்படுகிறது .

இக்கல்வெட்டில் திருச்சுழியல் பள்ளிமடை சுந்தரபாண்டிய ஈஸ்வரத்திற்கு திருநொந்தா விளக்கு எரிக்க பருத்திக்குடி நாட்டு இடையர்களுக்கு நூறுக்கும் மேற்பட்ட ஆடுகள் நிவந்தமாக கொடுத்த செய்தியைத் தருகிறது. மேலும் இக்கல்வெட்டானது பொது ஆண்டு 955 ல் முற்கால பாண்டிய மன்னன் “சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின்” 9 வது ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்ட தேவதானமாகும். இக்கல்வெட்டும் பள்ளிமடம் காளை நாதர் கோவிலில் காணப்படுகிறது. மேலும் இசோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் 13வது ஆட்சி கல்வெட்டும் இங்கு காணப்படுகிறது. அவை

1. ஸ்வஸ்திஶ்ரீ சோழன்றலைகொண்ட கோவீரபாண்டியற்கு யாண்டு (சு) நான்கு இதனெதிர் அஞ்சு
2. இவ்வாண்டு பரித்திக்குடிநாட்டுத் திருச்சுழியல் பள்ளி மடை சுந்தரபாண்டி ரத்து தேவர்க்கு
3. திருநொந்தாவிளக்கினுக்கு ஆயன் நாரணன் ந
4. க்கன் வழி நெயட்டுவதாக அடுத்த ( வெட்டி ) குடி .... தன் கொண்ட ஆடு பத்து மேற்படி சுத்தன்
5. அப்பிக்கு அடுத்த ஆடு பந்து மேற்படி கோவன் மாதேவன் கொண்ட ஆடு பத்து மேற்படி படாரன் கீரன்

6. கொண்ட ஆடு பத்து மேற்படி அரையன் றொண்டன் கொண்ட ஆடு பத்து மேற்படி நக்கஞ் சாத்தன் கொண்ட ஆடு ப-

7. த்து மேற்படி படைத்தலைவன் நக்கன் சாத்தன் கொடை ஆடு இருபத்தைஞ்சு மேற்படி படைத் தலைவன் வலியான் சாத்தன் கொண்ட,

8. ஆடு பதினஞ்சு எற்றி செம்மரி வெள்ளாடு நூறு மேற்படியான் கமி யாதனூரான் கொண்ட

9. ஆடு பத்து மேற்படியான் நக்கன யலன் கொண்ட ஆடு பத்து மேற்படி இத்தேவர் வெட்டி

10. க்குடி தனுவாச்சன் அப்பி கொண்ட ஆடு பத்து மேற்படி தொங்கன் நிலன் கொண்ட ஆடு ய

மேற்கண்ட ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்து கல்வெட்டு வாசகமானது பொது ஆண்டு 959 ல் கொடுக்கப்பட்டகால்நடை நிவந்தமாகும். இதில் பருத்திக்குடி நாட்டு திருச்சுழியல் பள்ளிப்படையான சுந்தரபாண்டிய ஈஸ்வரத் தேவருக்கு திருநந்தா விளக்கு இரண்டு எரிக்க நூறு ஆடுகள் தானமாக தந்த செய்தியும் அதனை பொழியூர் நாட்டு சூடுவூர் மூவேந்த வேளானாயின் அரங்கம் பூதி என்பவர் வழங்கிய செய்தியும் அத்தானத்தைப் பெற்ற இடையர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. மேற்கண்ட கல்வெட்டுகள் மூலம் ஆடுகள் இத்தனைதான் வழங்க வேண்டும் என்ற வரைமுறை இல்லாமல் வழங்கி வந்துள்ளனர் என்பது புலனாகிறது.

குறிப்பிட்ட எண்ணிக்கையில் தான் கால்நடைகள் நிவந்தம் வழங்க வேண்டும் என்று விதி வகுத்த முதலாம் இராசராச சோழனும் நூறுக்கு மேற்பட்ட ஆடுகளை வழங்கிய செய்தி அடங்கிய கல்வெட்டு ஒன்றும் திருச்சுழி அருகே கண்டறியப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் திரு நொந்தா

விளக்கு ஒன்று எரிக்க ஆடுகள் தானம் வழங்கிய செய்தி இடம் பெற்றுள்ளது. திருநொந்தா விளக்கு எரிக்க குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் வழங்கவேண்டும் என்ற விதியை முதலாம் இராசராசன் தனது ஆட்சியின் பிற்பகுதியில்தான் செய்திருக்க வேண்டும். அத்தகைய செய்கைக்கு முன்பாக ஒரு ஆண்டு முழுவதும் விளக்கு எரிக்க அதாவது விளக்கு எரிவதற்கு தேவையான நெய் உற்பத்தி செய்ய எத்தனை ஆடுகள் தேவை என்பதை விவசாயிகளிடம் கேட்க அவர்கள் கூறியது 90 முதல் 96 ஆடுகள் தேவை என்று கூறியதையே அமல்ப்படுத்தினார்.

### சாவா மூவா பேராடு

கோவில்களில் அணையா விளக்கு எரிக்க ஏற்படுத்திய திட்டமே "சாவா மூவா பேராடு" ஆகும். இதற்கு கொடுக்கப்பட்ட ஆடுகள் சாவினாலோ மூப்பினாலோ எண்ணிக்கை குறையக் கூடாது என்பது பொருளாகும்.ஒரு முழு நந்தா விளக்கு எரிக்க 90 அல்லது 96 ஆடுகள் அல்லது 32 பசுக்கள் மற்றும் ஒரு காளை வழங்கப்படும். அரை நந்தா விளக்கு எரிக்க 45 அல்லது 48 ஆடுகள் வழங்கப்பட்டு வந்துள்ளன என்ற செய்தியும் சாவா மூவா பேராடு என்பது பற்றிய செய்தியும் கீழ்வரும் கல்வெட்டில் இடம் பெறுகிறது.

ஸ்வஸ்திஸ்ரீ கச்சியுந் தஞ்சையுங் கொண்ட ஸ்ரீ கன்னர தேவர்க்கு யாண்டு இருபத்தேழாவது பல்குன்றக் கோட்டத்து தரையூர் நாட்டு மாம்பா[க்க]த்து கோதண்ட மன்றாடி திருவோத்தூர் மஹாதேவர்க்கு பகல் விளக்குக்கு வைத்த சாவா மூவா பேர் ஆடு

### அஞ்பது

இக்கல் வெட்டு இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனின் 27ம் ஆட்சி ஆண்டில் திருவோத்தூர் மகாதேவருக்கு பகல் பொழுதில் விளக்கு எரிக்க மாம்பாக்கம் கோதண்ட மன்றாடி என்பவர் கொடுத்த 50 இளம் ஆடுகள்

சவா மூவா பேராடு என்று குறிப்பிட்டுள்ளதில் இருந்து அரை நந்தாவிளக்கு எரிக்க ஆடுகள் வழங்கப்பட்ட செய்தியை நாம் அறியலாம்.

**முடிவுரை**

மேற்கண்ட வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில் கோவில்களுக்கு நந்தா விளக்கு எரிக்க வழங்கப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு வரைமுறை வகுத்து வழங்கப்பட்டது என்றால் முதலாம் இராசராச சோழனின் காலத்தில் இருந்துதான் என்று கூற வேண்டும் . அதற்கு முன்பு எண்ணிக்கை யானது நெய் தேவையின் அடிப்படையிலேயே நிவந்தம் வழங்கியுள்ளனா என்பதும் மேற்கண்ட கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகிறது .

**துணை நூற்பட்டியல்**

1. South Indian Inscription, volume I, 142.
2. South Indian Inscription, volume III, 137
3. சீதாராம் குரு மூர்த்தி, விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி- தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சென்னை, 2008, பக்கம் 81, 89-90,93
4. மா.செந்தில் செல்வக்குமரன், சொ. சந்திரவாணன், விருதுநகர் மாவட்ட வரலாறு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2001, பக்கம். 26.
5. பொ.இராஜேந்திரன், சொ.சாந்தலிங்கம், வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம், பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம் மதுரை, 2014, பக்கம். 52, 145,147
6. தினமலர், திருவண்ணாமலை, கட்டுரை, ஜீன் 27, 2019.
7. மணிமேகலை, உபதேச காண்டம், 223
8. அகநானூறு, மணிமிடைப்பவளம், பாடல்-266.

*9. பட்டினப்பாலை, பாடல். 246-248.*

*10. சீவகசிந்தாமணி:12:187.*

*11. 11.தினகரன், சாவா மூவா பேராடுகள், கட்டுரை, அக்டோபர் 4, 2010.*

# சங்க இலக்கியங்களில் புழங்குபொருட்களும் அவற்றின் பயன்பாடும்
# MATERIALS AND THEIR USE IN SAN- GAM LITERATURE

**முனைவர் ச. லெனின்குமார்**
உதவிப்பேராசிரியர், மொழிகள் துறை(தமிழ்,)
பெரியார் மணியம்மை அறிவியல், மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்,
வல்லம்-தஞ்சாவூர்-613403.

**முனைவர் செ.அனுசுயா (எ) பிரியா**
உதவிப்பேராசிரியர், கல்வியியல் துறை, பெரியார் மணியம்மை
அறிவியல்,மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்,
வல்லம்-தஞ்சாவூர்-613403.
ORCID https://orcid.org/0009-0006-6156-5357
ORCID https://orcid.org/0009-0005-1386-4160
மின்னஞ்சல் : leninkumar@pmu.edu

**ஆய்வுச் சுருக்கம்**

*மனித இனம் சிந்தித்து செயல்படும் அறிவாற்றலாலும், இயற்கை வழங்கிய அருங்கொடைகளைத் தமது ஆளுகைக்கு உட்படுத்திப் பயன்படுத்துவதாலும், மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. பண்டைய சமூகம் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்வை மேற்கொண்ட, சிறப்பினைப் புழங்கு பொருட்கள் உணர்த்துகின்றன. மண், கல் மரம் போன்ற இயற்கை சார்ந்த பொருட்களை தமது அன்றாட வாழ்விற்குப் பயன்படும்விதமாக அமைத்துக் கொண்டதையன்றி, அப்பொருட்களைக் காலம் கடந்து வாழும் விதமாக பண்பாட்டோடுத் தொடர்புபடுத்தி பயன்படுத்தியிருப்பது தமிழர்களின் தார்மீக வாழ்க்கைக்குச் சான்றாகச் சுட்டலாம்.*

**திறவுச் சொற்கள்**

*சங்க இலக்கியம், தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, புழங்குபொருட்கள், பயன்பாடு*

**Abstract**

*Human beings are distinguished from other species by their ability to think and act, and by their ability to control nature's gifts. The materials represent the speciality with which ancient society lived in harmony with nature. The use of natural materials such as soil, stone and wood in their daily life, rather than using them in a way that transcends time and culture, can be cited as evidence of the moral life of the Tamils.*

***Keywords:*** *Sangam literature, Tamil history, Tamil culture, materials, usage*

**உரல்**

*தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு நாட்டுப்புற இலக்கியங் களையும், ஏட்டிலக்கியங்களையும் ஆதாரப்பூர்வமாகச் சுட்டலாம். தமிழர்கள் பயன்படுத்திய புழங்கு பொருட்கள் பற்றிய குறிப்புகளும், பல்வேறு நிலைகளில் பயன்படுத்திய செய்திகளும் இவ்விரண்டிலும் நிரம்பக் காணப்படுகின்றன. விளைந்த நெல்லினை, அரிசி, உமி எனத் தனித்தனியாக பிரித்தெடுக்க பயன்படுத்திய பொருளை 'உரல்' என அழைத்தனர். உரல், கல் உரல், மரஉரல் என இரு பொருளால் செய்யப்படுகின்றது.*

**"முகைவரல் சாந்துரல் முத்துஆர் மருப்பின்"[1]**

*நன்கு முற்றி விளைந்த தாழ்ந்து நிற்கும் கதிரை உருவி, அரும்பி வளர்ந்த சந்தனமரத்தால் ஆன உரலில் இட்டு இடித்தனர் எனக் கலித்தொகை உரல் மரத்தால் இருந்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.*

*உரலினை வாங்கிவந்து அதனை வீட்டின் உள்ளோ, வெளியோ அப்படியே வைத்து இடிக்கும்பொழுது, சாய்ந்து போவதற்கோ அல்லது நழுவி நழுவி நகர்ந்து போவதற்கோ வாய்ப்புகள் உண்டு. நழுவாமலோ சாயாமலோ இருக்க உரலினை நிலத்திலே குழிதோண்டி புதைத்து, அதன் மேல் உலக்கையைக் கொண்டு நெல் குற்றினர். இதனை*

**"நீழுல் முன்றில் நிலஉரல் பெய்து பத்து"[2]**

*எனும் பத்துப்பாட்டால் அறிய முடிகின்றது. இம்முறை மரபு ரீதியாக தொடர்ந்து வருவதனை, நாட்டுப்புறங்களில் காணமுடிகின்றது.*

*வீட்டின் முற்றத்தில் உரலை வைத்து நெல் இடித்தனர் எனும் செய்தியினை,*

**"புதுவை வேய்ந்த கவின் குடில் முன்றில்**
**அவல்எறி உலக்கைப் பாவிறந்து"[3]**

*எனும் பத்துப்பாட்டால் அறியமுடிகின்றது.*

**"துளை அரை சீறுரல் தூங்கத் தூக்கி"[4]**

*பெண்யானையின் முடிந்தாளை ஒத்தும், துளையிடப்பட்ட அறையை உடையதுமாகிய சிறிய உரல் என பத்துப்பாட்டுக் குறிப்பிடுகின்றது.*

**"உரல்போல் பெருங்காலட இலங்குவாள் மருப்பின்**
**பெருங்கை மதமாப் புகுதரின்"[5]**

*உரல்போன்ற பெரிய காலையையும், ஒளியுடைய தொம்பையும் பெரிய துதிக்கையையும் மதத்தையும் உடைய யானைகள் என, யானையின் தன்மையினையும், வலிமை யினையும் விளக்க உரல் பயன்படுத்தப்பட்டிருப்பதை பதிற்றுப்பத்து படம் பிடித்துக் காட்டுகின்றது.*

**"புழல் தலைப் புகர்க்காலை உருட்டி உரல்தலைக்**
**கேழல் பன்றி வீழ"[6]**

*துளை பொருந்திய கொம்பையுடைய கலைமானை வீழ்த்தியது பின் உரல் போலும் தலையையுடைய கேழாகிய பன்றியைக் கொன்றது என அம்பின்வலிமையைக் குறிப்பிடும் இடத்து, உரலை போன்று தலையுடைய பன்றி என புறநானூறு சுட்டுகின்றது.*

**"உரல்போல் அடிய உடம்பு உயங்கு யானை"[7]**

**"பால் மருள் மருப்பின் உரல்புரை பாவுஅடி"[8]**

*என கலித்தொகையில் உரலைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஒப்புமைப் பொருளிலும், உபயோகப் படுத்தும் பொருளிலும் உரல் பயன்படுத்தப்பட்டிருப்பதை இலக்கியங்கள் சுட்டுகின்றன.*

**"ஆடுகழை நெல்லை அழை உரலுள்பெய்து"[9]**

*மூங்கிலினது நெல்லை பாறையாகிய உரலுள் செய்து குற்றினர். மேலும்,*

**"ஐவன வெண்நெல் அறை உரலுள் பெய்து"[10]**

*ஐவனமாகிய வெண்நெல்லைப் பாறையாகிய உரலிலே இட்டு இடித்தனர் என, உரலானாது கல்லிலே இருந்ததனைக் கலித்தொகை குறிப்பிடுகின்றது. மேலும் 'சாந்துரல் மூத்தார் மருப்பின்' என சிலப்பதிகாரம் உரலைப் பற்றிக் குறிப்பிடு கின்றது.*

*இலக்கியங்களில் உரலைப் பற்றிய குறிப்புகள் நிரம்பக் காணப்படுவதால், அக்காலத்தில் மக்கள் வாழ்வில் உரல் எத்தகைய சிறப்பு பெற்றிருந்தது என்பதனை அறிய ஏதுவாகிறது.*

**அரிவாள்**

*அறுபடாத பண்பாட்டுத் தொடர்ச்சியாக பன்னெடுங் காலமாய் மக்களின் வாழ்வோடும் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்து காணப்படும் புழங்கு பொருள் அரிவாள் என்று*

*பெயரிட்டு அழைக்கப்படுகின்றது. நாகரிகத்தை விரும்பும் மக்களின் கைகளில் அதற்கு ஏற்றாற் போல எத்தனையோ நவீன பொருள் புழங்க தொடங்கிய போதும அரிவாள்; எல்லோராலும் இன்றும் பயன்படுத்தப்படுவது முன்னோரின் அறிவுசார்ந்த ஆற்றலுக்கு சிறந்த சான்றாகும்*

**“அணில் வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட”[11]**

*அணிலின் மேலுள்ள வரி போல் வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்து இடப்பட்ட விதை என புறநானூறு அரிவாள் பற்றிக் குறிப்பிடுகின்றது*

**“எஃகு போழ்ந்து அறுத்த வால்நினக் கொழுங்குறை**
**மைஊன்பெய்த வெண்ணெய் வெண்சோறு”[12]**

*அரிளால் பிளந்து அறுத்த வெள்ளிய நிணத்தோடு கூடிய கொழுவிய துண்டாக்கிய ஆட்டின் இறைச்சியை சமைத்து சோற்றில் ஊற்றி உண்டனர் என பதிற்றுப்பத்து கூறுகின்றது.*

**“அரம் போழ்கல்லா மரம்படுதீம்கனி”[13]**

*அரிவாளால் பிளக்க இயலாத மரத்தை பிளப்பதற்காக விடாமல் வெட்டிக்கொண்டு இருந்ததனை சுட்டுகின்றது.*

**அடுப்பு**

*நாட்டுப்புறப் புழங்கு பொருட்களான, அம்மி, ஆட்டுக்கல், தொம்பை போன்ற எண்ணற்றப் பொருட்களெல்லாம், எல்லோருடைய வீடுகளிலும் இருக்கும் என்பதனை உறுதியாக சுட்டமுடியாதபோதும், எல்லோருடைய வீடுகளிலும் இருக்கும் என உறுதியாக சுட்டும்பொருள் ‘அடுப்பு’ என்ற புழங்கு பொருள் மட்டுமே. பண்டையக் காலந்தொட்டு பயன்படுத்தப்பட்டுவரும் இப்புழங்கு பொருட்களை இலக்கியங்களும் சிறப்பித்து சுட்டுகின்றன.*

**“முடித் தலை அடுப்பு ஆக**
**புனற் குருதி உலைக் கொளிஇ”[14]**

*பகைவர்தம் முடித்தலைகளை அடுப்பு போல அமைத்து, குருதியாகிய உலைநீரில் உணவு சமைத்ததாக, அரசனுடைய வீரம் சுட்டப்படுகின்றது.*

**"ஆடு நனிமறந்த கோடுஉயர் அடுப்பின்**
**ஆம்பி பூப்ப தேம்புபசி உழவர்"[15]**

*உணவு சமைத்தலை மிகவும் மறந்து, உயர்ந்து ஓங்கிய அடுப்பில் காளான் பூத்துள்ளது என வறுமையை சுட்டும் கருத்திலும் அடுப்பு பயன்பட்டதாக புறநானூறு குறிப்பிடு கின்றது.*

**"கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே"[16]**

*புகழுதலுக்குரிய பிற பருப்பு வகைகளை அடுப்பிலே ஏற்றி சமைத்தார்கள் என்ற செய்தினை பதிற்றுப்பத்து சுட்டுகின்றது.*

**"பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ"[17]**

*பல கொண்டைகளையுடைய அடுப்பின்கண் பாலை உலையாக வார்ப்பர் என்னும் கருத்தில் அடுப்பின்கண் காணப்படும் கொண்டையைப் பற்றிய குறிப்புகள் குறிக்கப்படுகின்றன.*

*இலக்கியக் காலந்தொட்டு இன்று வரையிலும் அடுப்பு மிகுந்த பயன்பாட்டு பொருளாகவும், பண்பாட்டு பொருளாக வும் புழங்கப்பட்டு வருகின்றன. ஒற்றை அடுப்பு, கொடி அடுப்பு என இரண்டு வகையாக அடுப்பு பயன்படுத்தப் படுகின்றது. அடுப்பின் பயன்பாடு நாள்தோறும் இருப்ப தினால், இதனை மக்கள் மிக கவனமாகப் பாதுகாக்கின்றனர்.*

**ஒற்றை அடுப்பு (ஒத்த அடுப்பு)**

*தேவையான அளவு மண்ணினை எடுத்து 1/2 இஞ்ச் அளவிற்கு கீழே சமப்படுத்துகின்றனர். பிறகு மண்ணை படிப்படியாக மேல்நோக்கி அமைத்து, மேல்பக்கம் மூடாமல், திறந்த நிலையில் அமைக்கின்றனர். முன்பக்கம் திறந்தும்,*

பின்பக்கம் மூடியும், உட்பக்கம் மண்ணைச் சற்று சாய்வாக வளைந்த நிலையில் செய்கின்றனர். அடுப்பின் மேல்பகுதியில் மூன்று கொண்டைகளை அமைக்கின்றனர். ஏதேனும் ஒரு பாத்திரத்தைக் கொண்டு சோறோ, குழம்போ ஏதேனும் ஒரு உணவு வகையை மட்டுமே ஒற்றை அடுப்பில் சமைக்க முடியும். 1/2 அடி நீளமும், 1/4 அடி அகலமும் ஒற்றை அடுப்பு அளவாக இவர்கள் சுட்டுகின்றனர்.

**அடுப்பு (கொடி அடுப்பு)**

ஒரே நேரத்தில் இரண்டு வகையான உணவுப்பொருள் சமைக்க கொடி அடுப்பு பயன்படுகின்றது. ஒற்றை அடுப்பு அமைப்பு போலவே இதன் அமைப்பும் அளவு காணப்படுகின்றது. ஒற்றை அடுப்பின் இடது பக்கம்நடுவில் துளைபோட்டு அத்துளையை ஒட்டியே மற்றொரு அடுப்பு அமைக்கப்படுகின்றது. கொடி அடுப்புக்கு ஒரு வாய்ப்பகுதி மட்டுமே காணப்படும். ஒற்றை அடுப்பில் விறகு வைத்து எரிக்கும்பொழுது, இதில் உள்ள ஓட்டை வழியே கொடி அடுப்பிற்குவெப்பம் செல்வதால், கொடி அடுப்பில் இரண்டாவதாக உள்ள அடுப்பிலும் உணவு சமைக்க முடிகின்றது. இதனால் உணவு செய்யும் நேரம் குறைக்கப் படுவதோடு, விறகும் குறைந்த அளவே பயன்படுவதினால், பெரும்பாலான இல்லங்களில் கொடி அடுப்பே அதிகம் காணப்படுகின்றது. இவ்விரண்டு அடுப்பும் வீட்டின் ஏதேனும் சுவற்றை ஒட்டியே அமைக்கப்படுகின்றன.

**புற்றுமண் அடுப்பு**

நாட்டுப்புற மக்கள் தாங்களாகவே செய்யும் அடுப்பு, புற்றுமண் அடுப்பாகும். ஒற்றை அடுப்போ, கொடி அடுப்போ வாங்கிவந்து வீட்டின் ஏதேனும் சுவற்றினை ஒட்டியே புற்றுமண்ணைக் கொண்டு அமைக்கின்றனர். இம்முறை ஒற்றைக்கு இரட்டை வேலை என்பதினால், தாங்களே கறையான் புற்று மண்ணை வெட்டி வந்து உடைத்து

காயவைத்து, சிறிது தண்ணீரை விட்டு நன்கு பிசைந்து, வீட்டின் சுவற்றை ஒட்டி 1/2 இஞ்ச் அளவிற்கு அடிமட்டம் போட்டு, மேலே மேலே மண்ணை வார்த்து அடுப்பு செய்கின்றனர். பெரும்பாலும் கொடி அடுப்பு போன்றே புற்றுமண் அடுப்பு அமைக்கப்படுகின்றது. இதனால் இவர்களுக்குச் செலவு தவிர்க்கப்படுவதோடு, தாங்கள் விரும்பும் எண்ணத்திற்கு அடுப்பினை அமைத்து கொள்கின்றனர்.

அடுப்பிலே கால் பட்டுவிட்டாலே, உடனே தொட்டுக் கும்பிடும் பழக்கம் இம்மக்களிடையே காணப்படுகின்றது. வெள்ளி, செவ்வாய் ஆகிய நாட்களில் அடுப்பிலே சாணம்பூசி மொழுகி, கோலம் போட்டு மஞ்சள், குங்குமம் பொட்டு இடுகின்றர். சிலர் தீப ஆராதனை சுவாமி படங்களுக்கு காட்டும்பொழுது அடுப்பிற்கும் காட்டுகின்றனர். கடவுளுக்கு நிகராக 'அடுப்பு' பண்பாட்டுப் பொருளாக, தமிழர்களுடைய வாழ்வில் ஒன்றாக கலந்திருப்பது, பண்பாட்டுப் பொருண்மையை எடுத்துரைக்கும் சிறப்புவாய்ந்த செயல்பாடாகும்.

எத்தனையோ பொருட்கள் உணவு சமைக்க பயன்படுத்தப் பட்டாலும், உணவு சமைக்க மூல வடிவமாக, பொருளாக அடுப்பு அமைந்திருப்பதால் 'அடுப்பங்கரை' என்றே அழைப்பதனைக் காணமுடிகின்றது. கேஸ் சிலிண்டர் எண்ணிக்கை மிகுந்த பொழுதும், அரசு இலவசமாக கொடுத்த போதும், அடுப்பினையே பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். அவசரதேவைக்கு மட்டுமே எரிவாயு பயன்படுத்தப்படுகின்றது. சிலிண்டரின் விலை 700, 800 ரூபாயாக இருப்பதினால், பெரும்பாலும் அடுப்பினையே பயன்படுத்துகின்றனர். நவீனப் புழங்குபொருள் எத்தனை வந்தாலும் அடுப்பின் பயன்பாடு என்றும் குறையாது என்றே மக்கள் குறிப்பிடு கின்றனர்.

**மோர் பானை (தயிர் பானை)**

*பண்டைய தமிழர்கள் ஆடு, மாடுகளை தெய்வத்துக்கு நிகராக மதித்து வணங்கி போற்றி வந்தனர். ஆடு, மாடுகளைக் கொண்டே செல்வ நிலையை மதிப்பிட்டு வந்தனர், ஆடு, மாடு இவற்றினால் கிடைக்கும் பாலினைக் கடைந்து தயிராக எடுத்து உண்டனர்.*

**“தயிர்கொடு வந்த தசும்பொன் நிறைய”[18]**

*பாலினைக் கடைந்து தயிராக்கி அவற்றினைத் தயிர்ப் பானையில் நிரப்பி, தலையிலே சும்மாடு வைத்து தூக்கிக் கொண்டு வீதி வீதியாகச் சென்று விற்றனர் என புறநானூறு குறிப்பிடுகின்றது.*

**“வெண் கோள் தோன்றாக் குழசியொடு**
**நூள் உறை மத்துஒலி கேளா தேனே”[19]**

*பாலைக் கறந்து அதனை நன்கு காய்ச்சி பிறகு சிறிது தயிரிட்டு உறைய வைப்பர். பின்பு பானையுள் மத்தினைவிட்டு கடைவர். அவ்வாறு கடையும்பொழுது தயிர் உண்டாகும். அத்தகைய தயிர்கடையும் ஓசை கேட்பதற்கு முன்னதாகவே விரைந்து சென்று, இரப்போர்க்கு பொருள் கொடுக்கக்கூடிய தன்மையை உடைய அரசன் என புறநானூறு குறிப்பிடுகின்றது.*

*பண்பாட்டின் தொடர்ச்சியாக சங்ககாலம் முதற்கொண்டு, இன்றளவும் தயிர்பானையின் பயன்பாடு மிகுந்த பயன் உள்ளதாகவே அமைந்துள்ளது. தமிழர்களின் பண்பாட்டுத் தளத்தில் தயிர்பானை நிலையான இடத்தினைப் பெற்றுத் திகழ்கின்றது. தயிர் கடையும் வேலையில் பெரும்பாலும் பெண்களே ஈடுபடுகிறார்கள் கடைந்து விற்பவளை இலக்கியம் ‘ஆய்மகள்’ என்று குறிப்பிடுகின்றது.*

**மத்து**

*இலக்கிய காலந்தொட்டு இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வரும் புழங்கு பொருள் ‘மத்து’ என அழைக்கப்படுகின்றது.*

தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்க மத்து இன்றும் நிரம்ப இல்லங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

**“புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி”[20]**

உறையிட்டு இறுகிய தயிரைப் புலிபோன்ற முழக்கத்தை யுடைய மத்தினை ஆரவாரிக்கும்படி கயிற்றால் இழுத்து வெண்ணெய் உண்டாக்கியதனை பத்துப்பாட்டு சுட்டுகின்றது.

**“நுரைதெரி மத்தம் கொளீஇ நிரைப்புறத்து”[21]**

வெண்ணெய்யை வெளிக்கொணரும் தயிர்கடையும் மத்தினைக் கவர்ந்து சென்றார்கள் என அகநானூறு சுட்டுகின்றது. மேலும்

**“தீம்தயிர் கடைந்த திரள்கால் மத்தம்”22**

தயிரைக் கடைந்த திரண்ட தண்டினையுடைய மத்து என அகநானூற்றுத் தலைவியினால் புழங்கப்பட்டதனைச் சுட்டுகின்றது.

இலக்கிய காலம் முதல் அமைப்பும் பயன்பாடும் சிறிதும் மாறாமல், புழங்கப்பட்டு வரும் மத்து, நகர்ப்புறங்களில் அழிந்த போதும், நாட்டுப்புற மக்களால் இன்றும் புழங்கப்பட்டு வருகின்றது.

**வெட்டுக் கட்டை**

பெரிய பெரிய விறகினை வைத்து நறுக்கவும், கழித்த கருவ மரத்திலே எஞ்சிய முட்களை நறுக்கவும், ஆடு, கோழி, போன்ற இறைச்சி பொருளை வெட்டவும், இளநீர், பனங்காய் போன்றவற்றை வெட்டவும் நாட்டுப்புற மக்களால் பயன்படுத்தப்பட்ட புழங்கு பொருளை வெட்டுக்கட்டை என்ற பெயரிட்டு அழைக்கின்றனர். இவ்வெட்டுக்கட்டையைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

**“ஊனத்து அழித்த வால்நினைக் கொழுங்குறை**
**குய் இடுதோறும் ஆனாது ஆர்ப்ப”[23]**

தமது இல்லத்திலே உண்ணும் பொருட்டு, ஆட்டு வணிகர், இறைச்சியைக் கட்டையின் மீது வைத்து கொத்திய ஆட்டு இறைச்சியைப் பயன்படுத்தினர் என்பதனை பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது.

**"வளைதலை மாத்த தாழ கருத்பாசவர்**
**எஃகுஆடு ஊனம் கடுப்ப மெய்சிதைந்து"**[24]

இறைச்சி விற்பவருடைய வெட்டும் அரிவாளால், ஊனைக் கொத்தும்போது மரக்கட்டையானது எவ்வாறு சிதையுமோ அது போல, உடம்பு சிதைந்து போனதாக பதிற்றுப்பத்து தலைவனின் வீரத்தை பறைசாற்றி நிற்கின்றது.

**மண் குதிர் (அல்லது) தொம்பை**

மண்பாண்டத் தொழிலே மிகவும் பெரியதாகக் காணப்படுவது குதிர் அல்லது தொம்பை ஆகும். பண்டைய காலத்தில் இறந்தவர்களின் உடலை பெரிய மண்பானையில் இட்டு புதைத்ததாக இலக்கியங்களும், ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றனர். இத்தகையப் பானையினை 'முதுமக்கள் தாழி' என்று அழைக்கின்றனர். அதனைப் போல பல மடங்கு பெரிய உருவமாய் காட்சி அளிப்பது மண்குதிர் அல்லது தொம்பை ஆகும். பறக்க பறக்க எவ்வளவுதான் சிரமம் மேற்கொண்டு உழைத்தாலும், அந்த உழைப்பினால் கிடைத்த பொருளைப்பாதுகாக்கவில்லையென்றால், எதிர்காலவாழ்க்கை சிரமம் கொண்டதாய் அமைந்துவிடும் என்பதனை அறிந்த நாட்டுப்புறமக்கள், பயன் கருதி, எதிர்கால நலன் கருதி தொம்பை அல்லது குதிரை என்ற மண்பொருளைப் பயன்படுத்தியுள்ளனர். இக்குதிரில்நெல், கம்பு, சோளம், வரகு போன்ற தானிய வகைகளை இட்டுப் பாதுகாத்துள்ளனர்.

மண்தொம்பை, மரத்தொம்பை,மண்குதிர், மரக்குதிர் என மண்ணாலும் மரத்தாலும் அமைவன இப்புழங்கு பொருளாகும். பெரும்பாலும் இல்லத்தின் உள்ளேயும் திண்ணையிலும் அமைந்திருப்பனவாகும். சேமிப்புக் கிடங்கு

என்று அழைக்கப்படும் இத்தொம்பையும் குதிரும் நாட்டுப்புற கலைஞனின் எண்ணத்தில் உருவான வண்ணத்தின் வெளிப்பாடாகும். கலை நுணுக்கமும், கற்பனை நயமும் ஒன்றாய் பிணைந்து, கலைஞனின் உள்ளத்திலுள்ள பிரதிபலிப்பை கைகள் செய்து காட்டுகின்றன. ஒப்பறிவு இல்லாமலே உலகத்தை அளந்தவர்கள் நாட்டுப்புற கைவினைக் கலைஞர்களாவர். எந்தப் பொருளும் மக்களுக்கு பயன்படுவதோடு, பண்பாட்டோடும் தொடர்பு கொண்டனவாய் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு கூடிய சிறந்த கலைப்படைப்பு மண்குதிர் அல்லது தொம்பை எனில் அது மிகையாகாது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாய்க் காணப்படும் சங்க இலக்கியத்தில் மண்குதிர் அல்லது தொம்பைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**"பிடிக்கணத்து அன்ன குதிருடை முன்றில் பத்து"**[25]

முற்றத்தின்கண் பெண்யானைத் திரள் நின்றாற் போன்ற நெற்கூடுகள் நிற்கும் என்றும்,

**"குமரி மூத்த கூடுஓங் நல்இல்"**[26]

பழைய நெல்லையும் உடையனவாய்க் கண்ணிமையோடு உயர்ந்து நிற்கும் முதிர்ந்த நெற்கூடுகள் அவ்வில்லங்களில் காணப்படும் என்ற குறிப்பும் காணப்படுகின்றன. இதனை ஆராயுமிடத்து, மண்தொம்பை அல்லது குதிரின் பழமை நன்கு புலனாகின்றது.

**உலக்கை**

பயன்பாடு குறைந்த பொழுதும், பண்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டமையால், இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னதமானப் புழங்கு பொருள் உலக்கை ஆகும். எழுதா இலக்கியத்தில் உருப்பெற்று, ஏட்டிலக்கியத்தில் நடைபழகி, இன்றைய இலக்கியம், பாடல், காட்சி என

*பன்முக பாவத்தோடு, அறுபடாமல் தொடர்ச்சியாய் பண்பாட்டோடு பின்னிப்பிணைந்து காணப்படும் இப்பொருளைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் நிரம்பக் காணப்படுகின்றன.*

**"அடுமகள் அளவா வெண்நெல்**
**தொடிமான் உலக்கைப் பரூஉக் குற்று அரிசி"[27]**

*சோறாக்கும் பெண்முகந்து கொணர்ந்த அளக்கப்படாத வெண்ணெல்லையுடைய, பூணிடப்பட்ட பருத்த உலக்கையால் குற்றி உண்டான அரிசி கொண்டு, புறநானூற்றுத் தலைவி உணவு சமைத்ததனைக் குறிப்பிடுகின்றது. உலக்கைக்கு இரும்புப் பூண் போடும் வழக்கம் இன்றும் தொடர்வதனைக் காண முடிகின்றது.*

**"தொடிமான் உழக்கைத் தூண்டு உரல்பாணி**
**நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும்"[28]**

*பூண்மாண்ட உலக்கையில் உயர்த்திக் குற்றும், உரலினின்று அழும் ஒலிநீண்ட பெரிய பக்க மலையிலுள்ள ஆந்தை ஒலியோடு மாறிமாறி ஒலிக்கும்.*

**"பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை"[29]**

*பெரிய வயலிடத்து விளைந்த நெல்லின் விளைந்த கதிரை முறித்துக் கரிய நிறமுடைய வயிரம் பாய்ந்த உலக்கையால் பச்சை அவலை இடிப்பாள் என அகநானூறு சுட்டுகின்றது. உலக்கையை மேலே கீழே ஏற்றி இறக்கி குற்றும் போது உண்டாகும் ஒலி அனைவரின் கவனத்தை ஈர்ப்பதோடு, நல்ல இசையையும் கொடுகின்றது.*

**"குறுங்காழ் உலக்கை ஓச்சி நெடுங்கிணற்று"[30]**

*தாம் கொணர்ந்த புல்லரிசியைப் பெய்து, குறிய வயிரமேறிய உலக்கையால் அதைக் குற்றினர் என பத்துப்பாட்டு குறிப்பிடு கின்றது. உலக்கை நன்கு வயிரமேறிய மரத்தால் செய்யப்படு*

வதால், அதன் வாழ்நாள் அதிகரிப்பதோடு, குற்றப்படும் பொருளும் எளிதில் நைந்து மாவுபோல் ஆகிவிடுகின்றது.

**"குதிரைத்தொடி மழுகிய உலக்கை வயின்தோறு**
**அடைச்சோம்பு எழுந்த ஆடுறும் மடாவின்"[31]**

பூண்மழுங்கிய உலக்கைகளை உடைய சமைக்கும் இடங்கள் என பதிற்றுப்பத்து, சமையல் செய்யும் இடங்களில் உலக்கை இருந்ததனைச் சுட்டுகின்றது.

**"அவல்எறி உலக்கை வாழைச் சேர்த்தி"[32]**

பச்சை அவலை இடித்த உலக்கையை அருகிலுள்ள வாழை மரத்தில் சார்த்தி வைத்தனர் என பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது.

**"குற்று ஆனா உலக்கை யான்**
**கலிச் சும்மை வியல் ஆங்கண்"[33]**

நெல்முற்றும் உலக்கையால் உண்டான ஆரவாரத்தையுடைய சமையலிடம் என சுட்டுகின்றது.

**"வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி"[34]**

**"கோடு உலக்கையாக நல்சேம்பின் இலைசுளகா"[35]**

**"சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்"[36]**

எனக் கலித்தொகையில் உரலைப் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. இலக்கியங்களில் நிரம்ப எடுத்துக்கையாண்டு இருப்பதினால், உலக்கை அக்காலத்தில் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு இருப்பதனை உறுதி செய்ய ஏதுவாகின்றது.

**உலக்கையும், பண்பாடும்**

பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் காலங்களில் பெண்கள் வீட்டிற்குள் அனுமதிக்கப்படுவதில்லை, மேலும் அவர்கள் வீட்டிற்கு வெளியே மட்டுமே உறங்கவும் செய்கின்றனர். இத்தகைய காலத்தில், பேய், பிசாசு, போன்ற அசுத்த ஆவிகள்

தீண்டா வண்ணம் கால் பக்கத்திலோ, அல்லது வலது இடது ஏதேனும் ஒரு பகுதியிலோ உலக்கையைப் போட்டு படுத்துக் கொள்கின்றனர். இதனால் அசுத்த ஆவிகளிடம் இருந்து பாதுகாக்கப்படுவதாக மக்கள் நம்புகின்றனர். இத்தகைய அறுபடாத பண்பாட்டுத் தொடர்ச்சியை இன்றும் நாட்டுப்புறங்களில் காணமுடிகின்றது. நகரத்தில் மாற்றம் காணப்பட்ட பொழுதும் நாட்டுப்புறங்களில் பல இல்லங்களில் இம்முறை கடைபிடிக்கப்படுகின்றது.

தங்கள் இல்லங்களில் தேவைக்காக, மாடுகள் வாங்கி வரும்பொழுது, உலக்கையை போட்டுத் தாண்டிய பிறகே தங்கள் இல்லங்களுக்குள் அனுமதிக்கின்றனர். இவ்வாறு செய்வதால், மாடுகளுக்கு ஏற்படும் நோய்நொடிகள் களையப்படுவதோடு, செல்வமும் பெருகுமென இம்மக்கள் முழுமையாக நம்புகின்றனர். சிலர் திருமணம் முடிந்து முதன் முதலில் ஆடவரின் இல்லத்திற்கு வரும்பொழுது, புதுப்பெண்ணை உலக்கையைப் போட்டுத் தாண்டிய பிறகே உள்ளே அனுமதிக்கின்றனர். இவ்வாறு உலக்கையைப் போட்டுத்தாண்டி, வலது காலை எடுத்து வைத்து வீட்டிற்குள் வந்தால், குடும்பம் விருத்தியாவதோடு, பெண்களுக்கு ஏதேனும் பேய், பிசாசு அண்டியிருந்தால் அவை ஓடிவிடுமென உறுதியாக நம்புகின்றனர்.

தங்களின் வேண்டுதலுக்காகவும், தெய்வங்களின் நேர்த்திக் கடனுக்காகவும் 'மாவிளக்கு' போடும் வழக்கம். அனைத்து இன மக்களிடமும் பரவலாக காணப்படுகின்றது. அவ்வாறு மாவிளக்கு போடும் மக்கள், உரல் உலக்கையைக் கொண்டு இடித்து மாவிளக்கு போடுகின்றனர். இல்லையெனில் தெய்வகுத்தம் ஆகுமென மக்கள் நம்புகின்றனர்.

மக்களின் வாழ்வோடும் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்து காணப்படும் உலக்கை, தமிழ் மக்களால் பெரிதும், போற்றப்படும் புழங்கு பொருளாக காட்சியளிக்கின்றது.

நல்ல நாளில் உலக்கையைக் கழுவி சுத்தம் செய்து மஞ்சள் குங்குமமிட்டு வணங்கிடும் வழக்கமும் மக்களிடம் காணப்படுகின்றது.

**முடிவுரை**

அன்றாட வாழ்க்கைக்கு மக்கள் பயன்படுத்தும் பொருட்களை, மண், கல், மரம் இரும்பு இரும்பும் மரமும், ஓலை என மூலப் பொருட்களைக் கொண்டு வகைப்படுத்தி வாழ்ந்துள்ளனர். மேலும், பெண்களின் ஈடுபாடு, பண்பாட்டோடு கொண்ட தொடர்பு என பல்வேறு நிலைகளில் செம்மாந்த வாழ்க்கையை சங்கத்தமிழர்கள் வாழ்ந்துள்ளனர்.

**அடிக்குறிப்புகள்**

1. கலி - (குறி–40–4)
2. பெரும் - 96
3. மேலது - 225 – 226)
4. மேலது - 225 – 226)
5. மேலது - 64)
6. பதி - 43(3)
7. புறம் - 152(3 – 4)
8. கலி - (பாலை 21 – 1)
9. மேலது - (குறி – 41 – 3)
10. மேலது - குறி (43 – 4)
11. புறம் - 246 (4)
12. பதி - 12 (16 17)
13. மேலது - 60 (5)
14. புறம் - 26 (8-9)

15. மேலது -164 (1-2)
16. பதி - 18(6)
17. புறம் - 33
18. மேலது - 257 (12-13)
19. பெரும் -156
20. அகம் - 101 (8)
21. மேலது - 87 (1)
22. பதி - 21 (101 – 11)
23. மேலது - 67 (16-17)
24. பெரும் - 186
25. மேலது - 247
26. புறம் - 399 (1-2)
27. அகம் - 9 (12-13)
28. மேலது - 141 (180
29. பெரும் - 97
30. பதி - 24 (19-20)
31. மேலது - (29) (1)
32. புறம் - (22 (18-19)
33. கலி - குறி (40-5)
34. மேலது - குறி(41–2)
35. மேலது - குறி (43 –)